பேராசிரியரும் சைவமும்

ஒரு திறனாய்வு

இளம் முனைவர்கள் (2019-2020)
நேசமணி நினைவு கிருத்துவக் கல்லூரி

eBook
மின்நூல்

திருஞானசம்பந்தரின் சைவசித்தாந்தம் பற்றிய செய்திகள்

திருநாவுக்கரசரின் பக்தி சிறப்பு

சுந்தரரும் பக்திமயமும்






ந சுப்பு ரெட்டியார்100
Centenary Committee Publications

ISBN: 978-81-948697-0-2

ஆய்வேட்டின் நூல்வடிவு

பேராசிரியரும் சைவமும்

ஒரு திறனாய்வு

நேசமணி நினைவு கிருத்துவக் கல்லூரியின்
இளம் முனைவர் மாணாக்கர்களின் (2019–2020)
ஆய்வேட்டின் தொகுப்பு

தொகுப்பு:
நூற்றாண்டுக் குழு

ந சுப்பு ரெட்டியார்100
Centenary Committee Publications

பேராசிரியரும் சைவமும்

ஒரு திறனாய்வு

Published by:

ந சுப்பு ரெட்டியார் 100

Centenary Committee Publications

Na Subbu Reddiar 100 Educational Trust

AD-13, 5th Street, Anna Nagar West, Chennai – 600 040

ISBN 978-81-948697-0-2

Wrapper Design: **Centenary Committee**

Printed at: DJ Prints, Chennai – 600 095

அன்புப்படையல்



11 Apl 1906 :: 4 Nov 1988

கி வா ஜகந்நாதன்

பதிப்புரை

பேராசிரியர் முனைவர் ந சுப்பு ரெட்டியார் அவர்கள் எளிய வேளாண் குடியில் பிறந்து, தன் முயற்சியால் பயின்று, ஆசிரியராக தொடங்கிப் பேராசிரியர் வரை உயர்ந்தவர். திருப்பதி திருவேங்கடவன் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையை உருவாக்கி அதன் தலைவராகப் பணியாற்றியவர். பல பல்கலைக்கழகங்களில் சிறப்புநிலைப் பேராசிரியராகத் திகழ்ந்தவர்.

பண்டையத் தமிழ்க்கல்வி மரபில் வேரூன்றி, நவீனக் கல்விப் பயிற்றல் முறைகளில் தேர்ந்தவர். பல ஆய்வாளர்களை உருவாக்கியவர். வாழ்நாள் முழுவதும் எழுத்தும், பேச்சுமாக வாழ்ந்தவர். **136 [135 +1]** நூல்களைப் படைத்துப் பன்முக ஆளுமையாக மிளிர்ந்தவர்.

அன்னாரின் நூற்றாண்டு (2015 – 2016) 108 நிகழ்வுகளாக தமிழகமெங்கும் மிகச் சிறப்பாக கொண்டாடப் பெற்றது.

பேராசிரியரின் நூற்றாண்டில் (2015 – 2016) நூற்றாண்டுக்குழு தமிழகமெங்கும் நடத்திய 108 நிகழ்வுகள் அகில இந்திய சாதனையாக அங்கீகரிக்கப் பெற்றுள்ளன. நூற்றாண்டில் பேராசிரியரின் தமிழ்த்திறத்தையும், அறிவுநுட்பத்தையும் வெளிக்கொணரும் பொருட்டு பன்னிரெண்டு நூட்கள் வெளியிட்டப்பெற்றன. அவரது நூல்கள், இந்திய அரசு நல்கிய **ISBN** எண்களுடன், மின் நூல்களாக மாற்றுப்பெற்று https://archive.org/details/@centenary1916nsr2016 என்ற இணைதளத்தில் அனைவரும் பதிவிறக்கம் செய்யும் வகையில் அமைக்கப்பெற்றுள்ளன.

பேராசிரியரின் படைப்பான "***கவிஞர் வாலியின் இராமாநுஜ காவியம் – ஒரு மதிப்பீடு***" எனும் நூலை பேராசிரியரின் நூற்றாண்டிற்குப் பின்பும் (102வது), இராமாநுஜரின் ஆயிரமாண்டிற்குப் பின்பும் (1002வது) நூற்றாண்டுக்குழு 2018ல் வெளியிட்டது.

பேராசிரியரின் நூட்களை அடித்தளமாக்கொண்டு சுமார் 25 முதுகலைப்பட்ட மாணாக்கர்கள், ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்கள் மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்கள்

பல்வேறு பல்கலைக் கழகங்களில் (சென்னைப் பல்கலைக்கழகம், மதுரை காமராஜ் பல்கலைக்கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம்) ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர்.

மூன்று முனைவர் பட்ட ஆய்வாளர்கள் ஆய்வு மேற்கொண்டு, சென்னை பல்கலைக் கழகம், மதுரை காமராஜ் பல்கலைக் கழகம் மற்றும் பாரதியார் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் ஆய்வேடு சமர்ப்பித்து முனைவர் பட்டம் பெற்றுள்ளனர். ஐந்து முதுகலை பட்ட மாணாக்கர்கள் (திராவிடப் பல்கலைக் கழகம் : 2017 – 2019) ஆய்வேடு சமர்ப்பித்துள்ளனர். ஐந்து ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்கள் (தமிழ்ப் பல்கலைக் கழகம் : 2018 – 2019) ஆய்வேடு சமர்ப்பித்து ஆய்வியல் நிறைஞர் பட்டம் பெற்றுள்ளனர்.

தமிழ்த்துறை, நேசமணி நினைவு கிருத்துவக் கல்லூரி (மனோன்மணி சுந்தரனார் பல்கலைக் கழகம்) பரிந்துரைத்த மூன்று ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்கட்கு **ந சுப்பு ரெட்டியார் 100 கல்வி அறக்கட்டளை NSR100 Kamatchi Ammal Fellowship** வழங்கியது. அதன்கீழ், பேராசிரியரின் ஏதேனும் ஒரு நூலை ஆய்வுக்குரிய மையக்கருத்தாக தேர்ந்தெடுத்து திறனாய்வு செய்யும் ஆய்வியல் நிறைஞர் மாணாக்கர்கட்கு உதவித்தொகையும், நூலைத் தேர்ந்தெடுக்க ஆலோசனையும், தேர்ந்தெடுக்கப் பெற்ற நூலும் வழங்கப்பெற்றன.

திறனாய்வு செய்த மாணாக்கர்கள்:

R நித்யா (20193113107101)
JS ஷர்ஜா (20193113107102)
K ஷைனி (20193113107103)

ஆய்வேட்டின் தலைப்புகள்:

திருஞானசம்பந்தரின் சைவ சித்தாந்தம் பற்றிய செய்திகள்

திருநாவுக்கரசரின் பக்தி சிறப்பு

சுந்தரரும் பக்தி மயமும்

தெரிவு செய்யப்பெற்ற பேராசிரியரின் நூல்கள்:

சைவசித்தாந்தம் - ஓர் அறிமுகம்
https://archive.org/details/saivasidhanthamoruarimugam
நாவுக்கரசர்
https://archive.org/details/Naavukkarasar
தம்பிரான் தோழர்
https://archive.org/details/thambiraanthozhar

இவ்வாறு சமர்ப்பிக்கப்பெற்ற ஆய்வேடுகள் தொகுக்கப்பெற்று

பேராசிரியரும் சைவமும்
ஒரு திறனாய்வு

இளம் முனைவர் மாணாக்கர்கள் (2019-2020)
நேசமணி நினைவு கிருத்துவக் கல்லூரி

எனும் நூலாக வெளியிடப் பெறுகின்றது. நூலின் ஒரு படி ஒவ்வொரு மாணாக்கர்கட்கும், 3 படிகள் கல்லூரிக்கும் வழங்கப்பெறுகின்றன.

நூற்றாண்டுக்குழு

பொருளடக்கம்

நேசமணி நினைவு கிருத்துவக் கல்லூரி
(மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்)
இளம் முனைவர் மாணாக்கர்களின் (2019 – 2020) ஆய்வேடு

Compilation of Dissertations submitted by the Recipients of **'NSR100 Kamatchi Ammal Fellowship'** provided by **Na Subbu Reddiar 100 Educational Trust** in the Nesamani Memorial Christian College, Marthandam, Tamil Nadu

t.vz;	மாணாக்கர், ஆய்வேடு, பேராசிரியரின் நூல்
01	**R** நித்யா (20193113107101) **திருஞானசம்பந்தரின் சைவ சித்தாந்தம் பற்றிய செய்திகள்** ***சைவசித்தாந்தம் - ஓர் அறிமுகம்***
02	**JS** ஷர்ஜா (20193113107102) **திருநாவுக்கரசரின் பக்தி சிறப்பு** ***நாவுக்கரசர்***
03	**K** ஷைனி (20193113107103) **சுந்தரரும் பக்தி மயமும்** ***தம்பிரான் தோழர்***

திருஞானசம்பந்தரின் சைவசித்தாந்தம் பற்றிய செய்திகள்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் திருநெல்வேலி
இளம் முனைவர் தமிழ் பட்டத்திற்காக
அளிக்கப்படும் ஆய்வேடு

ஆய்வாளர்

ரெ. நித்யா

பதிவு எண்: 20193113107101

தமிழ்த்துறை & தமிழாய்வு மையம்,

நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி,

மார்த்தாண்டம் 629 165.

2019-2020

நன்றியுரை

“திருஞானசம்பந்தரின் சைவசிந்தாந்தம் பற்றிய செய்திகள்” என்னும் தலைப்பில் ஆய்வு சிறப்பாக அமைவதற்கு அருள் புரிந்த எல்லாம் வல்ல இறைவனுக்கு என் முதற்கண் நன்றியை சமர்ப்பிக்கிறேன்.

நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரியில் ஆய்வு செய்வதற்கு அனுமதி அளித்த கல்லரி முதல்வர் அறிவர். கே. பால்ராஜ் மற்றும் தமிழ்துறைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்வாய்வுக்கு வழிகாட்டியாக இருந்து இவ்வாய்வேட்டினை சிறந்த முறையில் உருவாக்க ஆலோசனையும், ஆக்கமும், ஊக்கமும் வழங்கிய முனைவர் ரோ.க. கேதறின் பிறீடா அவர்களுக்கும் என் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வு நெறிமுறைகளை கற்பித்து பேருதவி புரிந்த தமிழ்த்துறை ஆசிரிய பெருமக்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்விற்கு தேவையான நூல்களை தந்துதவிய நேசமணி நினைவு கிறிஸ்தவக் கல்லூரி நூலகத்தாருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வேட்டினை சமர்பிக்க எங்களுக்கு முழு ஆதரவு தந்துதவிய பெற்றோர், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் என் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வேட்டை சிறந்த முறையில் கணினியில் தட்டச்சு செய்து தந்த மார்த்தாண்டம் ஒலிம்பிக் ஆப்செட் அவர்களுக்கும் மற்றும் உதவியாளர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்ததுக் கொள்கிறேன்.

ரெ.நித்யா

ஆய்வாளர்.

சுருக்கக் குறியிட்டு விளக்கம்

ப	-	பக்கம்
பக்	-	பக்கங்கள்
மேலது	-	மேற்குறிப்பிட்ட நூல்
சைவ.சி	-	சைவ சித்தாந்தம்

பொருளடக்கம்

உள்ளடக்கம்

1.0 ஆய்வு முன்னுரை

இலக்கு +இயல் = இலக்கியம் ஆகும். அதாவது இலக்கு நோக்கம். கொள்கை, குறிக்கோள், இலட்சியம் எனும் மொழிக் கருத்துக்களையும் இயம் - இயம்புவது, கூறுவது, வெளிப்படுத்துவது எனும் மொழிக் கருத்துக்களையும் குறித்து நிற்கின்றன. அறிந்த கருத்துக்களையும் உணர்ந்த உணர்ச்சிகளையும் பிறருக்கு எடுத்துக் கூற உதவுகின்ற ஒரு கருவி மொழியாகும். அம்மொழியைப் பேசுகின்ற மக்களது கொள்கைகளையும் குறிக்கோள்களையும் எடுத்தியம்புவது இலக்கியமாகும். இவை சிறப்பு பெற்றவையாக அமைந்துள்ளன.

1.1 ஆய்வுத் தலைப்பு

‘‘திருஞான சம்பந்தரின் சைவ சித்தாந்தம’’ பற்றிய செய்திகள் என்பது ஆய்வின் தலைப்பாகும்.

1.2. ஆய்வின் நோக்கம்

திருஞான சம்பந்தரின் சைவ சித்தாந்தம் பற்றிய செய்திகள் இறைவன் அவர் மீது எவ்வாறு பற்று கொண்டிருந்தார் என்பதை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்

1.3 ஆய்வு கருதுகோள்

திருஞானசம்பந்தரின் சைவ சித்தாந்ததின் மூலம் திருமுறைகளின் சிறப்புகளை வெளிக்கொணர்வதே இவ்வாய்வின் கருதுகோளாகும்.

1.4 ஆய்வின் எல்லை

‘‘திருஞானசம்பந்தரின் சைவ சித்தாந்தம்’’ ஆய்வு எல்லையாக அமைந்துள்ளது.

1.5 ஆய்வின் அணுகுமுறை

இவ்வாய்வின் அணுகுமுறையாக விளக்கவியல் அணுகுமுறையும், பகுப்பாய்வு அணுகுமுறையும், சமுதாயவியல் அணுகு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

1.6 ஆய்வின் ஆதாரங்கள்

ஆய்விற்கு அடிப்படையாக அமைபவை ஆதாரங்கள் ஆகும். இவ்வாதாரங்கள் இருவகையாகப் பகுக்கப்பட்டுள்ளன. அவை,

முதன்மை ஆதாரங்கள்

துணைமை ஆதாரங்கள்

1.6.1 முதன்மை ஆதாரங்கள்

ஆய்விற்குரிய நேரடிச் சான்றுகளே முதன்மை ஆதாரங்களாகும். ‘‘சைவ சித்தாந்தம்’’ இவ்வாய்வின் முதன்மை ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

1.6.2 துணைமை ஆதாரங்கள்

துணை ஆதாரங்களாக இலக்கியம் குறித்த கட்டுரைகள், புத்தகங்கள், ஆய்வேடுகள். குறிப்புகள், இணையத்திலிருந்து சேகரித்த தகவல்கள் ஆகியவை எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

1.7 ஆய்வின் மொழிநடை:

இவ்வாய்வேட்டை படிப்பவர் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் ஆய்வேடு முழுவதும் எளிய நடையே பயன்படுத்தப்பட்டுள்ளது.

1.8 ஆய்வின் பகுப்பு:

இவ்வாய்வேடு ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

1. ஆய்வு அறிமுகம்
2. திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாறு‘
3. திருஞான சம்பந்தரின் முதல் மூன்று திருமுறைகளின் சிறப்பு
4. திருஞான சம்பந்தரின் சைவ சித்தாந்தம் பற்றிய செய்திகள்
5. ஆய்வு நிறைவுரை

ஆய்வு அறிமுகம் என்னும் முதல் இயலானது ஆய்வு முன்னுரை ஆய்வுத் தலைப்பு ஆய்வின் நோக்கம் ஆய்வு கருதுகோள், ஆய்வு எல்லை, ஆய்வின் ஆதாரங்கள் ஆய்வின் மொழிநடை, ஆய்வு பகுப்பு முதலியவற்றைத் தெளிவுப்படுத்துகிறது.

இரண்டாவது இயலில் திருஞான சம்பந்தரின் வாழ்க்கை வரலாறு பற்றி செய்தி விளக்கி கூறப்பட்டுள்ளன.

இயல் மூன்றில் ஒன்று, இரண்டு, மூன்று திருமுறைகளின் சிறப்புகள் விரிவாக விளக்கப்பட்டுள்ளது.

இயல் நான்கில் ‘‘திருஞான சம்பந்தரின் சைவ சித்தாந்தரின் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன.

ஆய்வு நிறைவுரை என்னும் இறுதி இயலில் ஆய்வில் கண்டறியப்பட்ட செய்திகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன. ஆய்வு நிறைவுரையை அடுத்த ஆய்வுக்கு தேவையான தரவுகள் துணை நூற்பட்டியில் இடம் பெற்றுள்ளன.

உள்ளடக்கம்

2.0 முன்னுரை:

சங்க இலக்கியங்கள் மன்னரையும் மக்களையும் பற்றி பாடுகின்றன. பக்தி இலக்கியங்கள் இறைவனயும் இறையடியாரையும் சிறப்பித்தன. ‘கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்’ என்னும் எண்ணம் மக்கள் மனதில் ஊற்றப்பட்டது. நாடெங்கும் கோயில்கள் எழுப்பப்பட்டன. இயற்றப்பட்ட இலக்கிய வகைமைகள் அனைத்தும் சமயங்கள் சார்ந்தாகவே உருவாக்கப்பட்டது. அவ்வாறு உருவாக்கப்பட்டவைகளில் திருஞானசம்பந்தர் இறைவன் மீது கொண்டுள்ள சிறப்புகள் அனைத்தும் இதில் கூறப்பட்டுளளன.

2.1 பிறப்பு:

சோழவள நாட்டின் பழைய நகர்களுள் ஒன்றாகிய சீகாழியல் சிவபாத இருதயர்க்கும் பகவதியார்க்கும் திருமகவாகத் தோன்றியவர் தான் திருஞானசம்பந்தர். இவருடைய புனைப்பெயர் ஞான செம்மலர் ஆவர்.

2.2 சமயம்:

திருஞானசம்பந்தர் சைவ சமயத்தினை சார்ந்தவர். இவருடைய காலம் கி.பி. 5 அல்லது ஆறாம் நூற்றாண்டு எனக் கூறுவர்.

2.3 பதிகம்:

திருஞானசம்பந்தர் ஒவ்வொரு தலமாக சென்று 16,000 பதிகங்கள் பாடி உள்ளார்.

2.4 பாடல்கள்

திருஞானசம்பந்தர் இயற்கை காட்சிகளை வருணிப்பதில் சிறந்தவராக விளங்கினார். திருஞானசம்பந்தர் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை

ஆகிய ஐந்தினை ஒழுக்கத்தையும் திணைச் சிறப்பையும் பாடுவதில் வல்லவராகத் தோன்றுகிறார். கிடைத்த பாடல்களின் எண்ணிக்கை 4213 பாடல்கள்.

2.5 திருமுறைகள்:

ஒன்று, இரண்டு, மூன்று ஆகிய திருமுறைகள் திருஞான சம்பந்தரின் திருமுறைகள் ஆகும். இந்த திருமுறை தேவாரங்களாகத் தொகுக்கப்பட்டுளளன.

2.6 திருஞானசம்பந்தருக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள்:

திருஞானம் பெற்ற பிள்ளை, திருஞானம் பெற்ற ஆளுடைய பிள்ளை, காழி நாடுடைய பிள்ளை, ஆணை நமதென்ற பெருமான், பரசமய கோளரி, என்னும் பெயர்களைக் கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

2.7 இறைவன் மீது கொண்ட பற்று:

திருஞான சம்பந்தருக்கு மூன்று வயதாக இருந்த போது அவரை அவருடைய தந்தை குளக்கரையில் அமரச் செய்து விட்டு நீராடச் சென்றார். பசியால் அழுத திருஞான சம்பந்தருக்கு உமையம்மையே நேரில் வந்து பொற்கிண்ணத்தில் 'ஞானப்பால்' ஊட்டினார். அன்று தொட்டு ஆளுடைய பிள்ளை, ஞானசம்பந்தர் என அழைக்கப்பட்டு வருகிறார். ஞானப்பால் உண்ட தனது மூன்றாம் வயதிலேயே

'தோடுடைய செவியன் விடையேறி ஓர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளம் கவர் கள்வன்
ஏடுடையமல ரால்முனை நான் பணிந்து ஏத்த அருள் செய்த
பீடுடைய பிரமாபுரம் மேவிய பெம்மான் இவன் அன்றே'

என்னும் பாடலைப் பாடினார். தனது தந்தையாரின் தோளில் அமர்ந்தவாறே சிவத்தலங்கள் பலவற்றிற்கும் பயணமாகி நேரில் சென்றார். இவற்றின் மூலம் திருஞானசம்பந்தர் இறைவன் மீது அதிக பற்று வைத்திருந்ததை அறிய முடிகிறது.

2.8 நனிபள்ளி நண்ணுதல்:

திருஞானசம்பந்தரின் தாயாகிய பகவதியார் பிறந்த திருநனி பள்ளி என்ற இடத்தில் இருந்த மறையவர் முதல் அனைவரும் திருஞான சம்பந்தரது அற்புத வாழ்வின் உண்மையறிந்து வியப்புற்று சீகாழியில் வந்து ஞானச் செம்மலரின் திருவடி போற்றி மகிழ்ந்தார்கள். தம் ஊருக்கு எழுந்தருள வேண்டும் என்று அவரிடம் விண்ணப்பம் செய்தார்கள். திருத்தோணியப்பரை வழிபட்ட சம்பந்தர் இசைந்து தமது தாமரை மலர் போன்ற திருப்பாதங்கள் வருந்த நடந்துச் சென்றார். அதை கண்ட தந்தையார் சிவபாத இருதயர் தனது தோள் மீது சம்பந்தரை சுமந்து மகிழ்ந்து சென்றார்.

திருநனிப் பள்ளியை நெருங்கிய போது ‘‘மலர்ச் சோலைகள் தோன்றும் இ∴து எவ்வூர்? ’’ என் ஞானசம்பந்தர் தனது தந்தையிடம் கேட்டார். அப்போது அதை கேட்டு மகிழ்ந்த தந்தையார், ‘‘அதுவே நீலங்கள் மலரும் வயல்கள் சூழ்ந்த ‘‘திருநனி பள்ளி’’ என்றார். தோளின் மீது இருந்தவாறே தொழுத சம்பந்தர், ‘‘காரைகள் கூகை முல்லை’’ என்று தொடங்கும் திருப்பதிகம் பாடிப் போற்றினார். இத்திருப்பதிகத்தின் பாடல் தோறும் ‘‘சிவபெருமான் இனிது வீற்றிருந்தருளும் நகர் இத்திரு நனிபள்ளி போலும்’’ என்று வியந்து பாராட்டி இறுதிப்படாலில் ‘‘எந்தை மேவும் திருநனிப்பள்ளியை நினைப்பவர் வினை

கெடுவதற்கு ஆணை நமதே'' என்று முடித்தார். பின்பு திருக்கோயில் அடைந்து தொழுது போற்றினார்.

2.9 சம்பந்தரின் யாத்திரை:

திருஞான சம்பந்தர் தமிழ் நாட்டின் தெய்வத் தலங்கள் அனைத்தினும்சென்று வழிபட விரும்பினார். வரும் வழியில் வழிபடப் பெற்ற தலங்கள் அனைத்தும் சிறப்புப் பெற்ற தலங்களாக கூறப்படுகின்றது. அவை திருநின்றியூர், திருநீடூர், திருப்புன்கூர், திருப்பழ மண்ணிக்கரை, திருமணஞ்சேரி, திருவெதிர் கொள்பாடி, திருவேள்விக்குடி, திருத்துருத்தி, திருக்கோடிகா, திருக்கஞ்சனூர், திருமாந்துறை, திருமங்கலக்குடி, திருவியலூர், திருந்து தெவன் குடி, திருவின்னம்பர், வரகுரங்காடுதுறை, திருப்பழமை, திருவையாறு, திருப்பெரும் புலியூர், திருவையாறு, திருப்பெரும் புலியூர், திருநெல்தானம், திருமழபாடி, திருக்கானூர், திருவன்பிலாந்துறை, திருவடமாந்துறை ஆகிய இடங்கள் திருஞானசம்பந்தர் யாத்திரை செய்த இடங்கள் ஆகும்.

2.10 திருஞானசம்பந்தர் செய்த அற்புதற்கள்:

திருஞான சம்பந்தர் பல அற்புதற்களைச் செய்தார்.

2.10.1 திருமறைக்காடு:

திருமறைக் காட்டில் உள்ள மூடிய கோயில் கதவுகளைப் பாடித் திறக்கச் செய்தார்.

2.10.2 திருப்பாச்சிலாச் சிரமம்:

மழவன் மகளின் முயலகன் (போலியோ) நோய்யை நீக்கினார்.

2.10.3 திருமருகல்:

பாம்பு தீண்டிய வணிகனின் விடம் நீக்கினார்.

2.10.4 திருவோந்தூர்

ஆண் பனையை பெண் பனை ஆக்கினார்.

2.10.5 மதுரை:

தான் தங்கியிருந்த மடத்திற்குக் கூன் பாண்டியன் வைத்த நெருப்பை அவனுக்கே வெப்பு நோயாகப் பற்ற செய்தார். அவன் மனைவி மங்கையர்க்கரசியாரும், அமைச்சர் குலச்சிறையாரும் வேண்ட நீறு பூசி வெப்பு நோய் நீக்கி, கூன் நீங்கச் செய்து அவனை குணமாக்கினார்.

2.10.6 கூன் பாண்டியனை குணமடைய செய்தல்:

பாண்டி நாட்டில் சமணர் செல்வாக்குப் பெற்றிருந்தனர். அவர்கள் ஆணைமலை முதலிய இடங்களைத் தம் இருப்பிடங்களாகக் கொண்டு வாழ்ந்து வந்தனர். பாண்டி மன்னன் கூன் பாண்டியானைத் தம் வசப்படுத்தினார். மக்கள் பலரும் அச்சமயம் சார்ந்தனர். சிவனுறையுங் கோயில்கள் பள்ளிகளாகவும், பாழிகளாகவும் மாற்றப்பட்டன. பாண்டிமா தேவியாராகிய மங்கையர்க்கரசியரும், நல்லமைச்சர் குலச்சிறையாரும் ஆகிய இருவருமே சிவ நெறியை விடாது ஒழுகினர். தம் பரிசனத்தார் சிலரைத் திருமறைக் காட்டிற்கு அனுப்பிப் பாண்டி நாட்டிற்கு எழுந்தருளும் படி திருஞான சம்பந்தருக்கு விண்ணப்பம் விடுத்தனர்.

2.10.7 தலை துண்டாகல்:

வாதுக்கு அழைத்த புத்த நந்தியின் தலை துண்டாகுமாறு செய்தார்.

2.10.8 மயிலாப்பூர்:

சிறுவயதில் இறந்து போய்க் குடத்திற்குள் சாம்பலாக இருந்த பூம்பாவை என்னும் பெண்ணை அப்பொழுதிற்கு உரிய வயது, இளமை, அழகோடு உயிர் பெற்றெழச் செய்தார். அப்பொழுது சம்பந்தர் பாடிய பாடல்கள் பூம்பாவைத் திருப்பதிகம் எனப்படுகிறது.

"மட்டிட்ட புன்னையங் கானல் மடமயிலைக்
கட்டிடம் கொண்டான் கபாலீச் சரம் அமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பின் உருத்திரப்பல் கணத்தார்க்
கட்டிடல் காணாதே போதியோ பூம்பாவாய்"

என பூம்பாவாய் பற்றிய செய்தியை கூறுகிறது.

2.10.9 குளிர் சுரம் போக்கிடல்:

மழைக்காலம் நீங்கி முன் பனிக்காலம் வந்தது. பனியென்னும் சுரநோய் அடியார் பலரையும் பற்றியது. "இச்சுர நோய் இந்நாட்டிற்கு இயல்பே ஆயினும் இதன் கொடுமைகள் நம்மை எய்தப் பெறா" என்ற கருத்துடன் சிவ பிரானை வணங்கி அவ்வினைக்கு இவ்வினை என்று பதிகம் பாடுகிறார். புதிகம் பாடி இறைவன் அருளால் நோய் நீக்கினார்.

2.11 திருஞானசம்பந்தருக்கு இறைவன் செய்த அற்புதற்கள்:

திருஞானசம்பந்தர் போகும் இடங்களில் ஆங்காங்கே பல பயனுறு நலன்களை இறையருளால் பெற்றார்.

2.11.1 திருவீழிமிழலையில் படிக்காசு

கொடும் பஞ்சம் ஒன்று நாட்டில் வந்தது. மழை பெய்யவில்லை ஆறுகளில் நீர் வற்றின. உலகுயிர்கள் அனைத்தும் உணவின்றி வருந்தியது. விண்ணவர்க்கும் பூசனைகள் தப்பியது. பசிக் கொடுமை எங்கும் பரவியது. சிவனடியார்களையும் பசிக் கொடுமை வருத்தத் தொடங்கியது. மன்னர் இறைவன் அருளால் பசிக் கொடுமை நீங்கியது.

2.11.2 கனவில் சிவபிரான்:

திருஞானசம்பந்தரின் கனவில் தோன்றிய சிவபிரான் அளவற்ற புகழை உடையவர்களே! இக்கொடிய பசி நோய் உலக இயல்பால் நிகழ்ந்தது என கூறுகிறார்.

2.11.3 பெருமண நல்லூரில்:

திருஞான சம்பந்தருக்கு நடந்த திருமணவினையில் தீ வலம் வருமாறு இறைவன் கூறினார். தீ வலம் வரும் போது ஒளிரும் நெருப்பாக விளங்கும் ஒளியாம் இறைவனையே வலம் வர வேண்டும் என விரும்பினார். அவ்வாறே ஒளிப்பிழம்பாக நின்ற சோதியுள் தன் மனைவியுடன் வைகாசி மூலநாளில் இரண்டறக் கலந்தார்.

2.11.4 வாய்மூர்க் காட்சி:

திருஞானசம்பந்தர் கனவில் சிவபிரானை பணித்த படி திருக்காட்சி கண்டவாறே திருவாய்மூர் சென்றார். அப்போது சிவபிரான் உமையம்மையுடன் தோன்றித் தன் கூத்தினை ஞான சம்பந்தருக்குக் காட்சியருளினார்.

2.12 சிறப்பு தன்மைகள்:

திருஞானசம்பந்தரின் அனைத்துப் பதிகங்களிலும் எட்டாவது பாடல் இராவணன் கயிலை மலையை எடுத்துத் துன்புற்றதையும் ஒன்பதாவது பாடல் மாலும் அயலும் காண இயலாத சிவபெருமானின் பெருமையையும் பத்தாவது பாடல் சமண பௌத்த சமயங்கள் துன்பம் தரும் தீங்கினை உடையன என்றும் பாடும் பாங்கினைக் கொண்டுள்ளன. பதினோராவது பாாடலில் தனது பெயரையும் ஊரையும் குறிப்பிட்டு கூறும் முறையில் அமைந்துள்ளன.

2.13 திருஞானசம்பந்தரின் சமத்துவப் பணி:

காயத்ரி மந்திரம் ஓத வந்த அந்தணர்க்குத் திருவைத் தெழுத்து ஓதியதைப் போலவே சோதிடக் கட்டுகளில் பிணிக்கப்பட்டுள்ள மக்களை விடுவிக்க

“வேயுறுதோளி பங்கன் விடமுண்டகண்டன் மிக நல்ல வீணை தடவி

மாசறுதிங்கள் கங்கைமுடி மேல் அணிந்து என்

உளமே புகுந்த அதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி

சனி பாம்பு இரண்டு முடனே

ஆசறு நல்லநல்ல அவை நல்ல நல்ல அடியார் அவர்ககு மிகவே”

என்னும் பாடலின் மூலம் வழிகாட்டுகிறார் திருஞானசம்பந்தர். திருஞான சம்பந்தர் இறைவனோடு மகன்மை உறவு பூண்டவர். இயேசு நாதர் பரம் பொருளின் மகனாகக் கிறிஸ்தவ உலகில் பிறந்து சமத்துவ சமுதாயப் பணிகளை மேற்கொண்டார். இறைவனுக்கு மகன் என்னும் உரிமையில் ‘‘சுதன்’’ எனப் போற்றப்படுகின்றார். இறைவனோடு மகன்மை உறவு பூண்ட சம்பந்தரும் சைவர் உலகில் பிறந்து சத்புத்திரன் எனப் புகழப்படுகின்றார். சம்பந்தர் மேற்கொண்ட

சமத்துவ சமுதாயப் பணிகள் சத்புத்திரமார்க்கம் எனச் சிறப்பிக்கப்படுகின்றது. இவர் மேற்கொண்ட இத்தகைய செயலாக்க நெறி கிரியை நெறி எனப்படுகின்றது.

2.14 திருஞானசம்பந்தரின் மனித நேயம்:

மூடக்கட்டுகளைத் தகர்த்தெறியப் பாடுபட்டவர் திருஞானசம்பந்தர். அவரது சிந்தனை, சொல், செயல், அனைத்திலும் நேர்மை இருந்தது. அந்தணரான சம்பந்தர் தன்னுடனேயே தான் செல்லும் இடங்களிலெல்லாம் பாணர் குலத்தைச் சேர்ந்த திருநீலக்ணட யாழ்ப்பாணரை உடனிருத்திக் கொண்டார். தான் பாடும் பாடலின் வேகத்திற்கு ஏற்ற வேகத்தில் தனது யாழிசை இசைக்க இயலாத நிலை வந்த போது யாழினையே முறித்தெறியத் திருநீலகண்டர் முற்பட்டார். அப்போது தனது அன்பில் அவரைத் திருஞானச்சம்பந்தர் தடுத்து நிறுத்தினார். இதன் மூலம் திருனாசம்பந்தரின் மனித நேய ஒருமைபாடு வெளிப்படுகிறது.

2.15 இறைவனடி சேர்தல்:

திருஞான சம்பந்தர் இறைவன் திருமுன் நின்று எளியோனை முன் நாளில் ஆட்கொண்டருளிய திருவருள் இப்பொழுது இறையடி சேர்ந்தருளுதல் உறுதி என்ற நல்லுணர்வு மிகுதியால் ‘கல்லூர்ப் பெருமணம்’ எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடி நாதனே! நல்லூர்ப் பெருமானே! நினது திருவடி நிழலில் சேரும் பருவம் இதுவாகும் என்று உளமுருகப் போற்றி நின்றார். திருஞானசம்பந்தர் தனது 16வது வயதில் வைகாசித் திங்கள் மூல விண்மீன் கூடிய நாளில் இறைவனடி சேர்ந்தார்.

2.16 தொகுப்புரை:

- சோழ வள நாட்டின் சிறப்பினை திருஞானசம்பந்தரின் பிறப்பின் மூலம் அறியப்படுகிறது.
- திருஞான சம்பந்தர் இறைவன் மீது கொண்டுள்ள பற்றும் பக்தியும் சிறப்பித்து கூறப்படுகிறது.
- திருஞானசம்பந்தரின் அற்புத வாழ்வின் உண்மைகள் மக்களுக்கு பயனள்ளதாக அமைந்துள்ளது.
- மக்களுக்கு அற்புதங்கள் பல செய்து இறைவனின் அருள் தன்மை அனைவரையும் தெரியும் படி செய்தார்.
- திருஞானசம்பந்தரின் மனித நேயம் எல்லா இடங்களிலும் புகழ் பெற்ற தன்மை பற்றிய செய்தி விளக்கப்பட்டுள்ளன.

உள்ளடக்கம்

3.24 உயிரனுபவமும் சிவானந்தானுபவமும்

3.25 திருச்சிலப்பொலி

3.26 திருநனிபள்ளியும் பகவதியம்மையும்

3.27 திருஞானசம்பந்தருக்கு இறைவனின் அருள்

3.28 புகலியும் புண்டரிகமும்

3.29 திருநீற்றுப் பொலிவு

3.30 நான்கு வகையில் நின்ற அனுபவம்

3.31 நான்கு என்ற அறம்

3.32 கங்கையை அணிந்தவன்

3.33 பதிகம் வெளிப்படும் சூழல்

3.34 பதிகப் பெருவழியின் குறிக்கோள் இரண்டு

3.35 ஐந்தெழுத்து

3.36 மூவகை விளக்கம்

3.37 திருக்கூத்து இயற்றும் நிலை

3.38 திருஞானசம்பந்தரின் புதிய அனுபவம்

3.39 தொகுப்புரை

3.0 முன்னுரை

பக்தி இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள பன்னிரு திருமுறைகளில் திருஞானசம்பந்தரின் திருமுறை முதல் மூன்று திருமுறைகள் ஆகும். இந்த திருமுறை இறைவனின் சிறப்புகளை எல்லாம் எடுத்துக் கூறுவதாக உள்ளது. பன்னிரு திருமுறை பக்தி பேழையாக அமைந்துள்ளது.

3.1 சைவத்தின் சிறப்பு:

அறிவு என்னும் இன்பம் செய்து தமிழ் பேசுவதில் சிறந்தவர். தமிழுக்கு கிடைத்த தவமணி என்றும் பெருமைபடுத்தி கூறுகின்றனர். திருஞானசம்பந்தரை ஒரு நெறிய மனம் உணர்தல் என்ற புதுநெறியின் மூலம் சைவத்தின் சிறப்புகளை எல்லாம் எடுத்துக் கூறப்பட்ட நெறியே சைவத்தின் நெறி. இந்த நெறியை ''பெருநெறி பிடித்தொழுக வேண்டும்'' என்று வடலூர் வள்ளல் இராமலிங்க அடிகளும் பாராட்டிப் போற்றுகிறார்.

3.2 தமிழும் சைவமும்:

தமிழை ஒரு மொழி எனக் கொண்டு அதனை உண்டாக்கியவன் யார் என்ற வினாவை எழுப்பியும், உண்டாக்கிய ஒருவன் அதனை முதன்முதலாக யாருக்கு விளக்கமாகச் சொல்லிக் கொடுத்தான் என்ற வினாவை முன் வினாவுடன் இணைத்தும் ஆய்வு செய்வது ஒரு வகை

''கண்ணுதற் பெருங்கடவுளுள் கழகமோ டமரந்து பண்ணுறத் தெரிந்து ஆய்ந்த இப்பசுந்தமிழ்'' என்ற சான்றோர் கவியைச் சிந்திக்கும் போது இவ்வுண்மை புலனாகும்.

3.3 சைவ சமய பேரவை

தமிழுக்கென ஒரு சங்கம் இருந்து தமிழாய்ந்தது போலவே சைவ சமயத்துக்கும் ஒரு பேரவை இருந்தது. மன்றங்களின் கருத்துக்களை எல்லாம் சைவ மக்களால் ஏற்றுக் கொள்ளப் பெற்றது என்பது ஒரு முடிவாக உள்ளது.

"மதிவளர் சடைமுடி மன்றுளாரை முன்

துதிசெயும் நாயன்மார் தூய சொல்மலர்

பொதிநலன் நுகர்தரு மனிதர் பேரவை

விதிமுறை உலகினில் விளங்கி வெல்கவே"

என்பது பெரிய புராணத்தின் நான்காம் திருப்பாட்டாகும்.

3.4 மறுமலர்ச்சி இயக்கம்

சிவபரம் பொருளை வாழ் முதற் பொருளாகக் கொண்டு வழிபட்டு வந்தவர்கள் சான்றோர்கள். சைவ நன்னெறியின் மறுமலர்ச்சியைத் தோற்றுவித்து. அம்மறுமலர்ச்சி இயக்கத்தின் தலைவராகத் தாமே இருந்து செயற்படுத்திய பெருமை திருஞானசம்பந்தருக்கு உண்டு என்பதை உணரும் வகையில் திருமுறைகள் விளங்குகின்றன.

3.4.1 மூன்று கொள்கைகள்:

திருஞானசம்பந்தர் மறுமலர்ச்சி இயக்கத்தில் மூன்று கொள்கைகளை எடுத்துக் கூறுகிறார். ஆவை

1. கண்ணாற் கடவுளைக் காணலும் காட்டலும்
2. இறைவன் தானே வலிய வந்தருளுதல்
3. பெண்ணினல்லாளொடுங் கூடிய பெருந்தகையாய் அவனே வந்து ஆளாகக் கொண்டான்

ஆகிய மூன்று கொள்கைகளை கூறுகின்றார்.

3.5 பதிகப் பெருவழி:

பொருந்திடு ஞானத் தமிழ்காரராகிய திருஞானசம்பந்தர் திருந்திய தோணிபுரத்துக்கு இறைவன் திருவருளால் தொடங்கிய பதிகப் பெருவழியானது தன்னுண்மை நிலையில் முழுமையாக வளர்ந்து சிறந்து விளங்கிய சிறப்பினைப் பெரிய புராணத்துப் புனிதர் பேரவை நிகழ்வு கூறுகிறது.

"பதிகப் பெருவழி காட்டப்

பருப்பதக் கோன் பயந்த

மதியத் திருநுதல் பங்கன்

அருள் பெற வைத்த எங்கள் நிதியை"

என்று ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதிய இரண்டாம் செய்யுள் கூறுகிறது.

"ஆறது ஏறுங் சடையான் அருள்

மேவ அவனியர்க்கு

வீறது ஏறுந் தமிழால் வழி

கண்டவன் "

என்று ஐந்தாம் செய்யுளில் நம்பியாண்டார் நம்பி சிறப்பினைக் கூறுகின்றார்.

3.6 திருஞானசம்பந்தர் சிறப்பு:

திருஞானசம்பந்தர் அரசனுக்கு ஏற்பட்ட வெப்பு நோயை நீக்க வேண்டிய ஆளுடைய பிள்ளையாரை அழைப்பதற்கென்று பாண்டிமாதேவியாரும் பரிவுடை அமைச்சனாராகிய குலச்சிறையாரும் சென்று விண்ணப்பம் செய்து வெப்பு நோய்யை நீக்கி திருஞானசம்பந்தரை வேண்டினார்

"ஞானத்தின் திருவுருவை நான் மறையின் தனித்துணை

வானத்தின் மிசையன்றி மண்ணில் வளர் மதிக் கொழுந்தைத்

தேனக்க மலர்க் கொன்றைச் செஞ்சடையார் சீர் தொடுக்கும்

கானத்தின் எழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்’’

என திருஞான சம்பந்தரின் சிறப்பினைக் கூறுவதாக உள்ளது.

3.7 பிரமபுரம்

திருஞானசம்பந்தர் ‘தோடுடைய செவியன்’ என்று எடுத்த மொழித் திருப்பதிகம் முழுவதிலும் ‘பிரமாபுரம்’ என்ற வழக்கையே எடுத்தாளுகின்றார். ‘பிரமபுரம்’ என்பதற்குப் பிரமன் வழிபட அவனுக்கு அருள் புரிந்ததலம் என்று பொருள் கொள்வது பொதுமரபு. ஆயினும் திருஞான சம்பந்தர் இம்முதற்பதிகத்திற் பிரமாபுரம் பலவகையாக பெருமைகளைக் கொண்டு விளங்குவது என்று அதனுடைய தனிப் பெருமை விளங்கும் வண்ணம் அமைத்துக் காட்டுகின்றார்.

“ஊர்பரந்த உலகின் முதலாகிய ஓரூர் இது என்னப்

பேர் பரந்த பிரமாபுரம்’’

என்றும்,

“கருமை பெற்ற கடல் கொள்ள மிதந்ததோர்

காலம் இது என்னப்

பெருமை பெற்ற பிரமாபுரம்’’

என்றும்,

“துளரிலங்கும் உலகிற் பலவூழிகள் தோன்றும் பொழுதெல்லாம்

பெயரிலங்கு பிரமாபுரம்

என்றும்,

பிரமாபரத்தின் சிறப்புகளை எல்லாம் எடுத்து கூறுவதாக உள்ளது.

3.8 அருள் வாக்கின் நுட்பம்:

திருஞானசம்பந்தர் பதினாறே ஆண்டு வயதினர். எலும்பைப் பெண்ணாக்கிய நிலையில் படைக்கப் பெற்ற பெண், பிரமன் படைத்த பெண்ணை விட நல்லவள் வினைக் சீடாகிய பெண்ணையே பிரமன் படைத்தான். தமிழால் பதிகப் பெருவழி காட்டும் பெரு நெறியால் விளங்கும் பெண்ணைப் படைத்தார் புகலிவேந்தர். பிரமன் தன் நான்கு முகங்களால் அவளுடைய அழகைத் தான் பார்க்க முடிந்தது. ஆனால் பெம்மான் எனப் பெறும் கண்ணுதற் பாரம் பொருளின் திருவருளையே கருணை வெள்ளத்தையே ஆயிரமுகங்களாற் காணவும் காட்டவும் ஆகிய பேறு பெற்றார். ஞானசம்பந்தர் என்று சேக்கிழார் பெருமானின் அருள் வாக்கின் நுட்பத்தினை விளக்குகின்றார்.

3.9 பிரமன் வழிபட்ட இடம்:

பிரமன் வழிபட்டுப் பேறு பெற்ற பிரமபுரம் ஒரு பாலாக கொண்டும் பெரு நெறிய பிரமாபுரமாக மலர்ந்த வரலாற்றை எல்லாம் எடுத்து கூறுவதாகவும் உள்ளது. திருநெறிய தமிழ் வழியிலமைந்த திருப்பதிகப் பெருவழியை இவ்வுலகில் தோற்றுவித்து வளர்த்துத் தொண்டாற்றிய முதற் பெருந் தலைவராக நின்றவர் திருஞானசம்பந்தர். பிரமபுரம் சிறப்பு பெற நின்றவர் இந்த திருஞான சம்பந்தர் ஆவார்.

3.10 பிறைசூடி என்ற பெயர்:

சிவனுக்குப் பிறைசூடி என்ற பெயர் உண்டு. பிறை என வரும் சொல்லுக்கு மூன்றாம் நாள் திங்கள் என்பதாகவே உணர உண்டு. உலக வழக்கிலும் பிறை என்றாலே மூன்றாம் நாள் நிலவையே குறிக்கும். அதிலும் தேயும் நிலையில் வரும் மூன்றாம் நாள் நிலவைக் குறிக்காது. சிவன் தன் தலையில் சூடியபின் அந்த ஒரு கலைத் திங்கள் நாளும் வளர்ந்து முழுமை

அடைவதும் பின்னர் நாளும் தேய்ந்து சிறுமை அடைவதும் ஆகிய இருநிலைகளையும் பெற்றது. வளர்வதற்கும் தேய்வதற்கும் உரியன இரண்டாம் கலை முதலாக உள்ள பதினைந்து கலைகளே. எனவே சிவன் தலையில் இருப்பது ஒற்றைக்கலைத் திங்களேயாயினும், நாம் காணக் கூடிய நிலையில் உள்ள மூன்றாம் பிறையையே அவன் சூடியிருக்கும் பிறை ஆகும்.

3.11 கலைகள் நான்கு

ஞானப்பால் வளர்ச்சியானது கலைகளின் சிறப்பினைக் கூறுகின்றது. ஞானப்பால் அருந்தும்முன் திருஞான சம்பந்தர் வளர்ந்தும் நின்ற கலைகள் நான்கு. எனவே அவர் ''நான் மறையின் தனித்துணை'' என்று குறிப்பிடப் பெற்றார். அதன் காரணமாகவே, அவர் அழுத நிலையில் அவர் வாயிலிருந்து வெளிப்பட்டது வேதவொலி என்று குறிப்பிட்டுக் காட்டினார் சேக்கிழார்.

3.12 சிவனுடைய திருவடியை பேற்றுதல்:

திருஞானசம்பந்தர் சிவபெருமானின் மீது தீராத பக்தியை கொண்டவர்.

''பண்டு திருவடி மறவாப் பான்மையோர் தமைப்பரமர்

மண்டு தவ மறைக் குலத்தோர் வழிபாட்டின் அளித்தருளத்

தொண்டின் நிலைதா வருவார்'' (பெரியபுராணம் 1958)

என்று சிவனுடைய திருவடியை போற்றுதல் எப்படி எல்லாம் இருக்கின்றன என்பது பற்றி சேக்கிழார் குறிப்பிடுகின்றார்.

3.13 இறைவன் அருள்:

சிவனுடைய திருவடியை மறவாது போற்றுதல் என்பது ஒரு நெறி, அந்நெறியில் வருபவர்களுக்கு ஞானம் கொடுக்க வேண்டும்.

“திருமறைநூல் வேதியர்க்கும் தேவியர்க்கும் தாம் கொடுத்த

பெருகுவரல் நினைந்தோ தான் தம் பெருமைக் கழல்பேணும்

ஒரு நெறியில் வரு ஞானங் கொடுப்பதனுக்கு” (பெரிய புராணம் 1968)

இவ்வாறு எண்ணியவுடன் உமையம்மையை நோக்கி “துணை முலைகள் மொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத்து ஊட்டு” என ஆணையிட்டார், தோணியப்பர் அம்மையார் முதலில் குழந்தை இருக்கும் இடம் அணைந்து, பொன்கிண்ணத்தில் பாலைக் கறந்து பின்னர் அப்பாலின் சிவஞானத்தைக் குழைத்துக் கொடுக்கிறார்கள்.

3.14 உயிர்களை காத்தல்

சிவபெருமான் உயிர்களை அழிக்க வந்த ஆலகால நஞ்சினைத் தான் ஏற்றான். ஊயிர்களை, உலகத்தை அழியாமற் காத்த வகையில் அத்திரு நீலகண்டத்தை,

“கருமையின் ஒளிர்கடல் நஞ்சமுண்ட

உரிமையின் உலகுயிர் அளித்த நின்றன்

பெருமையை நிலத்தவர் பேசினல்லால்

அருமையில் அளப்பரி தாயவனே”

என்று குறிப்பிட்டருளுக்கின்றார் திருஞானசம்பந்தர். சிவபெருமான் அனைத்து உயிர்களையும் காக்கும் ஆற்றலை பெற்றவராகவே இருக்கின்றார்.

3.15 வருந்துதல்:

திருஞான சம்பந்தர் இறைவனை நோக்கி வருந்துகிறார்.

“திருந்தடி மறக்குமாறு இல்லாத என்னை” என்று ஞானசம்பந்தர் நம் முன்னே நிலையில் வருந்துவது போலவே நம்பியாரூரரும் தம் முன்னயை நிலைமையில்

“செய்ய சேவடி நீங்கும் சிறுமையேன்

மையல் மானுடமாய் மயங்கும் வழி

ஐயனே தடுத்தாண்டருள் செய்”

என வருந்திக் கேட்கிறார். அதனாலேயே, அவர் தம் தேவாரத்துள்,

‘‘பிழைப்பனாகிலும் திருவடிப் பிழையேன்’’ என்று இறைவனை நோக்கி வருந்திப் பாடுகிறார்.

3.16 ஞானசம்பந்தரின் திண்மை:

மண்ணின் மேல் வந்த பின்னரும் வேறு பிழைகள் செய்தாலும் செய்வேன். ஆனால் திருவடியை மறத்தல் என்ற ஒன்றை என் மனமே செய்யாது என்று கூறுவது போல ஞானசம்பந்தரும்

“கோலமாய நீண்மதிற் கூடலால வாயிலாய்

பாலனாய தொண்டு செய்து பண்டும் இன்றும் உன்னையே

நீலமாய கண்டனே நின்னையன்றி நித்தலும்

சீலமாய சிந்தையில் தேர்வதில்லை தேவரே”

என்று திண்மையுடன் எடுத்துக் கூறுகிறார்.

3.17 மதுரை புனல்வாதம்

மதுரையில் நடத்த புனல்வாதத்தின் போது திருவேட்டில் எழுதப் பெற்ற திருப்பாட்டு

“வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்டினல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே

என்பது அந்தணர் வானவர், வேந்தன் ஆகியோர்களின் சிறப்புகளை எல்லாம் எடுத்துக் கூறுவதாக அமைந்துள்ளது.

3.18 சூதன் ஒலிமாலை:

சூதன் ஒலிமாலை என்பதற்குச் சூத முனிவர் அருளிய பதினெண் புராணங்கள் என்று உரை கூறுவர். ‘கலிக்கோவை என்பதற்குக் கலிவிருத்தம் அல்லது கலிநிலைத்துறை என்ற பாவினங்களாற் பாடப் பெற்ற திருப்பதிகம் என்ற பொருளையே அனைவரும் கொள்கின்றனர்.

“வேத முதல்வன் முதலாக விளங்கி வையம்

ஏதப் படாமை உலகத்தவர் ஏத்தல் செய்யப்

பூத முதல்வன் முதலே முதலாப் பொலிந்த

சூதன் ஒலிமாலை என்றே கலிக்கோவை சொல்லே” என்பது இந்த உலகத்தில் முதலானவராக விளங்கியவர்கள் வேத முதல்வர்கள் ஆவார்.

3.19 நமச்சிவாயப் பதிகம்:

குற்றம் அறுத்தல் குணம் சேர்த்தல் என்ற இரண்டையும் இணைத்துத் தரும் நிலையுடையது திருவைந் தெழுந்து என்று எடுத்துக் காட்டும் முறையில்

“நல்லவர் தீயர் எனாது நச்சினர்

செல்லல் கெடச் சிவமுத்தி காட்டுவ

கொல்ல நமன்தமர் கொண்டு போமிடத்து

அல்லல் கொடுப்பன அஞ்செழுத்துமே”

என்ற திருப்பாட்டினை அமைத்துக் காட்டினார். இப்பதிகத்தினுள் இருமை நிலைகளை எடுத்துக் காட்டும் இடங்கள் கீழே கொடுக்கப் பெற்றுள்ளன.

- ❖ துஞ்சலும் துஞ்சலிலாத போழ்தினும்
- ❖ அந்தியுள் மந்திரம் அஞ்செழுத்துமே
- ❖ செல்லல் கெட, சிவமூத்தி காட்டுவ
- ❖ நற்றமிழ் ஞானசம்பந்தன் நான் மறை கற்றவன்
- ❖ நற்றுணைவன் பெருந்தன்மை ஞான சம்பந்தன்

இனி, சொற்றுணையாய் நின்ற வேதியன் என்றும் நற்றுணையாய் நின்றது நமச்சிவாய என்றும் அப்பரடிகள் இணைத்துக் கூறுமாற்றாலும் இதனை உணரலாம் ஆயினும் நமச்சிவாயப் பதிகத்தைக் கொள்ளலாமே என்ற ஒரு கருத்து உண்டாகும்.

3.20 வேணுபுரத்தின் பெருமை:

பரஞான நிறைவாய் இன்பமாய் நின்ற பெரியவன் எனப் பெற்றான். தண்ணீர் ஒருவகையில் எளிய பொருள் தண்ணீரை ஏற்றுச் சுமந்த மூங்கில் அதனைத் தன்னகத்தே அடக்கி வைத்திருந்து பின்னர் அதனை முத்தாக மாற்றுகிறது. எளிய தண்ணீர் அரிய முத்தாக மாற்றம் பெறுதல் வேணுபுரத்துத் தெய்வ பண்பு. சூரபதுமனுக்கு அஞ்சிய இந்திரன் சீகாழிக்கு வந்து மூஞ்கிற் காட்டினை உண்டாக்கி அதனுள் தானும் ஒரு மூங்கிலாக நின்ற இந்திரனின் உயிரானது தூய தண்ணீரைப் போன்றது. அதனை நன் முத்தாக மாற்றி ஒளி பெற வைத்தவன். அம்மூங்கிலடியில் விளங்கும் பரம்பொருள் வரலாற்றினை பெற்றனர். தன்னை விரும்பி வந்தடைந்தவர் யாவராயினும் அவரைத் தக்கார் தகவிலர் என்று கருதாது சிவமாக்கிச் சிவகதியில் உய்த்த பெருமையே வேணுபுரத்துப் பெருமை.

3.21 இருவகைத்திறன்

திருஞானசம்பந்தரின் திருவாக்கினுக்கேற்ப எந்த ஒரு பொருளுக்கும் இருவகைத் திறம் உண்டு. ஒன்று இயற்றிறம், மற்றொன்று இசைத்திறம் இயற்றிறம் என்பது அப்பொருளின் மெய்ந்நிலை அது செயற்பாட்டுக்கு அப்பாற்பட்டது. அது உணரும் தன்மையதே அதுவே செயற்பாட்டு நிலைக்கு வரும் போது 'இசை' எனப் பெறுகிறது. இதனை,

"இயலிசை எனும் பொருளின் திறமாம்"

என நாலடி மேல் வைப்புத் திருப்புகலித் திருப்பதிகத்தின் முதல் திருப்பாட்டிலேயே முதன்மைக் கருத்தாக ஞானசம்பந்தர் அமைத்தருளுகின்றார்.

3.22 இயல்திறமும் இசைத்திறமும்:

அருநெறியும் பெருநெறியும் இணைந்த இணைப்பே ஒரு நெறி என்பது முன்னே விளக்கப் பெற்றது. பரம் பொருளுக்கு இரு திறமாக நின்ற இலக்கணங்கள் இயல், இசை எனவும் இரவு, பகல் எனவும் நாலடி மேல் வைப்புத் திருப்புகலித் திருப்பதிகத்தால் உணரலாம். பரம் பொருளைத் தத்துவப் பொருளாகக் காண்பது தத்துவக் குறியீட்டுச் சொற்களால் குறிப்பிட்டுக் காட்டுவதே என்பதே அருமறை நெறி. கறைக் கண்டன் புரமெரித்தான எரியாடி என்பன வாய தொடர்கள் பரம் பொருளின் அருமையை உணர்த்தும் இயல் நிலைக் குறியீட்டுத் தொடர்கள். அவைகளால் இறைவன் தத்துவன் என்றும், ஞானத்தின் மேலாய் நின்ற நன் பொருள் என்றும் உணர்தல் ஒன்று மட்டுமே இயலுவது. அத்தகைய பண்புகள் அவனுடைய இரவென நின்ற பண்புகள். அரியன அருமறை நெறியன அவ்வுலகுக்குரியன ஆகும்.

3.23 மறைமொழி:

வடசொற்களே மறை மொழி. அவைகள் இறைவனே தத்துவ உண்மைகளை உணர்த்தும் முறையில் அமைக்கப் பெற்ற வித்துச் சொற்கள். விதைச் சொற்களை நன்றாகக் கற்றுத் தேர்ந்த பெருமக்கள் நால்வர் அச்சொற்களால் உணர்த்தப் பெறும் மொழிப் பொருளை அறிவார்களேயன்றி மொழியின் மூலப் பொருளை அறியாதவர்களானார்கள். அவர்களுக்கு அவ்விதைச் சொற்களின் மூலம் இது என உணர்த்த வந்த நிலையே ஆலமர் கடவுள் நிலை

“கல்லாலின் புடையமர்ந்து நான்மறை
ஆறங்க முதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்த தனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமற் சொன்னவனை நினையாமல்
நினைந்து பவத் தொடக்கை வெல்வாம் “

என்ற திருப்பாட்டின் மூலம் இறைவன் தான் தத்துவ உண்மைகளை எல்லாம் விளங்குகிறான் என கூறப்படுகிறது.

3.24 உயிரனுபவமும் சிவானந்தானுபவமும்:

கற்றல், கேட்டல் நிலையில் அமையும் ஒலி, பொருள் ஆகியவை பற்றிய அறிவானது முழுநிலையை எய்தி நிற்கும் போது அவ்வறிவு நிலையையே உயிரானது தன்னிலையில் முழுமை பெற்று நின்றநிலை எனவும் உயிரானது நாலாம் நிலையாகிய துரிய நிலையில் நிற்கிறது எனப் பேசப்பெறுகிறது. அந்நிலையில் நின்ற உயிரானது சிவத்தை இணைந்து நிற்கிறது.

“உணராதே யாதும் உறங்காதே உன்னிப்

புணராதே நீ பொதுவே நிற்கில்” தி.க படியார் 30

என்று சிவஞானத்தை அறியும் இயல்பை கூறுகிறது.

“ஒன்றுடன் இரண்டென விதண்டையிடு மிண்டரொடும்

ஒன்றல் அற நின்ற நிலையே

உன்னல் அற உன்னும் நிலை இன்னது என என்னுடைய

உள்ளுரை உள்ளம் மதியே”

என்றும்,

“தத்துவ நிலைகள் தனித்தனி ஏறித்

கனிப்பா நாகமாம் நலத்தே

ஒத்த தன்மயமாம் நின்னை நீ இன்றி

உற்றிடல் உயிரனுபவம்”

என்றும் வடலூர் வள்ளல் இராமலிங்க சுவாமிகள் ஆளுடையபிள்ளையார் அருள் மாலையில் முறையே சிறப்பாக குறித்து விளக்கியுள்ளார்.

3.25 திருச்சிலப்பொலி:

‘ஓம்’’ என்பது பிரணவம் ‘நமசிவய’ என்பது விரிவுப் பிரணவம் முன்னது ஓரெகுத்து பின்னது ஐந்தெழுத்து இவை அருள் நெறி அனுபவத்துக்கு மூலமாக நின்ற நாதம். நிலம் முதலிய பருட்பொருள் கலப்பில் வரும் ஒசை வேறு நாதம் வேறு முன்னதற்குக் காரணம் உடுக்கை ஒலி பின்னதற்குக் காரணம் திருச்சிலம்பொலி. அது ஊன்றிய திருப்பாதச் சிலம்பின் மூலம் வெளிவருவதால் அன்புறு நிலையில் அமைந்த சுவை ஒளி முதலியவைகளின் குற்றத்தை பாசத்தை நீக்கி அருளனுபவம் பெற வழி வகுத்தது. எனவே பாச நீக்கமும் அருளனுபவம் பெறுவதற்கு அமைந்த திருச்சிலம்பொலி திருஞானசம்பந்தப்

பெருமான் திருப்பதிகம். இவ்வொலியுடன் இணைந்த மறை மொழியாக வந்து அனைவர் உள்ளத்திலும் நிறைந்து அருளனுபவததை விளைவித்தது எனலாம்.

திருச்சிலம்பு ஒலியை எடுத்துக் கூறிய பதிகமே பஞ்சாக்கரத் திருப்பதிகம். திருச்சிலம்பு ஓசையை எடுத்து வெளிப்படுத்திய திருப்பதிகமே நமச்சிவாயத் திருப்பதிகம்.

"திருச்சிலம்பு ஓசைவழியே சென்று

நிருத்தனைக் கும்பிடு என்று உந்தீபற

நேர்பட அங்கே நின்று உந்தீபற"

என்று திருச்சிலம்பு ஒலி வழியாக இறைவனின் சிறப்பு தன்மை கூறப்படுகிறது.

3.26 திருநனிபள்ளியும் பகவதியம்மையும்

சைவசமய நற்குரவர் பெருந்தகை நால்வருக்கும் பொதுவின் அமைந்த வாழ்த்து செய்யுள் ஒன்று

"பூமியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல் போற்றி

ஆழிமிசைக் கல் மிதப்பில் அணைந்த பிரான் அடி போற்றி

வாழி திரநாவனூர் வன் தொண்டர் பாதம் போற்றி

ஊழிமலி திருவாதவூரர் திருத்தாள் போற்றி"

என நின்றது. இதனுள் நம்பியாரூரர் பெருமானை உலக்குக்குக் கொடுத்த திருத்தலம் திருநாவனூர். அடியவர் பெருமையை விளங்க வரும் வன் தொண்டரை இவ்வுலகுக்கு வழங்கிய பெருமையுடையது திருநாவலூர் ஆதலின் வன் தொண்டரை வாழ்த்துவதற்கு முன் 'திருநாவலூர்' வாழ்க என்றார். அவ்வாறே, உலகத்துயிர்களுக்கெல்லாம் பிறப்பறுக்க வந்த பெருந்தகை

எவ்வளவு தொகை யினராகவரினும் வருக, சிறப்பென்னும் செம்பொருள் காட்டவும் அதனோடு இணைத்து இன்புறுத்தவும் வல்லேம் என்று இருகை நீட்டி வாரீர் வாரீர் என அழைத்த. பிறப்பில் பெருமானைத் தம் வயிற்றில் ஏற்று இவ்வுலகில் தளர்நடை பயில வைத்த திருத்தவத்து நிறை கிழத்தியே பகவதியம்மை என புகழுகிறார்.

3.27 திருஞானசம்பந்தருக்கு இறைவனின் அருள்:

திருஞானசம்பந்தர் இறைவனின் அருள் பெற்று புகழ் பெற்று விளங்கினார். திருஞானசம்பந்தருக்கு உலகவர் காண நடைபெற்ற அருளயற் செய்திகளை அறிந்து திருநனி பள்ளியைச் சார்ந்தோர் சீகாழிக்கு வந்து ஞானவார முதமூண்ட பிள்ளையாரைக் கண்டு வணங்கினார்கள். புலநாள் தங்கியிருந்தார்கள்

"வந்த திருத்தொண்டர்க்கும் மல்கு செழு மறையவர்க்கும்
மற்றுளோர்க்கும் சிந்தை மகிழ்வுற மலர்ந்து திருவமுது முதலான
சிறப்பின் செய்கை தந்தம் அளவினில் விரும்பும் தகைமை
யினால் கடனாற்றும் கண்ணபயார் இல்லம் எந்தைபிரான்
சிவலோகம் என விளங்கியது"

என்று திருஞானசம்பந்தருக்கு இறைவன் கொடுத்த அருள் தன்மையை சேக்கிழார் எடுத்துக் கூறுகிறார்.

3.28 புகலியும் புண்டரிகமும்:

உயிர்களைக் காக்கும் அடைக்கலம் பொருளாக அமைந்தவன் உயிர்களிடத்திலேயே தங்கியிருக்கிறான். உயிர்களின் இதயமாம் தாமரையில் முன்னமேயே சென்று தங்கியவன். அங்கே திருவளரும் தேனமுதத்தைப் பொழிந்து கொண்டு அவ்வுயிரானது அசுத்தத்தில் ஆழ்ந்து கெட்டுப் போகாதவாறு அடைக்கலம் கொடுத்து வருகிறான். இவ்வகையில் புண்டரிகம் தாமரையை

உணர்த்த உயிர்களின் இதயமாம் தாமரையை இடமாகக் கொண்டவன் விரும்பிச் சென்று தங்கியிருக்கும் பதியே புகலி

“அகனமார்ந்த அன்பினராய் அறுபகை சென்று

ஐம்புலனும் அடக்கி ஞானம்

புகலுடையார் தம்முள்ளப் புண்டரிகத்

துள்ளிருக்கும் புரானர்”

என்று ஏரிசையும் என்று தொடங்கும் திருவீழிமிழலைத் திருபதிகத்தில் பாடியுள்ளார். உயிருக்கும் உடலுக்கும் அமைந்த உரிமையைத் தன்னுடையது, தன்னுடையது என்று ஆவண ஓலைக்காட்டி வந்தவர்கள் பலர். முதலில் விதி என்ற ஆவண ஓலையுடன் வந்தவன் இயமன். பின்னர் மூன்று பொருள்களின் கூட்டமைப்பு எனப்பேசி அம்முப் பொருளுக்கும் உரியவர்கள் வந்தார்கள். அவர்களே முப்பராதிகள். இவ்வுடம்பு முப்புரம் எனப் பெற்றது. இவ்வாறு வந்த பலரையும் உரிமையுடையவர்கள் அல்லர் என நிறுவி நானே உரிமையுடையவன் என நிலைநாட்டிக் கொண்டவன் ஒருவன் பிறர் உரிமையை மறுக்கும் போதெல்லாம் அவன் இங்கே நடனம் ஆடி சில மாற்றங்களைச் செய்து அம்மாற்றங்களின் அடையாளமாக அமைத்ததே ‘‘திருநீறு’’ என்று திருப்புகலித் திருப்பதிகங்களில் அமைத்துக் காட்டுகிறார்.

3.29 திருநீற்றுப் பொலிவு:

‘‘புண்டரிகத்தவன்மேவிய புகலி’’ என்பதன் மூலம் நிலை நாட்டப் பெறும் திரு நெறியத் தமிழ்நெறி என்பது ‘‘திருநீறு’’ என்பதே. சுடலை வெண்பொடி எனப்பெறுவது பூசியவரைப் பொலிவுடையவராக்குவது என்ற சிறப்புடையதாகிறது. திருநீற்றின் பெருமையைச் செயற்படுத்திக் காட்டும் இடமாக மதுரை அமைகிறது என்பது உண்மையே திரிபுரங்கள் அழித்து, திரிபுண்டாரத்திருநீறு மூலமாகவே

உயிர்களைக் காத்து வருகிறான். இதனலேயே திருநீற்றின் ஒளி சிறக்க அவதாரம் செய்த பிள்ளையார் எனவும் இவர் போற்றப் பெறுவர் அன்பு நெறியில் இறைவனே எல்லாம் எனக் கருதி உயிரானது இறைவனை அணிமையில் வைத்து நிற்கும் இறைவன் திருநடம் ஆடுவது சுடுகாடு. சுடுகாடு தான் இறைவன் விரும்பி அமரும் இடமாக பள்ளியாக அமைய இருக்கிறது. சுடுகாட்டில் எரியாடுவது உண்மை. சுடுகாட்டினைப் பள்ளியிடமாக ஆக்குகிறான். காடுடைய சுடலைப் பொடியே பொலி வைத்தந்து, காண்பவர்களையெல்லாம் பொலிவுடையவர்களாகச் செய்து தண்மைசால் அருளிடமாக ஆக்குகின்றது. சுடுகாடு குளிர் இடமாகிய பள்ளியாக அமைகிறது இதனை

"ஈகை படர் தொடர் கள்ளி நீழல்

ஈமம் இடுகாடு காட்டகத்தே

ஆகங் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்

அப்பன் இடம் திருவாலங்காடே"

என்பது காரைக்காலம்மையாரின் திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகத்து 2ஆம் பாட்டு சுடுகாட்டைக் குளிர் காடாக பள்ளியிடமாக ஆக்கும் முறையில் அமைவதே திருநீறு.

3.30 நான்கு வகையில் நின்ற அனுபவம்:

அறவடிவாம் பெற்றம் ஊர்த்த நிலையில் காழிநகர் மேய உயிர்களுக்கு நான்கு வகையில் நின்று அனுபவம் அளிக்கிறான்

- இந்நாள் வரையில் காழிநகர் மேய உயிர்கள் இன்பம் அனுபவிக்க வொட்டாது தடுத்தவைகளுக்கும் தானே துன்பமாக நின்றான்

- துன்பம் நீக்கி உயிர்களின் தங்கும் இடங்களை அருளாக ஆக்கி பின் அருளனுபவ இன்பம் தருகிறான்
- ஏழாகிய இனிய இசையாகவே அவ்வுயிர்கள் தங்குமிடங்களை ஆக்கி அவைகள் உள்ளத்தில் அ்னபாக நின்று கொண்டிருப்பான்
- காழிநகரில் வந்து பொருந்திய உண்மைப் பொருளாக நின்றான்.

3.31 நான்கு என்ற அறம்:

நான்கு என்ற அறத்தை வைத்த முறையை விளக்கிய ஞானசம்பந்தர்.

"தேனே வென்ற மொழியாள் ஒருபாகம்

கானமான் கைக்கொண்ட காழியார்

வானம் ஓங்கு கோயிலவர் போலாம்

ஆன இன்பம் ஆடும் அடிகளே"

என்ற பூவார் கொன்றைப் பதிகத்தில் வானம் ஓங்கு கோயிலவர் என்பது கங்கையையும் அதனைத் தாங்கிய குறிப்புடன் தூய பேரின்பம் அளிப்பவராகவும் விளங்குகிறார் என்று குறிப்பிட்டருளினார். இனி ஐந்தெழுத்தை உள்ளீடாகக் கொண்டு காழிப் பெருமானை விளக்குகின்ற முறையையும் காணுதல் வேண்டும்.

3.32 கங்கையை அணிந்தவன்:

"குளிர்தரு கங்கை தங்க சடை மாடிலங்கு

தலைமாலை யோடு குலவி

ஒளிர்தரு திங்கள் சூடி உமைபாகமாக

உடையான் உகந்த நகர்"

கங்கையானவள் குளிர்ந்து சிறக்குமாறு அணிந்துளான். திங்கள் தலைமாலை குலவவும் ஒளிமிகுந்து சிறக்கவும் ஆம் வகையில் அமைந்துள்ளான. தன்னில்

ஒரு பகுதியை உமைக்கு இடமாக வைத்தவன். அத்தகையோன் விரும்பித் தங்கியிருக்கும் ஊர் தன்னில் ஒரு பாதியை உமைக்கு இடமாக அளித்தான் என்பது தன்னையே உயிர்களின் ஒரு பாதியாகக் கொண்டு போய் அனைத்து நின்று அவ்வுயிர்களுடனேயே நின்று அவைகளைக் காப்பாற்றி வருகிறான் எனும்பொருள் பெற அமைந்துள்ளார்.

3.33 பதிகம் வெளிப்படும் சூழல்:

திருநனிபள்ளித் திருப்பதிகம் தோன்றும் சூழல் தனித்தன்மை வாய்ந்தது. இவை சிறப்புப் பெற்ற பதிகங்களாக உள்ளன.

3.34 பதிகப் பெருவழியின் குறிக்கோள் இரண்டு:

திருப்பதிகப் பெருவழியைத் தொடங்கிய பெருமான் திருஞானசம்பந்தப் பெருந்தகையின் தொண்டு இறைவனைத் தமிழ்த் திருப்பதிகங்களாற் பாடுவது என்பதன்று. திருப்பதிகப் பெருவழி என்பது திருப்பதிகத்தின் மூலம் இறையனுபவத்தையே அனைத்துயிர்களும் பெறுமாறு செய்விப்பதே. கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் பாடப்பெற்ற பதிகங்களை இன்று ஒருவன் பாடமுற்பட்டால் ஞானசம்பந்தர் அதனைப் பாடிய போது என்ன நிலையில் நின்று பாடினார் எத்தகைய தெய்வக்காட்சி அமைந்தது என்றும் கூறப்படுகிறது.

“மல்லல் நெடுந்தமிழால் இம்மாநிலத்தோர்க்கு உரைசிறப்ப

பல்லுயிரும் களிகூரத் தம்பாடல் பரமர்பால்

செல்லும் முறை பெறுதற்கு” - பெரிய புராணம் (1978)

உயிர்களின் உள்ளகத்தே தாக்க முறுத்தி அவைகளுக்கு அனுபவத்தைக் கொடுத்து உருக்கம் பெற வைக்க வேண்டுமானால் பரம் பொருளைத் தான அனுபவித்த அதே அனுபவம் உயிர்களைச் சென்றடைய வேண்டும்.

3.35 ஐந்தெழுத்து

'அஞ்செழுத்துமே' என்ற சொல்லானது அப் பதிகப் பாட்டுத்தோறும் பயின்று வருகின்றது என்பது உண்மை. ஐந்தெழுத்தில் பல பிரிவுகள் உள்ளன. 'நமசிவய'என்ற ஐந்தெழுத்தை மந்திரமாகக் கொள்ளும் போது தூலாம், சூக்குமம், காரணம், முத்தி என்றிவ்வாறாக பிரிவுகளை அமைத்து வேறுபடுத்திக் காண்பதும் காட்டுவதும் உண்டு.

3.36 மூவகை – விளக்கம்:

- 'நமசிவய' என்பது இறைவனின் பெயர் எனக் கொள்வது ஒரு விளக்கம் ''நாதன் நாமம் நமசிவாயவே'' என்பது ஞான சம்பந்தர் திருவாக்கு.
- பொருள் நின்ற நிலை:

  பரம்பொருளும் உயிரும் நின்ற நிலையை விளக்கும்.
- உபநிடத அமைப்பு விளக்கம்
- மெய்கண்ட சாத்திர முறை ஆகியவை ஆகும்

3.37 திருச்கூத்து இயற்றும் நிலை:

ஐந்தெழுத்தால் ஆடும் நடம் இரண்டு வகை. இதனை உணர்த்தும் முறையில் தில்லைக் கூத்தன் வடிவம் நமசிவய. அவன் ஐந்தொழில் இயற்றுவதற்கு உரிய நிலையில் திருவடிகள் திருக்கைகள் முதலியன ஐந்தெழுத்தாய் அமைக்கப் பெறுகின்றன.

3.38 திருஞானசம்பந்தரின் புதிய அனுபவம்:

அகத்தே தோற்றி அனுபவமாகாத ஒரு காட்சியைத் திருஞானசம்பந்தர் அங்கே காணுகிறார். அதாவது 'சிவன்' என்னும் உருவமே புலனாகிறது. அகத்தே தோன்றிய திருத்தொண்டர் வடிவம் புறத்தே தோன்றுவதோடு அது புறத்தே சிவன் எனவும் தோன்றுகிறது. திருத்தொண்டரே சிவன் என்ற கருத்தைத் தோற்றவிக்கம் உருவ அமைப்பு வேறுவகை. உருவம் திருத்தொண்டர். ஆவ்வுருவம் வெளிப்படுத்துங் கருத்தானது சிவன்.

3.39 தொகுப்புரை:

- ❖ திருஞான சம்பந்தர் இறைவன் மீதுக் கொண்டுள்ள பற்று இதில் விளக்கப்பட்டது.
- ❖ திருஞான சம்பந்தரின் புதிய அனுபவம் சிறப்பு பெற்றவையாக கூறப்பட்டுள்ளது.
- ❖ திருஞான சம்பந்தர் தனது திருமுறைகளில் கூறியுள்ள இறைவனின் பண்பு இதில் அறிய முடிகிறது.
- ❖ சிவபெருமான் திரிபுரம் அழித்தப் பெருமை விளக்கப்பட்டுள்ளது.
- ❖ நமசிவய பதிகத்தின் சிறப்புகள் பற்றி கூறப்பட்டுள்ளது.
- ❖ திருஞான சம்பந்தரின திருமுறையின் சிறப்புகள் ஆராயப்பட்டுள்ளது.

உள்ளடக்கம்

முன்னுரை:

திருஞானசம்பந்தரின் சைவ சித்தாந்தம் சைவசித்தாந்தத்தின் அமைப்பு சிவஞான போதம், அளவை இயலும் அறிவளவை இயலும், ஆன்மாவின் உண்மை, இறை உண்மை, பண்டைத் தமிழர் சமய வாழ்க்கை போன்ற கருத்துக்கள் செய்திகளாக அமைந்துள்ளன. இத்தொகுப்பில் அடங்கியுள்ள செய்திகள் இவ்வியலின் தரப்பட்டள்ளன. இதில் பெரும்பாலான செய்திகள் சைவத்தின் சிறப்பினை கூறுவதாக காணப்படுகின்றன. இன்றைய சமூக நிலையை இச்செய்திகள் காண முடிகிறது.

4.1 சைவ சித்தாந்தத்தின் அமைப்பு:

உலகம் என்று குறிப்பிடும் பொழுது உலகில் வாழும் எல்லா உயிரினங்களைக் குறிப்பிட்ட போதிலும் அவற்றில் சிறப்பாகச் சுட்டிக்காட்டப்படுவது ஆறு அறிவைப் பெற்ற மானிட உயிர்களைத்தான். மனிதன் மற்ற உயிரினங்களிலிருந்து வேறுபட்டு விளங்குவதற்குக் காரணம் ஆறு அறிவையும் ஒருங்கே அமையப் பெற்றிருப்பதாகும். அதனால் தான், மனிதன் உயர்திணையில் வைக்கப்பட்டுள்ளான். தான் பெற்றுள்ள ஆறாவது அறிவாகிய பகுத்தறிவாலும், அதனைச் செம்மையாகப் பயன்படுத்துவதாலும் மனிதன் மனிதனாகிறானோ இல்லையேல் மற்ற உயிரினங்களுக்குச் சமமாக விடுகிறான்! எனவே பகுத்தறிவைப் பயன்படுத்தச் சிந்தனையைச் சீராக வளர்க்ககும் போது தான் மனிதன் தன்னுடைய நிலையை அடைவதற்கு மட்டுமல்லாமல் மற்றவர்களைப் பற்றி உணர்ந்து கொள்வதற்கு அவ்வுண்னயை உலகத்திற்கு எடுத்துச் சொல்வதற்கும் தகுதியடைகிறான். அதன் பயனாகவே தான் வாழும் நிலையையும் தன்னைப் போன்றோர் வாழும் நிலையையும் தன்னலமற்ற நிலையிலிருந்து சீர்தூக்கிப் பார்கிறான். அதன் விளைவாகவே உலக வாழ்வின்

உண்மை நிலையை உணருகிறான். இந்த நிலையை தான் சைவ சித்தாத்தாத்தின் அமைப்பு கூறுவது அறிய முடிகின்றது.

4.2 மக்களால் போற்றப்படுதல்:

ஒரு மனிதன் எப்பொழுது பிற மக்களால் போற்றப்படுகிறான்? தான் புரிந்த செயல்கள் தன்னலமற்றனவாய் அச்செயல்களினால் பிறருக்கு நன்மை பயக்கும் போது தான் பிறருடைய வாழ்த்துக்கும் வணக்கத்திற்கும் உரியவனாகிறான். இப்பேருண்மையைச் சில உதாரணங்கள் மூலமாக விளங்க முற்படுகிறேன. சுமார் 2,500 ஆண்டுகளுக்கு முன்பே வாழ்ந்துவிட்டுச் சென்ற புத்தரையும், அதன் பின்பு வாழ்ந்த இயேசுவையும், முகமது நபியையும் மக்கள் வாழ்த்துகின்றனர், வணங்குகின்றனர் ஏன்? அப்பெரியோர்கள் விட்டுச் சென்றுள்ள செல்வம் மனித இனத்திற்கே பயன்படும் அழியாச் செல்வமாகும். அவ்வாறான அழியாச் செல்வங்களைப் பெறுவதற்கு மனிதன் தன்னுடையச் சிந்தனையைப் பயன்படுத்தும் போதுதான் மக்கள் இனத்திற்கே அவன் ஒரு வழிகாட்டியாய் அமைகிறான். இந்நிலையைத் தான் நம் முன்னோர்களாகிய பண்டைத் தமிழ் மக்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே பெற்றிருந்தனர் என்ற உண்மை அவர்கள் விட்டுச் சென்றுள்ள அழியாச் செல்வங்களாகிய தொல்காப்பியம், திருவள்ளுவம், திருமந்திரம் போன்ற நூல்களிலிருந்து தெரிய வருகின்றது. மக்களால் இறைவனைப் போற்றுதல் கூறப்படுகின்றன.

4.3 சைவமும் தமிழ் வளர்ச்சியும்:

சிவநெறி தொண்மை மிக்க தமிழ் நெறி என்பதில் ஐயம் யாதுமில்லை. அன்று முதல் இன்று வரை இந்நெறி சார்ந்து வளர்ந்து வரும் தமிழிலக்கியத்திற்குக் கணக்கு வழக்கில்லை. பிறசமயங்களெல்லாம் தமிழல்லாத பிறமொழிகளைச் சார்ந்தவை தமிழையே சார்ந்த இலக்கிய சமயம்

சைவசமயம். இங்கு வடமொழிச் செல்வாககுண்டு ஆயினும் தமிழுக்கே முதன்மை. திருமுறைகள் ஒப்பற்ற செல்வங்கள். மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும் தமிழரின் சித்தாந்தப் பார்வையினை விளக்குவன. மெய்கண்டாரின் சிவஞான பேரதம் தலைமை வாய்ந்த ஒப்பற்ற மெய்ப் பொருள் விளக்க நூல் அடைக்கலம் புக வைத்த பெருமை சைவத்திற்கே உரியது. சிவநெறியினர் எல்லா நிலையினும் அனைத்து வகைகளிலும் தமிழைப் போற்றி வளர்த்து வந்துள்ளனர். அதில் அமைந்துள்ள வடநூன் மரபைப் பிரித்தறிதல் வேண்டும். சமஸ்கிருத மயமாக்கப்பட்டவற்றிலும் பெரும்பான்மை தமிழ் அடிப்படையினவேயாம். சைவசமயம் சார்ந்த நீதி நூல்கள், சிற்றிலக்கிய நூல்கள் எண்ணற்றவையாகும்.

4.4 சைவத் திருமடங்கள் வளர்த்த தமிழ்:

சைவ திருமடங்களில் திருவாவடுதுறை அதினம் 14ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியது. மதுரை திருஞான சம்பந்தர் திருமடம் காலத்தால் மிக முற்பட்டது ஆகும்.

4.5 முப்பொருள் உண்மை:

உயிர்களின் உண்மைநிலை உலகத்தின் தன்மை இவ்விரண்டினையும் அதிட்டித்து நிற்கும் இறைவனின் பெருமை ஆகிய முப்பொருள் உண்மைகளையும் உணர்ந்திருந்தனர் என்பதும் நன்கு புலனாகும். முப்பொருள்களே உலகின் அடிப்படை உண்மைகளாகும். அப்பொருள்களுக்கு இலக்கணம் கூறி அவற்றின் சிறப்பான கருத்துகளை வளர்த்தவர்கள் பொதுவாகப் பண்டைத் தமிழ் மக்களென்றும், சிறப்பாகச் சித்தர்களென்றும் குறிப்பிடுவர்.

4.6 சைவசமய குரவர்கள்:

முழுமுதற் பொருளை ‘சிவம்’ என்று குறிப்பிட்டனர் சைவப் பெருமக்களாகிய மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர் ஆகியோர் இப்பெரியோர்கள் சைவசமய குரவர்கள் என்று பழங்காலத்தில் போற்றப்பட்டனர். இப்பெரியோர்கள் பாடிய பாடல்களின் தொகுப்பே தேவாரம், திருவாசகம் என்று வழங்கப்படுகிறது. தேவர்களின் தேவனாகிய சிவபெருமானுக்கு அணிவிக்கப் பெற்ற புகழ்மாலை என்பதே தேவாரம் என்பதின் பொருளாகும். சைவப் பெரியோர்களுள் முதன்மையாகக் குறிப்பிடத்தக்கவர் மெய்கண்ட தேவர் என்பவராவார்.

4.7 சிவஞானபோதம்:

சிவஞானபோதம், முப்பொருள்களில் உண்மையையும் அவற்றின் இலக்கணத்தையும் எடுத்துக்கூறும் பொதுப்பகுதியையும் அதன் பயனையும் எடுத்துக்கூறும் சிறப்புப் பகுதியையுடைய முழுமுதற் சைவசித்தாந்த நூலாகும். தமிழ் மொழிக்கு எவ்வாறு பன்னிரண்டு உயிர் எழுத்துகள் அமையப் பெற்றுள்ளனவோ அதைப் போன்றே இந்நூலும் பன்னிரண்டு சூத்திரங்களையுடையதாகும்.

4.8 சூத்திரங்கள் குறிப்பிடுவது:

முதல் மூன்று சூத்திரங்கள் பிரமாண வயலைக் குறிப்பதாகும். அடுத்த மூன்று சூத்திரங்கள் இலக்கணவியலைக் குறிப்பதாகும். ஏழு, எட்டு, ஒன்பது ஆகிய சூத்திரங்கள் சாதனவியலைப் பற்றியதாகும். இறுதியில் உள்ள மூன்று சூத்திரங்களும் பயனியலைப் பற்றியதாகும்.

4.8.1 சூத்திரத்தின் கருத்து:

முதல் சூத்திரம்: இறை உண்மையும் எல்லாவற்றையும் ஒடுக்கி மீளத் தோற்றுவிக்கும் முழுமுதற் கடவுள் சிவமே என்பதும் சுட்டிக் கட்டப்பட்டுள்ளது.

இரண்டாவது சூத்திரம்:

இறைவன் ஆன்மாக்களுடன் தொடர்பு கொண்டுள்ளமையும் அதன் காரணமாக ஆன்மாக்கள் தங்களுடைய வினைப்பயனை நுகரும் முறைமையும் மலபந்தத்தினால் உயிர்களுக்கு ஏற்படும் பிறப்பு, இறப்பு முதலிய நிகழ்ச்சிகளும் கூறப்பட்டுள்ளன. சட உலகத் தோற்றம் ஒடுக்கம் ஆகியவற்றிற்குக் காரணமான மலங்களாகிய இருவகை மாயை, ஆணவம் ஆகியவை கூறப்பட்டுள்ளது.

மூன்றாம் சூத்திரம்

ஆன்ம நிச்சயம் வரையறுத்துக் கூறப்பட்டுள்ளது.

நான்காம் சூத்திரம்:

ஆன்ம இலக்கணம் எடுத்துக் கூறப்பட்டுள்ளது. மல மறைப்பால், ஆன்மா, அறிவு விளங்கப் பொறாத நிலையில் பசு எனப் பெயர் பெற்றது. கேவல அவத்தையில் நிற்பதாயும் தத்துவங்களோடு கூடிய நிலையில் அது சுத்தாவத்தை அவத்தைகளைச் சுட்டிக் காட்டிய முறையிலேயே அவை நனவு, கனவு, துயில், துரியம், துரியாம் தீதம் எனப்படும் ஐவகை நிலங்களையும் பெற்றுள்ளன.

ஐந்தாம் சூத்திரம்:

தத்துவங்களெல்லாம் முன் குறிப்பிட்ட அவத்தைக்குள்ளாகும் ஆன்மாவின் தொழில் செய்வதற்கண் கருவியாக நிற்குந்தன்மை கூறப்பட்டுள்ளது. ஆன்மாக்களுக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்பு கூறப்பட்டுள்ளது.

ஆறாவது சூத்திரம்:

சட உலகின் நிலையாமையைக் குறிப்பிட்டு அதனை அசத்து என்றும் இறைவனே சத்து என்றும், அதுவே என்றும் நிலைத்து நிற்பதென்றும் உண்மைகள் வெளியிடப் பெற்று இறைவனின் தன்மைகளும் எடுத்துக் கூறப்படுகிறது.

ஏழாவது சூத்திரம்:

அசத்தாகிய உலகத்தையும், சத்தாகிய இறைவனையும் குறிப்பிட்டு இவ்வுண்மையை உணர்ந்த ஆன்மா, இறைவனையே அணுக வேண்டிய சாதனைகள் கூறப்பட்டுள்ளது.

எட்டாவது சூத்திரம்:

ஆன்மா ஐம்புலன்களின் வழியே செல்லுதலால் தன்னையும் தலைவனையும் அறியாது நிற்குமாம். தவநிலையிலுள்ள ஆன்மாவுக்கே இறையருளால் குருவின் உபதேசம் கிடைக்க பெறுமாம்.

ஒன்பதாம் சூத்திரம்:

பற்றறுத்தல், ஞானபோதனை பெற்று நற்சாதனைகள் புரிதல் ஆன்மாவுக்கு ஏற்படும் நன்மைகள் கூறப்பட்டுள்ளது.

பத்தாம் சூத்திரம்:

நற்சாதனைகளைத் தொடர்ந்து அநுட்டிப்பதின் பயனாக ஆன்ம சுத்தியும் ஞான விளக்கமும் முதற்பயன் மல உபாதைகளால் ஆன்மா பாதிக்கப்படமாட்டா என்று கூறப்பட்டுகிறது.

பதினொன்றாம் சூத்திரம்:

மலநிக்கத்தின் மறுபக்கம் ஆன்மா சிவப்பேறு எய்துவதே என்ற உண்மை.

பன்னிரண்டாம் சூத்திரம்:

சீவன் முத்திநிலை என்று கூறுவர். முத்தன் சமூகத்தில் இருந்து கொண்டே நற்பணிகளைச் செய்துவர வேண்டுமென்றும் அப்பணிகள் யாவும் இறைவனுக்கே அர்ப்பணம் செய்யப்பட வேண்டும். இவையே சூத்திரத்தின் கருத்துகள் ஆகும்.

4.9 பதினான்கு சாத்திரங்கள்

1. சிவஞான போதம் - மெய்கண்ட தேவர்
2. சிவஞான சாத்தியார் - அருணந்தி சிவாசரியர்
3. இருப இருப∴து - அருணந்தி சிவாசாரியர்
4. உண்மை விளக்கம் - மனவாசகங் கடந்தார்
5. திருஉந்தியார் - உய்ய வந்த தேவர்
6. திருக்களிற்றுப்படியார் - உய்ய வந்த தேவர்
7. திருவருட்பயன் - உமாபதி சிவாசாரியர்
8. சிவப்பிரகாசம் - உமாபதி சிவாசாரியர்
9. போற்றிப் ப∴றொடை - உமாபதி சிவாசாரியர்
10. வினா வெண்பா - உமாபதி சிவாசாரியர்

11. கொடிக்கவி - உமாபதி சிவாசாரியர்

12. நெஞ்சுவிடு தூது - உமாபதி சிவாசாரியர்

13. உண்மை நெறி விளக்கம் - உமாபதி சிவாசாரியர்

14. சங்ககற்ப நிராகரணம் - உமாபதி சிவாசாரியர்

மேலே குறிப்பிட்டுள்ள பதினான்கு சைவ சித்தாந்த சாத்திரங்களைப் பற்றியும், அவற்றின் சிவஞான போதம் எவ்வாறு முக்கியமளிக்கப் பெற்றுள்ள தென்பதையும் எடுத்துக் காட்டுவதற்குச் சைவப் பெருமக்களால் காலங்காலமாகக் கையாளப்பட்டு வரும் ஒரு பழமையான வெண்பா வாசகர்களின் கவனத்திற்கு வருகிறது.

'உந்தி களிறு உயர்போதம் சித்தியார்

பிந்திருபா உண்மை பிரகாசம் வந்த அருட்

பண்புவினா போற்றி கொடி பாசமிலா நெஞ்சுவிடு

உண்மை நெறி சங்கற்ப முற்று'

இவ் வெண்பாவில் பதினான்கு நூல்களும் அழகாகத் தொகுத்துக் கூறப்பட்டு சிவஞான போதத்தின் முதன்மை, உயர் போகம் என்று தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.

4.10 பதின்மூன்று சித்தாந்த சாத்திரங்கள்

1. சிவஞான சித்தியார்:

சிவஞான சித்தியார் அருணந்தி சிவாசாரியரால் இயற்றப்பட்டது. இந்நூல் புறச்சமயங்களின் கருத்துக்களை அளவிடும் பரபக்கமும் சித்தாந்த சமயத்தின் மெய்ப் பொருளை விளக்கும் சுபக்கமும் ஆகிய இரண்டு பெரும் பகுதிகளைக் கொண்டதாகும்.

2. இருப இருப.்.து

இந்நூலின் ஆசிரியர் அருணந்தி சிவாசாரியர் இ.்.து வெண்பா, ஆசிரியப்பா என்னும் இருவகைப் பாக்களால் அமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொன்றிலும் பத்துப் பாக்கள் உள்ளன. மெய்கண்ட தேவருக்குப் புகழ்மாலை சூட்டுமுகத்தான், சைவ சித்தாந்த உண்மைகள் அழகான முறையில் விளக்கப்பட்டுள்ளன.

3. உண்மை விளக்கம்:

இந்நூலை இயற்றியவர் மணவாசகங் கடந்தார் என்பவர் ஆவர். ஐம்பத்து மூன்று வெண்பாக்களையுடையது. சைவசித்தாந்தின் அடிப்படைக் கொள்கைகளை வினாவிடை முறையில் அமைத்து விளக்கம் தரப்பட்டுள்ளன.

4. சிவப்பிரகாசம்:

ஊமாபதி சிவாசாரியர் இயற்றிய சிவப்பிரகாசமானது சிவஞான போதத்திற்குச் சார்பு நூலாயுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

5. திருவருட்பயன்:

குறள் வெண்பாக்களாலாகிய இந்நூலை இயற்றியவர் உமாபதிசிவாசாரியர் ஆவர். இந்நூல் பத்து அதிகாரங்களுடையது. ஒவ்வொரு அதிகாரத்திலும் பத்துக் குறள் அமைந்துள்ளன.

6. வினா வெண்பா:

இந்நூலையும் இயற்றியவர் உமாபதி சிவாசாரியர் ஆவர். பதின்மூன்றே பாடல்களைக் கொண்ட இந்நூலில் தமது குருவாகிய மறைஞானசம்பந்தரிடம்

சைவ சித்தாந்த சாத்திர உண்மைகளை வினவும் முறையில் கருத்துகள் கூறப்பட்டுள்ளன.

7. போற்றிப் ப∴றொடை:

இந்நூலையும் இயற்றியவர் உமாபதி சிவாசாரியர் ஆவர். இதில் ஆன்மா தொழிற்படுமுறைமை உணர்த்தப்பட்டுள்ளது. அதன் வாயிலாகத் தமக்குச் சிவானுபவம் அளித்த குருமூர்த்தியைப் ப∴றொடை வெண்பாக்களினால் வாழ்த்துவதாக அமைந்த நூல்

8. கொடிக்கவி:

ஆசிரியர் உமாபதி சிவாசாரியர் ஆவர். இதில் சிவமந்திரங்களினியல்புகளை உணர்த்துவதாய்த் தில்லையிலே கொடியேறும் பொருட்டுப் பாடிய பாடல்கள் அமைந்துள்ளன.

9. நெஞ்சுவிடு தூது:

இந்நூலை இயற்றியவர் உமாபதி சிவாசாரியர் ஆவர். இதன் ஆசிரியர் தமது திருவுள்ளத்தை மறைஞான சம்பந்தர் பால் மாலை வாங்கும் படி தூது அனுப்புகிறார். இந்நூல் கலிவெண்பாவினால் இயற்றப் பெற்றுள்ளது.

10. உண்மை நெறி விளக்கம்:

இந்நூலை இயற்றியவர் உமாபதி சிவாசாரியர் ஆவர். இதில் தத்துவரூபம், தத்துவக்காட்சி. தத்துவ சுத்தி, ஆன்ம வடிவம், ஆன்ம தரிசனம், சிவரூபம் என்னும் தத்துவங்களை விளக்கும் நூலாகும்.

11. சங்கற்ப நிராகரணம்:

அகச் சமயங்கள் பலவற்றினது கொள்கைகளைக் கூறி அவற்றைச் சைவ சித்தாந்தக் கருத்துக்களின் அடிப்படையில் அமைந்துள்ளன.

12. திரு உந்தியார்:

இந்நூலை இயற்றியவர் திருவியலூர் உய்யவந்த தேவர் என்பர். பதினான்கு சைவசித்தாந்த சாத்திரங்களில் முதன் முதலில் தோன்றிய நூல் திரு உந்தியார் என்பதும் குறிப்பிடத்தகும்.

13. திருக்களிற்றுப் படியார்:

இந்நூலை இயற்றியவர் திருக்கடவூர் உய்யவந்த தேவன் ஆவர். இவர் திருவியலூர் உய்ய வந்த தேவரின் மாணவராகிய ஆளடைய தேவநாயனாரின் மாணவராவர். ஆன்மாக்களின் நல்வாழ்விற்கு இறையருளின் இன்றியமையாமை ஐந்தாவது செய்யுளில் அழகாகக் கூறப்பட்டுள்ளது.

'ஆகமங்கள் எங்கே அறுசமயம் தானெங்கே
யோகங்கள் எங்கே உணர்வெங்கே பாகத்(து)
அருள்வழவும் தானுமாய் ஆண்டிலனேல் அந்தப்
பெருவடிவ யாரறிவார் பேசு'

எனக் கூறுகிறார்.

4.11 அளவை இயலும் அறிவளவை இயலும்:

கண் பார்வை இழந்தவன் குருடன். அவனால் இயற்கையைக் கண்டு மகிழ முடியாது. கேட்கும் திறனில்லாதவன் செவிடன். அவனால் இசை இன்பத்தைக் கேட்டு மகிழ முடியாது. அதைப் போலவே அளவை இயல் நூலறிவைப் பெறாதவன் ஓரளவு சிந்திக்க இயலுமென்றால் அவனுடைய

சிந்தனையானது சரியா அல்லது தவறா என்று நிச்சயமாகக் தெரிந்து கொள்ள முடியாது. அளவை இயல் என்பதனைத் தருக்கம். நியாயம் என்றும் குறிப்படுவதுண்டு. எனவே தருக்க நூலறிவு தேவையான அளவு பெற்றுக் கொள்ளாதவன் தத்துவக் கருத்துக்களைச் சரியாகப் புரிந்து கொள்ள இயலாது என்றே கூறலாம். மனிதன் தோன்றிய காலம் முதல் தன்னுடைய சிந்தனை வாழ்க்கையில் ஏதோ ஒரு வகையில் தருக்க நெறி முறைகளைக் கடைப்பிடித்தே சிந்தனையை வளர்த்திருக்கிறான் என்பதைத்தான் பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாறு எடுத்துக் கூறுகிறது.

4.12. தருக்க நூல்

கல்வி அறிவு வேட்கையுள்ள அனைவரும் கற்கத் தகுந்த நூல்களுள் தருக்க நூலும் ஒன்றாகும்.

4.13 தருக்க நெறியை போற்றியவர்:

‘வினாவும் செய்யும் வழாஅல் ஓம்பல்’

‘வினாவும் செப்பே வினா எதிர்வரிகள் ’

என்ற கூற்றுகளிலிருந்து தொல்காப்பியனார் தருக்க நெறிமுறைகளைப் போற்றியவர் என்பது புலனாகுகிறது மேலும்

ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா
கற்பும் ஏரும் எழிலும் என்றா
சாயலும் நானும் மடனும் என்றா
நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்கு
ஆவயின் வரூஉம் கிளவி யெல்லாம்
நாட்டிய மரபின் நெஞ்சு கொளின் அல்லது
காட்ட லாகாப் பொருள என்ப

எனவரும் பொருள் இயல் சூத்திரத்தால் தொல்காப்பியனார் அளவை இயலுக்கு அடிப்படையான பிரத்தியக்கத்தோடு அனுமான அளவையும் உடன்படுத்திக் காட்டியுள்ளது.

4.14 தருக்க நூல் பெருமை:

பண்டைத் தமிழ் இலக்கியங்களின் தருக்க நூல் பெற்றிருந்த பெருமையை சைவ சித்தாந்த சாத்திரங்களில் இரண்டாவது இடத்தைப் பெற்றுள்ள சிவஞான சித்தியாரிலும் கூறப்படுகிறது.

'அருளினால் ஆகத்தே அறியலாம் அளவினாலும்

தெருளலாம் சிவனை ஞானச் செய்தியாற் சிந்தையுள்ளே

மருளெலாம் நீங்கக் கண்டு வாழலாம் பிறவிமாயா

இருளாலாம் இரிக்கலாகும் அடியரோடிருக்கலாமே'

இச்செய்யுளின் மூலமாகத் தத்துவக் கருத்துகளை அறிந்து கொள்வதற்கும் சிறப்பாகச் சைவ சித்தாந்தக் கருத்துகளை நன்கு அறிந்து கொள்வதற்கும் அளவை இயலறிவு எவ்வளவு அவசியம் என்பதையும் அதில் தமக்கு எவ்வளவு ஈடுபாடு என்பதனையும் அருணந்தி சிவாசாரியர் சுட்டிக்காட்டியிருக்கிறார்.

4.15 ஆன்மாவின் உண்மை:

சைவ சித்தாந்திகள் உலகு என்று குறிப்பிடும் பொழுது எல்லா உலகங்களையும் அவற்றில் வாழும் எல்லா உயிர்களையும் குறிப்பிடுகின்றனர் என்பது உண்மை. அறிவில்லாத சடப்பொருள்கள் பஞ்சபூதங்களின் சேர்கையால் உண்டாவனவாம். எனவே அவை மாற்றங்களுக்கும், பரிணாமங்களுக்கும் உட்பட்டு இயங்குவனவாம் சித்துப் பொருள்கள் சடப் பொருளோடு சேர்ந்துள்ள நிலையில் 'உயிர்' என்றும் 'சீடன்' என்றும்

சித்தாந்திகள் குறிப்பிடுவர். சடப்பொருளின் சேர்க்கையிலிருந்து விடுபட்டுத் தன் இயற்கை நிலையை எய்தும் பொழுது அதனை 'ஆன்மா' என்றும் குறிப்பிடுவர்.

4.16 பஞ்சபூதங்களின் சேர்க்கை:

பஞ்சபூதங்களின் சேர்கையாலுண்டாவது அறிவு என்றால் அச்சேர்க்கையாலாகிய அறிவு. 'உயில்' உடலை விட்ட என்றும் நீங்கவியலாது. ஆனால் உடல் சவமாய்க் கிடக்க அறிவு உயிர் நீங்குகையால் அது பஞ்சபூதங்களின் சேர்க்கையே ஆன்ம அறிவென்று கொள்ளலாமல்லவா என்றும் வினவலாம். இரும்பைக் காந்தம் ஈர்ப்பு தன்னுடைய தொழிலால் தானே யன்றி அறிவு என்று தனக்கு அருகே அமையப் பெற்ற இரும்புத் துண்டையே அன்றி பிறவற்றைத் தேடிப் போய் ஈர்க்க வல்லதன்று. பஞ்ச பூதங்களின் சேர்க்கையாலுண்டாய தேகம் உறங்கும் காலத்தும், சவமாய்க் கிடந்த காலததும், அறிவு தோன்றுவதில்லை. எனவே, பஞ்சபூதங்களின் சேர்க்கை அறிவன்று என்பது சொல்லாமலே கூறுவது உண்மையாகும்.

4.17 ஐம்பொறிகளின் தன்மை:

ஆன்மாவாகிய நான் ஐம்புலன்களின் வாயிலாகக் கிடைத்த விடயங்களை ஐம்பொறிகளின் மூலமாக அறிந்தேன் என்பதே பொருளாகும்.

'உளதில தென்றலின் எனெதுட லென்றலின்
ஐம்புல ஒடுக்கம் அறிதலிற் கண்படில்
உண்டிவினை யின்மையின் உணர்த்த வுணர்தலின்
மாயா வியந்திர தறுவினு ஆன்மா'

அவ்விதம் அறிந்ததை நினைவில் வைத்துக் கொள்வதும் ஆன்மாவே. ஆதனால் தான் நனவு வாழ்க்கையிலும் கனவு வாழ்க்கையிலும் ஏற்படும்

நிகழ்ச்சிகளை நினைவில் வைத்துக் கொள்வதும் ஆன்மாவே அதன் மூலமாக ஐம்பொறிகளின் வாயிலாக மட்டுமல்லாமல் தாானாகவே விடங்களை அறிந்து கொள்ளவும் நினைவில் ஏற்று கொள்ளவும் ஆன்மாவால் முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

4.18 ஆன்மாவின் இயல்புகள்:

மலவிருளில் அழுந்தியிருப்பவை என்றால் குற்றமும் குறையும் வாய்ந்தன என்பது பொருளாகும் அதனால் தான் உயிர் என்றும், பசு என்றும் அழைக்கப்படுகின்றன. முன் வினை காரணமாக அத்தேகத்தைப் பற்றிய ஆன்மாவும் குற்றங்களுக்கு இலக்காகி விடுகிறது. இதுதான் சார்ந்த தன் வண்ணமாதல் என்று குறிப்பிடப்பட்டது. அக்கருத்தினை மிகவும் தெளிவாக விளக்கிக் கூறியுள்ளார் திருவள்ளுவர்

‘நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு

இன்பதியல்ப தாகம் அறிவு. (452)

சேர்ந்த நிலத்தின் இயல்பால் நீர் வேறுபட்டு அந்நிலத்தின் தன்மையைப் பெறுவதாகும். ஆதைப் போன்றே மக்களுடைய அறிவு அவர்கள் பிறந்து வளர்ந்த சூழ்நிலைகளின் இயல்பினை உடையதாம் என்பர்.

‘அந்தக் கரண மவற்றிொன் றன்றவை

சந்தித்த தானமாச் கேச மலத்துணரா’

தமைச்சர சேய்ப்பநின் றஞ்சவத் தைத்தே’ மனம், புத்தி, சித்தம் ஆகிய அந்தக் கரணங்களோடு இயைபு கொண்டிருந்த போதிலும் அவற்றிலிருந்து வேறுபட்டது ஆன்மாவகும். சித்தப் பொருளான ஆன்மாவின் அறிவு பிரகாசிக்காமலிருப்பதற்குக் காரணம் ஆன்மாவானது ஆணவ மலத்துடன இணைந்திருப்பதே ஆன்மாவுக்கும் அந்தக்கரணங்களுக்கும் உள்ள தொடர்பு

எப்படிப்பட்டதென்றால் ஓர் அரசனுக்கும் அவனுடைய மந்திரிகளுக்கும் இடையில் ஏற்படும் உறவைப் போன்றதாகும் என்பதாம். அரசனும் மந்திரிகளும் என்ற உவமானத்தைக் கொண்டு ஆன்மாவுக்கும் அந்தக் கரணங்களுக்குமுள்ள உறவை விளக்கும் முறை மிகவும் பொருத்தமானதாகவும் பயனுடையதாகவும் அமைந்துள்ளது.

4.19 அந்தக் கரணங்கள்:

அந்தக்கரணங்கள் என்று குறிப்பிடுவது மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகியவற்றினிடையே வெளி உலகிலிருந்து ஐம்புலன்கள் விடயங்களைப் பெறுவது கேட்டல், தொடுதல்ஈ பார்த்தல், சுவைத்தல், முகர்தல் முதலியவ்றின் மூலமாகத் தான் இவ்வாறு கிடைத்த விடயங்களைப் பகுத்துணர்தல் மனத்தின் செயலாகும். அந்தக் கரணங்களின் துணை கொண்டு விடயங்களை அறிவதாயிருந்த போதிலும் அவற்றிலிருந்து வேறுபட்டதே ஆன்மா. இவ்வாறு அந்தக் கரணங்களின் தன்மைகளை எல்லாம் விளக்குகின்றார்.

4.20 ஆவணம்:

செம்பிற் களிம்பு போல அநாதியாகவே ஆன்மாவுடன் இணைந்து நிற்பதால் இதனைச் சகசமலம் என்று குறிப்பிடுவர். ஆன்மாவினுடைய அறிவு முழுவதையும் மறைக்கும் மலங்களில் தலையாயது ஆவண மலமாகும். இதற்குப் பொருத்தமான உதாரணம் இருள் என்பர். ஆணவமாகிய இருள் தன்னையும் காட்டாமல் பிற பொருள்களையும் காட்டாமல் மறைப்பதாகும் என்று உமாபதி கூறுகிறார். எவ்விதம் இருளானது ஒன்றாயிருந்து பல கண்களையும் மறைப்பதாகும் என்று உமாபதி கூறுகிறார். எவ்விதம் இருளானது ஒன்றாயிருந்து பல கண்களையும் மறைக்கின்றதோ அவ்வாறே ஆவணமலமானது எண்ணிறந்த ஆன்மாக்களோடும் கூடிநின்று அவற்றின் உண்மை நிலைகளை

மறைத்து நிற்பதாம். மனிதனுடைய செயல்களில் பலவிதங்களிலும் ஆணவம் வெளியிடப்படுகின்றது.

4.20.1 ஆணவத்தின் எட்டுக் குணங்கள்:

- தன்னையொழிய மற்றெவரும் ஒவ்வொதவர் என்று நினைப்பது.
- யாதொன்றைப் பற்றியும் சங்கற்பிப்பது
- யாவற்றிற்கும் கோபம் கொள்வது
- விரோதம் நினைப்பது
- எந்தப் பொருளையும் இச்சித்தல்
- பிறரைக் துன்புறுத்துவதில் விருப்பங்கொள்ளல்
- துயர்வந்த காலத்து ‘ஓ’ என்றுஅலறல
- எச் செயலைச் செய்யுமிடத்தும், சொல்லுமிடத்தும் ‘நான்’ என்ற பெருமிதத்தை வலியுறுத்தல், யாதொன்றுக்கும் சிரித்துக் கொண்டே திரிதல் முதலியன ஆகும்
-

4.20.2 ஆணவமலத்தின் தன்மைகள்:

சிவஞான சித்தியாரில் இரண்டாம் சூத்திரத்தில் ஆணவமலத்தின் தன்மைகளை அருணந்தி சிவாசாரியர் விளக்கியுள்ளார்:

‘ஒன்றதாய் அநேக சத்தியுடையதாய் உடனாய் ஆதி
யன்றதாய் ஆன்மாவின்தன் அறிவொடு தொழிலையார்த்து
நின்று போத்திருத்துவத்தை நிகழ்த்திச் செம்பிற்களிம்பேய்ந்
தென்றுமஞ் ஞானங் காட்டும் ஆணவம் இயைந்து நின்றே’

ஆணவமலம் அளவிடற்கரிய சத்தியுடையது. ஆதனால் தான் எண்ணிறந்த உயிர்களோடு அநாதியாகவே இணைந்து நின்றுள்ளதாம். இந்நிலையை விளக்குவதற்காகவே செம்பிற்களிம்பு உவமானமாகக் கூறப்பட்டுள்ளது. செம்பின்கண் களிம்புபோல என்று உடலோடு உயிர் தொடர்பு கொண்டதோ அன்றே தானும் அதனோடு விரவி நிற்கும் பொருளானது ஆணவமலம் என்பர். கருவி கரணங்களோடு கூடாது கிடந்த நிலையிலும் ஆன்மாவின் அறிவுச் செயல்விளைவுகளைச் சிறிதும் விளங்கவொட்டாது மறைப்பது ஆணவமலமாகும். இக்கருத்தினைத் திருவள்ளுவரும் வலியுறுத்தி கூறியுள்ளார்.

‘இருள்சேர் இருவினையும் சேரா இறைவன்

பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு’

இருள் என்று குறிப்பிட்டு அதனின்றும் நீங்குவதற்கு உறுதுணையாக அமைவது இறைவனே என்னும் கருத்தும் கவனிக்கற்பாலது எவ்வளவு வலிமையுடைய சத்தியானாலும் அவை யாவும் இறைவனின் ஆணைக்குட்பட்டதே என்ற கருத்தே வலியுறுத்தி கூறப்படுகிறது.

4.21 கன்மம்:

கன்மம் செயல்படுமுறையும் இறைவனின் ஆணைக்குட்பட்டதே என்ற கருத்தினை இரண்டாம் சூத்திரத்தில் எடுத்துக் கூறுகிறார் மெய்கண்ட தேவர்.

‘அவையே தானே யாயிரு வினையிற்

போக்கு வாவு புரிய வாணையின்

நீக்க மின்றி நிற்கு மன்றே’

ஆன்மாக்கள் தொடர்பு கொள்ளும் தேகங்களும் அவற்றின் நன்மை தீமை முதலியவற்றிற்கு காரணமாயிருப்பது கன்மம் எனப்படும். தேகங்களின்

பேதங்களுக்கும், அவற்றின் தோற்றம் மறைவு முதலியவற்றிற்கும் ஆன்மாக்கள் தோறும் சென்று பொருந்துவதாய் மனம், வாக்கு, செயல் ஆகிய முக்கரணங்களாலும் செய்யப்படும் இயல்பிணையுடையது அதனால்தான் கன்மத்தை இருவினைப் பயன் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

4.21.1 மூவகை கன்மம்:

செயற்படுமுறையால் கன்மம் மூவகைப்படுமென்பர். அவை முறையே சஞ்சிதம் பிராரத்துவம் ஆகாமியம் எனப்படும். இம்மூன்றும் ஒன்றையொன்று இணைபிரியாமல் தொடர்பு கொண்டு செயற்படுவது என்பதும் கவனிக்கத்தக்கது. கன்மத்தின் முக்கியத்துவத்தை வாசகர்கள் நன்றாக அறிந்து கொள்வதற்காக, அதன் மூன்று பிரிவுகளின் தன்மைகளை எடுத்துச் சொல்லப்படுகிறது.

சஞ்சிதம்:

அநாதிதொட்டு ஏற்படும் பிற்ப்புகள் தோறுஞ் செய்த வினைக்களஞ்சியமாயிருப்பது.

பிராரத்துவம்:

நிகழ்காலத்தில் பெற்றுள்ள பிறவியாகும். இதனையே பிராரத்துவம் என்று குறிப்பிடுவர்.

ஆகாமியம்:

முன்வினையைப் பகுதியில் பக்குவப்பட்டு இப்பிறவியில் அனுபவிக்கப்படும் பலனாய் வருவது ஆகாமியம் பேறு இழவு, இன்பம், பிணி, மூப்பு, சாக்காடு என்னும் ஆறு பலன்களை கொடுப்பது ஆகும்.

4.21.2 பிராரத்த கன்மத்தின் மூன்று பிரிவுகள்:

பிராரத்த கன்மம் மூன்று பிரிவுகளாகவும் விவரிக்கப்பட்டுள்ளது. ஆவையாவன

- ஆதிசெய்விகும்
- ஆதி பௌதிகம்
- ஆதியானமிகம்

என்பனவாம் மாதாவின் கருப்பத்தில் உண்டாகும் விசனம், பிறப்பு, நரை, திரை, வேதனை முதலியவை ஆதி தெய்விகத்தால் உண்டாவனவாம். குளிர், வெப்பம். மழை காற்று, மின்னல், இடி முதலியவற்றால் ஏற்படும் தீமைகள் ஆதிபௌதிகம் எனப்படும். வியாதிகளினாலும் மற்றவர்களாலும் ஏற்படும் தீமைகள் ஆதியான்மிகம் எனப்படும்

4.22 தெய்வ வாழ்வு:

மானிட வாழ்வைத் தெய்வ வாழ்க்கையாக மாற்றுவதற்கு மனிதனுக்கு பூரண உரிமை உண்டு. அதைப் போலவே அரிதாகப் பெற்ற மானிட வாழ்க்கையை மிருக வாழ்க்கையாக வாழவும் மனிதனுக்குப் பூரண உரிமை உண்டு. இவ்விதமாகப் பகுத்தறிவும் பண்பும் நிறைந்த நோக்கத்துடன் கன்மத்தின் தன்மை பண்மைகளை ஆய்ந்து அறிவோமாக நிச்சயமாக அவற்றின் கடுமைப் போக்கிலிருந்து விலகுவது மட்டுமல்லாமல், வெற்றியும் காண இயலும் என்பதே சித்தாந்தத்தின் சீரிய முடிபாகும். அதுவே இறைவனின் திருவுள்ளமுமாகும்.

4.23 கன்மத்தை விதி என்று கூறுகின்றவர்:

ஐரோப்பியத் தத்துவ நெறிகளில் ஈடுபாடு கொண்ட சிந்தனையாளர்கள் சிலர் கன்மத்தை விதி என்று கூறத்தலைப்படுகின்றனர். மனிதனின் சுதந்திர

உரிமையையும் சந்தேகக்கண் கொண்டு நோக்குவதும் உண்டு. இப்பரிதாப நிலையை நீக்கி, உண்மை நிலையை நிலை நாட்ட வேண்டியது நம் கடமையாகும். பொதுவாக இந்திய தரிசனங்களில் கர்மா என்றும் சைவசித்தாந்தத்தில் கன்மம் அல்லது வினைப்பயன் என்று கூறப்படுவதும் நாம் செய்யும் செயல்களினால் ஏற்படும் நியதிக்குட்பட்ட ஓர் கோட்பாட்டினையே கன்மம் என்று அழைப்பதைக் காட்டிலும் அதனை வினைப்பயன் என்று குறிப்பிடும் பொழுது அக்கோட்பாட்டின் பொருள் நன்கு தெரியும்.

4.24 சுதந்திரம்:

நற்காரியங்களைச் செய்வதில் மனிதனுக்கு நிச்சயமாகச் சுதந்திரம் உண்டு. நல்லனவற்றைத் தேர்ந்தெடுப்பதும் தீயனவற்றைக் களைவதும் தான் மனிதனின் கடமை. அக்கடமையை உணர்வதும் அதனை வாழ்க்கையின் வழிகாட்டியாக அமைத்துக் கொள்வதும் நல்வாழ்வுக்கு சமய வாழ்வுக்கு இன்றியமையாத அமைப்புகளாகும். மக்களின் அன்றாட வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளுக்கும் மக்களிடையே காணப்படும் பல்வேறு குறைபாடுகளுக்கும் பொருத்தமான விளக்கம் பெற வேண்டுமென்றால் அதற்கு மையமாக உள்ளது கன்மம் என்பர். மனிதனுக்கு மனிதன் அறிவிலும், ஆற்றலும். அழகிலும், அமைப்பிலும், நடை, உடை, பாவனைகளிலும் வேறுபாடுகளும் வித்தியாசங்களும் காண்கிறோம்.

4.25 கன்மமும் மறுபிறவியும்:

முற்பிறவியில் செய்த நன்மை தீமைகள் அடுத்த பிறவியில் பயன்விளைவிக்குமாம் அதைப் போலவே இப்பிறவியில் செய்த நன்மை தீமைகளும் நிறைவேறாத ஆசைகளும் அடுத்த பிறவிக்கு வித்தாகும் என்பர். இவ்வாறு மறுபிறவிக் கோட்பாட்டின் உண்மை ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

இக்கருத்தினை இரண்டாவது சூத்திரத்திலேயே சுட்டிக்காட்டியுள்ளார் மெய்கண்ட தேவர்.

‘இனி இவ்வான்மாக்கள் மாறிப் பிறந்து வழிமென்றது

தோற்றமு மீறும் உள்ளதற் கல்லது உளதாத வின்மையான் ’

முற்பிறவியில் செய்த வினைப்பயன் நுகர்வதற்கு ஆன்மாக்கள் பல பிறவிகளை எடுப்பதும் அப்பிறவிகளின் தன்மைதராதரம் ஆகியவற்றைக் கண்காணிப்பதும் கன்மத்தின் வலிமையைப் பெறுவது ஆகும். எண்பத்து நான்கு இலட்சம் பிறப்பு வேறுபாடுகள் உண்டென்னும் அவை புல்பூண்டு செடி கொடிகளை தவிர்த்து நீரில் வாழ்வனவும் நிலத்தில் ஊர்வனவும், பறப்பனவும் நான்கு காலால் நடப்பனவும் கடைசியாக மானிட வாழ்வும் கொண்டதாகும் என்ற கருத்தினைச் சிவஞான சித்தியாரில் விளக்கப்பட்டுள்ளது.

4.26 தேகத்தின் வகை:

ஆன்மா குடிகொள்ளும் தேகத்தைத் தூலதேகம் என்றும் சுக்கும தேகம் என்றும் இருவகையாகப் பிரித்துக் கூறுவர். தூலதேகம் தான் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் அழிவுக்கும் பொருந்தும். எனவே அவ்வித மாற்றங்களுக்குக் கட்டுப்படாத நிரந்தரமான தேகம், சூக்கும் தேகம் என்பதாம். இத்தேகம் கனவு உலகத்தில் தங்குதடையின்றி அங்கும் பிரவேசித்துப் பிரயாணம் செய்வதை நாம் அறிவோம். ஆன்மா ஒரு தேகத்திலிருந்து மற்றொரு தேகத்திற்குச் செல்கிறதென்றால் தூலதேகம் தான் மாறுகிறது. சூக்கும தேகம் மாறுவதில்லை. அதுவே கன்மத்தின் வலிமைக்கேற்ப பல பிறவிகளை ஏற்படுத்துவதுமாம். இவ்வாறு ஆன்மா பல பிறவிகளில் உழன்று அறியாமையில் மூழ்கியிருக்கும் நிலையை மிகவும் உருக்கமாக விளக்கியுள்ளார் படினத்தார்.

‘தந்தைய ராகியும் தாய ராகியும்

வந்தி ராததும் இல்லை முந்து

பிறா நிலனும் இல்லை அவ்வயின்

இறவா நிலனும் இல்லை பிறிதில்

என்னைத் தின்னா உயிர்களும் இல்லை யான் அவை

தம்மைத் தின்னா தொழிந்ததும் இல்லை அனைத்தே

காலமுஞ் சென்றது யான் இதன் மேலினி

இளைக்கு மாறிலேனே! - இணைக் குறளாசிரியப்பா 11-12

ஆன்மாக்கள் மானிடப் பிறவியில் மட்டும் உழலுவதில்லை வேறு பலதரப்பட்ட பிறவிகளிலும் உழன்று வினைப்பயனை நுகருகின்றன என்பதாம். மற்றொர் உண்மையும் இந்நிலையில் வாசகர்களுக்குச் சுட்டிகாட்ட விழைகிறேன். பழங்காலத்தில் சித்தர்களால் கையாளப்பட்டு வந்தது கூடுவிட்டுச் கூடுபாய்தல் என்ற வித்தையாகும்.

4.27 மாயை:

முப்மலங்களில் ஒன்றாகிய மாயை சைவசித்தாந்தத்தில் சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கிறது என்று கூறினால் அது மிகையாகாது. ஏனென்றால்மாயை என்று அழைக்கப்படுவதே அதன் தொழில் முறையால் தான் மாய் - அழித்தல் ஐ-ஆக்குவித்தல் உலகம் தோன்றுவதும் அழிவதும் ஆகிய மாற்றங்கள் மாயையின் தொழிலே என்பதாம். மாயை என்பது உலகத்தின் தோற்றம் இருப்பு, அழிவு ஆகியவற்றிற்குக் காரணமாக அமைந்துள்ளது. இவ்வாறு உலகமாகிய காரியத்திற்கு முதற்காரணமாகி ஆன்மாவின் அனாதிபந்தமாகிய ஆணவத்தோடு கூடி ஆன்மத்தின் துணையோடு செயற்படுவதாம் அது அசுத்த மாயை, சுத்தமாயை என இருவகைப்படும்.

4.27.1 அசுத்த மாயை:

ஆணவ கன்ம மலங்களுடன் கலந்து சுத்தாசுத்தக் காரியப்பிரபஞ்சத்திற்கு முதற் காரணமாயிருப்பதே அசுத்த மாயை என்று கூறுவர். அசுத்த மாயை மோகினி என்றும் அழைக்கப்படும். அது தனுகரண, புவன, போகம் எனும் நான்கு விதங்களில் செயல்படுகிறது. இதில் காலம், நியதி, கலை, வித்தை, இராகம் தோன்றும் இதனைப் பஞ்சகஞ்சுகம் என்று கூறுவர். இவற்றோடு கூடிய ஆன்மா பஞ்சகஞ்சுகள் என்றழைக்கப்படுமாம். காலம், நேரம், பருவம் என்பவை ஒரு பொருட் பன்மொழி என்பர். அதாவது ஓரெ பொருளைக் கொண்டுள்ள பல சொற்கள் என்பதாம். காலம் என்பது நிகழ்காலம், இறந்தகாலம், வருங்காலம் என மூவகைப்படும். எத்தொழிலும் இம்மூன்று காலங்களுக்குட்பட்டே நடைபெறும். ஒரு செயல் எவ்வாறாயினும் ஏற்படலாம் என்பதைத் தவிர்த்து இவ்வறாகத்தான் அமைய வேண்டுமென்று ஏற்படுவதே நியதி என்று கூறப்படும். நியதி என்பது இன்னகாலத்தில் இன்ன போகம் புசித்தல் என்றும் நன்மை அல்லது தீமை பயக்குமென்றும் நிச்சயிப்பதாகும். நியதியுடன் தொடர்பு கொண்டதே கலை. கலையின் பயன் என்னவென்றால் ஆணவம் சிறிது சிறிதாக வன்மை குறையும் வண்ணம் கிரியையை எழுப்பி சுக துக்க போகங்களை புசிப்பிக்குமாம்.

‘அவனவ ளதுவெனு மவை மூவினைமையிற்

றோற்றிய திதியே யொடுங்கி மலத்துளதா

மந்த மாதி யென்மனார் புலவர்’ சூத்திரம் - 1

அந்நிலையில் தான் வித்தையும், இராகமும் தோன்றுகின்றன. அவற்றின் பயனாக அறிவு பிரகாசம் ஏற்பட்டு கன்மத்திற்கு தக்கவாறு புசித்ததைச் சிறிதாக்கி, இன்னும் பெற வேண்டும் என்ற இச்சையும் ஏற்படும். அவ்விதம் அசுத்தம் நீங்கும் போது தான் அதாவது மாற்றங்களையே உண்டு பண்ணிக்

கொண்டிருக்கும் நிலைமை செயலற்றுப் போகும் நிலையில் தான் சுத்தமாயையின் தன்மையை நாம் உணர முடியும்.

4.27 சுத்த மாயை:

ஆணவ கன்மங்களுடன் கலவாது சுத்த காரியப் பிரபஞ்சத்திற்கு முதற்காரணமாய் இருப்பதே சுத்த மாயை எனப்படும். மாயைக்கு இயல்பான தன்மையாகிய மயக்குதல் சுத்த மாயைக்கு இல்லை என்பதும் கூறப்படுகிறது. எனவே, தான் அசுத்த மாயையை அதிட்டிப்பதே சுத்த மாயையாம். இது நித்திய மாயையும் வியாபகமாயும் அருவமாயும் உள்ளது என்பதும் கூறப்படுகிறது. இதனை குடிலை எனவும் விந்து எனவும் அழைப்பர். சுத்த மாயையினின்று தோன்றும் தத்துவங்கள் பின்வருமாறு முதலில் தோன்றுவது நாதம் இதனைச் சப்தம் என்றும் கூறுவர். அதின்று தோன்றுவது விந்து பின் சாதாக்கியம் ஈசுவரம், சுத்த வித்தை ஆகிய மூன்றும் ஒன்றி விருந்தொன்றாகத் தோன்றும் இத்தத்துவங்களை முறையே அதிட்டித்து நிற்கும் காத்தாக்கள் சிவம், சுத்தி, சதாசிவம், மகேசுவரன், உருத்திரன் ஆவர். மேற்குறிப்பிட்ட விந்துவிலே சூக்குமை பைசந்தி மத்திமை, வைகரி என்னும் வாக்குகள் நான்கும் தோன்றும்.

4.28 சூக்குமாதி வாக்குகளின் தன்மை:

சூக்குமை பரசரீரத்தினுள் ஒலிவடிவனதாய் நாபியடியாய் வந்து பொருந்தி வெவ்வேறாய் வரும் அட்சரங்களினுடைய உருவ அமைப்புகள் தோன்றும் முறைமை தெரியாதவாறு மறைத்து நிற்குமாம். உதாரணமாக மயில் முட்டைக்கள் நீரானது புறம்பே மயிலின் நிறமாய் உருவகுத்துத் தோன்றுவதலும் இதனையே உடைத்து விட்டால் அது தண்ணீர் ஆகிவிடுதல் போலவாம். பரசரீரம் மும்மலங்களின் பிணைப்பால் சுழன்று கொண்டிருக்கும் ஆன்மாக்களுக்கு அசுத்த மாயையில் காரண சரீரம் என்னும் ஒன்று உண்டாம்.

அதனை ஆனந்தமய கோசம் எனவும் கூறுவர். வித்தியா தத்துவத்தில் பஞ்சகஞ்சுகம் என்னம் பரசரீரரம் ஒன்று உண்டாம். ஆதனை விஞ்ஞான மயகோசம் எனவும் கூறுவர். கலையில் தோன்றிய அவியக்தமும் வியத்தமுமாகிய உருவங்களைப் பெற்ற கணசரீரம் ஒன்று உண்டாம். இதனை மனோமயகோசம் என்றும் கூறுவர்.

4.29 பைசந்தி:

பைசந்தி என்பது நினைவு மாத்திரமாய் நிற்கும் நிலை வடிவு பிராணம் தானம் உந்தி மத்திமை என்பது அட்சரங்களினுடைய உருவங்களைப் பிராணவாயுடன் கூடி ஒழுங்குபடுத்துதலாம் அந்நிலையில் அவற்றின் பொருள் விளங்காமையில் அவை செவிக்கு விடயகாவாம். எனவே தொனியுடன் உள்ளறிவு ஆன்மாவிடத்திலே நிற்கும் முக்கியமாக நெஞ்சிலம் கண்டத்திலும், தானத்திலும் நிலையுறும் என்பதாம். இந்நிலையில் அட்சரங்களாக ஒலிப்பிக்கும் செயல் இல்லாது இயற்கு என்பது ஆகும்.

4.30 இந்திய தரிசனங்களில் மாயையின் முக்கியத்துவம்:

இந்திய தரிசனங்களில் முக்கியமாக ஆத்திக தரிசனங்களென்று கூறப்படும். இதில் நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், மீமாஞ்சகம், வேதாந்தம் ஆகியவற்றில் மாயை விரிவாக விளக்கப்பட்டுள்ளது. சைவசித்தாத்தத்தில் மாயை இறைவனின் அருட்சத்தியாகவே கருதப்படுகிறதென்ற உண்மை முன்பே குறிப்பிடப்பட்டுள்ளது. மாயையின் செயல்பாட்டினால் அசுத்த மாயை என்றும் சுத்தமாயை என்றும் கருதப்பட்டுள்ளது. சுத்த மாயை என்ற சொல்லே தூய்மையை விளக்கி நிற்பதாம். அந்நிலையில் தான் அது இறைவனால் அதிட்டிக்கப்படுவது என்பதும் நன்கு வலியுறுத்தப்பட்டது. உலகம் தோன்றுவது இருப்பது, மறைவது

ஆகிய யாவும் மாயையின் செயல் என்று கூறுவதும் மேற்குறிப்பிட்ட விளக்கத்தின் அடிப்படையில் அமைந்ததாகும்.

4.31 நியாய தரிசனம்:

நியாய தரிசனத்தை இயற்றியவர் கௌதமர் ஆவர். இவருக்கு அட்சபாதர் என்ற பெயரும் உண்டு. நியாய தரிசனத்தைப் பின்பற்றுபவர்கள் நையாயிகர் எனப்படுவர். இத்தரிசனத்தில் குறிப்பிட வேண்டிய சிறப்புச் செய்தி இதன் பெயரே நியாயம் என்றால் தருக்கம் என்றும் அளவையியலென்றும் ஆன்வீச்சிகம் என்றும் பொருள்படும். இவ்வாறு அளவையியல் அறிவுக்கு முதல் இடம் கொடுக்கப்பட்டிருப்பதால், அத்தரிசனத்திற்கே நியாயம் என்று பெயரிடழைக்கப்படுகிறது. கௌதமரால் எழுதப் பெற்ற நியாய சூத்திரம் என்ற மூலநூலில் நியாய தரிசனத்தின் தத்துவக் கொள்கைகள் எடுத்துச் சொல்லப்பட்டுள்ளன.

4.32 சாங்கிய தரிசனத்தின் தத்துவக் கொள்கை:

சாங்கிய தரிசனத்தின் தத்துவக் கொள்கைகளை அமைத்துக் கொடுத்தவர் கபிலர் ஆவார். அவர் கூறிய கருத்துக்களை கொண்டதே ‘சாங்கிய காரிகை’ என்னும் நூலாகும். அந்நூலை ஆக்கியோர் ஈஸ்வர கிருஷ்ணன் என்பவராவர். இத்தரிசனத்தில் கூறப்பட்டுள்ள கருத்துகளை யோக தரிசனம் ஏற்றுக் கொள்கிறதாம். அதனால் தான் கருத்துகளோடு மட்டும் அமைந்த சாங்கிய தரிசனம் அனுபவமாகப் பயன் அடைவது யோக தரிசனத்திலே தான் என்றும் கூறப்பட்டுள்ளது.

4.33 தாயுமானவர் கருத்து:

தாயுமானவர் சுத்தமாயையைக் குண்டலினி எனப் பெயரிட்டு அமைத்து, அதன் நற்செயலை எடுத்துக் கூறுகிறார். ஆன்மாக்களின் உள் உணர்வைத் தூண்டிவிடுவதே குண்டலினியின் செயலாகும். அவ்வாறு ஆன்மாக்களின் அறிவைத் தூண்டிவிடுவதால் பாசத்தளைகளிலிருந்து விலகுவதற்கு வழி ஏற்படுகிறது. துன்பம் நேரும் போதும் அதனை எவ்விதம் அறிவுடையவன் ஏற்றுக் கொண்டு நல்ல முறையிலேயே நடந்து கொள்கிறான் என்பதற்கும் அறிவில்லாதவன் எவ்விதம் அல்லறுகிறான் என்பதற்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. இக்கருத்தினை வலியுறுத்தும் முறையிலேயே திருவள்ளுவர் கூறும் கருத்துகளும் அமைந்துள்ளமை கூறப்படுகிறது.

‘அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்

என்னுடைய ரேனும் இலர்’ (430)

சுத்தமாயையின் நற்செயலினை எடுத்துக் கூறிய தாயுமானவர் அது ஆன்மாவின் அறிவு வளர்ச்சியில் எந்த அளவுக்கு முன்னேற்றம் ஏற்படுத்துகிறது என்பதையும் விளக்கிக் கூறியுள்ளார்.

4.34 கட்டுண்ட ஆன்மாக்களின் நிலையை:

சைவ சித்தாந்தத்தில் ஆன்மாக்கள் நிரந்தரமாக நிலைத்து நிற்கும் சித்துப் பொருள்கள் என்ற கொள்கை ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. கற்காரிய வாதமும் அதனை ஆதரிக்கின்ற தென்பதும் குறிப்பிடப்பட்டது. இந்நிலையில் ஆன்மாக்கள் எப்பொழுது மலபந்தங்களில் சிக்கின முறையில் ஆன்மாக்கள் அனாதியாகவே மலபந்தங்களில் நிலைத்து நிற்கின்றது. அவ்வாறு கட்டுண்ட நிலைமைகளிலிருந்து விடுதலை பெற்று வீடுபேறெய்துவதற்கு நல்வழி காட்டுவதற்கே இறையருளால் சித்தாந்த சாத்திரங்களும் அவற்றைச் சரியான

முறையில் விளக்கிக் கூறுவதற்குச் சமயப் பெரியோர்களும், சான்றோர்களும் தோன்றினர் என்பதும் சித்தாந்தத்தின் துணியாகும்.

'அசித்திரு வியாபகம் போல்

வியாபகம் அருவம் இன்றாய்

வசித்திட வரும் வியாடா

எனும் வழக்குடையவன் ஆகிப்

நசித்திடா ஞானச் செய்தி

அநாதியே மறைத்து நிற்கும்

பசுத்துவம் உடையன் ஆகி

பசுசென நிற்கும் ஆன்மா' சிவஞான சித்தியார் - 209

சடலமாகிய மலங்களோடு அனாதியாகத் தொடர்பு கொண்டுள்ளதால் தான் ஆன்மா பசுசென்று பெயரிட்டழைக்கப்படுகிறது. பசு என்றால் பாசக் கயிற்றால் கட்டுண்ட பிராணி என்பது பொருள். எனவே ஆன்மாவும் பாசங்களினால் கட்டுப்பட்டு வினைப்பயனை நுகர்ந்து வாழ்க்கைச் சுழற்சியில் உழன்று கொண்டே இருக்கும் நிலையில் பசுவென்று அழைக்கப்படுகிறது.

4.35 கேவல நிலையில்:

கேவல நிலையில் செயல்படும் ஆன்மா எவ்விதமான உருவமோ அமைப்போ பெறுவதில்லையாம். அந்நிலையில் உள்ள தேகம் கண தேகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆன்மாவின் செயல்கள் யாவும் ஆணவத்தால் பிணைக்கபட்டிருக்கும் என்பது குறிப்பிடதக்கது. ஆகவே தேகங்களின் அமைப்பைப் பெறாமல் கேவல நிலையில் செயல்படும் ஆன்மா, ஆணவத்தையே இருப்பிடமாகக் கொண்டுள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. ஆன்மாவே சித்துப் பொருள் நிரந்தரமன அறிவுப் பிரகாசமுடையது. அறியாமையாலும் கன்மத்தின் பரிபாலிப்பாலும் தன் உண்மை நிலையை மறந்து

அதை எதைப் பற்றியதோ அவற்றின் தன்மைகளையே தம்முடைய தெனக் கருதி, பிறப்பு இறப்பு என்னும் வட்டத்திலேயே சுழன்று கொண்டிருப்பதே கட்டுண்ட ஆன்மாக்களின் நிலையாகும்.

4.36 சைவ சமய நெறிகள்:

அன்பை அடிப்படையாகக் கொண்டு அறநெறியில் அமைந்த இல்லற வாழ்க்கை சமய வாழ்விற்கு முதற்படியாகும் என்னும் கருத்து முன்பே எடுத்துக் கூறப்பட்டது. வாழ்க்கை என்று கூறுவது பொதுவாகவும் இல்லறவும் சுட்டிக் காட்டுவது ஆகும்.

'வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்

ஊள்ளத் தகையது உயர்வு' (திருகுறள்- 595)

சிவத்தையே முழுமுதற் கடவுளாகக் கொண்டு இறைபணி செய்யும் அன்பர்களைச் சைவர் என்று குறிப்பிடுவதுண்டு. சைவர் என்ற சொல் புலால் உண்ணாதவர் என்னும் கருத்தினையும் கூறுகிறது.

4.37 உயர்ந்த எண்ணம்:

மனிதனின் உண்மையான உயர்வை நாம் தெரிந்து கொள்ள வேண்டுமென்றால் அவனுடைய உள்ளத்தில் உலாவும் உயர்ந்த கருத்துகளும் அவற்றைச் செயல்படுத்துவதில் அவன் கொண்டுள்ள ஊக்கமும் ஆக்கமுமே ஆகும்.

'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது

தள்ளினும் தள்ளாமை நீர்த்து' (திருகுறள் - 596)

எண்ணங்களிலெல்லாம் உயர்ந்த எண்ணங்கள் இறைவனைப் பற்றிய எண்ணங்களே என்று கூறுவர் சான்றோர்.

4.38 தொகுப்புரை:

- பக்தன் இறைவனிடத்திலே நேரடித் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறான் என்றும் கூறப்படுகிறது.
- பெரியோர்கள் எடுத்துக் கூறியுள்ள கருத்துகள் மக்களினத்திற்கே நற்பயன் விளைவிப்பது பற்றி கூறுவதாக உள்ளது.
- அன்பையும் அறத்தையும் இல்லறத்தைத் தாங்கும் இரு தூண்களாக சைவ சித்தார்ந்தம் அமைந்துள்ளது.
- சைவ சமய நெறிகளின் முதற்படி எனக் கூறப்பட்டுள்ளது.
- ஆன்மாவுக்கும் இறைவனுக்கும் உள்ள உறவு நிலை ஆகியவை இதில் கூறப்பட்டுள்ளது.

- ஆய்வு அறிமுகம் என்னும் முதல் இயலில் ஆய்வு முன்னுரை ஆய்வு ‘முன்னுரை, ஆய்வுத்தலைப்பு, ஆய்வு நோக்கம், ஆய்வுப் பொருள், ஆய்வுக் கருதுகோள், ஆய்வின் எல்லை, ஆய்வின் அணுகுமுறை, ஆய்வின் ஆதாரங்கள், ஆய்வின் மொழி நடை, ஆய்வு பகுப்பு ஆகியவை பற்றி விளக்கப்பட்டுள்ளது.
- இரண்டாவது இயலில் திருஞானசம்பந்தரின் வாழ்க்கை வரலாறு பற்றியும், பிறப்பு, சமயம், இறைவன் மீதுக் கொண்டுள்ள பற்று, அற்புதற்களை செய்தல், சமத்துவ பணி ஆகியவை பற்றி கூறப்பட்டுள்ளது.
- மூன்றாவது இயலில் திருஞானசம்பந்தரின் ஒன்றாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகளின் சிறப்புகளும், சிவபெருமானைப் போற்றுதல், இறைவன் அருள், இறைவன் மீதுக் கொண்டுள்ள நம்பிக்கை ஆகிய பற்றி விரிவாக விளக்கப்பட்டுள்ளது.
- நான்காவது இயலில் சைவ சித்தாந்தத்தின் சிறப்புகள், சூத்திரங்களின் கருத்து, ஆணவம் பற்றிய செய்திளும், கன்மத்தின் சிறப்பு தன்மைகளும், மாயையின் நிலைகளையும் சைவ சமய நெறிகளில் காணப்படும் சிறப்புகள் எல்லாம் விளக்கப்பட்டுள்ளது.
- கடைசி இயாக ஆய்வு நிறைவுரை அமைந்துள்ளது.

முதன்மை ஆதாரங்கள்

1. முத்து ராமன்	சைவ சித்தாந்தம் பதிவு அக்டோபர் 1975 தத்துவத்துறைத் தலைவர் பச்சையப்பன் கல்லூரி சென்னை.

துணைமை ஆதாரங்கள்

1. இளம் பூரணர்	இலக்கணம் முதற்பதிப்பு 2005 கிளர்சிக் பிரிண்டர்ஸ் சென்னை – 2
2. இராதா கிருஷ்ணன். எஸ்	திருஞானசம்பந்தர் ஓர் ஆய்வு, சென்னைப் பல்கலைக்கழகம் அவ்வை அச்சுக் கூடம். சென்னை- 600013.
3. இரத்தின சபாபதி. வை.	திருமுறை தெளிவு சென்னைப் பல்கலைகழகம் 1981.
4. ஞானசம்பந்தன். அ.சா.	இலக்கிய கலை, முதல் பதிப்பு, நவம்பர் - 1953, திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், லிமிடெட் சென்னை – 1

5. தமிழண்ணல் - தமிழ் இலக்கிய வரலாறு
மீனாட்சி புத்தக நிலையம்
மயூரா வளாகம் 48
தானப்ப முதலி தெரு.
மதுரை – 620 001

6. பாக்யமேரி தமிழ் இலக்கிய வரலாறு,
முதல் பதிப்பு ஜீலை. 2008
பாவை பிரிண்டர்ஸ் (பி)
லிமிடெட், சென்னை – 14.

7. பாலசுந்தரம் பிள்ளை. தி.சு. இன்கவித் திரட்டு
முதற்பாகம்
சைவசித்தாந்த நூற்
பதிப்புக் கழகம் லிமிடெட்.
திருநெல்வேலி – 6

8. முத்துராமன் - சைவ சித்தாந்த
உரைக்கொத்து
சைவசித்தாந்த நூறுபதிப்புக் கழக
வெளியீடு – 1953.

திருநாவுக்கரசரின் பக்தி சிறப்பு

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் திருநெல்வேலி

இளம் முனைவர் [எம்.ஃபில்] பட்டத்திற்காக அளிக்கப்படும் ஆய்வேடு

ஆய்வாளர்

ஜெ.சா. ஷர்ஜா

பதிவு எண்:

20193113107102

தமிழ்

தமிழ்த்துறை & தமிழாய்வு மையம்

நேசமணி நினைவுக் கிறித்தவக் கல்லூரி,

மார்த்தாண்டம் 629 165

2019 – 2020

நன்றியுரை

“திருநாவுக்கரசரின் பக்தி சிறப்பு” என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வு சிறப்புற அமைவதற்கு அருள் புரிந்த இறைவனுக்கு என் முதற்கண் நன்றியைச் சமர்ப்பிக்கிறேன்.

நேசமணி நினைவுக் கிறித்தவக் கல்லூரியில் ஆய்வு செய்வதற்கு அனுமதி அளித்த கல்லூரி முதல்வர் முனைவர். கே. பால்ராஜ் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்வாய்வுக்கு நெறியாளராக இருந்து இவ்வாய்வேட்டினைச் சிறந்த முறையில் உருவாக்க ஆலோசனையும், ஆக்கமும், ஊக்கமும் வழங்கிய முனைவர். ஆ. பிரைனி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வு நெறிமுறைகளைக் கற்பித்துப் பேருதவி புரிந்த தமிழ்த்துறை ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வேட்டினைச் சமர்ப்பிக்க எங்களுக்கு முழு ஆதரவு தந்துதவிய பெற்றோர், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் என் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வேட்டினை சிறந்த முறையில் வடிவமைத்து தந்த எஸ்.ஆர் ஆப்செட் பிரிண்டிங் உரிமையாளர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஜெ.சா. ஷர்ஜா
ஆய்வாளர்

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

ப.	பக்கம்
பக்.	பக்கங்கள்
மேலது	மேற்குறிப்பிட்ட நூல்
பேரா	பேராசிரியர்

<u>உள்ளடக்கம்</u>

இயல் ஒன்று

ஆய்வு அறிமுகம்

உள்ளடக்கம்

1.0 முன்னுரை

தமிழ் பக்தி இலக்கியங்கள் என்பது, சைவம், வைணவம் என இரு சமயங்களை மையமாக கொண்டது. சைவ சமயம் வரலாற்றுக்கு முந்திய சமயம் புராணக்கலாத்தில் பல பகுதிகளிலும் விளக்கியுள்ளது. இதன் தொன்மைக்குப் பழம்பெரும் நூல்கள், வழிபாட்டு முறைகள், வரலாற்றுக் குறிப்புகள், தொல்பொருள்கள் என்பன சான்றாக உள்ளன. திருநாவுக்கரசரின் பக்தி சிறப்பு குறித்து இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1.1 ஆய்வுத் தலைப்பு

'திருநாவுக்கரசரின் பக்தி சிறப்பு' என்பது இவ்வாய்வின் தலைப்பாகும்.

1.2 ஆய்வுப் பொருள்

1. திருநாவுக்கரசரின் வாழ்க்கை வரலாற்றை ஆய்தல்
2. பக்தி இலக்கியங்களில் திருநாவுக்கரசரின் பங்களிப்பை ஆராய்தல்.
3. திருநாவுக்கரசர் சிவன் மீது கொண்ட பற்றினை ஆராய்தல்.

1.3 கருதுகோள்

திருநாவுக்காரசரின் பாடங்களும், வாழ்க்கை முறையும் சிவன் மீது கொண்டுள்ள பக்தியை வெளிப்படுத்துபவையாக அமைந்துள்ளன என்பது இவ் ஆய்வின் கருதுகோளாகும்.

1.4 ஆய்வு எல்லை

திருநாவுக்கரசர் எழுதிய 4,5,6 ஆம் திருமுறைகள் ஆய்வின் எல்லையாக அமைந்துள்ளன.

1.5 ஆய்வின் மொழிநடை

இவ்வாய்வேடு வாசிப்பவர்கள் அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிய நடையில் அமைந்துள்ளது.

1.6 ஆய்வின் நோக்கம்

திருநாவுக்கரசரின் வாழ்வியல் வழியாக பக்தி சிறப்பினை வெளிப்படுத்துவதே ஆய்வின் நோக்கமாகும்.

1.7. ஆதாரங்கள்

ஆய்வை மேற்கொள்ள உறுதுணையாக இருப்பவை ஆதாரங்கள் எனப்படும். ஆய்வின் ஆதாரங்கள் முதன்மை ஆதாரங்கள் துணைமை ஆதாரங்கள் என இருவகைப்படுத்தலாம்.

1.7.1 முதன்மை ஆதாரங்கள்

ஆய்விற்கான நேரடிச் சான்றுகளே முதன்மை ஆதாரங்கள் ஆகும். இவ்வாய்வில் திருநாவுக்கரசரின் 4,5,6-ம் திருமுறைகள் முதன்மை ஆதாரம் ஆகும்.

1.7.2 துணைமை ஆதாரங்கள்

ஆய்வுத் தொடர்பான நூல்கள், ஆய்வேடுகள், ஆய்வு நூல்கள், கலைக் களஞ்சியங்கள் ஆகியவை துணைமை ஆதாரங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. திருநாவுக்கரசர் சைவ சமயம், பக்தி குறித்தும் எழுதப்பட்டுள்ள கட்டுரைகளும், விமர்சனங்களும், நூலாசிரியர் கருத்துக்களும் துணைமை ஆதாரங்கள் ஆகும்.

1.8 ஆய்வு அணுகுமுறை

இவ்வாய்வில் விளக்கமுறைத் திறனாய்வும், பகுப்புமுறைத் திறனாய்வு முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

1.9 ஆய்வின் பகுப்பு

இவ்வாய்வேடு ஐந்து இயல்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.

இயல் ஒன்று	-	ஆய்வு அறிமுகம்
இயல் இரண்டு	-	திருநாவுக்கரசரின் வாழ்வியல்
இயல் மூன்று	-	திருநாவுக்கரசரின் பக்தி வெளிப்பாடு
இயல் நான்கு	-	திருநாவுக்கரசரின் வழிபாட்டு முறை
இயல் ஐந்து	-	ஆய்வு நிறைவுரை

இவ்வாய்வின் முதல் இயலாக **''ஆய்வு அறிமுகம்''** அமைந்துள்ளது. இதில் முன்னுரை, ஆய்வுத் தலைப்பு, ஆய்வுப்பொருள், ஆய்வு எல்லை, ஆய்வு நோக்கம், ஆய்வின் மொழிநடை, ஆய்வு அணுகுமுறை, ஆதாரங்கள், ஆய்வேட்டின் அமைப்பு முதலியவை இடம் பெற்றுள்ளன.

இரண்டாவது இயல் **''திருநாவுக்கரசரின் வாழ்வியல்''** ஆகும்

மூன்றாவது இயல் **''திருநாவுக்கரசரின் பக்தி வெளிப்பாடு''**

நான்காவது இயல் **''திருநாவுக்கரசரின் வழிபாட்டு முறை''** என்னும் தலைப்பில் ஆராயப்பட்டுள்ளது.

ஐந்தாவது இயலாக **''ஆய்வு நிறைவுரை''** அமைந்துள்ளது. இதனை அடுத்து துணைநூற்பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.

இயல் இரண்டு

திருநாவுக்கரசரின் வாழ்வியல்

உள்ளடக்கம்

2.0 முன்னுரை

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் பிறந்த திருநாவுக்கரசரை சிவபெருமான் ஆட்கொண்ட விதத்தினையும், இறைவன் மீது தான் கொண்ட பக்தியினையும், சோதனைகளிலும் இறைவனை விடாத பக்தியினையும், திருநாவுக்கரசர் ஆற்றிய அற்புதங்களையும் ஆய்வதோடு இவ்வியல் அமைகிறது.

2.1 திருநாவுக்கரசரின் வாழ்வியல்

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் புகழனார்க்கும் மாதினியார்க்கும் மகவாகத் தோன்றிய இவரது பெயர் மருண்க்கியார் என்பதாகும். இளம் வயதிலேயே பெற்றோரை இழந்த இவர், தம் தமக்கையராகிய திலகாவதியாரால் வளர்க்கப்பட்டு வந்தார். எனினும் சமணர் சூழ்ச்சியால் இவர் அம் மதத்தில் சேர்ந்து, தருமசேனர் என்ற பெயருடன் வாழ்ந்து வருவாராயினர். தம் தம்பியார் மீண்டு வரவேண்டுமென்று திலகவதியார் நோன்பு பூண்டு இறைத்தொண்டு செய்து கொண்டிருந்தார். அப்போது சூலைநோய் ஏற்படவே, அது சமணர் மந்தரங்களால் தீராததுகண்டு தருமசேனர் தம் தமக்கையாரைத் தேடி வந்தார் என்பர். தம் தமக்கையார் அருளால் சூலை நோய் தீருமென எண்ணி, அவரளித்த திருநீற்றை அணிந்து கொண்டு, பின் இருவருமாகத் திருவதிகை என்னும் ஊரினுள் புகுந்து, அங்குள்ள வீரட்டானத் திருக்கோயில் ஈசுவரரை வணங்கினார்கள். அப்போது திருநாவுக்கரசர் பாடிய முதற்பாட்டு,

“கடற்றாயின வாறு விலக்ககிலீர்

கொடுமை பல செய்தன நான் அறியேன்

ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்

பிரியாது வணங்குபவன் எப்பொழுதும்

தோற்றாதென் வயிற்றின் அகம்படியே

குடரோடு தூக்கி முடக்கியிட

ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில

வீரட்டா னத்துறை அம்மானே![1]

நாவுக்கரசர் சைவ நெறியைச் சார்ந்ததை அறிந்த சமணர்கள், முதலாம் மகேந்திரப் பல்லவனை அடைந்து கோள்பல கூறி, அவன் மூலம் நாவுக்கரசருக்குச் சொல்லொணத் துன்பங்களைக் கொடுத்தார்கள். தம்மை மன்னன் அழைத்துவரச் சொன்னதாக அமைச்சர் முதலியோர் வந்து கூறியப்பொழுது

“நாமர்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்

நரகத்தில் இடர்ப்படோம் நடலை இல்லோம்

ஏமாப்போம் பிணியறியோம் பணிவோம் அல்லோம்

இன்பமை எந்நாளும் துன்ப மில்லை

தாமார்க்கும் குடியல்லாத் தன்மை யான

சங்கரன் நற் சங்கவெண் குழையோர் காதில்

கோமாற்கே நாமென்னும் மீளா ஆளாய்க்

கொய்ம்மலரச் சேவடி இணையே குறுகினோமே”[2]

மன்னன் நாவுக்கரசரைத் சுண்ணாம்பு நீற்றறையிலிட்டு வாட்டியப் பொழுதும் அவா,

"மாசில் வீணையும் மாலை மதியமும்

வீசு தென்றலும் வீங்கின வேனிலும்

மூசு வண்டறை பொய்கையும் போன்றதே

ஈசன் எந்தை இணையடி நீழலே"[3]

என்று தொடங்கும் பதிகத்தைப் பாடி, அதனுள் இனிதே இருந்து வெளிப்போந்தார் என்பர்.

இறுதியில் மன்னனே மனம்மாறிச் சிவ நெறியில் சேர்ந்தான். இங்ஙனம் பாண்டிய மன்னனைத் திருஞானசம்பந்தர் சிவநெறிக்கு மாற்றியதால் தமிழகம் சமணத்தின் செல்வாக்கை விட்டுச் சிவநெறி நோக்கித் திரும்பிய காலம் இதுவாகும். தந்தோறும் சென்று, தாளத்தோடு பாடல்களைப் பாடி இசைத்து வழிபட்டமையால் மக்கள் அனைவரும் சைவத்தைச் சார்ந்து அணி திரளலாயினர். சம்பந்தரை விட வயதில் மிக மூத்தவர் நாவினுக்கு அரசர். ஆதலால் சம்பந்தரால் அப்பர் என அழைக்கப்பட்டார். நாவுக்கரசர் என்பது இறைவன் அழைத்த பெயராகும். எண்பத்தோர் ஆண்டுகள் வாழ்ந்த இப்பெரியவர் தமிழகத்தின் தலைவிதியை முதன் முறையாக மாற்றியமைத்தார். சமணமும் பௌத்தமும் செல்வாக்கு பெற்றுத் திகதழ்ந்ததால், அச்சமயம் சார்ந்த பிறமொழிகள் மேலோங்கி நின்றன. தமிழர் பழக்கவழக்கம் பண்பாடு யாவும் மறக்கப்பட்டன. இச்சூழ்நிலையில் அப்பரும், சம்பந்தரும் ஊர் ஊராகச் சென்று தமிழோடு இசைபாடி மக்களைத் திரட்டி, வழிபாடு செய்த புரட்சியானது மீண்டும் இந்நாட்டு நிலவழிச் சமயங்கள் வைதிக வண்ணத்தோடு வளரத் துணையானதுடன் தமிழும் தமிழர் பண்பாடும் அழியாமற் காக்கவும் உதவின. கையில் உழவாரப் படையேந்திப் பாழடைந்த கோயில்களை எல்லாம் துப்புரவு

செய்யவும் செப்பனிடவும் புறப்பட்டோர் அப்பரடிகள் அப்போது மக்களும் ஆள்வோரும் பின்பற்றியதால் நாடு மலர்ச்சி பெற்றது. அப்பருடைய பாடல்களில் இத்தொண்டுள்ளத்தையும் அனுபவ முதிர்ச்சியையும் காணலாம்.

“நங்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்

தென்கடம்பைத் திருக்ரக் கோயிலான்

தன்கடன் அடியேனையும் தாங்குதல்

என்கடன் பணிசெய்து கிடப்பதே”[4]

என்னும் திருக்கடம்பூர்ப் பதிகை அவருடைய தொண்டுள்ளத்தை விளக்குவதாகும்.

சங்ககால அகத்துறைகள் போலக் காதலுணர்வுடன் கூடிய புனைவுப் பாடல்கள் உள்ளத்தைத் தொடுவன அப்படிகள் அதற்கும் தோற்றுமாய் செய்து பாடிய பாடல்கள் பலவுள. அவற்றுள் திருவாரூர் பதிகம் விளக்கும் புனைவு முதன்மையானது.

“முன்னம் அவருடைய நாமம் கேட்டாள்

மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டாள்

பின்னை அவருடைய ஆரூர் கேட்டாள்

பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாளர்.

அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்

அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்

தன்னை மறந்தார் தன் நாமங்கெட்டால்

தலைப்பட்டாள் நங்கை தலைவன்தாயே”[5]

அப்பரடிகள் நாற்பத் தொன்பதாயிரம் பாடல்களைப் பாடினார் என்பர். ஆனால், இன்று 313 பதிகங்களே கிடைக்கின்றன. தாண்டகம் என்ற விருத்தவகையும் பாடியதால் தாண்டகவேந்தர் என்றும் போற்றப்பட்டார். இவர் பாடல்கள் நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. திருச்சிராப்பள்ளிக் கல்வெட்டு ஒன்றின் மூலமும் மகேந்திரப் போத்தரையனைக் கல்வெட்டு ஒன்றின் மூலமும் மகேந்திர போத்தரையனை அவர் மதம் மாற்றிய செய்தி அறியப்படுவதால், அவருடைய காலம் கி.பி. 7ஆம் நூற்றாண்டு என்பது தெளிவு.

2.2. வாழ்வியல்

‘‘அரிதரிது மானிடராய் பிறத்தல் அரிது’’ என்பார் அறிவிற் சிறந்த ஔவைப் பிராட்சியார் பெறுதற்கரிய மானிடப் பிறவியைப் பெற்ற மக்கள் மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்குச் சில நெறிமுறைகளைப் பின்பற்றுதல் வேண்டும். **‘‘எப்படி யாவது வாழலாம்’’** என்பதை விடுத்து ஒவ்வொரு மனிதரும் **‘‘இப்படித்தான் வாழ வேண்டும்’’** என்று மனத்தில் உறுதி மேற்கொண்டு செயலில் அதனை நடத்திக் காட்டுதல் வேண்டும்.

நில்லாமை நிலைபெற்றிருக்கின்ற இவ்வுலகில் நிலைபெற வாழ வேண்டும் என்று எண்ணியவர்கள் தம் புகழ் நிலைக்க கூடிய வகையில் சில சிறந்த செயல்களைச் செய்துவிட்டு மாண்டு போனார்கள்.

‘‘மன்னா வுலகத்து மண்ணுதல் குறித்தோர்

தம் புகழ் நீற் இத் தாமாய்ந் தனரே’’

2.3. பிறப்பு

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் புகழனார்க்கும், மாதினியார்க்கும் மகவாகத் தோன்றிய இவரது இயற்பெயர் மருள்நீக்கியார். இளம் வயதிலேயே பெற்றோரை இழந்த இவர் தம் தமக்கையராகிய திலகாவதியாரால் வளர்க்கப்பட்டு வந்தார்.

2.3 சமயம்

சமண சமயத்தில் சேர்ந்து தருமசேனர் என சமணத் தலைவராகவும் இருந்தார். கடுமையான சூலைநோய் (வயிற்று வலி) மூலம் வருந்தினார். வலிதாளாமல் தான் படும் கொடுமையை, **‘‘வயிற்றின் அகம்படியே குடரோடு துடக்கி முடக்கியிட ஆற்றேன் அடியேன்’’**[6] என்று திருவதிகை வீரட்டானம் இறைவனிடம் கண்ணீரோடு வேண்டினார். சமண சமயத்தில் இருந்து சைவராக மாறுவேன் என்பதை **‘‘ஏற்றாய் / அடிக்கே இரவும் பகவும் பிரியாது வணங்குவன்’’**[7] என்று இறைவனிடம் அறிக்கை இட்டார். இவரது தமக்கை திலகவதியார் திருநீறு பூச மருள்நீக்கியவரின் சூலைநோய் குணமானது. அன்று முதல் அவர் சைவரானார்.

உழவாரப்படை கொண்டு கோயில் தோறும் உழவாரப்பணி (புல் செதுக்கிச் சுத்தம் செய்தல்) மேற்கொண்டார். எனவே இவரது நெறியைத் தாசமார்க்கம் என்பர். இவர், மேற்கொண்ட இறைபணி நிலையைச் சரியை (கோயில் புறப்பணிகள்) என்பர்.

2.5 தீங்கனுபவித்தல்

திருநாவுக்கரசர் சமணத்தில் இருந்து சைவரானதும் மன்னன் மகேந்திர வர்ம பல்லவன் திருநாவுக்கரசர்க்கு எண்ணரிய தீங்குகள் இழைத்தான்.

2.5.1 சுண்ணாம்பு காளவாயில்

கொதிக்கின்ற சுண்ணாம்பு காளவாயில் (நீற்றறை) உயிரோடு நாவுக்கரசை இட்டனர். இறைவன் மீதுக் கொண்ட மாறாத நம்பிக்கையில்,

“மாசில் வீணையும் மாலை மதியமும்

வீசு தென்றலும் வீங்கு இள வேனிலும்

மூசு வண்டறை பொய்கையும் போன்றதே

ஈசன் எந்தை இணையடி நீழலே”[8]

என்று பாடி வாழ்த்தினார். இறைவன் நாவுக்கரசரை வேகாமல் உயிரோடு நலமாகக் காத்துத் தந்தார்.

2.5.2 கடலில்

இரண்டு கால்களிலும் கல்லைக் கட்டிக் கடலிலே நாவுக்கரசரரைத் தூக்கிப் போட்டனர். ஒளியாய் இறைவனை, வானத்திலே விளங்கும் சோதி என்னும் பொருளில் “சோதி வல்லவன்” எனப் போற்றி துதித்தார்.

“சொல்துணை வேதியன் சோதி வானவன்

பொன்துணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்

கல்துணைப் பூட்டி ஓர் கமலில் பாய்ச்சினும்

நல்துணை ஆவது மநச்சி வாயவே”[9]

எனக் கரங்கள் கூப்பி வானம் நோக்கி ஒளியாம் இறைவனைத் துதித்தார். கல்லும் சேர்ந்து கடலில் மிதந்து கரை சேர்ந்தார்.

2.5.3 நஞ்சு கொடுத்தல்

மன்னன் ஏவலின்படி ஏவலர் நஞ்சு கலந்த பாற்சோற்றினை உண்பித்தனர். அவரும் சிவபெருமானை நினைத்து சமணர் கொடுத்த நஞ்சுச் சோற்றை உண்டு சாவாதிருந்தார். அரசர் சீற்றம் கொண்டு சமணரை வினவினார். சமணர் யானையைக் கொண்டு இடறச் செய்விக்க இசைந்தனர்.

3.5.4 யானையால் அடி

அரசன் கட்டளைப்படி யானைப்பாகர் யானைக்கு மதமும், சினமும் ஊட்டி ஆளுடைய அவர் மேல் விடுத்தனர். அவர் சிவபெருமானை பாடியிருந்தனர். அவ்யானை ஆளுடைய அவரை வலம் வந்து திருவடியில் வீழ்ந்து வணங்கி மீண்டது. அதுகண்ட பாகன் மீண்டும் அவ்யானையை அவர் மேல் விடுத்தனர். அவ்யானை அமணரை மிதித்துப் பலரையும் கொன்று பெரும் துன்பமிழைத்து விட்டது. சொல்லொணாச் செற்றங் கொண்ட மன்னன் இனிச் செய்ய வேண்டாம் என்று அமணரை வினவினார்.

2.6 திருநாவுக்கரசரின் வேறு பெயர்கள்

திருநாவுக்கரசரின் இயற் பெயர் மருள்நீக்கியார் இவர். திருநாவுக்கரசர், வாக்கீசா, தாண்டகவேந்தர், அப்பர் எனவும் வேறு பெயர்களால் அழைக்கப்பட்டார்.

2.6.1 திருநாவுக்கரசர்

கோயில்கள் தோறும் சென்று வலிமையான கருத்துக்களை வல்லமையாகப் பாடியதால் திருநாவுக்கரசர் எனக் குறிக்கப்படுகிறார்.

2.6.2 வாக்கீசர்

திருநாவுக்கரசரையே வாக்குமுக்கு ஈசர் என்னும் பொருளில் வாக்கீசர் எனப்படுகின்றார்.

2.6.3 தாண்டகவேந்தர்

திருநாவுக்கரசர் பாடிய பாடல்களில் தாண்டகம் என்னும் பாவகையை அமைத்துப் பாட வல்லவராக விளங்கியதால் தாண்டகவேந்தர் எனச் சிறப்பிக்கப்படுகிறார்.

2.6.4 அப்பர்

திருநாவுக்கரசர் சம்பந்தரோடு பல தலங்களுக்கு இவரும் ஒன்றாகச் சென்றார். அவ்வேளைகளில் சம்பந்தரது தந்தைக்குப் பதிலாகச் சம்பந்தரைத் திருநாவுக்கரசர் நமது தோளில் சுமந்துச் சென்ற நேரங்களும் உண்டு. அன்பு மீதூர்ந்தர் சம்பந்தர், அப்பாவுக்கும் மேலாக அவரை உயர்த்தி ‘‘அர்’’ விகுதி சேர்த்து அப்பர் என அகங்குழைந்து அன்புடன் அழைத்தார்.

2.7. அற்புதங்கள்

- என்கடன் பணிசெய்து கிடப்பதே என்னும் கொள்கையில் நின்று உழவாரப்பணி மேற்கொண்டோர்.
- மகேந்திரவர்ம பல்லவனைச் சைவனாக்கினார்.

- திருமறைக்காட்டில் பாடியே கதவம் திறக்கச்செய்தார்.
- பாம்பு தீண்டி இறந்த அப்பூதி அடிகளின் மகனை உயிர்பெற்று எழச் செய்தார்.
- திருவையாற்றில் மூழ்கி எழுந்து, கயிலாயக் காட்சியைக் கண்டார்.
- திருநாவுக்கரசர் சமணத்தில் இருந்து சைவரானதும் மன்னன் மகேந்திர வர்ம பல்லவன் திருநாவுக்கரசர்க்கு எண்ணரிய தீங்குகள் இழைத்தன.
- கொதிக்கின்ற சுண்ணாம்பு காளவாயில் (நீற்றை) உயிரோடு நாவுக்கரசரை இட்டனர். இறைவன் மீது கொண்ட மாறாத நம்பிக்கையில்,

"மாசில் வீணையும் மாலை மதியமும்

வீசு தென்றலும் வீங்கு இள வேனிலும்

மூசு வண்டறை பொய்கையும் போன்றதே

ஈசன் எந்தை இணையடி நீழலே"[10]

என்று பாடி வாழ்த்தினார். இறைவன் நாவுக்கரசரை வேகாமல் உயிரோடு நலமாகக் காத்து தந்தார்.

இரண்டு கால்களிலும் கல்லைக் கட்டிக் கடலிலே நாவுக்கரசரை தூக்கிப் போட்டனர். ஒளியாம் இறைவனை வானத்திலே விளங்கும் சோதி என்னும் பொருளில்

"சோதி வானவன்" எனப் போற்றித் துதித்தார்.

"செல்துணை வேதியன் சோதி வானவன்

பொன்துணைத் திருந்தடி பொரந்தக் கைதொழ

கல்துணை பூட்டிஓர் கடலில் பாய்ச்சினும்

நல்துணை ஆவது நமக்கி வாயவே" [11]

எனக் கரங்கள் கூப்பி வானகம் நோக்கி ஒளியாம் இறைவனை துதித்தார். கல்லும் சேர்ந்து கடலில் மிதந்தது. கரை சேர்ந்தனர்.

2.8. தொகுப்புரை

திருமுனைப்பாடி நாட்டில் திருவாமூரில் பிறந்த திருநாவுக்கரசரை இறைவன் ஆட்கொண்ட விதத்தினையும், இறைவன் மீது திருநாவுக்கரசர் கொண்ட பக்தியினையும், சோதனைகளிலும் இறைவனைப் பற்றிப் பிடித்த பக்தியினையும், திருநாவுக்கரசர் ஆற்றிய அற்புதங்களையும் இவ்வியலில் அறியலாகிறது.

அடிக்குறிப்பு

தமிழ் இலக்கிய வரலாறு - தமிழண்ணல்

பக்கம் - 238,

பக்கம் - 239

தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர். பாக்யமேரி

பக்கம் - 300

பக்கம் - 301

இயல் மூன்று

திருநாவுக்கரசரின் பக்தி வெளிப்பாடு

உள்ளடக்கம்

3.12 மீண்டும் பிறவி

3.13 இறைவனை தொழுதல்

3.14 திருச்சிற்றம்பலம்

3.15 எந்த துன்பமுமில்லை

3.16 அன்பினால் பக்தி

3.17 இறைவனின் மெய்புகழ்

3.18 இறைவனை பற்றி பேசாத நாள் இல்லை

3.19 இறைவனின் அழகு

3.20 இறைவனின் வலிமை

3.21 உடனாய் நின்று உதவுதல்

3.22 இறைவனின் ஆபரணங்களை புகழ்தல்

3.23 இறைவனின் ஆயுதங்கள்

3.24 இறைவனைப் புகழ்தல்

3.25 இறைவனின் வெற்றி

3.26 சிவனை வருணித்தல்

3.27 தொகுப்புரை

3.0 முன்னுரை

தெய்வ நம்பிக்கையும், தெய்வ வழிபாடும் சீரும் சிறப்புடன் வாழ்வதற்கு முறையே உயிரும் உடலும் போன்று அகம் புறமாய் பெரும் பொருள்களாகும். இவற்றை நிலைபெற விளக்கி நீங்கள் துணையாக நிற்கும் திருவருள் நூல்கள் திருமாமறைகள் எனவும், திருமாமுறைகள் எனவும் வழங்கப்படுகின்றது. பன்னிருத் திருமுறைகளில் திருநாவுக்கரசரின் பக்தி வெளிப்பாடு பற்றி இவ்வியலானது விளக்குகிறது.

3.1 நாயன்மார்கள்

நாயன்மார்கள் என்போர் பெரிய புராணம் எனும் நூலில் குறிப்பிடப்படும் சைவ அடியார்கள் ஆவார். நாயன்மார் எண்ணிக்கை அடிப்படையில் 63 நாயன்மார்கள் ஆவார். **சுந்திரசர்த்தியார், திருத்தொண்டத் தொகையில்** அறுபது சிவனடியார்கள் பற்றி குறிப்பிட்டுள்ளார். அந்த நூலினை மூலமாக கொம்டு சேக்கிழார் பெரிய புராணத்தினை இயற்றினார். எனவே, திருத்தொண்ட தொன்மையை எழுதிய சுந்தரமூர்த்தியாரையும், அவரது பெற்றோர் சடையனார் - இசை ஞானியார் ஆகிய மூவரையும் நாயன்மார்களாக இணைத்துக் கொண்டார். நாயன்மார்களுக்கு சிவாலயங்களின் சுற்றுப்பிரதேசத்திற்குள் கற் சிலைகள் வைக்கப்படுகின்றன. அத்துடன் அறுபத்தி மூவரின் உலோகச் சிலைகளும் ஊர்வலத்தின் பொழுது எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்த ஊர்வலத்திற்கு ‘‘அறுபத்து மூவர் திருவீது உலா’’ என்று பெயர்.

3.1.1. நாயன்மார்களின் மரபு

நாயன்மார்களை மரபு அடிப்படையில் நோக்கும் போது, அரசர், அந்தணர், வணிகர், மேலாளர், ஆதி சைவர், மரபுக்கொருவர், மரபு கூறப்படாதவர் என வகைப்படுத்துவதாகக் கூறப்பட்டுள்ளது.

3.2 சைவசமயக் குரவர்கள்

சைவ சமயக் குரவர்கள் நால்வர் திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவசமயக் குரவர்கள் ஆவார்.

3.3 பன்னிரு திருமுறைகள்

தமிழகம் செய்த தவப்பயனால் நமக்கு கிடைத்தவை பன்னிரு திருமுறைகளாகும். இவை ஏழ் உலகும் உய்யும் பொருட்டு இறைவன் அருள் ஆணையின் வழி வந்தவை. தெய்வீகத் தன்மையுடைய திருநாவுக்கரசர் முதலிய இருபத்தேழு அடியார்களால் அருளிச் செய்யப்பட்டவை. வெந்த எலும்பை பெண்ணாக்க வல்லவை. வந்த மதயானையை வணங்க வைத்தவை. வெந்தழலை நீராக்க வல்லவை. முதலையுண்ட பாலகனை வரவழைத்தவை. நாக்குத் தடித்து நாத்திகம் பேசியோர் தலையில் இடிவிழ வைத்தவை. ஊமைப் பெண்ணைப் பேச வைத்தவை.

‘‘எனதுரை தனதுரையாக’’ என சம்பந்தர் கூறுவதால் திருமுறைகள் யாவும் இறைவன் வாக்கேயாகும். கல்லா மாந்தரையும் வன்னெஞ்சரையும் எல்லாப் பாக்களுமே கசிவிக்க வல்லவை. மெய்யன்போடு காதலாகிக் கசிந்து ஓதுவர்கட்கு இம்மைச் செல்வங்கள், மறுமைப் பயன்கள், வீடுபேறு ஆகிய மும்மை நலன்களையும் செம்மையாக அளிக்கவல்லவை. சுந்தரர்

திருத்தொண்டர் தொகைக்கு நாரையூர் பொல்லாப் பிள்ளையரால் நம்பியாண்டாருக்கு பொருளைக் கூறிய பெருமை உடையவை.

அழகிய திருச்சிற்றம்பலமுடைய நடராஜப் பெருமான் தம் திருக்கரத்தால் எழுதிய பெருமை உடையன. பல லட்சம் பாக்களில் செல்லுக்கும் மண்ணுக்கும் உணவானவை போக எஞ்சிருப்பன 796 பதிகங்களே. நம்பியாண்டார் நம்பி, சிவலாய முனிவர், உமாபதி சிவாச்சாரியார், தில்லை வாழ் அந்தணர்கள். அநபாய சோழன் முதலானவர்களால் ஏற்றுப் போற்றிக் காத்த பெருமையுடையவை. திருமுறைப்பாடல்களைப் பெற்றதாலே பல சிவத்தலங்கள் அன்றும், இன்றும், என்றும் பெருமைக்கு உரியனவாகத் திகழ்கின்றன. அவை 272 தலங்களும்.

3.3.1 திருமுறை என்ற பெயர்

திருமுறை என்ற தொடரில் ‘‘திரு’’ என்பது தெய்வத் தன்மையைக் குறிப்பது. ‘‘முறை’’ என்ற சொல்லுக்கு நூல், ஒழுங்கு, வரிசை, உறவு முறையீடு முதலிய பல கருத்துக்குள் உள்ளன. எனவே திருமுறை என்பது தெய்வத்தன்மை பொருந்திய நூல உயிர்களைச் செம்மையான ஒழுங்கு முறையில் இறைவனிடம் சேர்ப்பிக்கும் நூல், தொகுத்து வரிசைப்படுத்தப்பட்ட தெய்வீகப் பாடல்களைக் கொண்ட நூல், இறைவனுக்கும் ஆன்மாக்களுக்குமுள்ள உறவை விளக்கும் நூல். மெய்யபுயார்கள் உள்ளம் உருகி இறைவனிடம் செய்து கொண்ட முறையீடுகளைக் கொண்ட நூல் என பல வகையில் பொருள் கொள்ளக் கூடியதாகக் கூறப்படுகிறது.

3.3.2 திருமுறைகளைப் பேணி சேமித்தமை

அரசர் திருமுறைப் பாடல்களையெல்லாம் செப்பேடுகளில் எழுதுவித்து பாதுகாப்பாக அழியாதிருக்கும்படி சைவக் கோயில்களிலெல்லாம் ஓதுபவர்களை நியமித்துத் திருமுறைப் பாடல்களைப் பண்ணோடு பாராயணஞ் செய்துவருமாறு அரசர்கள் நியமனம் செய்தனர். இன்றும் அது நடப்பதாகக் கூறப்படுகிறது.

3.3.3 திருமுறை ஓதுவதன் பயன்

திருஞானசந்பந்தப் பிள்ளையார் இவ்வருட்பாடல்களை, ‘‘திருநெறிய தமிழ்’’ எனக் குறிப்பிட்டுள்ளார். திரு என்பது சைவத் திரு சைவத்திருவாவது பேரின்ப மூத்தி. அதைப் பெற ஏற்ற வழியே திருநெறியாம். அத்திரு நெறியில் நம்மை இட்டுச் செல்ல வல்லதே திருநெறிய தமிழ். எனவே, திருநெறிய தமிழ் எனப்படும் இத்திருமுறைகள் பராயணஞ் செய்பவருக்கு முடிந்தபேறான மோட்சானந்தத்தைப் பெற வழிசெய்யனவாகும் என கூறியுள்ளது.

3.3.4 திருமுறை ஓதும் முறை

பன்னிரு திருமுறைகளையும் முன் பின் முறை மாற்றது ஓதவேண்டும். தினந்தோறும், குறித்த காலத்தில் ஆசார சீலமுடையவராய், புத்தகத்தை, தூய தீபம் மலர் முதலியவற்றால் பூசித்து எடுத்து பாராயணம் செய்ய வேண்டும். திருமுறைப் புத்தகம், பாட்டாலே மூடிப் புனிதமான இடத்தில் வைத்துப் போற்றப்படல் வேண்டும். திருமுறைகளை ஓதும் முன்னும் முடிவிலும் ‘‘திருச்சிற்றம்பலம்’’ என்பதைச் சொல்ல வேண்டும் என்ற நியதிகளை

மீறலாகாது. திருமுறைப் பாடலோடு, பிறப்பாமல்களைக் கலந்தோதுதல் குற்றமாகும் எனக் கூறப்பட்டுள்ளது.

3.3.5 திருமுறைக் கண்ட வரலாறும் பொதுச் செய்திகளும்

சைவத் திருமுறைகள் பன்னிரண்டு என வழங்கும் வழக்கம் பன்னிரண்டாம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணம் இயற்றப்பெற்ற பின்னரே ஏற்றப்பட்டதென்று உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய சேக்கிழார் புராணத்தால் நன்கு துணியப்படும்.

பாடுவோரையும் பாடக்கேட்போரையும் இறையுணர்வில் விரைவில் ஈடுபடச் செய்யும் ஆற்றல் தோத்திரப் பாடல்களுக்கு உண்டு. அத்தகைய பாடல்களை மிகுதியாகக் கொண்டு விளங்குவது நம் தமிழ்மொழியேயாகும். தமிழ் தோத்திரங்களுள் தலைசிறந்தவை திருமுறைகள்.

இத்திருமுறைகள் பன்னிரண்டாகப் பகுக்கப் பெற்றுள்ளன. இவற்றை அருளிச் செய்த இருத்தேழு ஆசிரியர்களும் இருபத்தேழு ஆசிரியர்களும் இருபத்தேழு நட்சத்திரங்களாக விளக்குகின்றனர். பன்னிரு திருமுறைகளையும், பன்னிரு ராசிகளாகவும் கொள்ளலாம். இத்திருமுறைகள் அக இருளை அகற்றி, சவான்மாக்கள் பரமான்மாவை உணர்ந்து இன்புறத் துணை புரியும்.

பன்னிரு திருமுறைகளுள் முதன் மூன்று திருமுறைகள் 384 பதிகங்களாக 4181 பாசுரங்களாக அமைந்துள்ளது. இவற்றை அருளிச் செய்தவர் திருஞானசம்பந்தர்.

அடுத்துள்ள 4, 5, 6 திருமுறைகள் 313 பதிகங்களாக 3066 பாடல்களாக அமைந்துள்ளன இவற்றை அருளிச் செய்தவர் திருநாவுக்கரசு சுவாமிகள்.

ஏழாவது திருமுறை 100 பதிகங்களாக 1026 பாடல்களாக அமைந்துள்ளன. இதை அருளிச் செய்தவர் சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

இந்த ஏழு திருமுறைகளும் தேவாரம் எனவும் அடங்கள் முறை எனவும் வழங்கப்பெறும். தே-என்பது தெய்வத்தையும், வாரம் என்பது அன்பையும் குறிக்கும். எனவே, தெய்வத்தினிடத்து உயிர்கட்கு அன்பை விளைவிக்கும் இவ் அருட்பாடல்கள் தேவாரம் எனப் பெற்றன. மேலும் தே+ஆரம் எனப் பிரித்து, தெய்வத்திற்கு அணிவிக்கும் மாலை போல்வது என்றும் பொருள் கொள்ளலாம்.

எட்டாம் திருமுறையில் திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இரண்டும் அடங்கும். அவற்றுள் திருவாசகம் 51 பகுதிகலாக 659 பாடல்களைக் கொண்டது. திருக்கோவையார் 400 பாடல்களைக் கொண்டது. இத்திருமுறையை அருளிச் செய்தவர். மாணிக்கவாசகமாக சுவாமிகள் மேற்கண்ட நால்வரும் சைவசமயாச்சாரியர் எனப் பெறுவர்.

ஒன்பதாம் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என இரு பகுதிகளையுடையது. அவற்றுள் திருவிசைப்பா 28 பதிகங்களாக 288 பாடல்களைக் கொண்டது. திருப்பல்லாண்டு தனிப்பகுதியாகும். இவைகளை அருளிச் செய்தவர் ஒன்பதின்மர். அவற்றுள் சேந்தனார் என்பவரே திருப்பல்லாண்டை அருளிச் செய்தவர்.

பத்தாம் திருமுறை இருபத்தெட்டு ஆகமங்களின் சாரம் 9 தந்திரங்களைத் திருமூலரால் செய்யப்பட்டதாகும். தற்போது 3047 பாடல்கள் உள்ளன.

பதினோராம் திருமறை 40 பிரபந்தங்களாக 1416 பாடல்களையுடை.து. அதனை அருளிச் செய்தவர்கள் பன்னிரு அருளாளர்கள்.

பன்னிண்டாம் திருமுறையைச் செய்தவர் சேக்கிழார் சுவாமிகள் இது 2 காண்டங்களாக, 12 சருக்கங்களாக 4286 செய்யுட்களையுடையது. 63 தனி அடியார்கள் பெருமையையும் 9 தொகை அடியார்களின் சிறப்பையும் உள்ளவாறு உணர்த்துகிறது.

3.3.6 திருமுறை ஆசிரியர்கள் காலம்

திருஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் கி.பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள். சுந்தரர் 8-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 9-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவர். மாணிக்கவாசகர் கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்தவரென ஒருசாரர் கூறுவர். ஆனால், அவரது வாழ்க்கை வரலாற்றைப் பெரிய புராணத்தில் சேர்க்காமையால் அவர் சேக்கிழார் காலத்திற்குப் பிறப்பட்டவர் என யூகிக்க வேண்டியுள்ளது.

திருவிசைப்பா ஆசிரியர்களான ஒன்பதின்மாரும் ஏறத்தாழ கி.பி. 9-ஆம் நூற்றாண்டு முதல் 11-ஆம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தில் வாழ்ந்தவர்களாக தெரிவிக்கின்றனர். திருமூலரும் பதினோராம் திருமறையை அருளிச் செய்த பன்னிருவரும் கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தினர் என அறியப்படுகின்றனர். சேக்கிழார் பெருமான் பன்னிரண்டாம் நூற்றாண்டினர்.

3.3.7. வகுத்தோர் காலம்

முதல் இராசராசன் ஒன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும் பத்தாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்தவன். இவன் அடியாட்கள் மூலம் சில தேவராப்பாடல்களைக் கேட்டு அவற்றின் சிறப்பை உணர்ந்து அவை உய்தி பெறச் சிறந்த சாதனமாகும் என்றெண்ணி முழுவதையும் தேடினான்.

நம்பியாண்டார் நம்பிகள் வாயிலாகத் திருநாரையூர்ப் பெல்லாப் பிள்ளையார் மூலம் திருக்கர அடையாளமுள்ள அறையில் இருப்பதை அறிந்தான் கூத்தபிரான் திரு அருளால் தேவார ஏடுகளைக் கண்டான். பலவற்றைச் செல்லரித்தமை கண்டு வருத்தினான். **''இக்காலத்திற்கு வேண்டுவனவற்றை வைத்து, மற்றவற்ரை மறைத்தோம்''**[1] என்ற அசரீரி வாக்கினால் தெளிந்தான்.

நம்பியாண்டார் நம்பிகளைக் கொண்டு திருவாசகத்தையும், திருக்கோவையாரையும் எடோம் திருமுறையாகவும், ஒன்பதின்மர் அருளிய திருவிசைப்பாவை ஒன்பதாம் திருமுறையாகவும், திருமூலர் அருளிய திருமந்திரத்தைப் பத்தாம் திருமுறையாகவும், பன்னிருவர் அருளிய நாற்பது பிரபந்தங்களையும் பதினோராம் திருமுறையாகவும் அமைந்தான்.

பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவன், அநபாயன் என்றும் இரண்டாம் குலோத்துங்கன் அவனைப் புறச் சமயத்திற்குச் செல்லும் அபாயத்தினின்றும் நீக்குவதற்காகச் சேக்கிழார் பெருமானால் அருளிச் செய்யப்பட்டது திருத்தொண்டர் புராணம் என்னும் பெருநூல். இதன் பெருமையறிந்த அநபாயன் இதைப் பன்னிரண்டாம் திருமுறையாக அமைக்கச் செய்தன.

3.3.8 ஓதுவார் உறுபயன்

உணவு உடம்பை வளர்பது போல உயிரை (ஆன்மீக உணர்வை) இத்திருமுறைப் பாடல்கள் வளர்த்த வல்லன. அவை இம்மை மறுமை நலன்களை அளித்து வீடுபேற்றையும் அளிப்பன. ஆயிரம் ஆண்டுகளுக்கு

முன் வாழ்ந்த மக்கள் வாழ்க்கையும் அவர்தம் மாண்டையும் உள்ளவாறு உணர்த்துவன வேண்டுவோர் வேண்டுவனவற்றை விரைந்து அளிப்பன. எல்லா நலன்களும் வேண்டுவோர் ஆண்டிற்கு ஒருமுறை பன்னிரு திருமுறைகளையும் முழுவதும் நியதியாகப் பாராயணம் செய்வார்களாக.

3.4 சூலை நோயை நீக்குதல்

அம்மையாரது பிராத்தனைக்கு இறைவன் செவிசாய்த்தார். திலகாவதியாரின் கனவில் தோன்றி, **‘‘கவலைப் படாதே, உன் தம்பி முற்பிறப்பிலே தவத்தில் சிறிது வழுவியதால் புறச் சமயத்தைத் தழுவும்படி ஆயிற்று. சூலை நோயை உண்டாக்கி, வருந்தச் செய்து ஆட்கொள்வோம்’’** [2] என்றருளி மறைந்தார்.

அவ்வாறே மருள்நீக்கியாருக்கு வயிற்றில் சூலை நோய் உண்டாயிற்று. வேதனை பொறுக்கமாட்டாமல் துடித்தார். சமணர்கள் தங்களுக்குத் தெரிந்த மருந்துகளையெல்லாம் கொடுத்தார்கள். மந்திரம் போட்டனர். மயிற் பீலியால் உடல் முழுவதும் தடவினர். நோய் தீர்ந்த பாடில்லை. அதிகரித்தது. கடைசியில் கைவிட்டு விட்டனர்.

மருள்நீக்கியாருக்குத் தன் தமக்கையின் நினைவு வந்தது. பாகுகன் என்பவனைத் திலகவதியாரிடம் அனுப்பினார். அவன் சென்று தமக்கையாரிடம் செய்தியைத் தெரிவித்தான். **‘‘புறச்சமயிகளாகிய அவர்கள் பள்ளியை நான் ஏறெடுத்தும் பாரேன். போய்ச் சொல்’’** [3] என்று கூறிவிட்டார் திலகவதியார்.

பாகுகன் பாடலிபுத்திரம் திரும்பி, தருமசேனரிடம் நடந்ததைக் கூறினான். ‘‘எவருக்கும் தெரியாமல் விடியற்காலையில் தமது அன்பிற்குரிய சிலரோடு

சமணர் பள்ளியை விட்டுப் புறப்பட்ட தருமசேனர், உடைமைகள் எதையும் எடுத்துக்கொள்ளாமல் திருவதிகை வந்து சேர்ந்தார்''4 மடத்திலிருந்த திலகவதியால் பாதங்களில் விழுந்து வணங்கினார். கண்ணீர் விட்டுக்கதறினார். தன்னை மன்னிக்கும்படி வேண்டினார்.

''தம்பி எழுந்திரு'' என்று கூறி, ஐந்தெழுந்தோதி திருநீற்றை அளித்தார். **''புறச்சமயத்தை கைவிட்டு எம்பெருமானுக்குத் தொண்டு செய்''5** ஆலயத்திற்குச் சென்றனர். மருள்நீக்கியார் இறைவனைத் தொழுது, சூலை நோயை நீக்கியருளுமாறு வேண்டினார்.

''கூற்றாயின வாறு விலக்ககலீர்
கொடுமை பல செய்தன நானறியேன்
ஏற்றாய் அடிக் கேஇரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரடோ னத்துறை அம்மானே''.6

திருநாவுக்கரசர் தேவாரம் என்ற பதிகத்தைப் பாடினார். நோய் நீக்கியது இன்பம் பெருகியது. **''செந்தமிழில் நாவின் திறங்காட்டிப் பதிகம் பாடியமையால் 'நாவுக்கரசு' என்னும் நற்பெயர் வழங்குவதாக''7** என்ற சொல் வானத்திடை எழுந்தது. நாவுக்கரசர் மனம் களித்து அன்று முதல்

சிவநேயச் செல்வராய் நீறு பூசி, கண்டிகை பூண்டு இறைவனுக்குத் தொண்டு புரியும் கருத்தினராய் உழவாரப் படை தாங்கி உலவி வரலானார்.

கொடிய ஆற்றின் வடகரையில் திருவதிகை என்றும் வீரட்டானத் திருப்பதியில் உகந்தெழுந்தருளியிருக்கும் தலைவனே! யான் இப்பிறப்பில் என் அறிவுப் பல கொடுஞ் செயல்களைச் செய்தனாக எனக்குத் தோன்றவில்லை.

‘‘கூற்றாயின வாறு விலக்கிலீர் கொடுமைபல

செய்தன நான் அறிவேன்

ஏற்றாய்அடிக் கேஇர வும்பகலும் பிரியாது

வணங்குவன் எப்பொழுதும்

தோற்றாதென் வயிற்றின் அகம்படியே

குடரோடு துடக்கி முடக்கியிட

ஆற்றேன்அடி யேன் அதி கைக்கெடில வீரட்டா

ளத்துறை அம்மானே’’[8]

அவ்வாறாகச் சூலை நோய், யாருக்கும் நோய்முதல் புலப்படாத வகையில் என் வயிற்றினுள் குடலோடு ஏனைய உள் உறுப்புக்களைக் கட்டிச் செயற்படாமல் மடக்குதலால் அடியேன் அவ்வலியைப் பொறுக்க இயலாதேனாக உள்ளேன். கூற்றுவனை போல் அந்நோய் அடியேனைத் துன்புறுத்தும் செயலை நீக்கும் ஆற்றலுடையீர். அந்நோயை விலக்கினால் எப்பொழுதும் காளை மீது ஊரும் உம் அடிக்கண் நீங்காமல் மனத்தால் துணிவும் தலையால் தணிவும் மொழியால் பணிவும் தோன்ற வணங்குவேன் என தன் பக்தியைப் புலப்படுத்துகிறார்.

அதிகைக் கெடில வீரட்டானத்துறை அம்மானே! என் நெஞ்சத்தை உம்மிடத்திலேயே உறைவிடம் பெறுமாறு பண்படுத்திவிட்டேன். இனி ஒரு பொழுதும் உம்மை நினையாமல் இருக்க மாட்டேன்.

“நெஞ்சம்உமக் கேயிட மாகவைத்தேன் நிலையாதொரு

போதும் இருந்தறியேன்

வஞ்சம்இது வொப்பது கண்டறியேன் வயிற்றோடு

துடக்க முடக்கியிட

நஞ்சாகிவந் தென்னை நலிவதனை நாணுகாமல்

துரந்து கரந்துஇடீர்

அஞ்சேலும்என் னீர்அதி கைக்கெடில வீரட்டா

னத்துறை அம்மானே”[9]

இச்சூலை நோய்ப் போலக் காரணத்தைப் புலப்படுத்தாமல் காரியத்தில் செயற்படும் கொடுநோயை அடியேன் இதுகாறும் அனுபவித்தறியேன். வயிற்றினோடு ஏனைய உள்ளுறுப்புக்களைக் கட்டி அவை செயற்படாமல் மடக்கியிடுவதற்கு விடம் போல வந்து என்னைத் துன்புறுத்தும் நோயை விரட்டியோ செயற்பாடு இல்லாமல் மறைத்தோ என்னைக் காப்பீராக. அஞ்சேல் அன்று என்னை அருள்வீராக என தன் பக்தியைப் புலப்படுத்துகிறார்.

“முன்**னம்அடி யேன்அறி யாமையினால் முனிந்தென்ன**

நலிந்து முடக்கியிடப்

பின்னைஅடி யேன்உமக் காளும்பட்டேன் கடுகின்றது

சூலை தவிர்த்தருளீர்

தன்னைஅடைந் தார்வினை தீர்ப்பதன்றோ

தலையாயவர் தங்கடன் ஆவதுதான்

அன்னைநடை யார்அறி கைக்கெடில வீரட்டா

னத்துறை அம்மானே''[10]

அன்னம் போன்ற நடை அழகை உடைய இளமகளிர் நிறைந்த அதிகை. எம்மானே! இதற்கு முன் அடியேன் உம்மைப் பரம்பொருளாக அறிந்து உம் தொண்டில் ஈடுபடாமையால் தேவரீர் அடியேனை வெகுண்டமையால், சூலைநோய் என்னை வருத்தி செயர்பட முடியாமல் செய்யவே, அதன் நலிவுக்கு ஆளாகிய பின்நர் அடியேன் உமக்கு அடிமையாகி விட்டேன். அடியேனே வருத்தும் சூலை நோயைத் தவிர்த்து அருளவேண்டும். மேம்பட்டவர்களது கடமை தம்மைச் சரணமாக அடைந்தவர்களுடைய வினையைப் போக்குவது அன்றோ.

''காத்தாள்பவர் காவல் இகழ்ந்தமையால் கரைநின்றவர்

கண்டுகொள் என்று சொல்லி

நீத்தாய கயம்புக நூக்கியிட நிலைக்கொள்ளும்

வழித்துறை யொன்றறியேன்

வார்த்தையிது வொப்பது கேட்டறியேன் வயிற்றோடு

துடக்கி முடக்கியிட

ஆர்த்தார்புனல் ஆர்அதி கைக்கெடில வீரட்டோ

னத்துறை அம்மானே''[11]

ஆரவாரித்துப் பெருகும் கெடிலக் கரையிலமைந்த அதிகை வீரட்டானப் பெருமானே! குளத்தில் பிறர் இறங்காமல் பாதுகாத்துச் செயற்படுபவர் தம் காவலில் சோர்வு பட்டமையால், கரையின் நின்றவர்கள் இக்குளத்தின் ஆழத்தைக் கண்டு அனுபவிப்பாயாக என்று ஆழமான குளத்தில் விழுமாறு தள்ளிவிட, அக்குளத்தில் ஆழத்தில் நிலையாக நீந்திக் கொண்டிருக்கும் வழிமுறை ஒன்றும் அறியாதேனாகிய அடியேன், சூலைநோய் வயிற்றோடு ஏனைய உள் உறுப்புக்களைக் கட்டி என்னைச் செயற்படமுடியோனாக செய்ய பெருமானாகிய நீயே எல்லா வினைகளையும் போக்கி அருளுவாய் என்ற வார்த்தையை இதற்குமுன் கேட்டு அறியதேனாய் நாளை வீணாக்கினேன் என வருந்தினார்.

அதிகை அம்மானே! அடியேனுக்குத் தலைவராக இருந்து அடியேனை நெறிபிறழாமல் காப்பவர் ஒருவரும் உம்மையல்லாது இல்லாத காரணத்தினால் மனையிலிருந்து வாழும் இல்லற வாழ்க்கையிலும் அதற்கு வேண்டியதாய் நன்னெறியில் ஈட்டப்படும் பொருள் தேடும் செயலிலும் நீங்கினேன்.

‘‘உயர்ந்தேன்மனை வாழ்க்கையும் ஒண்பொருளும்
ஒருவர்தலை காவல் இலாமையினால்
வயந்தேஉம் காட்செய்து வாழலுற்றால் வலிக்கின்றது
சூலை தவிர்த்தருளீர்
பயந்தேயென் வயிற்றின் அகம்படியே பறித்துப்புரட்
டிஅறுத் தீர்த்திடநான்
அயர்ந்தேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா
னத்துறை அம்மானே!’’[12]

என் வயிற்றினுள்ளே, யான் அஞ்சுமாறு குடலைப் பறித்தெடுத்துப் புரட்டி அறுத்துச் சூலை நோய் உள் உறுப்புக்களை இழுக்க, அடியேன் தாங்க முடியாதவனாகி விட்டேன். இனி உமக்குத் தொண்டனாகி நான் வாழ்க்கருதினால், அதற்கு ஏற்ப என்னைத் துன்புறுத்தும் சூலைநோய்ப் போக்கி அருளுவீராக, என வேண்டினார்.

அதிகை அம்மானே! வெண்மிறச் சங்கினால் ஆகிய குழை என்னும் காதணியை அணிந்துள்ள பெருமானே! அடியேன் மனத்தில் வஞ்சனை ஒன்றும் இல்லாமையினால் மனையின்கண் மகிழ்ந்து வாழும் வாழ்க்கையைக் காய்ந்தேன்.

‘‘வலித்தேன்மனை வாழ்க்கை மகிழ்ந்தடியேன்

வஞ்சம்மணம் ஒன்றும் இலாமையினால்

சலித்தால்ஒரு வர்துணை யாருமில்லைச்

சங்கவெண்குழைக் காதுடை யெம்பெருமான்

கலித்தேயென் வயிற்றின் அகம்படியே கலக்கிமலக்

கிட்டுக் கவர்ந்துதின்ன

அலுத்தேன்அடி யேன்அதி கைக்கெடில வீரட்டா

ணத்துறை அம்மானே’’13

சூலைநோய் அடியேன் வயிற்றகத்தே செருக்கிக் கலக்கி வயிற்றின் பகுதிகளை மயக்கிக் கைக்கொண்டு துன்புறுத்துதலால் அடியேன் உயிர் வாழ்தலை வெறுத்து விட்டேன். வருந்தும்போது அடியேனுக்குத் துணையாவார். உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை. அடியேனை நோயினின்றும் காத்தருள்க என்றார்.

"போத்தாயங்கோ ரானையின் ஈருரிதோல் புறங்காபரங்

காநட மாடவல்லாய்

ஆர்த்தான்அரக் கன்றனை மால்வரைக்கீழ் அடர்த்திட

பருள்செய்த அதுகருதாய்

வேர்த்தும்புரண் டும்விழுந் தும்எழுந்தால் என்வேதனை

யான விலக்கியிடாய்

ஆர்த்தார்புனர் சூழ்அதி கைக்கெடில வீரட்டா

னத்துறை அம்மானே" $_{14}$

ஆரவாரித்து நிரம்பும் நீரை உடைய கெடிலக் கரையிலமைந்த திருவதிகை வீரத்தானத்து உகந்தருளி உறையும் அம்மானே! பண்டு ஓர் யானையின் உதிரப் பசுமை கெடாத தோலைப் போர்த்தவனே. சுடுகாட்டையே கூத்தரும் அரங்காகக் கொண்டு கூத்து நிகழ்த்துதலில் வல்லவனே! ஆரவாரித்துக் கயிலைமலையை பெயர்க்க முற்பட்ட இராவணனை அப்பெரியமலையின் கீழ் நசுக்கிப்பின் அருள் செய்த அதனை நினைத்துப் பார்த்து, வியர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தும் அடியேன் சூலை நோயினால் அனுபவிக்கும் துன்பங்களை நீக்கி அருளுவாயாக என தன் பக்தியை வெளிப்படுத்தினார்.

3.5 பாடலிபுத்திரம்

தருமசேனர் சமணப் பள்ளியை விட்டு அதிகாலையில் புறப்பட்டுச் சென்றதை அறிந்த சமணர்கள் திடுக்கிட்டனர். திருவதிகை சென்று நோய் நீக்கப் பெற்றார் என்பதையும் அறிந்தார்கள். அரசரிடம் சென்று, **"மன்னவா! அந்த அயோக்கியனை சும்மா விடுதல் கூடாது. நமது சமுதாயத்தைத்**

துறந்த அவனைத் துன்புறுத்த வேண்டும்''[15] என்றனர். அரசனும் அமைச்சர்களை அழைத்து, **''இப்போதே புறப்பட்டுச் சென்று அவனைக் கொண்டு வாருங்கள்''**[16] என்று கட்டளையிட்டனர். அவ்வாறே அமைச்சர்கள் திருவதிகைச் சென்று, திருநாவுக்கரசரை அழைத்தபோது,

''நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்படோம் நடலை யில்லோம்
ஏமாப்போம் பிணிய றியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்னை யான
சங்கரன்நற் சங்கவென் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்றும் மீளா ஆளாய்க்
கொய்மலர்ச்சே வடியிணையே குறுகி னோமே''[17]

என்னும் மனமாற்றத்தைத் திருத்தாண்டகமாகப் பாடியருளினார்.

அமைச்சர்கள் மன்னனது தண்டனைக்குப் பயந்து அவரைத் தம்மோடு புறப்பட்டு வரவேண்டுமென்று வேண்டினார்கள். நாவுக்கரசர் இறைவன் மீது பாரத்தைப் போட்டு அவர்களோடு புறப்பட்டார். அரசன் சமண முனிவர்களின் தூண்டுதலின் பேரில் நாவுக்கரசரைச் சுண்ணாம்புக் களவாய் ஒன்றில் அடைத்துக் கதவைத் தாளிடச் சொன்னான். நாவுக்காரர் இறைவனைத் தியானித்து யாதொரு துன்பமும் இன்றி,

''மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீள்கிள வேனிலும்

மூசு வண்டறைப் பொய்கையும் போன்றதே

ஈசன் எந்தை இணையடி நிழலே''[18]

என்ற குறுந்தொகையை அருளினார். அவரை அடைத்திருந்த நீற்றறை குளிர்ந்ததாக ஆயிற்று.

நஞ்சை அருந்த செய்தனர். யானைக்காலில் இடறச் செய்தனர். இக்கொடுமைகளுக்கெல்லாம் நாவுக்கரசர் பிழைத்திருப்பது கண்டு மன்னன் திகைத்தான். **''அரசே அவன் நாட்டில் இருக்கத் தகுதியற்றவன். அவன் இருப்பதால் கஷ்டங்களே அதிகரிக்கும். ஆகவே, கல்லில் அவனை பணித்துக் கடலில் அறிந்து விடுங்கள்''[19].**

மன்னன் அழ்ற்கிசைந்து அவ்வாறே நாவுக்கரசரரைக் கற்பாறையுடன் பிணித்துக் கடலில் ஏறிய உத்திரவிட்டான். ''இதுவும் ஈசன் திருவுளமோ'' என மகிழ்வுடன் அத்தண்டனையினையும் ஏற்றுக் கொண்டார் வாக்சர்.

''சொற்றுணை வேதியன் சோதி வானவன்

பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்

கற்றுனைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்

நற்றுணை யாவது நமச்சி வாயவே'' [20]

என்னும் நமச்சிவாயப் பதிகத்தைப் பாடினார்.

வாக்சரைப் பிணித்திருந்த பாறை கமல் நீரில் அமிழாமல் மிதக்கத் தொடங்கியது. அவரைக் கட்டியிருந்த கட்டுக்கள் தாமே அறுந்தன. கருங்கல்லேபடகாக மாறியது. நாவுக்கரசரைத் தாங்கி வந்த படகு,

திருப்பாதிரிப்புலியூர் அருகில் கரையில் வந்து ஒதுங்கியது. வாக்சர் கரையேறினார். இறைவனைப் போற்றித் தொழுதார்.

அரசர் வியப்புற்று, சைவ சமயமே மெய்ச்சமயம் என உணர்ந்து சைவன் ஆனான். அதற்கு அறிகுறியாக தன் பெயரால் திருவதிகையில் குணதர ஈச்சுரம் என்னும் கோயில் ஒன்றை கட்டுவித்தார்.

3.6 தலங்களை தரிசித்தல்

பின்னர் வாக்சப் பெருந்தகையார் திருவதிகையில் சிவத்தொண்டு புரிந்து வரலானார். பல நாட்களுக்குப் பிறகு பல தலங்களையும் கண்டு மகிழ்ந்து திருப்பெண்ணாகடம் அடைந்தார். அங்கு தூங்கானைமாடத்து இறைவன்பால், **‘‘பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்’’** என்னும் பதிகம் பாடி அவன் ஆணைப்படி பூதம் ஒன்றினால் இடக்குறியும் சூலமுத்திரையும் தம் தோள்களில் பொறிக்கச் செய்தார்.

அதன் பின்னர் சிதம்பரத்தை அடைந்து பொன்னம்பலன் பொற்கழல் பணிந்து பதிகம் பாடிப் பரவசமானார். அங்கிருந்து சீர்காழி சென்று திருஞான சம்பந்தரை அகமகிழக் கண்டு களித்து அவரால் **‘‘அப்பரே’’** என்று அருமையாக அழைக்கப்பெற்றார். சோழ நாட்டும் பதிகளைத் தரிசித்து வருங்கால் திருச்சக்தி முற்றத்தில், **‘‘கோவாய் முடுகி’’** என்னும் பதிகம் பாடி இறைவன் அடிச்சுவடு தம் முடிமேல் பொறிக்கப்பட வேண்டுமென்று வேண்டினார். அவ்வேண்டுகோல் நல்லூரில் நிறைவேறியது.

திருவையாற்றை அடுத்துள்ள திங்களூரை அடைந்து அப்பூதியடிகளால் உபசரிக்கப் பெற்றார். அங்கு அம்பூதியடிகளின் மூத்த மகன் அரவு தீண்டி ஆவி

நீத்தமை கண்டு, **“ஒன்று கொலாம்”** என்று தொடங்கும் பதிகம் பாடி அவனை உயிர்ப்பித்தார்.

பின்னர் நாவுக்கரசரும், ஞான சம்பந்தரும் சேர்ந்து பல தலங்களையும் வணங்கித் திருவீழமிழைலையை அடைந்து ஆண்டவரிடம் பொற்காசு பெற்று அடியார்களின் அரும்பசியைப் போக்கினார். திருமறைக்காடு சென்று, **“பணணினேர் மொழியாள் உமை”** என்ற பதிகம் பாடி, வேதங்களால் அடைக்கப்பட்டிருந்த கதவைத் திறக்கச் செய்தனர்.

திருநாவுக்கரசர் திருப்பைஞ்ஞீலிக்கு வழி நடந்து செல்லுங்கால் பசியாலும் நீர்வேட்கையாலும் வருந்தினார். இறைவன் ஒரு சோலையில் பொதி சோறும் நீரும் கொடுத்து அவரது இளைப்பைப் போக்கினார்.

3.7 கயிலைக் காட்சி

அதன்பின் நாவுக்கரசர் நடுநாட்டுத் தலங்களைத் தரிசித்துவிட்டு, திருக்காளத்தி மலையை அடைந்தார். வடகயிலையைக் கண்டு களிக்க விரும்பி, அடியார்கள் புடைசூழக் காசி வரையிலும் சென்றார். பின்னர் உடன் வந்ச அடியார் குழுவை அங்கேயே நிறுத்திவிட்டுத் தனித்து செல்லலானார். திருநாவுக்கரசர் உடல் தளர்ந்த நிலையிலும் உள்ளம் தளராமல் சென்றார். கால் தோய்ந்தது. கை தோய்ந்தது. மார்பு தோய்ந்தது. மனம் தளராமல் புரண்டு சென்றார். பின்னர் அதுவும் முடியாமல் அசைவற்றுக் கிடந்தார். அந்நிலையில் கயிலைப் பெருமான் முனிவர் வடிவத்தோடு தோன்றி, **“அப்பனே! கயிலை மனிதர் காணும் தன்மையதன்று, திரும்பிச் செல்க”** என்றார் வாக்சர்.

“ஆளு நாயகன் கயிலையில் இடுக்கை கண்டல்லால்

மாளும் இவ்வுடல் கொண்டு மீளேன்” [21]

என்று மறுத்தார். இவரது மனவுறுதியைக் கண்டு மகிழ்ந்து, மங்கை பாகன், **“ஒங்கு நாவுக்கரசனே எழுந்திரு”** என்றார்.

நாவுக்கரசர் தீங்கு நீங்கிய உடலினராய் எழுந்தார். பிறகு சிவபெருமான் பணித்தபடி அருகிலிருந்த ஒரு பொய்கையில் மூழ்கி, தென்னாட்டிலுள்ள திருவையாற்றின்கண் ஒரு பொய்கையிலிருந்து எழுந்தார். அங்கு கயிலைக் கோலமாகிய அம்மையப்பரின் காட்சியைக் கண்டு மகிழ்ந்து,

“மாதர் பிறைக்கண்ணி யானை

மலையான் மகளொடும் பாடிப்

போடுதொடு நீர்சுமந் தேத்திப்

புகுவார் அவர்பின் புகுவேன்

யாதும் சுவடு படாமல்

ஐயா நடைகின்ற போது

காதல் மடப்படி யோடும்

களிறு வருவன கண்டேன்

கண்டேன் அவர்திருப் பாதம்

கண்டறி யாதன கண்டேன்” [22]

3.8 சிவிகை சுமந்தது

அதன்பின் காவிரியின் இருமருங்கிலும் உள்ள தலங்களைத் தரிசித்துக்கொண்டு திருப்பூந்துருத்தியை அடைந்தார். அங்கு திருமடம் ஒன்றை

அமைத்து உழவாரப் பணி புரிந்து வந்தார். அப்போது திருஞான சம்பந்தர் தன்னைக் காண விரும்பி வரும் செய்தி அறிந்து எதிர் சென்று, எவரும் அறியா வகையில் சம்பந்தரின் சிவிகையைத் தாங்கி வந்தார்.

நாவுக்கரசரைக் காணும் பெருவியப்பில் **"அப்பர் எங்குற்றார்"** என்று உடன் வருவோரைச் சம்பந்தர் வினவினர். நாவுக்கரசர் **"உம்மடியேன் உம்மடிகள் தங்கிவரு பெருவாழ்வு வந்தெய்தப் பெற்று இங்குற்றேன்"**[23] என்றார். உடனே சம்பந்தர் கீழிறங்கி வணங்கி, நாவுக்கரசரும் வணங்கினார். இருவரும் அன்பு கலந்து அகமகிழ்ந்தனர்.

ஞானசம்பந்தர் பாண்டி நாட்டுச் சிறப்பு இயல்புகளைத் தெரிவிக்க, நாவுக்கரசர் கேட்க, அந்நாட்டிற்குச் சென்று பல தலங்களையும் தரிசித்தார். பிறகு மீண்டும் சோழநாடு திரும்பி திருப்புகலூரா அடைந்து பதிகம் பலப் பாடி பரமனை வழிபட்டார்.

அருள் செய்த அதனை நினைத்துப்பார்த்து, வியர்த்தும் புரண்டும் வழுந்தும் எழுந்தும் அடியேன் சூலை நோயினால் அநுபவிக்கும் துன்பங்களை நீக்கி அருளுவாயாக என தன் பக்தியை வெளிப்படுத்தினார்.

3.9 இறைவனை புகழ்தல்

"பணிந்தாரன பாங்கள் பாற்றவல்லீர் படுவெண்டலை

யிற்பலி கொண்டுழல்வீர்

துணிந்தேஉமக் காட்செய்து வாழலுற்றார் சுடுகின்றது

சூலை தவிர்த்தருளுவீர்

பணிந்தார்பொடி கொண்டுமெய் பூசவல்லீர் பெற்றம்

ஏற்றகத் தீர்சுற்றும் வெண்டலைகொன்

பணிந்தீர்அடி கேள்அதி கைக்கெடில் வீரட்டா

னத்துறை அம்மானே'' [24]

அதிகை அம்மானே! உலகப் பற்றுக்களோடு இணைந்து இறந்தவர்களை எரித்த சாம்பலை உடலில் பூசிக்கொள்ள வல்ல பெருமானே! காளையை இவர்தலை விரும்புகின்றவரே! வெண்தலைமாலை அணிகின்றவரே! உம்மை வழிபடுபவர்களுடைய பாவங்களைபோக்க வல்லீரே! இறந்துபட்டவருடைய மண்டையோட்டில் பிச்சை ஏற்றுத்திரிபவரே! உம்மையே பரம் பொருளாகத் துணிந்து உமக்கு அடிமை செய்து அடியேன் வாழக்கருதலின், துன்புறுத்தும் சூலைநோயைப் போக்கி அருள்வீராக என இறைவனை புகழ்ந்து தன் பக்தியை வெளிப்படுத்துகிறார்.

3.10 இறைவனை மறவாப் பண்பு

அதிகை அம்மானே! இறந்தவர் மண்டையோட்டில் பிச்சை எடுத்துத் திரியும் பெருமானே! என் உடலின் உள்ளாய் வருந்தும் சூலைநோயைப் போக்கி அருளுவாயாக.

''சலம்பூவொடு தூபம் மறந்தறியேன் தமிழோடிசை

பாடல் மறந்தறியேன்

நலந்தீங்கிலும் உன்னை மறந்ததறியேன் உன்னாமம்என்

னாவில் மறந்தறியேன்

உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்

உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்

அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில் வீரட்டா

னத்துறை அம்மானே''25

இனி அபிடேகத்தீர்த்தத்தையும் பூவையும் உனக்கு சமர்ப்பிப்பதனை மறவேன். தமிழோடு இசைப்பாடலை மறவேன். இன்புறும் பொழுதிலும் துன்புறும் பொழுதிலும் உன்னை மறவேன். உன் திருநாமத்தை என் நாவினால் ஒலிப்பதனை மறவேனாய் இனி இருக்கிறேன் என இறைவனை மறவேன் என தன் பக்தியை வெளிப்படுத்துகிறார்.

3.11 இறைவனின் அன்பு

''பொன்போல மிளர்வதொர் மேனியினீர் புரிபுன்சடை

யீர்மெலி யும்பிறையீர்

துன்பேகவ லைபிணி யென்றிவற்றை நணுகாமல்

துரந்து கரந்தும்இடீர்

என்போலிகள் உம்மை யினித்தெளியார் அடியார்படு

வதிது வேயாகில்

அன்பேஅமை யும் அதி கைக்கெடில வீரட்டா

னத்துறை அம்மானே''26

அதிகை, அம்மானே மேனியினீர்! முறுக்குண்ட செஞ்சடையீர்! கலைகுறைந்த பிறையை உடையீர்! துன்பம் கவலை பிணி என்னும் இவை அடியேனை அணுகாமல் அவற்றை விரட்டுதலையும், மறைத்தலையும் செய்யீராயின் அடியேனைப் போன்றவர்கள் இப்பொழுது உங்களைத் துன்பம் துடைக்கும் பெருமானாராக தெளியமாட்டார்கள். எனினும், உங்கள் அன்பே எங்கள்

துயர்துடைத்து எங்களை அமைவுறச் செய்யும் என இறைவனின் அன்பே துயர் துடைக்கும் என தன் பக்தியை வெளிப்படுத்தினார்.

3.12 மீண்டும் பிறவி

“அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகன் டின்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே”[27]

பேரின்பவீடு நல்கும் தில்லைத் திருச்சிற்றம்பலம் பொன்னுலக வாழ்வையும் தரும். இத்தகைய திருச்சிற்றம்பலத்தை, மேலும் இவ்வுலகத்தில் என் அன்பு பெருகும் வகையில் கண்டு, பரமுத்திப் பேரின்ப நிலையை எளிதில் எய்துதற்கு இந்த நல்ல மனிதப் பிறவியை இன்னும் கெடுக்குமோ முதல்வன்?

“ஊனில் ஆவி உயிர்க்கும் பொழுதெலாம்
நான்நி லாவி யிருப்பனென் னாதனைத்
தேன்நி லாவிய சிற்றம் பலவனார்
வான்நி லாவி யிருக்கவும் வைப்பவரே!”[28]

உடம்பில் உயிர் உயிர்த்துக் கொண்டிருக்கும் காலமெல்லாம் நான் என்னை ஆளாக உடைய திருச்சிற்றம்பலவணாரை விளக்க முறப்பெற்றிருப்பேன். இன்பத்தேன் விளங்கிய அத்திருச்சிற்றம்பலனார் அடியேனைப் பேரின்பவீட்டில் நிலைபெற்றிருக்கவும் வைப்பர், என மீண்டும் பிறவி தருமாறு தன் பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

3.13 இறைவனை தொழுதல்

அரும்புகள் நீக்கமுற ஆராய்ந்த போதுகலைக் கொண்டு வண்டுகள் நீக்கமுறத்தூவி, கரும்பாகிய வில்லை ஏந்திய கருவேளை எரித்தவனாகிய பெரும்பற்றப்புலியூர் எம் பெருமானை நீர் தொழுமின்

"அரும்பற் றப்பட ஆய்மலர் கொண்டுநீர்
சுரும்பற் றப்படத் தூவித் தொழுமினோ
கரும்பற் றச்சிலைக் காமனைக் காய்ந்தவன்
பெரும்பற் றம்புலி யூரெம் பிரானையே" 29

என, இறைவனைத் தொழுமாறு தன் பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

3.14 திருச்சிற்றம்பலம்

அரித்தல் மிக்க இருவினையால் தாக்குண்டு எரிசூழ (இடுகாட்டில்) கிடந்தார் என்று அயலோர் சிரிப்புற்றுப் பலபல பேசுதலை அடையுமுன்னரே நீவிர் போய்த் திருச்சிற்றம்பலத்தை அடைந்து உய்மின்.

"அரிச்சுற் றவினை யாலடர்ப் புண்டுநீர்
எரிச்சுற் றக்கிடந் தாரென் றயலவர்
சரிச்சுற் றும்பல பேசப்ப டாமுனம்
திருச்சிற் றம்பலஞ் சென்றடைந் துய்ம்மினே" 30

என, திருச்சிற்றம்பலத்தை அடைந்து உம்மின் எனத் தன் பக்தியை வெளிப்படுத்தி உள்ளார்.

3.15 எந்த துன்பமும் இறைவனை நினைக்கையில் துன்பமில்லை

எதிர்வினையும் தீர்தற்கரிய நுகர்வினையும் மேலைவல்வினையாகிய துவந்துவங்களும் எனக்கு என்ன துன்பம் செய்யவல்லன? தில்லைமாநகரிலே திருக்கூத்தாடியருளும் திருச்சிற்றம்பலவானார்க்கு அளவில்லாததொர் அடிமைபூண்ட எனக்கு அவ்வினைகள் ஒரு துன்பமும் செய்யவல்லன அல்ல.

''அல்ல லென்செயும் அருவினை யென்செயும்

தொல்லை வல்வினைத் தொந்தந்தா

னென்செயும்

தில்லை மாநகர்ச் சிற்றம் பலவனார்க்

கெல்லை யில்லதோ ரடிமைபூண் டேனுக்கே'' [31]

தனிமுதற்பொருள் உலகங்களுக்கெல்லாம் ஒரே விளக்காய் உள்ளவர்.

''ஒருத்த னார்உல கங்கட் கொருசுடர்

திருத்த னார்தில்லைச் சிற்றம் பலவனார்

விருத்த னாரிகளை யார்வி முன்டவெம்

அருத்த னாரடி யாரை யறிவரே'' [32]

யான் என்னும் செருக்கு மிகுந்த அயனும் மாலும் காண்டற்கு அரிதாய, ஆகாயத்தையளாவிபெழுந்த சோதிப்புபிழம்பு ஒப்பற்ற பெருந்தலைவனாய, தேனிறைந்த மணம் பொருந்திய சோலைகள் சூழ்ந்த தில்லையம்பலத்துள் திருச்சிற்றம்பல வடிவாய நிறைந்து பஞ்சகிருத்திய நடனத்தைச் செய்யும் தொழிக்கல்லாதவர்களாகிய அயன்மாலுக்கு அரிய முதல்வன் அன்பால்

வழிபட்ட வியாக்கிரர், பதஞ்சலியார் என்னும் முனிவர்களுக்கு வெளிப்பட்டுத் தோன்றித் தன்னியல்பை உணர்த்தி பேரின்பம் அருளினர் என்றபடி

“விண்நி றைந்தோர் வெவ்வழ லின்னுக்கு
எண்நி றைந்த இருவர்க் கறிவொணாக்
கண்நி றைந்த கடிபொழி லம்பலத்
துள்நி றைந்துநின் றாடு மெருவனே” 33

என இறைவனின் புகழினைக் கூறி தன் பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

3.16 அன்பினால் பக்தி

திருமாலும் பிரமனும் முதல்வனைக் காண்பேன் எனத் தம்முள் எண்ணி முறையே நிலத்தை யகழ்ந்த தேடியும் வானிற் பறந்து திரிந்தும் காணவல்லாரல்லர், மாடமாளிகைகள் சூழ்ந்த திருத்தில்லையில் திருவய்பலத்தில் நின்று ஆடுகின்ற பெருமானது திருவடிகள் அன்பால் நினையும் என் நெஞ்சத்து விளங்கி இருக்கும்.

“நாடி நாரணன் நாண்முக னென்றிவர்
தேடி யுந்திரிந் துங்காண வல்லரோ
மாட மாளிகை சூழ்தில்லை யம்பவத்
தாடி பாதமென் நெஞ்சு ளிருக்கவே”34

என அன்பினால் பக்தியை வெளிப்படுத்தி உள்ளார்.

3.17 மெய்புகழ்

எவ்வளவு தகுதி உடையவரும் தம் முயற்சியால் அணுகுதற்கு அரியவன், அந்தணர்களின் உள்ளத்தில் உள்ளவன் மாற்றுதற்கு அரிய வேதத்தின் உட்பொருளாகியவள், நுண்ணியன், யாரும் தம் முயற்சியால் உணராத மெய்பொருள் ஆகியன.

"அரியானை அந்தணர்தம் சிந்தை யானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகமொழியைத் தேவர்கள்தங் கோனை மற்றதைக்
கரியாணை நான்முகனைக் கனலைக் காற்றை
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்ற புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"[35]

தேனும் பாலும் போன்று இனியவன் நிலைபெற்ற ஒளிவடிவினன், தேவர்களுக்குத் தலைவன், திருமாலையும், பிரமனையும், தீயையும், காற்றையும், ஒலிக்கின்ற கடலையும் மேம்பட்ட மலைகளையும் உடனாப் இருந்து செயற்படுபவன் ஆகிய மேம்பட்டவன்.

புலிக்கால் முனிவனுக்கு உறைவிடமாகிய தில்லையை உகந்து எழுந்தருளும் அப்பெருமானுடைய மெய்ப் புகழைப்பற்றி உரையாடாத நாள்கள் எல்லாம் பயன் அற்ற நாளாம் என இறைவனின் மெய்புகழைப் பற்றி

உரையாடாத நாள்கள் எல்லாம் பயன் அற்ற நாட்கள் என தன் பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

3.18 இறைவனைப் பற்றி பேசாத நாள் இல்லை

எல்லாம் வல்லவன், கங்கையைத் தாங்கிய நீண்ட, சடையன் ஒரு பக்கத்தில் காவிரியால் சூழப்பட்ட திருவலஞ்சுழி என்ற திருத்தலத்தை உகந்தருளியிருப்பன் பொருள் அற்றவருக்கும் அருளுபவன்.

"காற்றானைக் கங்கைவார் சடையான் றன்னைக்

காவிரிசூழ் வலஞ்சுழியுங் கருதி னானை

அற்றார்க்கும் அலந்தார்க்கும் அருள்செய்

வானை

ஆருரும் புகுவானை அறிந்தோ மன்றே

மற்றாருந் தன்னொப்பா ரில்லா தானை

வானவர்க ளெப்பொழுதும் வணங்கி ஏத்தப்

பெற்றவனைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்

பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" 36

தன்னைத்தவிர வேறு எவரும் தனக்கு ஒப்பில்லாதவன். தேவர்களால் எப்பொழுதும் வணங்கிப் போற்றப்படுபவன். திருவாரூரிலும் உகந்து தங்கியிருப்பவன் ஆகிய எம்பெருமானை நாம் எல்லாருக்கும் மேலானவன் என்று அறிந்தோம். ஆதலின் அந்தப் பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே என இறைவனைப் பற்றி பேசாத நாள் இல்லை என தன் பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

3.19 இறைவனின் அழகு

யானைத் தோலை மேலாடையாக இறுக்கி உடுத்து, தன் கழல்களின் ஒலி ஏனைய இயங்களின் ஒளியோடு கலந்து ஒலிக்க, கையில் தீயை ஏந்தி, பெருமை வளர்க்கின்ற பருத்த தோள்களை மடித்து அவைகள் அசையுமாறு,

“கருமானின் உரியதளை உடையா வீக்கிக்

கனைகழல்கள் கலந்தொலிப்ப அனல்கை ஏந்தி

வருமானத் திரள்தோள்கள் மட்டித் தாட்

வளர்மதியஞ் சுடைக்கணிந்து மானேர் நோக்கி

அருமான வாண்முகத்தா ளமர்ந்து காண

அமரர்கணம் முடிவணங்க ஆடு கின்ற

பெருமானைப் பெரும்பேற்றப் புலியூ ரானைப்

பேசாத நாளெல்லாம் பிறவா நாளே![37]

பிறைமதியைச் சடையில் அணிந்து மானின் பார்வை போன்ற பார்வையாளாகிய மேம்பட்ட சிறந்த ஒளியை உடைய முகத்தவளாகிய உமாதேவி விரும்பிக்காணுமாறும் தேவர் கூட்டம் தலை தாழ்த்து வணங்குமாறும் திருக்கூத்தாடுகின்ற மேம்பட்டவனாகிய பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே, என இறைவனின் அழகினைக் கூறி பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

3.20 இறைவனின் வலிமை

பெருந்தவத்தோர் தொழுது போற்றும் தலைவன், தேவர்கள் தலைவன், தீமைகளை, அழிப்பவன், மூப்பு எய்தாமச் செய்யும் அமுதத்தைத் தேவர்களுக்கு உதவிய வலிமையுடையவன்.

“அருந்தவர்கள் தொழுதேத்தும் அப்பன் தன்னை

அமரர்கள்தம் பெருமானை அரனை மூவா

மருந்தமர்க கருள்புரிந்த மைந்தன் தன்னை

மறிகடலுங் குலவரையும் மண்ணும் விண்ணும்

திருந்தொளிய காரகையுந் திசைக ளெட்டுத்

திரிசுபர்கள் ஓரிரண்டும் பிறவு மாய

பெருந்தகையைப் பெரும்பற்றப் பலியூ ரானைப்

பேசாத நாளெல்லாம் பிறவா நாளே![38]

அலைகள் மடங்கி வீழும் கடல், மேம்பட்ட மலை, நிலம், வானம், திருத்தமான ஒளியை உடைய விண்மீன்கள், என்திசைகள், வானத்தில் உலவுகின்ற காய்கதிர், மதியம், பிறவும் ஆகிய பொருள்களில் உடனாய் இருந்து அவற்றைச் செயற்படுத்தும் மேன்மையை உடையவன் ஆகிய பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே, இறைவனின் வலிமையைக் கூறி பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

3.21 உடனாய் நின்று உதவுதல்

ஒப்பற்ற துணைவன், அடியவர்களின் துயரைப் போக்கும் அமுதம் போன்றவன்.

“அருந்துணையை அடியார்தம் அல்லல் தீர்க்கும

அருமருந்தை அகன்ஞாலத் தகத்துள் தோன்றி

வருந்துணையுஞ் சுற்றமும் பற்றும் விட்டு

வான்புலன்கள் அகத்தடக்கி மடலா ரோடும்

பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப்

பொதுநீக்கித் தனைநினை வல்லோர் கென்றும்

பெருந்துணையைப் பெரும்பற்றப் புலியூரானைப்

பேசாத நாளெல்லாம் பிறவா நாளே” 39

பரந்த இவ்வுலகில் பிறப்பெடுத்த இவ்வுலகில் பிறப்பெடுத்த பின்னர் உடன்தோன்றும் துணைவன், ஏனைய சுற்றத்தார், செல்வம் இவற்றிலுள்ள பாசத்தை நீத்து, பெரியபுலன்களின் மேல் செல்லும் மனத்தை அடக்கி, மகளிரோடும் படுக்கையில் நுகரும் சிற்றின்பப் பயனை அடியோடு நீக்கி, ஏனைய தெய்வங்களோடு பொதுவாக நினைப்பதனை விடுத்துத் தன்னையே விருப்புற்று நினைத்தலில் வல்ல அடியவர்களுக்கு எக்காலத்தும் உடனாய் நின்று உதவும் துணைவன் ஆகிய பெரும்பேற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே, என உடனாய் நின்று உதவும் துணைவன் என தன் பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

3.22 இறைவனின் ஆபரணங்களை புகழ்தல்

கரும்பு போன்ற இனிய சொற்களை உடைய பார்வதியைத் தன் திருமேனியின் இடப்பகுதியாகக் கொண்டவன். மேம்பட்ட வயிரமலை போன்ற வடிவினன்.

"கரும்பமரும் மொழிமடவாள் பங்கன் தன்னைக்

கனவயிரக் குன்றனைய காட்சி யானை

அரும்பமரும் பூங்கொன்றைத் தாரான் தன்னை

அருமறையோ பாறங்க மாயி னானைச்

கரும்பமருங் கடிபொழில்கள் சூழ்தெந் னாரூர்ச்

சுடர்க்கொழுந்தைத் துளக்கில்லா

விளக்கை மிக்க

பெரும்பொருளைப் பெரும்பற்றப் புலியூரானைப்

பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"[40]

அலரும்பருவத்து அரும்பாய்க கட்டிய கொன்றைப் பூமாலையான். நால்வேதமும் ஆறங்கமும் ஆயினான். வண்டுகள் விரும்பும் நறுமணச் சோலைகள் சூழ்ந்த அழகிய ஆரூரில் மேல் நோக்கும் சுடரொளி போன்றவன். ஒளிப்பிழப்பு அணைதல் இல்லாத விளக்குப் போன்றவன். வீடுபேற்று இன்பமாக இருப்பவன் ஆகிய பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவாத நாளே என இறைவனின் ஆபரணங்களை புகழ்ந்து தன் பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

3.23 இறைவனின் ஆயுதங்கள்

ஏழிசையாய் இசை பயனாய் உள்ளவன். மேருவை வில்லாகக் கொண்டு, தேவர்களையே அம்பாகக் கொண்டு கொடிய அச்சத்தை விளைத்த அசுரர்களின் மூன்று கோட்டைகளும் எரியுமாறு அம்பினைச் செலுத்திய தலைவன்.

"வரும்பயனை எழுநரம்பி னோசை யானை

வரைசிலையா வானவர்கள் முயன்ற வாளி

அரும்பயஞ்செ யவுணர்புர மெரியக் கோத்த

அம்மானை அலைகடல்நஞ் சயின்றான் தன்னை

சுரும்பமருஞ் சிந்தையராய்த் துறந்தோ ருள்ளப்

பெரும்பயனைப் பெரும்பற்றப் புலியூரானைப்

பேசாத நாளெல்லாம் பிறவா நாளே"[41]

அலைக்கடலில் தோன்றிய விடத்தை உண்டவன். வண்டுகள் தங்கும் பூக்களை அணிந்த கூந்தலை உடைய இளைய மகளிரின் கடைக்கண் பார்வையால் அசையாத உள்ளத்தை உடையவராய்ச் சிற்றின்பத்தை அறநீத்த உள்ளத்தார் அடையும் முடந்த பயனாக இருப்பவன் ஆகிய பெரும் பற்றப் புலியூரானைப் பேசாத நான் எல்லாம் பிறவா நானே என இறைவனின் ஆயுதங்களை கூறி தன் பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

3.24 இறைவனை புகழ்தல்

கரிய யானையின் உதிரப் பசுமை கெடாத தோலைப் போர்த்தியவன் விருப்பம் மருவிய பொலிவினை உடைய காஞ்சி நகரத்தின் ஏகம்பம் என்ற திருக்கோயிலை உகந்து எழுந்தருள்பவன்.

"காரானை யீருரிவைப் போர்வை யானைக்

காமருபூங் கச்சியே கம்பன் தன்னை

ஆரோனும் அடியவர்கட் கணியான் தன்னை

அமரர்களுக் கறிவரிய அளவி வானைப்

பாரோடும் விண்ணோரும் பணிய நட்டம்

பயில்கின்ற பரஞ்சுடரைப் பரனை எண்ணில்

பேரானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்

பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' 42

அடியவர்களை அண்மித்திருப்பவன் தம் முயற்சியால் அறிய முயலும் தேவர்களுக்கு அளவிட முடியாதவன். நிலவுலகத்தவரும் வானுலகத்தவரும் தன்னை வணங்குமாறு கூத்தினை பயில்கின்ற ஒளி உருவன் ஆகி எண்ணற்ற திருநாமங்களை உடையவன். அத்தகைய பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நானே என இறைவனை புகழ்ந்து தம் பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

3.25 இறைவனின் வெற்றி

வெள்ளிய பிறைமதியைச் சூடியவன், மூவுலகும் தனேயாய் இருக்கும் தலைவன் பகைவருடைய மும்மதிலையும் அழித்தவன்.

''முற்றாத பால்மதியஞ் சூடி னானை

மூவுலகுந் தானாய முதல்வன் தன்னைச்

செற்றார்கள் புரமூன்றுஞ் செற்றான் தன்னை

திகமொளியை மரகதத்தைத் தேனைப் பாலை

குற்றாலத் தமர்ந்துறையுஞ் குழகன் தன்னை

கூத்தாட வல்லானைக் கோனை ஞானம்

பெற்றானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்

பேசாத நாளெல்லாம் பிறவா நாளே'' 43

விளங்கும் ஒளிவடிவினன் இடப்பாகத்து நிறத்தால் மரகதமணி போன்றவை இன்பம் பயத்தலால் தேனும் பாலும் போன்றவன். குற்றாலம் என்ற திருத்தலத்தை உகந்தருளியிருக்கும் இளையவன் கூத்தாடுதலில் வல்லவன். யாவருக்கும் தலைவன் சிவஞானியர் ஞானத்தால் அறியப் பெற்றவன் ஆகிய பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே என இறைவனின் வெற்றியைக் கூறி தன் பக்தியை வெளிப்படுத்தியுள்ளார்.

3.26 சிவனை வருணித்தல்

கரிய உடல் உடையவனும், சிவந்த கண்களை உடையவனும் ஆகிய திருமாலும், நறுமணம் கமழும் செந்தாமரையில் வீற்றிருக்கும் பிரமனும் தன் அடியையும் முடியையும் காண முடியாதபடி சீரிய ஒளியை உடைய தீப்பிழம்பாய் நின்ற பழைய மேம்பட்ட ஒளியை உடையவன்.

“காரொளிய திருமேனிச் செங்கண் மாலுங்

கடிக்கமலத் திருந்தவனுங் காணா வண்ணம்

சீரொளிய தழற்பிழம்பாய் நின்ற தொல்லைத்

திகமொளியைச் சிந்தைதனை மயக்கந் தீர்க்கும்

ஏரொளியை இருநிலனும் விசும்பும் விண்ணும்

ஏழுலகுங் கடந்தண்டத் தப்பால் நின்ற

பேரொளியைப் பெரும்பற்றப் புலியூரானைப்

பேசாத நாளெல்லாம் பிறவா நாளே”[44]

உள்ளத்தில் உள்ள மயக்கத்தைப் போக்கும் ஞான ஒளியானவன். பெரிய இந்நில உலகையும், வானத்தையும், தேவர் உலகையும் உள்ளிட்ட ஏழு

உலகையும் கடந்து அவற்றிற்கு அப்பாலும் பரவும் எல்லையற்ற பேரொளி பிழம்பாய் இருப்பவன் ஆகிய பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே, என் சிவனை வருணித்த தன் பக்திச் சிறப்பை வெளிப்படுத்தியுள்ளார்.

3.27 தொகுப்புரை

தமிழ் பக்தி இலக்கியங்கள் என்பது சைவம், வைணவம் என இரு சமயங்களை மையாமாகக் கொண்டது. தமிழகத்தில் ஆழ்வார்கள் வைணவ சமயத்தினையும், நாயன்மார்களில் சிலர் சைவ சமயத்தினையும் வளர்க்க பல்வேறு இலக்கியங்களை படைத்தனர். இந்த இலக்கியங்களின் துணை கொண்டே, சமண, பௌத்த, சமயங்கள் தோற்கடிக்கப்பட்டதாக கூறுகின்றனர். காரைக்காலம்மையார், சேரமான் பெருமான், முதலாழ்வார் ஆகிய மூவரால் இந்த தமிழ் பக்தி இலக்கியம் தொடங்கப்பட்டது. கி.பி. 7 முதல் கி.பி. 9-ம் நூற்றாண்டு வரை இந்த இலக்கியங்கள் இயற்றப்பட்டன.

சாதியற்ற சமுதாயம் தான் ஒன்றுபட்டு வாழ இயலும். சமண சமயத்திலும் பௌத்த சமயத்திலும் சாதிகள் பேசப்படவில்லை. திருநாவுக்கரசரின் 4,5,6-ம் திருமுறைகளில் பக்தி குறித்து இவ்வியல் விளக்கியுள்ளது.

அடிக்குறிப்பு

திருநாவுக்கரசர் தேவாரம் - நான்காம் திருமுறை

பாடல் எண்: 1

பாடல் எண்: 2

பாடல் எண்: 4

பாடல் எண்: 5

பாடல் எண்: 7

பாடல் எண்: 8

பாடல் எண்: 10

திருநாவுக்கரசர் தேவாரம் - ஐந்தாம் திருமுறை

பாடல் எண்: 1

பாடல் எண்: 2

பாடல் எண்: 3

பாடல் எண்: 4

பாடல் எண்: 7

பாடல் எண்: 10

திருநாவுக்கரசர் தேவாரம் – ஆறாம் திருமுறை

பாடல் எண்: 1

பாடல் எண்: 2

பாடல் எண்: 3

பாடல் எண்: 4

பாடல் எண்: 5

பாடல் எண்: 6

பாடல் எண்: 7

பாடல் எண்: 8

பாடல் எண்: 9

பாடல் எண்: 10

இயல் நான்கு

திருநாவுக்கரசரின் வழிபாட்டு முறை

உள்ளடக்கம்

4.9 சமயத்தின் உயிர்நாடி ஆட்டம்

4.10 சமய மாற்றம்

4.11 முற்போக்கு

4.12 சமயத்தின் பாசி

4.13 தமிழில் வழிபாடு

4.14 பொது மக்கள் தொண்டு

4.15 தொகுப்புரை

4.0 முன்னுரை

சைவ சமயம் வரலாற்றுக்கு முந்திய சமயம் உலகில் தோன்றிய முதற் சமயம் இதுவேயாகும். புராதன காலத்தில் இச்சமயம் உலகில் பல பகுதிகளிலும் விளங்கியுள்ளது. இதன் தொன்மைக்குப் பழம்பெரும் நூல்கள், வழிபாட்டு முறைகள், வரலாற்றுக் குறிப்புகள், தொல்பொருள்கள் என்பன சான்றாக உள்ளன. சைவம் சிவ சம்பந்தமானது. **''சிவம்-கடவுள்'' ''சமயம் - நெறி''** ஆகும். சமணமும் பௌத்தமும் சரிந்து சைவ சமயம் தளைத்து வளர்வதற்கு தொண்டு புரிந்த தூயவர்கள் 63 நாயன்மார்கள் ஆவார். நாயன்மாரில் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும், நாயன்மார் வரிசையில் தனியாக இல்லாத மாணிக்கவாசகர் அவர்களும் முதன்மையானவர்கள். இந்த நால்வரும் சைவ சமய குரவர்கள் ஆவார். திருநாவுக்கரசரின் வழிபாட்டு முறை குறித்து இவ்வியலில் காண்போம்.

4.1 தென்னகச் சைவம்

சங்க இலக்கியங்களில் சில வழிபாடு பற்றிய குறிப்புகள் காணப்படும் போதும் அவை கிறிஸ்துவுக்கு பிந்தயவை என்பது பொதுவான கருத்தாக காணப்படுகிறது எனினும் தமிழக மற்றும் இலாப்கையில் பொறிக்கப்பட்ட கிறிஸ்துவுக்கு முந்திய பிராமிச் சாசனங்களிலும், நாணயங்களிலும் காணப்படும். ''சிவ'' என்ற பெயரும், நந்தி, திரிசூலம், பிறைநிலா, முதலான சிவசின்னங்களும் தென்னகத்தில் பல்லாண்டுகளாகவே சைவம் நிலவிவந்ததற்கு சான்றுகளாக திகழ்கின்றன.

4.2. சைவத்தின் எழுச்சி

தெளிவான அடையாளங்களுடன் சைவமானது முழுமையான ஒரு மதமாக தன்னை முன்னிறுத்திக் கொண்டது. பொ.மு. 3 முதல் பொ.பி 2-ம் நூற்றாண்டுகளுக்கு இடையில் என்று சொல்லப்படுகிறது. பொ.மு. 6-4 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் என்று சொல்லப்படுகிறது. பொ.மு. 6-4 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையே தொகுக்கப்பட்ட சுவேதாசுவதரமே மிகப்பழமையான சைவ நூலாகக் கொள்ளப்படுகிறது. உலக இன்பங்களை துறந்து கடும் நோன்புகள் புரிந்து **தாந்திர்க** நெறியில் ஈசனை வழிபடும் வழக்கம், கிறிஸ்து காலத்திலேயே அறியப்பட்டனர். பாணினியின் **அஷ்டாத்யயி** என்னும் சங்கத இலக்கண நூலுக்கு பதஞ்சலி முனிவர் எழுதிய மாபாடிய உரையில் பாசுபதர் பற்றிய குறிப்புக்களை காணமுடிகின்றது.

4.3 சைவசித்தாந்த சாத்திரங்கள்

சித்தாந்த சாத்திரங்கள் மெய்கண்ட சாத்திரங்கள் எனவும் சொல்லப்படும். அவை பதினான்கு அவற்றை அருளிச் செய்தவர் அறுவராவர் பரமேசுவரன் வேதாம் உண்மைகளையெல்லாம் திருநந்தி தேவருக்கு உபதேயித்தருவினர். அந்தத் திருநந்தி தேவரை அபரசிவன் எனவும் கூறுவர். திருநந்திதேவரே சனற்குமாரர், திருமூலர் முதலிய ஞானிகளுக்கெல்லாம் குருவாக இருந்து வேதாகமங்களைப் போதித்தருளினர். அங்ஙனம் போதித்த ஞானச்செல்வமானது குருசீட பரம்பரை உரிமையாக வழிவருவதாயிற்று. அதனால் சித்தாந்த சாத்திரம் அருளிய பெயர்களைத் திருக்கயிலா. பரம்பரைச் சந்தனசாரியர்கள் என அழைப்பதாக கூறப்படுகின்றன.

4.4 சைவ சாதனைகள்

விபூதியும் உருத்திராச்சமும் முக்கியமான சைவசமய சின்னங்களாகும். இவை எமது அஞ்ஞானத்தைப் போக்கி, தீமைகளின்றும் எம்மைப் பாதுகாத்து இறைவனையும் அவனது பெருங் கருணையையும் நினைவூட்டும் சாதனங்கள் பிரதானமாக நீராடியவுடனும், பூசை வழிபாடுகள் செய்யும் நேரங்களிலும் இவற்றை நாடோறும் பக்தி சிரத்தையுடன் தரித்தல் வேண்டும்.

4.4.1. திருநீறு (விபூதி)

சிவபெருமானே முழுமுதர் கடவுளாகக் கொண்டு வழிபடுஞ் சமயம் சைவம் எனப்படும். சைவ சமய ஒழுக்கங்களில் இன்றியமையாதது சிவசின்னங்களில் ஒன்றாகிய திருநீறு அணிதலாகும். திருநீற்றுக்கு விபூதி, பசிதம், பசுமம், இரட்டை, ஷாரம் என்ற பெயர்களும் உண்டு.

4.4.2 உருத்திராட்சம்

உருத்திராட்சம் என்பது உருத்திரனது கண் எனப் பொருள்படும். திருபுரத்தசுர்களால் தமக்கு ஏற்பட்ட துன்பங்களைப் பற்றித் தேவர்கள் சிவபிராணிடம் முறையிட்டபோது, சிவபிரானின் மூன்று கண்களினின்றும் சிந்திய மணியே உருத்திராட்சம் என்பதாகும் எனக கூறப்படுகின்றது.

4.4.3 சமய தீட்சை

"திட்சை" என்பது இறைவன் குருவினிடமாக நின்று ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தைக் கொடுக்கும் கிரியை என்ற கருத்துள்ள **"தீஷா"** என்ற வடசொல்லிலிருந்து வந்ததே அதன் வெவ்வேறு படிகளிற் புகுவதற்கும்

அருகதையளிப்பது தீட்சையே ஒருவர். சைவசாரத்தை மேற்கொள்ள அதிகாரமளிக்கும் தீட்சை **"சமய தீட்சை"** எனக் கூறப்படுகிறது.

4.4.4 குருலிங்க சங்கம வழிபாடு

குரு என்றால் பாசத்தை நீக்குபவர் அல்லது அஞ்ஞானம் என்னும் இருளை அகற்றுபவர் என்பது பொருள் தீட்சை அளித்தவரும், கல்வி போதிப்பவரும் குரு ஆவார். மன, மொழி, மெய்களால் வணங்குவதற்குரிய சிவ சொரூபமாக இருப்பதோடு குருவானவர் வாழ்வில் பின்பற்றுவதற்குரிய சிறந்த இலட்சியமாகவும், ஆன்மீகத் துறையில் சந்தேகங்களைப் போக்கி நல்வழிப்படுத்தும் வழிகாட்டியாக விளங்குவதாக கூறப்பட்டுள்ளது.

4.4.5 சைவ நாற்பாதங்கள்

சிவபெருமான் திருவடியை அடைவதற்குரிய நான்கு மார்க்கங்களைச் சைவ நன்னெறிகள், சைவ நாற்படிகள், சிவ புண்ணியங்கள் என்பன சைவ நாற்பாதங்களின் மறு பெயர்கள். சைவ நாற்பாதங்களாவன சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன இவை முறையே தாச மார்க்கம், சாற்புத்திர மார்க்கம் எனவும் பெயர் பெறும் எனக் கூறப்பட்டுள்ளது.

"விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்

அரும்புமலர் காய்கனிபோல் அன்றே பராபரமே"[1]

4.5. சைவ சமயத்தின் நான்கு நெறிகள்

சரியை, திரியை, ஞானம், யோகம்

4.5.1 சரியை

ஆன்மாக்கள் இறைவனது உருவத் திருமேனிகளைத் தமக்குப் புறத்தே வணங்கிச் சிவாலாயத்துக்கும் சிவனடியார்க்கும் திருத்தொண்டு செய்தல் சரியை வழிபாடு எனப்படும்.

சரியையில் யோகம் என்னும் நிலையிலே நிகழும் தியான பாவனேயின் உறைப்பானதோர் அனுபவ உணர்வை அடைதல் சரியையில் ஞானமாகும் எனக் கூறப்படுகின்றது.

4.5.2 கிரியை

இறைவனது அருவுருத் திருமேனியை அகத்தும் புறத்தும் பூசித்தல் கிரியை வழிபாடு ஆகும். இக்கிரியை வழிபாடு கிரியையிற் சரியை, கிரியையிற் கிரியை கிரியையீற் யோகம், கிரியையில் ஞானம், என நான்கு வகைத்து, மலர், திருமஞ்சள், தூபம், தீபம், சந்தனம், திருவமுது முதலிய பூசைக்கு வேண்டிய பொருள்களை அமைத்து கொள்ளுதல் கிரியைற் சரியையாகும் எனக் கூறப்பட்டுள்ளது.

4.5.3 ஞானம்

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையை அறிவிக்கும் ஞான நூல்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடுதல் ஞானத்தில் ஞான வழிபாடு எனப்படும்.

4.5.4 யோகம்

சிவபெருமானே அகத்தே பூசித்தல் யோக வழிபாடாம். அது மனத்தை விடயங்களின் வழியிலே போகாவண்ணம் நிறுத்திச் சிவத்தைத் தியானித்து,

பின்பு தியானிப்பபோனாகிய தானும் தியானமும் தோன்றாமல், தியானப் பொருளாகிய சிவன் ஒன்று மாத்திரமே விளங்கப்பெற்றுச் சமாதி நிலையடைதலாகும் எனக் கூறப்பட்டுள்ளது.

4.6 சைவ சித்தாந்த தத்துவம்

எமது சைவ சமயத்தின் பொதுப்பிரமாண நூல் வேதம், சிறப்புப் பிராண நூல் சிவாகமம் என்பர். அந்த சிவாகம நூல்கள் கூறுஞ்சாரமான உண்மையைப் பிழிந்தெடுத்துக் கூறும் நூல்களே சித்தாந்த சாத்திரங்கள் ஆகும்.

வேதம் பசு, அதன் பால் ஆகமம் அதிற்கடைந்தெடுத்த நெய் சித்தாந்தம் எனவும், வேதம் ஒரு கற்பகதரு, அதில் உயர்ந்தோங்கிய உச்சிக்கிளை வேதாந்தம், அதிற் பழுத்த நறுங்கனியே சைவ சித்தாந்தம் எனவும் கூறுவர் அறிந்தோர்.$_2$

4.6.1 பதி

அனைத்துலகுக்கும் உயிர்களுக்கும் தனி முதல்வனாயிருப்பவன் எவனோ, அவனே பதியாம். அவ்விறைவனது இயல்பு சொருபலக்கணம், தடத்தலக்கணம் என இருவகைப்படும்.

4.6.2 பசு

ஆன்மா, பாசத்தாற் கட்டுண்டிருந்தலால் பசு எனப்படும். ஆன்மா எண்ணில்லாதன, என்றுமுள்ளன. அநாதியே ஆணவமாகிய இருளால் மறைக்கப்பட்டிருப்பவை. ஆணவமுனைப்பால் இருவினை புரிவன எனக்கூறப்பட்டுள்ளது.

4.6.3 பாசம்

இது ஆன்மாக்களைக் கட்டிய கயிறுபோலப் பற்றியிருப்பதால் பாசம் எனப்படும். இதனை மலம், பந்தயம், தளை எனவும் அழைப்பர். பாசம் மூன்று வகை. அவை, ஆணவம், கர்மம், மாயை எனக் கூறப்பட்டுள்ளது.

4.7. சிந்து வெளியில்

சிவநெறி அல்லது சைவ சமயம் என்பதை நினைக்கும் போது சிவநெறிக்கே உரிய லிங்க வழிபாடு நினைவிற்கு வருகின்றது. இந்தியாவிலும், எகிப்திலும் மால்ட்டா முதலிய தீவுகளிலும் சிறியனவும் பெரியனவுமான சிவலிங்கங்கள் பல புதை பொருள் ஆராட்சியில் கிடைத்துள்ளன. இந்தியாவில் மிகப்பழைய நாகரிக நகரங்கள் என்று ஆராய்சியாளர்களால் கூறப்படும் மொஹஞ்சொதரோ, ஹரப்பா முதலிய இடங்களில் பல லிங்கங்கள் கிடைத்துள்ளதாகவும், கூறியுள்ளன. பண்டை மக்கள் 600-க்கு மேற்பட்ட சிறுலிங்கங்கள் கிடைத்துள்ளனவாகவும், கூறியுள்ளன. பண்டை மக்கள் இச்சிறிய லிங்கங்களைத் தாயித்துகள் போலக் கழுத்திலோ, கையிலோ கட்டியிருந்திருக்கலாம்.

சிந்து வெளியில் கிடைத்த ஒரு முத்திரையில், மூன்று முகங்களைக் கொண்ட மனித உருவம் ஒன்று யோகத்தில் அமர்ந்திருப்பது போன்று காணப்படுகிறது. அவ்வுருவத்தின் வலப்புறம் யானையும், புலியும், இடப்புறம் எருதும் காண்டா மிருகமும் நிற்கின்றன. யோகியின் பீடத்திற்கு அடியில் இரண்டு மான்கள் இருக்கின்றன. சிவபிரான் யானைத் தோலைப் போர்த்தவர், என்ற நூற்கருத்துக்களை நோக்க, யோகியின் உருவம் சிவனை குறிப்பதாகவும் என்று கூறுதல் பொருத்தமாகும். அந்த யோகியின் தலைமீது வளைந்த

எருமைக் கொம்புகள் இருக்கின்றன. இந்திய அரசாங்கப் புதைபொருள் ஆராய்ச்சித் தலைவராக சர் ஜான் மார்ஷல், **"இவ்வுருவம் சிவனைக் குறிப்பது"**$_3$ என்று கூறியுள்ளார். யோகியை அடுத்து விலங்குகள் இருத்தல், சிவன் – பசுபதி என்பதைக் குறிக்கிறது. மூன்று தலைவகள் முன்பு தெரிவதால் பின்புறம் இரண்டு தலைகள் இருத்தல் கூடும் என்று அறிஞர் கூறுகின்றனர்.

சிந்து வெளியில் விலங்கு வணக்கமும் காணப்படுகின்றன. நந்தி வணக்கம் சிறப்பிடம் பெற்றதென்று கூறலாம். ஒரு கோவில் முன் நந்தி நிற்பது ஒரு முத்திரையில் குறிக்கப்பட்டுள்ளது.

சிந்து சமவெளி மக்கள் சிறந்த வணிகர்கள். அவர்களுக்கு எருது மிகவும் பயன்பட்டது. அதனால் எருது வணக்கத்திற்குரிய பொருளாக, மாறியிருக்கலாம். பின்னர் நாளடைவில் எருது வணக்கம் லிங்க வணக்கத்தோடு இணைந்திருக்கலாம் என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். இவை அனைத்தையும் ஒன்றுபடுத்திப் பார்த்த சர் ஜான் மார்ஷல் என்ற அறிஞற் **"சிந்து வெளியிற் கிடைத்த புதுமைகளுள் முதலிடம் பெறத்தக்கது சைவத்தின் பழமையேயாகும். அது மாக்கல் காலம் அல்லது அதனினும் முற்பட்ட காலத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது. இன்றளவும் வழக்கில் உள்ள மிகப்பழைய சயமாக விளங்குகிறது"**$_4$ என்று வியப்பும் மகிழ்வும் பொங்க கூறியுள்ளார்.

4.8. பக்தி நெறி

வட இந்தியாவில் புத்தர் காலம் முதல் குப்தர் ஆட்சி வரையில் பௌத்த சமயமே செல்வாக்குடையதாயிருந்தது. குப்தர்கள் சைவ வைணவ மதங்களைப்

போற்றி வளர்த்தனர். ஆதலால் அக்காலத்தில் அதுகாறும் பல நூற்றாண்டுகளாக கூறப்பட்டு வந்த செவிவழிச் செய்திகளெல்லாம் புராணங்களாக வடமொழியில் எழுதப்பட்டன. சாதி வேறுபாடுகள் வற்புறுத்தப்பட்டன. பொது மக்களுடைய உள்ளங்களைக் கவருவதற்காக ஆடல் பாடல்களைக் கொண்ட பக்தி நெறி ஏற்பட்டது. இந்த பக்தி நெறி தென்னாட்டிலும் பரவத்தொடங்கியது. பாசுபதம், லகுலீச பாசுபதம், காபாலிகம், மாவிரதம், சக்தி வணக்கம், குமரனை வழிபடும் கௌமாரம் முதலியன தென்னாட்டில் பரவின இவையனைத்தும் சைவ சமயத்தின் உட்பிரிவுகளாகக் கொள்ளப்பட்டன. ஏறத்தாழக் கி.பி. 400-500 கால எல்லைக்குள் செய்யப்பட்டதாகக் கருதப்படும் திருமூலர் திருமந்திரத்திலும் இவை இடம் பெற்றன.

“விரிசடை அந்தணர் விரதிகள் பாசுபதர் காபாலிகர்

தெருவினில் பொலியும் திருவாரூர் அம்மானே!”[5]

என்று கி.பி. 7 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பரும் இவர்களைக் குறிப்பிட்டுள்ளார். அறுபத்து மூன்று நாயன்மாருள் இப்பலவகைச் சைவரும் காணப்படுகின்றனர்.

அவை ஒற்றைக் கல் கோவில்கள் எனப்படும். அவற்றின் பின்னரே செங்கற்களை போலக் கருங்கற்களை உடைத்து அவற்றைக் கொண்டு சுவர் எழுப்பி கோவில் கட்டத் தொடங்கினர். இங்ஙனம் அமைக்கப்பட்ட முதற்கோவிலே காஞ்சி கயிலாசநாதர் கோயில் பல்லவ மன்னர் இவ்வாறு கோயில்கள் அமைப்பதிலும், சிற்பங்களையும், ஓவியங்களையும் அமைப்பதிலும் கோவில் ஆட்சியிலும் கருத்தைச் செலுத்தியமையால், சைவ வைணவ

சமயங்கள் நன்கு வளர்ச்சி பெறலாயின. நாயன்மார்கள் நூற்றுக்கணக்கான சிவன்கோயில்களுக்கு சென்று பதிகங்கள் பாடினர். மண்ணோடு பாடப்பட்ட அப்பாடல்கள் மக்கள் உள்ளங்கள் இழந்தன. அக்காலத்தில் சைவத்தில் சாதிவேறுபாடுகள் கவனிக்கப்படவில்லை.

“ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும் கங்கைவார்

சடைக்கரந்தார்க்கு அன்பராகில்

அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே” 6

என்னும் அப்பர் வாக்கை நோக்குக. இடையிடையே அடியாரிடம் சாதி வேறுபாட்டுணர்ச்சி காணப்பட்டது. ஆனால் அஃது அவ்வப்பொழுது மாற்றப்பட்டது என்பதும் நாயன்மார் வரலாறுகளால் இனிதுணரப்படும்.

4.9 சமயத்தில் உயிர்நாடி ஆட்டம்

இவ்வாறு சைவ சமயம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. ஆனால், சைவத்துள் சாதி வேறுபாடுகள் தோன்றி வளர்ந்து வயிரம் பாய்ந்துவிட்டன. சமுதாயத்தில் பல சாதிகளுக்குப் பல உரிமைகள் மறுக்கப்பட்டன. செருப்பு அணிந்துகொண்டு தெருவில் நடக்கச் சில சாதிகளுக்கு உரிமையில்லை.

மாடிவீடு கட்டிக்கொள்ள சில சாதிகளுக்கு உரிமையில்லை. சில சாதியர் இவ்வளவு தூரத்தில் நின்று பேச வேண்டும். சிலர் இவ்வளவு தூரத்தில் ஒதுங்கி நிற்க வேண்டும் என்ற வரையறைகள் ஏற்பட்டன. இக்கொடுமைகள் எல்லாம் பல கோவில் கல்வெட்டுகளில் காணலாம். இக்கொடுமைகளால் சைவ சமுதாயம் வலிமை குன்றியது. மன ஒற்றுமை அகன்றது.

இந்த பரிதாப நிலையில் கி.பி. 14 ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மாலிக்-காபூர் படையெடுப்புத் தென்னாட்டில் நடந்தது. புகழ்பெற்ற மீனாட்சியம்மன் கோவில் கருவறை மட்டும் தப்பியது. எஞ்சிய கோபுரங்களும் திருச்சுற்றுகளும் தரைமட்டமாக்கப்பட்டன. பெருங்கோயில்களில் இருந்தே நகைகளும் பிறவும் கொண்டு செல்லப்பட்டன. நாடாண்ட பாண்டியன் மக்களை நட்டாற்றில் விட்டு ஓடிவிட்டான். சாதிக்கொடுமையால் இழிவுபடுத்தப்பட்ட மக்கள் தன்மன உண்ர்வுடன் படையெடுத்தவரை எதிர்த்து நிற்க முடியவில்லை. பல கோவில்கள் தாக்கப்பட்டன. விக்கிரகங்களின் கைகால்கள் ஒடிக்கப்பட்டன. ஊர்கள் கொள்ளையடிக்கப்பட்டன.

சைவரும் வைணவரும் படையெடுத்தவர்குக்குப் பணிவு காட்டினர். **‘‘போர்’’** என்றவுடன் துள்ளிக்குதித்த சங்ககாலத் தமிழன் சாதி அறியாத தமிழன் மாலிககாபூர் படையெடுத்த போது வாழ்ந்த தமிழன் சாதிக் கட்டுப்பட்டால் நசுக்கப்பட்ட தமிழன், மூடக கொள்ளைகளாலும், சாதி வெறியினாலும், சமய வரலாற்றில் இது இரங்கத்தக்கப் பகுதியாகும். பல்லவர் காலச் சைவர்கள் சமணரைக் கழுவேற்றினர். பிற சமயத்தாரைக் கொடுமைப்படுத்தினர். சோழர்காலச் சைவர் வைணவரோடு ஒன்றுபட்டு வாழ மறுத்தனர். இராமசரைச் சோழ நாட்டிலிருந்தே விரட்டினர். இக்கொடுமைகளின் விளைவைத்தான் அயலார். படையெடுப்பால் சைவர்கள் அனுபவித்தனர். **‘‘முற்பகல் செய்வின் பிற்பகல் விளையும்’’**$_7$ என்பது சைவ வரலாற்றில் உண்மையாகிவிட்டது.

4.10 சமய மாற்றம்

சைவ சமயத்தில் சாதி என்னும் பெயரால் இழிவுபடுத்தப்பட்ட மக்கள், முஸ்லிம் ஆட்சி நிலையானதும், இந்து சமயத்தில் தங்களுக்கு ஏற்பட்ட இழிவினால், சாதி அறியாத இஸ்லாத்தைத் தழுவினர்.

வேறு சிலர் தங்களுக்குக் கல்வியும் மருத்துவ உதவியும் மனித உரிமைகளையும் உதவிய கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தனர். திறித்துவ சமயமும் சாதியறியாச் சமயம், ‘‘சைவர்கள்’’ என்ற பெயருடன் பாமரராயும், விலங்குகளாயும் வாழ்க்கை நடத்திய தமிழர்கள், கிறித்துவ சமயத்தைத் தழுவிக் கல்வி கற்று வாழ்க்கையில் முன்னேறலாயினர். தாம் செய்துவந்த கொடுமைகளால் தமது சமுதயாம் வலுவிழந்தது. மக்கள் மதம் மாறினர் என்பன அறிந்தும் சமுதாயச் சீரழிவிற்கும் சமயச் சீரழிவுக்கும் தாம் காட்டிய சாதிவேறுபாடுகளே காரணம் என்பதை அறிந்தும், அக்காலத்து உயர் மக்கள் சுயநல வெறியினால் சாதிகளை ஒழிக்க முன்வரவில்லை. ‘‘சமயத்தில் நாங்கள் தலையிட மாட்டோம்’’8 என்ற ஆங்கிலேயர் வாக்குறுதி இவ்வுயர்ந்தவர் கொடுமைகளுக்கு அரண் செய்வது போல் அமைந்தது. மேன்மேலும் சாதிவெறி தலைதூக்கியது. கோவிலின் கருவறையில் இன்ன வகுப்பார் இருந்து வழிபடலாம். கோவிலுக்குள்ளே இன்ன வகுப்பார் நுழையக் கூடாது என்ற கட்டுப்பாடுகள் வளர்ந்தன.

4.11 முற்போக்கு

ஆங்கிலக்கல்வி நாடெங்கும் பரவத் தொடங்கியது இந்தியாவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் சாதிகள் இல்லை என்பதைப் படித்தவர் உணர்ந்தனர்.

சாதிகள் இறைவனால் உண்டாக்கப்பட்டவை என்று தமக்கு மேலோர் கூறிவந்த கூற்று முழுப் பொய் என்பதை உணர்ந்தனர். இவ்வுணர்ச்சியே நமது சமுதாய மறுமலர்ச்சிக்கு அடிப்படை. நாடெங்கும் இவ்வுணர்ச்சி வளரத் தலைப்பட்டது காந்தியடிகள் சாதி ஒழிப்பு இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மனித உரிமையை அளித்தோர். அவர்களுக்கும் கோவில் நுழைவு கிடைத்தது. இங்ஙனம் பெரியோர் பலர் முயற்சியின் பயனாக இன்று கோவிலுடன் சாதி வேறுபாடு காண்பது என்பது நிறுத்தப்பட்டது. ஆயினும் சமயம் சீர்த்திருந்தியதா?

4.12 சமயத்தில் பாசி

இடித்தல் மழை பெய்தல் முதலிய இயற்கை நிகழ்ச்சிகளைத் தெய்வங்களின் செயல்களாகப் பண்டை மக்கள் நினைத்தனர். தம் மனம் போனவாறு அவற்றிற்குக் கதைகள் கட்டினர். அக்கதைகள் நாளடைவில் சமயத்திற்குரிய கதைகளாக மாறிவிட்டன. இந்நாட்டவர் எகிப்பது, சுமேரியா முதலிய நாடுகளோடு கடல் வணிகத்தில் தொடர்பு கொண்ட காரணத்தால், அவ்வந்நாட்டுக் கதைகள் சில இங்கும் பரவ வழியேற்றபட்டது. இந்நாட்டுக் கதைகள் அந்நாடுகளில் பரவ வழி ஏற்பட்டது. இதனால் சில கதைகள் பெயரளவில் வேறுபட்டும் பொருளளவில் ஒன்றுபட்டும் இம்மூன்று நாடுகளிலும் காணப்படுகின்றன. இத்தகைய பல கதைகள் இதிகாசங்களிலும், புராணங்களிலும் இடம் பெற்றுவிட்டன. இவற்றின் பயனாக **"அன்பே சிவம்"** என்பதை அடிப்டையாகக் கொண்ட சைவ சமயம், பௌராணிக சமயமாக மாறிவிட்டது. இம்மாறுதல் நாயன்மார் காலத்தில் தொடங்கியது. ஆயினும் காலப்போக்கில் பல கதைகள் சமயத்துறையில் சேர்க்கப்பட்டு, நவக்கிரக

வழிபாடு இணைக்கப்பட்டு பௌராணிக சமயம் வளர்ச்சி பெற்றது. பாமர மக்கள் மிகுந்துள்ள இந்நாட்டில் இக்கதைகளே சமயத்தின் உயிர்நாடியாகக் கருதப்படுகின்றன.

4.13 தமிழில் வழிபாடு

தமிழர் வரிப்பணத்தாலும் தமிழ் வேந்தர் முயற்சியாலும் உண்டாக்கப்பட்ட கோவில்களே இத் தமிழ்நாட்டில் இருப்பவை. இவற்றில் சைவத் திருமுறைகள் ஓதியே வழிபாடு செய்யப்பட்டு வந்தது.

சிறந்த சிவத்தலங்களான திருமறைக்காடு ''வேதாரண்யம்'' எனவும் திருவெண்காடு, **''சுவேதாரண்யம்''** எனவும், திருமுது குன்றம், **''விருத்தாசலம்''** எனவும் மாறியக் காலத்தில், தமிழில் இருந்த வழிபாடு வடமொழியில் மாறிவிட்டது போலும் சுவாமி, அம்மன் பெயர்கள் எல்லாம் தமிழ் மக்களுக்குப் புரியாத அப்த குஜாம்பாள் முதலிய வடமொழிப் பெயர்களாக மாறிவிட்டன. இந்த அலங்கோல நிலை கோவிலுக்குச் செல்லும் பொதுமக்களின் உள்ளத்தில் அழுந்திய பக்தி ஏற்படாது செய்துவிட்டது. வழிபட வரும் மக்களுக்குப் புரியாத மொழியில் அர்ச்சனை செய்யப்படுமாயின், அதனால் வழிபடுவோர் உள்ளம் எவ்வாறு குழையும்? சைவம் சீரழிவதற்கும், கோவில் வழிபாடு குறைந்து வருவதற்கும் இது மிகச்சிறநத காரணமாகும். அறநிலையப் பாதுகாப்பாளர்களும், மடங்களின் தலைவர்களும், சைவப் பெருமக்களும் இத்துறையில் உடனே கவனம் செலுத்துதல் வேண்டும். அறிவும் ஆராய்ச்சியும் கேள்வி கேட்கும் திறனும் பெருகிவரும் இக்காலத்தில், அறிவுக்குப் பொருந்த நடப்பதே சமயவளர்ச்சிக்கு ஏற்றது எனப்படுகிறது.

4.14 பொது மக்கள் தொண்டு

சைவ மக்கள் தங்கள் இல்லங்களில் பிறக்கும் குழந்தைகளுக்குச் சைவ பெயர்கள் வைப்பது நல்லது. சிவநெறிச் செல்வன், தேவாரச் செல்வன், நெடுமாறன், கோட்புலி, கண்ணப்பன், கழற்சிங்கன் என்றாற் போல் நாயன்மார் பெயர்களையும், திருமுறைகளில் வரும் அரும் பெயர்களையும் வைத்து வழங்குதல் பழமையைப் புதுப்பித்து நிலைக்கச் செய்வதாகும். இவ்வாறே பெண் பிள்ளைகளுக்கு மங்கையர்க்கரசி, சிவ அரசி, வெண்காட்டு நங்கை, சந்தன நங்கை முதலிய சைவப் பெயர்களை வைக்கலாம.

சைவர் தம் ஊர்களில் ஏற்படும் புதிய தெருக்களுக்குச் சேக்கிழார் தெரு, சம்பந்தர் தெரு, ஆலால சுந்தரர் தெரு எனச் சைவப் பெயர்களை வைக்க ஏற்பாடு செய்யலாம். இவ்வாறே தம் வளமனைகளுக்குச் **‘‘சேக்கிழார் அகம்’’ ‘‘சுந்தரர் அகம்’’** எனப் பெயர்களைச் சூட்டலாம்.

சிவநெறிச் செல்வரும் சைவ சங்கங்களும், சைவ சமய வரலாறு, சைவப் பெயர்கள், பாராயணத்திற்குரிய பதிகங்கள் போன்றவற்றைச் சிறுநூல்களாக எழுதச் செய்து இலவசமாகவோ, குறைந்த முறையிலோ பரப்புதல் வேண்டும்.

4.15 தொகுப்புரை

கடவுள் என்றதோர் எண்ணமும், அக்கடவுள் நமக்கு எவ்வகையிலும் நன்மையே செய்யும். சிவன் ஆவர் என்ற தெளிவும் உண்டான காலமே. அதன்பின் மக்கள் கடவுளின் செயல்கள் இயல்புகள் பற்றி ஆராய்ந்து சைவ சமய உண்மைகளை அறிந்து, நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்து சைவ வாழ்வு வாழத்தலைப்பட்டனர். வேதாகமங்களும், புராணங்களும் சைவத்தி

தொன்மைக்குச் சான்றாவன. சைவ சமயத்தினைக் குறித்து இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

அடிக்குறிப்பு

தமிழ் அச்சுப்பண்பாட்டு வரலாறு - சைவ சமயம்

பக்கம் எண் : 15

பக்கம் எண் : 21

பக்கம் எண் : 25

பன்னிரு திருமுறைகள் - எம். நாராயண வேலுப்பிள்ளை

பக்கம் எண் : 29

பக்கம் எண் : 34

பக்கம் எண் : 35

பக்கம் எண் : 36

பக்கம் எண் : 38

பக்கம் எண் : 39

இயல் ஐந்து

ஆய்வு நிறைவுரை

- ஆய்வு அறிமுகம் என்னும் முதல் இயலானது. ஆய்வு முன்னுரை, ஆய்வுத் தலைப்பு, ஆய்வு நோக்கம், ஆய்வு பொருள், ஆய்வின் கருதுகோள், ஆய்வின் எல்லை, ஆய்வின் அணுகுமுறை, ஆய்வின் ஆதாரங்கள், ஆய்வின் மொழிநடை, ஆய்வுப் பகுப்பு முதலியவற்றை குறித்து தெளிவுபடக் கூறியுள்ளது.

- இரண்டாவது இயலில் வாழ்வியல் குறித்த சிந்தனைகளும், திருநாவுக்கரசரின் பிறப்பு, சமயம் குறித்தும், இவர் சைவ சமயத்திலிருந்து நீங்குவதற்காக அனுபவித்த தீங்குகள் குறித்தும், சுண்ணாம்பு களவயலில் தள்ளப்பட்டதும், கல்லைக் கட்டி கடலில் போடப்பட்டதும், நஞ்சு கொடுத்ததனையும், யானையால் அடித்து துன்புறுத்தப்பட்டமையும் கூறப்பட்டுள்ளது. அத்தோடு திருநாவுக்கரரசின் வேறுபெயர்களான வாகீசர், தாண்டகவேந்தர், அப்பர் போன்ற பெயர்கள் தோன்ற காரணங்களும், இவர் ஆற்றிய அற்புதங்களும் இவ்வியலில் தெளிவுபட கூறியுள்ளது.

- திருநாவுக்கரசரின் பக்தி வெளிப்பாடு என்ற மூன்றாவது இயலில் திருமுறைகளில் பக்தி குறித்தும், 63 நாயன்மார்களின் வரலாறும், 63 நாயன்மார்களின் பெயரும், குலமும், நாயன்மார்களில் பெண்கள், நாயன்மார்களின் மரபு, சைவ சமயக் குரவர்களான திருஞான சமபந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர், மாணிக்கவாசகர் குறித்தும், பன்னிருத் திருமுறைகள் குறித்தும், திருமுறை என்ற பெயர், திருமுறைக் கண்டது, திருமுறை வகுத்தமை, பண்ணமைப்பு, திருமுறைகளைப் பேணிச் சேமித்தமை, பன்னிரண்டாந் திருமுறை, திருமுறைகளின் காலம், திருமுறைகளின் பெருமை, திருமுறைகள் கூறும் பொருள், திருமுறை ஓதுவதன் பயன், திருமுறை ஓதும் முறை, திருமுறைகளின் சிறப்பு குறித்தும் 4,5,6-ம் திருமுறைகளின் பக்தி சிறப்பு குறித்தும் தெளிவுபட கூறப்பட்டுள்ளது.

- நான்காவது இயலில் சைவ சமயம் குறித்தும், சைவ சமயத் தோற்றம், சைவ சமயத் தொன்மை, சிந்துவெளி நாகரீகக் காவச் சிவ வழிபாடு, சிந்துவெளி நாகரிகக் கால சான்றுகள், வேதகாலச் சைவம், தென்னகச்

சைவம், சைவத்தின் எழுச்சி, சைவதித்தாந்த சாந்திரங்கள், சைவ சாதனைகளான, திருநீறு, உருத்திராட்சம், சமய தீட்சை, குருலிங்க சங்கம வழிபாடு, சைவ நாற்பதங்கள் குறித்தும், சைவ சமயத்தின் நான்கு நெறிகளான, சரியை, கரியை, ஞானம், யோகம் குறித்தும், சைவ சித்தாந்த தத்துவங்களான, பதி, பசு, பாசம் குறித்தும், சிந்து வெளியில் சைவ சமயம் குறித்தும், சங்க காலத்தில் சிவன், பக்தி நெறி, சோழர் ஆட்சியில் சைவ சமயம் குறித்தும், சமயத்தின் உயிர்நாடி ஆட்டம், சமய மாற்றம், முற்போக்கு, சங்க காலத்தில் பாசி, தமிழில் வழிபாடு, பொதுமக்கள் தொண்டு குறித்து தெளிவுபடக் கூறியுள்ளது.

- ஆய்வு நிறைவுரை என்னும் இறுதி இயலில் ஆய்வில் கண்டறியப்பட்ட செய்திகள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளது. ஆய்வு நிறைவுரையை அடுத்த ஆய்விற்கு தேவையான தரவுகள் துணைநூற்பட்டியலில் இடம் பெற்றுள்ளன.

- இவ்வாய்வு பல சோதனைகளின் போதும், இறைவன் மேல் கொண்ட பக்தி சிறிதும் குறையக் கூடாது என்பதனை எடுத்தியம்புகின்றது.

பின்னிணைப்புகள்

துணை நூற்பட்டியல்

முதன்மை ஆதாரங்கள்

1. திருநாவுக்கரசரின் பக்தி சிறப்பு

துணைமை ஆதாரங்கள்

1. இளம் பூரணார் : இலக்கணம்
முதற்பதிப்பு 2005
கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை- 2

2. இராதா கிருஷ்ணன். எஸ் : திருஞானசம்பந்தர் ஓர் ஆய்வு
சென்னைப் பல்கலைக் கழகம்,
அவ்வை அச்சுக்கூடம்,
சென்னை - 600013

3. இரத்தின சபாபதி. வை : திருமுறை தெளிவு
சென்னைப் பல்கலை கழகம்,
1981

4. ஞானசம்பந்தன் : அ.சா. இலக்கிய கலை
முதல் பதிப்பு, நவம்பர் - 1953
திருநெல்வேலி,
தென்னிந்திய சைவ சித்தாந்த
நூற்பதிப்புக் கழகம், லிமிட்டெட்
சென்னை -1

5 தமிழண்ணல் : தமிழ் இலக்கிய வரலாறு
மீனாட்சி புத்தக நிலையம்
மயூரா வளாகம் 48
நானப்ப முதலி தெரு,
மதுரை - 620001

6	பாக்யமேரி	:	தமிழ் இலக்கிய வரலாறு முதல் பதிப்பு, ஜுலை 2008 பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிட்டெட், சென்னை - 14
7	பால சுந்தரம் பிள்ளை. தி.சு	:	இன்கவித் திரட்டு முதற்பாகம் சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிமிட்டெட் திருநெல்வேலி-6
8	முத்துராமன்	:	சைவ சித்தாந்த உரைக் கொத்து, சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கழக வெளியீடு-1953
9	பன்னிரு திருமுறைகள்	:	எம். நாராயண வேலுப்பிள்ளை பாண்டிபஜார், தியாகராய நகர், சென்னை - 600 017.

சுந்தரரும் பக்திமயமும்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் திருநெல்வேலி

இளம் முனைவர் (எம்.ஃபில்) பட்டத்திற்காக அளிக்கப்படும் ஆய்வேடு

ஆய்வாளர்

கு. ஷைனி

பதிவு எண்: 20193113107103

தமிழ்

Manonmaniam
Sundaranar University

தமிழ்த்துறை & தமிழாய்வு மையம்

நேசமணி நினைவுக் கிறித்தவக் கல்லூரி,

மார்த்தாண்டம் 629 165

2019 – 2020

நன்றியுரை

"சுந்தரரும் பக்திமயமும்" என்னும் தலைப்பில் அமைந்த இவ்வாய்வு சிறப்புற அமைவதற்கு அருள் புரிந்த இறைவனுக்கு என் முதற்கண் நன்றியைச் சமர்ப்பிக்கிறேன்.

நேசமணி நினைவுக் கிறிஸ்தவக் கல்லூரியில் ஆய்வு செய்வதற்கு அனுமதி அளித்த கல்லூரி முதல்வர் முனைவர். கே. பால்ராஜ் மற்றும் தமிழ்த்துறைத் தலைவர் அவர்களுக்கும் என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இவ்வாய்வுக்கு நெறியாளராக இருந்து இவ்வாய்வேட்டினைச் சிறந்த முறையில் உருவாக்க ஆலோசனையும், ஆக்கமும், ஊக்கமும் வழங்கிய முனைவர். கே.ஆர். ஜெஸ்லின் சஜி அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆய்வு நெறிமுறைகளைக் கற்பித்துப் பேருதவி புரிந்த தமிழ்த்துறை ஆசிரியப் பெருமக்கள் அனைவருக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வேட்டினைச் சமர்ப்பிக்க எங்களுக்கு முழு ஆதரவு தந்துதவிய பெற்றோர், உறவினர்கள் மற்றும் நண்பர்களுக்கும் என் அன்பு கலந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாய்வேட்டினை சிறந்த முறையில் வடிவமைத்து தந்த எஸ்.ஆர் ஆப்செட் பிரிண்டிங் உரிமையாளர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கு. ஷைனி

ஆய்வாளர்

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

ப.	பக்கம்
பக்.	பக்கங்கள்
மேலது	மேற்குறிப்பிட்ட நூல்
பேரா	பேராசிரியர்

உள்ளடக்கம்

இயல் - ஒன்று

ஆய்வு அறிமுகம்

1.0 ஆய்வு முன்னுரை

1.1 ஆய்வு தலைப்பு

1.2 ஆய்வின் நோக்கம்

1.3 ஆய்வின் பொருள்

1.4 ஆய்வு கருதுகோள்

1.5 ஆய்வு எல்லை

1.6 ஆய்வின் அணுகுமுறை

1.7 ஆய்வு ஆதாரங்கள்

    1.7.1 முதன்மை ஆதாரங்கள்

    1.7.2 துணைமை ஆதாரங்கள்

1.8 ஆய்வின் மொழிநடை

1.9 ஆய்வேட்டின் அமைப்பு

1.0 ஆய்வு முன்னுரை:

தமிழ் இலக்கிய உலகில் பக்தி இலக்கியம் தனிப்பெரும் செல்வாக்கினைப் பெறுகின்றன. கி.பி. ஆறாம் நூற்றாண்டு முதல் பத்தாம் நூற்றாண்டு வரையுள்ள காலம் பக்தி இலக்கிய காலமாக மாறியதை வரலாற்றடிப்படையில் நாம் அறிய முடிகின்றது. மக்கள் சமண, பௌத்த கட்டுப்பாடுகளை விட்டு விலகி சைவ, வைணவ சமயங்களைச் சார்ந்தனர். நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஆன்மீக வாழ்க்கையை எளிமைப்படுத்தினர். பாமர மனிதனையும் அரவணைத்து சமய வழிபாடுகளில் இணைத்தனர். பக்திப் பாடல்களை பண்களுடன் பாடினர். திருக்கோயில்களை கலைகளின் கூடாரமாக்கினர். மனிதருடன் இணையும் காதலை தெய்வத்துடன் இணைத்தனர். உலகியல் நிகழ்வுகளில் ஒன்றாக பக்தியை மாற்றினர். இத்தகைய சிறப்பினைப் பெற்ற சைவ சமயத்தைச் சார்ந்த சுந்தரரின் பக்தி நெறியை வெளிப்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வேடு அமைக்கப்பட்டுள்ளது.

1.1 ஆய்வு தலைப்பு

“சுந்தரரும் பக்திமையமும்” இவ்வாய்வுத் தலைப்பாகும்.

1.2 ஆய்வு நோக்கம்

இலக்கிய உலகில் சுந்தரரின் பக்தி குறித்த கருத்துக்களை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

1.3 ஆய்வு பொருள்

- சுந்தரரின் வாழ்வியலை விளக்குதல்
- சுந்தரரின் பக்தி சிறப்பினை எடுத்துரைத்தல்
- சுந்தரரின் ஏழாம் திருமுறையில் சைவ நெறியை வெளிப்படுத்தல் போன்றவற்றை அடிப்படையாக வைத்து ஆய்வுப் பொருள் அமைகின்றது.

1.4 ஆய்வு கருதுகோள்

ஏழாம் திருமுறையில் பக்தி நெறி எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது என்பதே ஆய்வின் கருது கோளாகும்.

1.5 ஆய்வு எல்லை

ஏழாம் திருமுறை ஆய்வு எல்லையாக அமைக்கப் பட்டுள்ளது.

1.6 ஆய்வின் அணுகுமுறை

எந்த ஒரு ஆய்விற்கும் அணுகுமுறை அவசியமாகிறது. ஆய்வின் அணுகுமுறையைப் பொறுத்தே ஆய்வின் வெற்றி

அமைகிறது எனலாம். இவ்வாய்வில் விளக்கவியல் ஆய்வுமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

1.7 ஆய்வு ஆதாரங்கள்

ஆய்வேட்டின் உருவாக்கத்திற்கு பயன்படுத்தப்பட்ட ஆதாரங்கள் முதன்மை ஆதாரங்கள் துணைமை ஆதாரங்கள் என வகைப்படுத்தலாம்.

1.7.1 முதன்மை ஆதாரங்கள்

ஆய்விற்கான நேரடி சான்றுகளே முதன்மை ஆதாரங்கள் ஆகும். இவ்வாய்வில் சுந்தரரின் ஏழாம் திருமுறை முதன்மை ஆதாரம் ஆகும்.

1.7.2 துணைமை ஆதாரங்கள்

ஆய்வு தொடர்பான நூல்கள், ஆய்வேடுகள், ஆய்வு நூல்கள், கலைக்களஞ்சியங்கள் ஆகியன துணைமை ஆதாரங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது. இவ் ஆய்வேட்டில் சுந்தரரின் வாழ்க்கை குறித்த நூல்கள், பக்தி நூல்கள், சைவ, சமயம் நூல்கள் ஆகியன துணைமை ஆதாரங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

1.8. ஆய்வின் மொழி நடை

ஆய்வேட்டின் மொழிநடை எளிய தமிழ் நடையில் அமைந்துள்ளது.

1.9. ஆய்வேட்டின் அமைப்பு

இவ்வாய்வு ஐந்து இயல்களாக பகுக்கப்பட்டுள்ளது. ஆய்வின் குறிக்கோளுக்கு ஏற்ப இயல்கள் ஒவ்வொன்றும் அமைக்கப்பட்டுள்ளன.

- *ஆய்வு அறிமுகம்*
- *சுந்தரரின் வாழ்க்கை வரலாறு*
- *ஏழாம் திருமுறையில் பக்திமையம்*
- *சைவ நெறி சமய சிந்தனை*
- *ஆய்வு நிறைவுரை*

என்றவாறு பகுக்கப்பட்டுள்ளது.

“ஆய்வு அறிமுகம்” என்னும் இயலில் ஆய்வு முன்னுரை, ஆய்வு தலைப்பு, ஆய்வு நோக்கம், ஆய்வுப் பொருள், ஆய்வுக் கருதுகோள், ஆய்வு எல்லை, ஆய்வின் அணுகுமுறை, ஆய்வின் ஆதாரங்கள், ஆய்வின் மொழிநடை, ஆய்வேட்டின் அமைப்பு போன்றவை இடம் பெறுகின்றன.

“சுந்தரரின் வாழ்க்கை வரலாறு” என்னும் இயலில் நாயன்மார்கள் வரலாறு, நாயன்மாரில் பெண்கள், சைவ சமயக் குரவர்கள், சுந்தரரின் வாழ்வியல், சுந்தரரின் பிறப்பு, சுந்தரரின் காலம், சுந்தரரின் புனைபெயர்கள், சுந்தரர் செய்த திருமணங்கள், இறைவன் ஆட்கொண்ட விதம், சுந்தரர்

வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்கள், குருபூஜை, திருவடி சேர்தல் போன்றவை பற்றி கூறப்பட்டுள்ளது.

"ஏழாம் திருமுறையில் பக்திமையம்" என்னும் இயலில் பன்னிருதிருமுறைகள், திருமுறை என்ற பெயர் காரணம், திருமுறை கண்டது, திருமுறை வகுத்தமை பண்ணமைப்பு, திருமுறைகளைப் பேணிச் சேமித்தமை, திருமுறைகளின் காலம், திருமுறைகளின் பெருமை, திருமுறைகள் கூறும் பொருள், திருமுறை ஓதுவதன் பயன் திருமுறை ஓதும்முறை, திருமுறைகளின் சிறப்பு, தேவாரம் - ஏழாம் திருமுறை, சுந்தரர் தேவாரம் தேவார காலத்து இசைக் கருவிகள், பக்தி நெறி ஏழாம் திருமுறையில் சுந்தரரின் பக்தி நெறி பற்றிவிரிவாக விளக்கி கூறப்பட்டுள்ளது.

"சைவ நெறி சமயசிநதனை" என்னும் இயலில் சைவ சமயதோற்றம், சைவ சமய தொன்மை, சிந்துவெளி நாகரிக காலச் சிவ வழிபாடு, சங்க காலத்தில் சிவன் நெறி, சைவமும் தமிழ் வளர்ச்சியும், சைவதிருமடங்கள் வளர்த்த தமிழ், வேதகாலச் சைவம், சைவத்தின் எழுச்சி, சோழர் ஆட்சியில் சைவ நெறி, சமய மாற்றம், சைவ மடங்கள், சைவ சித்தாந்த சாத்திரங்கள், சைவ சாதனைகள், பொது மக்கள் தொண்டு பற்றி விரிவாக கூறப்பட்டுள்ளது.

இறுதியாக "ஆய்வு நிறைவுரை" இவ்வாய்வில் கிடைத்த முடிவுகள் இவ்வியலில் தொகுத்து தரப்பட்டுள்ளன. அடுத்ததாக துணை நூற்பட்டியலும் ஆய்வுக்கு பயன்படுத்தப்பட்ட நூற்கள் முதன்மை சான்று ஆதாரங்கள், துணைமைச் சான்றுகள் ஆதாரங்கள், பின்னிணைப்பில் இணைக்கப்பட்டுள்ளன.

இயல் - இரண்டு

சுந்தரரின் வாழ்க்கை வரலாறு

2.0 முன்னுரை

2.1 63 நாயன்மார்கள் வரலாறு

2.2 நாயன்மாரில் பெண்கள்

2.3 சைவ சமயக் குரவர்கள்

2.3.1 ஞானசம்பந்தர்

2.3.2 திருநாவுக்கரசர்

2.3.3 சுந்தரர்

2.3.4 மாணிக்கவாசகர்

2.4 சுந்தரர் வரலாறு

2.4.1 சிவபெருமான் கண்ணாடியில் ரதித்த தனதுருவம்

2.4.2 சுந்தரர் பூலோகத்தில் பிறப்பு

2.4.3 சுந்தரரின் வாழ்வு

2.4.4 சுந்தரரின் காலம்

2.4.5. சுந்தரரின் புனை பெயர்கள்

2.4.6 திருநாவலூர்

2.4.7 இறைவன் ஆட்கொண்டவிதம்

2.4.8 சுந்தரர் வாழ்வில் நடந்த அற்புதங்கள்

2.4.9 குருபூஜை

2.5 திருவடி சேர்தல்

2.6 தொகுப்புரை

2.0 முன்னுரை

சமணமும் பௌத்தமும் சரிந்து சைவ சமயம் தளைத்து வளர்வதற்கு தொண்டு புரிந்த தூயவர்கள் 63 நாயன்மார்கள் ஆவார். நாயன்மாரில் அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவரும், நாயன்மார் வரிசையில் தனியாக இல்லாத மாணிக்கவாசகர் அவர்களும் முதன்மையானவர்கள் இந்த நால்வரும் சைவ சமய குரவர்கள் ஆவார். இவர்களுள் ஒருவரான சுந்தரமூர்த்தி நாயனார் வாழ்க்கை வரலாறை விளக்குவதாக இவ்வியல் அமைகின்றது.

2.1 63 நாயன்மார்கள் வரலாறு

நாயன்மார்கள் என்போர் பெரிய புராணம் எனும் நூலில் குறிப்பிடப்படும் சைவ அடியார்கள் ஆவார். நாயன்மார் எண்ணிக்கை அடிப்படையில் 63 நபர்கள் ஆவார். "சுந்திரமூர்த்தியார் திருத்தொண்டத் தொகையில்" அறுபது சிவனடியார்கள் பற்றி குறிப்பிட்டுள்ளார். அந்த நூலினை மூலமாக கொண்டு சேக்கிழார் பெரிய புராணத்தினை இயற்றினார் எனவே திருத்தொண்டத் தொகையை எழுதிய சுந்தரமூர்த்தியாரையும், அவரது பெற்றோர் சடையனார் இசை ஞானியார் ஆகிய மூவரையும் நாயன்மார்களாக இணைத்துக் கொண்டார். நாயன்மார்களுக்குச் சிவாலயங்களின் சுற்று பிரகாரத்திற்குள் கற்சிலைகள்

வைக்கப்படுகின்றன. அத்துடன் அறுபத்து மூவரின் உலோகச் சிலைகளும் ஊர்வலத்தின் பொழுது எடுத்துச் செல்லப்படுகின்றன. இந்த ஊர்வலத்திற்கு “அறுபத்து மூவர் திருவீதி உலா” என்று பெயர்.

நாயன்மார்களை மரபு அடிப்படையில் நோக்கும் போது அரசர், அந்தணர், வணிகர், வேளாளர், ஆதி சைவர், மரபுக்கொருவர், மரபு கூறப்படாதவர் என வகைப்படுத்துகின்றனர்.

2.2 நாயன்மாரில் பெண்கள்

அறுபத்துமூன்று நாயன்மாரில் மூவர் பெண்கள் கி.பி. 3-4 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த காரைக்கால் அம்மையார் நாயன்மாரில் காலத்தால் மூத்தவர். தான் பிறந்து வாழ்ந்த ஊரில் பெயராலேயே அறியப்படும் காரைக்கால் அம்மையாரின் இயற்பெயர் புனிதவதியார் ஆகும். மதுரையை ஆண்ட கூன் பாண்டியன் என்ற பாண்டிய மன்னன் நின்றசீர் நெடுமாற நாயனார் என்று அறியப்படுகிறார். அவர் மனைவி மங்கையர்க்கரசியார் என்பவர் நாயன்மாரில் இன்னொரு பெண் ஆவார். இவர் திருநாவலூரைச் சேர்ந்த சடையனார் என்ற நாயனாரின் மனைவி. இசை ஞானியார் மூன்றாவது பெண் நாயனார் ஆவார். இவர்களின் மகன் சுந்தரமூர்த்தியார்

சைவக் குரவர் நால்வருள் ஒருவரும் நாயன்மாரில் ஒருவரும் ஆவார்.

2.3 சைவ சமயக் குரவர்கள்

சைவ சமயக் குரவர்கள் நால்வர். திருநாவுக்கரசர், ஞானசம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகிய நால்வரும் சைவ சமயக் குரவர்கள் ஆவார்.

2.3.1 ஞானசம்பந்தர்

அவதாரத் தலம் சீர்காழி, மூன்றாம் அகவையில் சிவபரம்பொருளால் தடுத்தாட்கொள்ளப் பெற்று, சீகாழியிலுள்ள திருத்தோணிபுர ஆலயத் திருக்குளத்தருகில் உமையன்னையின் திருக்கரங்களால் சிவஞானப் பாலினை அருந்தியருளிய ஒப்புவமையில்லா குருநாதர். காலம் ஏழாம் நூற்றாண்டு, அவதாரக் காலம் 16 ஆண்டுகள் ஆகும்.

2.3.2 திருநாவுக்கரசர் (அப்பர்)

திருநாவுக்கரசர் அவதாரத் தலம் கடலூர் மாவட்டத்தில் பண்ருட்டிக்கு அருகிலுள்ள திருவாமூர். சிவபரம் பொருளால் தடுத்தாட் கொள்ளப் பெற்ற தலம் திருவதிகை சிவமூர்த்தி பெற்றுய்ந்த தலம் திருப்புகலூர். அவதாரக் காலம் எண்பத்தோரு ஆண்டுகள். காலம் ஏழாம் நூற்றாண்டு, ஞான சம்பந்த மூர்த்தியின் சமகாலத்தவர்.

2.3.3 சுந்தரர்

அவதாரத் தலம் திருநாவலூர். தடுத்தாட்கொள்ள பெற்ற தலம் திருவெண்ணைநல்லூர். முத்தித் தலம் கேரளத்திலுள்ள திரு அஞ்சைக்களம்."16 ஆம் அகவையில் தடுத்தாட்கொள்ளப் பெற்ற சுந்தரனாரின் அவதாரக் காலம் பதினெட்டு ஆண்டுகள்"[1]. *காலம் ஏழாம் நூற்றாண்டின் தொடக்கம். ஏழாம் திருமுறையின் ஆசிரியர், பாடியருளிய திருப்பதிகங்கள் 100, தம்பிரான் தோழரால் பாடப்பெற்ற திருத்தலங்கள் 84, திருநட்சத்திரம் ஆடி சுவாதி. பரம்பொருளான இறையவரைத் தோழமை மீதூரப் பக்தி புரிந்து வழிபடும் "சகமார்கத்தின்" வழி நின்ற அருளாளர்.*

2.3.4 மாணிக்கவாசகர்

அவதாரத் தலம் திருவாதவூர். உமையொரு பாகனால் தடுத்தாட்கொள்ளப் பெற்ற தலம் திருப்பெருந்துறை முக்தித் தலம் சிதம்பரம். அவதாரக் காலம் முப்பத்திரண்டு ஆண்டுகள். காலம் மூன்றாம் நூற்றாண்டு. எட்டாம் திருமுறை ஆசிரியர். திருநட்சத்திரம் ஆனி மகம். இயற்பெயர் வாதவூரர். இறைவனின் திருவாக்கினால் சூட்டடப்பெற்ற திருப்பெயர் மாணிக்கவாசகர் ஆகும்.

2.4 சுந்தரர் வரலாறு

2.4.1 சிவபெருமான் கண்ணாடியில் ரசித்த தனதுருவம்

கயிலையில் அலங்கார மண்டபத்தில் ஒருமுறை சிவபெருமான் தன்னை கண்ணாடியில் கண்டார். ஒரு கணம் அவர் அழகில் அவரே சொக்கிப் போய்விட்டார். நம்மில் சிலர் கண்ணாடியில் தெரியும் நம் உருவத்தை பார்த்து பேசுவதில்லையா? அது போல் கண்ணாடியில் தெரிந்த தனது பிம்பத்தை நோக்கி, "அழகு சுந்தரா .... கொஞ்சம் வெளியே வா!" என்று அழைத்தார்.

எனவே கண்ணாடியில் பார்த்து ரசித்த உருவம் உடனே நேரில் வந்துவிட்டது. நிழல் நிஜமாகிவிட்டது. ...... பரமன் வாக்கிற்கு உள்ள வலிமை!! தன்னுடைய பிம்பத்திலிருந்து வந்த அந்த உருவத்திற்கு "சுந்தரர்" என்று பெயரிட்டார். பெயர் சூட்டினால் போதுமா? ஏதாவது பணி தரவேண்டுமல்லவா? தன்னுடைய திருநீற்று பேழையை தாங்கும் பணியை கொடுத்தார். எப்போதெல்லாம் இறைவன் திருநீறு பூசவேண்டும் என்று கருதுகிறானோ அப்போதெல்லாம் திருநீறு கொண்டு போகும் பணியை செய்து வந்தார். நிழலில் இருந்து உருவான "சுந்தரர்". அதாவது ஈசனின் நேரடி உதவியாளர். நந்திக்கும் கிடைக்காத

பேறு இது ஆகும். தேவர்கள் பாற்கடலை கடைந்தபோது ஆலகால விஷம் உடலில் உருவானது அல்லவா? அந்த விஷத்தின் வீரியத்தால் பலரது பார்வை பாதிக்கப்பட்டது. அனைவரும் சிதறி ஓடினர். கடைசியில் அவர்கள் தஞ்சமடைந்த இடம் கயிலை. ஈசன் உடனே தனது முதன்மைத் தொண்டர் சுந்தரத்தை அந்த விஷத்தை எடுத்து வரச் சொன்னார். சுந்தரமும் சென்று அந்த விஷத்தை திரட்டி ஒரு சிறிய நெல்லிக்கனி அளவாக ஆக்கினார். அதை கொண்டு வந்து ஈசனிடம் ஒப்படைத்தார். ஈசன் இதை வெளியே விட்டு வைத்தால் ஆபத்து என்று கருதி உடனே அதை தான் வாங்கி விழுங்கிவிட்டார். அதைக் கண்டு அன்னை பதறிப் போய், விஷம் உள்ளே இறங்காதவாறு, தொண்டையில் கை வைத்துப் பிடித்ததாள். விஷம் அப்படியே நின்றது. அன்று முதல் ஈசனுக்கு திருநீலகண்டம் என்று பெயர் ஏற்பட்டது.

விஷத்தை பார்த்தோர், அதை நுகர்ந்தோர், என அனைவரும் பாதிக்கப்பட்ட நிலையில் சுந்தரருக்கு மட்டும் எந்தவித பாதிப்பும் ஏற்படவில்லை. காரணம், அவர் தினசரி திருநீற்றுப் பேழையை தாங்கி வந்ததால் திருநீற்றுக்கு விஷத்தை முறிக்கும் சக்தி உண்டு. விஷத்தை தாங்கி வந்ததால் சுந்தருக்கு ஆலால சுந்தரர் என்ற திருநாமம் உண்டாயிற்று.

கயிலையில் மிகப் பெரிய நந்தவனம் ஒன்று உண்டு. சிவபூஜைக்கு சிவகணங்கள் அங்கு தான் பூக்களை பறிப்பது வழக்கம். பார்வதி தேவியின் பணிப்பெண்களும் அங்கு தான் பூக்களை பறிப்பார்கள். ஒருமுறை சுந்தரர் அந்த நந்தவனத்தை கடந்து செல்ல முற்பட்டபோது, அப்போது அங்கு பூக்களை பறிக்க வந்த பார்வதி தேவியின் பணிப்பெண்கள் கமலினி, அனந்திதை என்ற இருவரையும் பார்த்தார். ஒரு இனம் புரியாத பரவசம் ஏற்பட்டது. அவர்கள் பேரழகில் மயங்கினார். அவர்களும் ஆலால சுந்தரரின் அழகில் மயங்கினார். இது இறைவனுக்கு உடனே தெரிந்து போனது.

சுந்தரரிடம் சிவபெருமான் நீ பூவுலகில் சென்று பிறந்து எல்லாவித இன்பங்களையும் துய்த்துப் பின்னர் மீண்டும் கயிலை வந்தால் போதும் என்றார். சிவபெருமான் கூறியதை கேட்டு சுந்தரர் கலங்கிப் போனார்.... “தேவ தேவா .... தங்களை விட்டு இமைப் பொழுதும் என்னால் பிரிந்திருக்க முடியாதே .... என்னை மன்னித்து நல்லருள் செய்யுங்கள் சுவாமி” என்று பலவேறு விதமாக மன்றாடினார். சுந்தரிடம் கவலை வேண்டாம் உரிய நேரம் வரும்போது என்னடி வந்து சேர்வாய் என நீலகண்டர் கூறினார்.

2.4.2 சுந்தரர் பூலோகத்தில் பிறப்பு

சிவபெருமானின் ஆணையின்படி, பூவுலகில் தமிழகத்தில் திருநாவலூர் என்னும் தலத்தில் சடையனார் இசை ஞானியார் என்னும் சிவநெறி வழுவாமல் வாழ்ந்து வந்த தம்பதியர்க்கு மகனாக பிறந்தார் சுந்தரர். திருவாரூரில் உள்ள ஈசன் மீது அக்குடும்பத்தினர் பெரும் பக்தி கொண்டிருந்தால் தங்கள் மகவுக்கு நம்பியாரூரர் என்று பெயரிட்டனர்.

பாலகனாயிருந்த நமபியாரூரரின் அழகையும் தேஜஸையும் கண்டு வியந்த நரசிங்க முனையர் என்னும் குறுநிலமன்னன், இக்குழந்தை சம்பந்தரின் மறுபிறப்போ? என்று எண்ணிவியந்து, நம்பியாரூரரின் பெற்றோரான சடையனார் இசைஞானியார் இருவரின் அனுமதியையும் பெற்று தனது அரண்மனைக்கு கொண்டு சென்று, கல்வியும் ஞானமும் புகட்டி செல்லப் பிள்ளை போல வளர்க்கலானர். உரிய பருவம் வந்ததும் அவனுக்கு உபநயனம் செய்வித்து பல்வேறு வித்தைகளையும் பயிற்றுவித்தார்.

2.4.3 சுந்தரரின் வாழ்வு

அழகின் சிகரமாய் திகழ்ந்தார் இளைஞர் நம்பியாரூர் அவருக்கு நான் .... நீ .... அனைவரும் போட்டிபோட்டு பெண்கொடுக்க முன்வந்தனர். புத்தூரைச் சேர்ந்த சடங்கவி சிவாச்சாரியார் என்பவரின் மகளுக்கு நம்பியாரூரை

திருமணம் செய்விப்பது என்று முடிவு செய்து, திருமணம் நிச்சயித்தனர். சுந்தரருக்காக ஏற்கனவே கமலினையும் அனந்திதையும் பரவை நாச்சியாராகவும், சங்கிலி நாச்சியாராகவும் பிறந்து காத்திருக்க, இவர் இப்பெண்ணை மணந்துகொண்டால் என்னவாவது? மேலும் உரிய நேரத்தில் தான் தடுத்தாட்கொள்வோம் என்று ஈசன், சுந்தரரரிடம் கயிலையில் வாக்கு கொடுத்திருந்தபடியால், இறைவன் ஒரு கிழவரைப் போல வேடந்தாங்கி மணக்கோலத்தில் மங்கல நான் கட்டதயாராக இருந்த சுந்தரரிடம் வந்து நின்றார். சிவபெருமான் சுந்தரரிடம் நிறுத்து நம்மிடையே ஒரு வழக்கிருக்கிறது அதைத் தீர்த்த பிறகு உன் திருமணத்தை வைத்துக்கொள் என்றார். பின்னர் சுந்தரரின் பிறவி நோக்கம் சிவபெருமானை புகழ்ந்து பாடுவது என புரிய வைத்தார். இதனை தடுத்தாட்கொள்ளுதல் என சைவர்கள் கூறுகிறார்கள். சுந்தரர் இறைவன் மீது பல தலங்களுக்குச் சென்று பாடியுள்ளார் இப்பாடல்களை திருப்பாட்டு என்று அழைக்கின்றனர். திருப்பாட்டினை சுந்தரர் தேவாரம் என்றும் அழைப்பர் திருமணத்தினை தடுத்து சுந்தரரை அழைத்து வந்து சிவபெருமானே பரவையார் சங்கிலியார் என்ற பெண்களை திருமணம் செய்து வைத்தார்.

2.4.4 சுந்தரரின் காலம்

பெரிய புராணத்திற்குச் சிறப்புடை முன்னூல்கள் இரண்டு அவை (1) சுந்தரர் பாடிய திருத்தொண்டர்த் தொகை (2) நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்டர் திரு. அந்தாதி என்பன. இவற்றுள் சுந்தர் தொகையே காலத்தால் முற்பட்டது.

2.4.5 சுந்தரரின் புனைபெயர்கள்

சுந்தரமூர்த்தி நாயனாரின் இயற்பெயர் நம்பியாரூரன் என்பதாகும். நம்பியாரூரன் என்பதை ஆரூரான் என்று சுருக்கி அழைப்பர். சுந்தரரை வன்தொண்டர், தம்பிரான் தோழர், சேரமான் தோழர், திருநாவலூரர் என்றும் அழைக்கப்பட்டார் இவருடைய அழகினைக் கண்டு சிவபெருமானே சுந்தரர் என்று அழைத்தமையால், அப்பெயரிலேயே அறியப்படுகிறார்.

நம்பியாரூரன் என்ற இயற்பெயரை சுருக்கி ஆரூரன் என்று அழைக்கப்பட்டார். சுந்தரர் இறைவனுடன் தோழமை உறவு பூண்டிருந்ததால் தம்பிரான் தோழர் எனப்படுகிறார். புத்தூர்ச் சடங்கவி சிவாச்சாரியார் மகளை மணக்கும் போது இறைவனே முதியவர் வடிவில் நேரில் வலிய வந்து ஆட்கொண்டதால் வன்தொண்டர் எனப்படுகிறார். சுந்தரர்

சேரமான்பெருமாள் நாயனாரின் நண்பராக இருந்தால் சேரமான் தோழர் எனப்பட்டார்.

2.4.6 திருநாவலூரர்

திருநாவலூரில் பிறந்ததால் திருநாவலூரர் என்றும் பெயர் வந்தது. சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையே பெரிய புராணத்திற்கு அடிப்படை இவர் பாடியன 38000 பாடல்கள். கிடைப்பன 1026 பாடல்கள் ஆகும் இவர் 18.ஆம் வயதுவரை வாழ்ந்தார். பரவையாரைக் காதல் திருமணம் புரிந்து கொண்டார். வேளாளர் குலப் பெண்ணான சங்கிலி நாச்சியாரை இரண்டாம் மனைவியாக திருமணம் செய்து கொண்டார். காடவர்கோன் கழற்சிங்கர், நந்திவர்ம பல்லவ திருமங்கை ஆழ்வார் ஆகியோர் இவர்காலத்தில் கருமிகளைப் பாடுவதைக் காட்டிலும் கடவுளைப் பாடுவதே நலம் என்பதனை,

"மிடுக்கு இ லாதனை வீமனே விறல்
விசயனே வில்லுக்கு இவன் என்று
கொடுக்கி லாதனைப் பாரியே என்று
கூறினும் கொடுப் பார் இலை
பொடி கொள் மேனிஎம் புண்ணியன் புக
லூரைப் பாடுமின் புலவர்கள்
அடுக்குஅமல் அமலருகம் ஆள்வதற்கு

யாதும் ஐயுறவு இல்லையே"[2]

என்னும் பாடல்வழி உணர்த்துகின்றார்.

2.4.7 இறைவன் ஆட்கொண்ட விதம்

மணபருவம் அடைந்தபோது சுந்தரருக்கு பூத்தூரில் உள்ள சடங்கவி சிவாச்சாரியாரின் மகளை திருமணம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது மணநாளன்று முதியவர் ஒருவர் வடிவில் அங்கு வந்த இறைவன், சுந்தரருடைய பாட்டனார் எழுதிக் கொடுத்ததாகச் சொல்லப்பட்ட ஒரு ஓலையைக் காட்டிச் சுந்தரரும், அவர் வழித்தோன்றல்களும் தனக்கு அடிமை என்றார். திருமணம் தடைப்பட சுந்தரரை அழைத்துக்கொண்டு கோயிலுள் நுழைந்த வயோதிகர் திடீரென மறைந்தார். இறைவனே வந்து தன்னைத் தடுத்தாட் கொண்டதை உணர்ந்த சுந்தரர், "பித்தா பிறை சூடி" என்ற தமது முதல் தேவாரப் பதிகத்தைப் பாடித் துதித்தார். பாடல்களின் மூலமாக இறைவனை தம்முடைய நண்பராக்கிக் கொண்டார். சிவதலங்கள் தோறும் சென்று தேவாரபட பதிகங்கள் பாடி இறைவனைப் பணிந்தார். இறைவன் பால் இவர் கொண்டிருந்த பக்தி "சக மார்க்கம்" என்று சொல்லப்படுகின்ற தோழமை வழியைச் சார்ந்தது.

இறைவனைத் தமது தோழனாகக் கருதித் தமக்குத் தேவையானவற்றை எல்லாம் கேட்டுப் பெற்றுக் கொண்டார். "நீள நினைந்தடியேன்" என்று தொடங்கும் அவர் பாடிய தேவாரப் பதிகம் மூலம், குண்டலூரில் தான் பெற்ற நெல்லை தனது ஊர் கொண்டு சேர்க்க இறைவனிடம் உதவி கேட்பதைக் காணலாம்.

2.4.8 சுந்தரர் வாழ்வில் நிகழ்ந்த அற்புதங்கள்

- *சுந்தரர் 12,000 பொன்னை மணிமுத்தாற்றில் போட்டு கமலாலயத்தில் எடுத்தார்.*
- *இவர் பொருட்டு காவிரி ஆறு இரண்டு கூறாகப் பிளந்து நின்றது.*
- *திருப்புகலூரில் தலையில் வைத்த செங்கல் தங்கக்கல்லாக மாறியது.*
- *வாழ்நாள் முழுவதும் மணக்கோலத்துடனேயே வாழ்ந்தார்.*
- *இருகண் பார்வை இழந்தவர். காஞ்சியில் ஒரு கண்ணையும் திருவாரூரில் மற்றொரு கண்ணையும் பெற்றார்.*

- *அவிநாசியில் முதலை உண்ட பாலனை, கரைவாய் முதலையைப்பிள்ளை தரச்சொல்லு காலனையே எனப்பாடி உயிரோடு வரச் செய்தார்.*

2.4.9 குருபூஜை

சுந்தரமூர்த்தி நாயனாருக்கு ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் குருபூஜை சிவாலயங்களில் கொண்டாடப்படுகிறது.

2.5 திருவடி சேர்தல்

சுந்தரர் தனது 18 ஆவது வயதில் சிவனடி சேர அடைந்திட பதிகம் பாடினார். சிவபெருமான் வெள்ளை யானை சுந்தருக்கு அனுப்ப, அதில் எறி கைலாயம் சென்றார். அங்கிருந்த சிவனும் பார்வதியும் வரவேற்று முக்தியளித்தனர்.

2.6 தொகுப்புரை

நாயன்மார்கள் என்போர் பெரிய புராணம் எனும் நூலில் குறிப்பிடப்படும் சைவ அடியார்கள் ஆவார். நாயன்மார்களை மரபு அடிப்படையில் நோக்கும் போது அரசர், அந்தணர், வணிகர் வேளாளர், ஆதி சைவர், மரபுக்கொருவர் மரபு கூறப்படாதவர் என வகைப்படுத்துகின்றனர். சுந்தரமூர்த்தி நாயனார் என்பவர் சைவ சமயத்தில் போற்றப்படும் சமயக்குரவர் நால்வரில் ஒருவரும் அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவரும் ஆவார்.

இவர் வாழ்ந்தது கி.பி எட்டாம் நூற்றாண்டு ஆகும். இவர் இயற்றிய திருத்தொண்டத் தொகை என்னும் நூலின் 60 சிவனடியார்கள் பற்றியும் 9 தொகை அடியார்கள் பற்றியும் குறிப்புகள் உள்ளன. இவரது 16-வது வயதில் திருமணத்தன்று இறைவனே முதியவர் வடிவில் நேரில் வந்து ஓலை காட்டி ஆட்சி ஆவணம், அயலார்காட்சி என்னும் மூவகைச் சான்றுகளாலும் சுந்தரர் தனது அடிமை என நிறுவினார்.

சுந்தரர் சிவபெருமான் மீது பாடிய பாடல்கள் 38000 என்று கூறுகின்றனர். இவை பண்களோடு அமைந்துள்ளது. சுந்தரர் அருல்ய திருப்பதிகங்களை திருப்பாட்டு என்றும் அழைப்பது மரபு. இவர் அருளியவை முப்பத்து எண்ணாயிரம் இவற்றில் கிடைத்த பதிகம் 101 ஆகும்.

அடிக்குறிப்பு

தமிழ் இலக்கிய வரலாறு - தமிழண்ணல்

பக்கம் - 240

பக்கம் - 241

தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர். பாக்யமேரி

பக்கம் - 240

பக்கம் - 241

இயல் - மூன்று

ஏழாம் திருமுறையில் பக்திமையம்

3.0 முன்னுரை

3.1 பன்னிருதிருமுறைகள்

3.2 திருமுறை என்ற பெயர்

3.3 திருமுறை கண்டது

3.4 திருமுறை வகுத்தமை

3.5 பண்ணமைப்பு

3.6 திருமுறைகளைப் பேணிச் சேமித்தமை

3.7 திருமுறைகளின் காலம்

3.8 திருமுறைகளின் பெருமை

3.9 திருமுறைகள் கூறும் பொருள்

3.10 திருமுறை ஓதுவதன் பயன்

3.11 திருமுறை ஓதும் முறை

3.12 திருமுறைகளின் சிறப்பு

3.13 தேவாரம் - ஏழாம் திருமுறை

3.14 சுந்தரர் தேவாரம்

3.15 தேவார காலத்து இசைக் கருவிகள்

3.16 பக்தி நெறி

3.17 ஏழாம் திருமுறையில் சுந்தரரின் பக்தி நெறி

 3.17.1 பக்தி பைத்தியமாதல்

 3.17.2 பேயான பக்தி

 3.17.3 சுந்தரரின் பக்தியில் இறைவன் எழுந்தருளல்

 3.17.4 சுந்தரர் தன்னை “ஆதன்” என்றல்

3.0 முன்னுரை

திருமுறை என்ற தொடரில், திரு என்பது தெய்வத் தன்மையைக் குறிப்பது. முறை என்ற சொல்லுக்கு நூல், ஒழுங்கு, வரிசை, உறவு, முறையீடு முதலிய பல கருத்துக்கள் உள்ளன. தெய்வ நம்பிக்கையும் தெய்வ வழிபாடும் சீர் சிறப்புடன் வாழ்வதற்கு முறையே உயிரும் உடலும் போன்று அகம் புறமாய்த் துணை நிற்கும் பெறற்கரும் பெற்றிவளர்த்த பெரும் பொருள்களாகும். இவற்றை நிலைபெற விளக்கி நீஙகாத் துணையாகநிற்கும் திருவருள் நூல்கள் திருமாமறைகள் எனவும், திருமுறைகள் எனவும் வழங்கப்படுகின்றது. தமிழ் பக்தி இலக்கியங்கள் என்பது சைவம், வைணவம் என இரு சமயங்களை மையமாகக் கொண்டது. தமிழகத்தில் ஆழ்வார்கள் வைணவ சமயத்தினையும் நாயன்மார்களில் சிலர் சைவ சமயத்தினையும் வளர்க்க பல்வேறு இலக்கியங்களை படைத்தனர், பன்னிருத் திருமுறைகள் பற்றியும், சுந்தரரின் ஏழாம் திருமுறையில் சிவபெருமான் மீது கொண்ட பக்தி சிறப்பினை இவ்வியல் விளக்குகின்றது.

3.1 பன்னிருதிருமுறைகள்

செந்தமிழ் மொழியிலுள்ள சைவ நூல்களெல்லாம் மூவகையில் அடங்குவன. அவை சாத்திரம், கோத்திரம்,

காப்பியம் என்பன. சைவ சமயத்திலுள்ள பதி, பசு, பாசம், உண்மைகளை, நியாய சாத்திர முறையில் நிலைநாட்டிக் கூறும் நூல்களை மெய்கண்ட சாத்திரங்கள் எனப்படும். இறைவனையும் அடியார்களையும் போற்றித் துதிப்பனவாகிய பாடல்கள்தோத்திரங்களாம் இறைவன் அருட்செயல்களையும், அடியார் வாரலாறுகளையும் கதை வடிவில் எடுத்துக் கூறும் புராண முதலான நூல்கள் காப்பியங்களாகும். இம்மூவகையில் திருமுறைகள் தோத்திரங்களாகும் இவற்றுள் பன்னிரண்டாந் திருமுறையாகிய பெரியபுராணம் காப்பியமாகவும் விளங்குகிறது.

3.2 திருமுறை என்ற பெயர்

திருமுறை என்ற தொடரில், "திரு" என்பது தெய்வத் தன்மையைக் குறிப்பது. "முறை" என்ற சொல்லுக்கு நூல், ஒழுங்கு, வரிசை, உறவு முறையீடு முதலிய பல கருத்துக்கள் உள்ளன. எனவே திருமுறை என்பது தெ்யவத்தன்மை பொருந்திய நூல், உயிர்களைச் செம்மையான ஒழுங்கு முறையில் இறைவனிடம் சேர்ப்பிக்கும் நூல், தொகுத்து வரிசைபடுத்தப்பட்ட தெய்வீகப் பாடல்களைக் கொண்ட நூல், இறைவனுக்கும் ஆன்மாக்களுக்குமுள்ள உறவை விளக்கும் நூல், மெய்யடியார்கள் உள்ளம் உருகி இறைவனிடம் செய்து கொண்ட முறையீடுகளைக் கொண்ட

நூல் எனப் பலவகையிற் பொருள் கொள்ளக் கூடியதாயுள்ளது.

3.3 திருமுறை கண்டது

திருநாரையூர்ப் பொல்லாப்பிள்ளையாரை வழிபட்டு, அவரருளால் சகல சாத்திர ஞானமும், மெய்ஞ்ஞானமும் பெற்று விளங்கியவர் நம்பியாண்டார் நம்பிகள் என்னும் சிவ வேதியர். அக்காலத்தில் சோழ நாட்டை ஆண்ட அபயகுலசேகர சோழ மகாராசா என்பவர் தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாக்களிலே சிற்சிலவற்றைச் சிவனடியார்கள் ஓதக்கேட்டு, அவற்றையெல்லாம் முற்றகத் தேடித்தொகுத்து சைவ மக்கள் பாராயணஞ்செய்யத் தர வேண்டுமென்று நம்பியாண்டார் நம்பிகளை வேண்டிக் கொண்டார். ஒரு நாள் அரசன் நம்பியாண்டார் நம்பிகளிடம் வந்து, பொல்லாப் பிள்ளையாருக்கு விசேட பூசைகள் செய்வித்து, அருட்பாக்களைப் பெறுவதற்குரிய உபாயத்தைப் பிள்ளையாரிடம் வேண்டியறியும்படி இரந்து கூறினர். நம்பியாண்டார் நம்பிகளும் விநாயகப் பெருமானிடம் அரசனின் குறைதீர அருளும்படி வேண்டினர். பிள்ளையாரும், நம்பிகளும் திருமுறைகள்தில்லையில் சிற்றம் பலத்தை யடுத்துள்ள மண்டபத்திலுண்டென்று அருளிய தோடு அருட்பாக்களின் பெருமையையும் அவற்றைப் பாடியருளிய

மெய்யடியார்களின் வரலாறுகளையும் அருளிச் செய்தார். நம்பிகள் அதனை அரசருக்குக் கூறியருளினர். அரசர் நம்ல்களையும் அழைத்துக் கொண்டு சிதம்பல தலத்திற்குச் சென்றார்.

அரசர் தில்லையை அடைந்து, தில்லைவாழ் அந்தணர்களைக் கொண்டு நடராசப் பெருமானுக்கு விசேஷ பூசை செய்வித்து, தேவாரம் அருளிச்செய்த நாயன்மார் மூவரையும் திருவுலா எழுந்தருளச் செய்வித்து அவர்களது திருக்கர முத்திரை பொறித்த மண்டப வாயிலை அடைந்து, திருக்கதவதத்தைத் திறப்பித்துத் திருமுறை ஏடுகளை எடுத்தபொழுது, அவற்றில் பெரும்பகுதி கறையானால் அழிக்கப்பட்டிருந்தது கண்டனர். அதனால் அரசர் பெருங்கவரையுற்றர். அப்போது இறைவனருளால் ஓர் அசரீரி வாக்கு "இக்காலத்துக்கு வேண்டுவன இருப்ப ஏனையவைகளை நாமே அழியும்படி செய்தோம்: கவலை ஒழிக: பெற்றவற்றைப் பேணிப் பயனடைக" என்று கூறியது. பின் மனந்தெளிந்த அரசர், அவ்வேடுகளைச் செம்மை செய்து, அவ்வருட்பாக்களை ஓதும்முறைப்படி தொகுத்தும் வகுத்தும் தருமாறு நம்பியாண்டார் நம்பிகளிடம் வேண்டினர்.

3.4 திருமுறை வகுத்தமை

அரசனது வேண்டுகோளுக்கு இசைந்த நம்பிகளும், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரங்களில் கிடைத்தவற்றை, முதலாம், இரண்டாம், மூன்றாம் திருமுறைகளாக வகுத்தார். திருநாவுக்கரசு சுவாமிகள் பாடியருளிய தேவாரங்களிலே கிடைத்தவற்றை நான்காம், ஐந்தாம், ஆறாம் திருமுறைகளாக வகுத்தார். சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரங்களை ஏழாந்திருமுறையென வைத்தார். ஆகவே தமிழ் மறையாகிய மூவர் தேவரங்களும் முதலேழு திருமுறைகளாயின. இவ்வேழையும் அடங்கன்முறை என்பர். மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம், திருக்கோவையார் ஆகிய இரண்டையும் எட்டாந்திரு முறையென வைத்தனர். திருமாளிகைத் தேவர் முதல், சேதுராயர் வரையுள்ள மெய்யடியார் ஒன்பதின்மர் அருளிச்செய்த திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்பன ஒன்பதாந் திருமுறையாயின. திருமூல நாயனார் அருளிச் செய்த திருமந்திர நூல் பத்தாந் திருமுறையாயிற்று. திலுவாலவாயுடையார் திருமுகப் பாசுரம் முதலாகப் பட்டினத்தடிகள் பாடல் வரை உள்ளவை பதினோராந் திருமுறையாக வகுக்கப்பட்டன. பொல்லாப் பிள்ளையார் அருளால் நம்பியாண்டார் நம்பிகள் விநாயகப்பெருமானையும்

திருஞானசம்பந்தப் பிள்ளையாரையும், திருநாவுக்கரசு சுவாமிகளையும், திருத்தொண்டத் தொகையிலுள்ள அடியார்களையும் போற்றி செய்த பாடல்களையும் பதினோராந் திருமுறையில் சேர்த்து வைக்குமாறு அரசர் வேண்டிக்கொண்டபடி அவ்வருட்பாக்களும் அத்திரு முறையில் அடங்கின. இவ்வாறு நம்பிகள் வகுத்த திருமுறை பதினொன்றாம், திருமுறையை வகுத்துள்ளார்.

3.6 திருமுறைகளைப் பேணிச் சேமித்தமை

பின்னர், அரசர் திருமுறைப் பாடல்களையெல்லாம் செப்பேடுகளில் எழுதுவித்துப் பாதுகாப்பாக அழியாதிருக்கும் படி செய்தார். அக்காலம் முதல் தமிழகத்துச் சைவக் கோயில்களிலெல்லாம் ஓதுவார்களை நியமித்துத் திருமுறைப் பாடல்களைப் பண்ணோடு பாராயணஞ் செய்துவருமாறு அரசர்கள் நியமனம் செய்தனர். இன்று வரை அது தொடர்ந்து நடந்து வருகிறது.

3.7 திருமுறைகளின் காலம்

பத்தாந் திருமுறை அருளிய திருமூல நாயனாரும், பதினொராந் திருமுறைப் பாடல்கள் அருளியவர்களில் காரைக்காலம்மையார், நக்கீரதேவர், கபிலதேவர், பரணதேவர், கல்லாடதேவர் என்பவர்களும், எட்டாந் திருமுறை அருளிய மாணிக்கவாசக சுவாமிகளும் காலத்தால் முற்பட்டவர்களென

ஆராய்ச்சியாளர் கூறுவர். காலங்களை இன்னும் இறுதியாக முடிவு செய்யவில்லை. அவளுடைய பிள்ளையாரும், திருநாவுக்கரசு நாயனாரும் சம காலத்தவர்கள். அவர்கள் காலம் கி.பி. ஏழாம் நூற்றாண்டென்பர். சுந்தரமூர்த்தி நாயனாரும், சேரமான் பெருமாள் நாயனாரும் ஒரு காலத்தவர்கள். அவர்கள் காலம் கி.பி. எட்டாம், ஒன்பதாம் நூற்றாண்டென்பர்.

ஐயடிகள் காடவர்கோன் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு முற்பட்டவர். பட்டினத்தடிகள் சுந்தரமூர்த்தி நாயனாருக்கும், நம்பியாண்டார் நம்பிகளுக்கும் இடைப்பட்ட காலத்தவர். நம்பியாண்டார் நம்பிகள் வாழந்த காலம் கி.பி. பத்தாம் நூற்றாண்டு. இக்காலமே திருமுறைகள் கண்டெடுத்துத் தொகுத்து வகுக்கப்பட்ட காலம் சேக்கிழர் பாடியருளிய பெரியபுராணம் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் அருளப்பட்டது.

3.8 திருமுறைகளின் பெருமை

சிவபெருமானது திருவருள் கைவரப்பெற்ற முனிசிரேட்டர்கள் ஓதியருளிய மந்திரங்களும் தோத்திரங்களும் வடமொழியில் வேதம் எனப்பட்டன. அங்ஙனமே சிவபிரானது அருள் பெற்ற மெய்யடியார்களால் திருவருள் வழி நின்று பாடியருளிய 12 பக்திப் பாடல்களாகிய

அருட்பாக்கள். தமிழ் வேதம் என அழைக்கப்படுகின்றன. வேதசாரமே தேவார திருவாசகங்கள் என்பதைச் சைவப் பேரறிஞர் பலரும் அறுதியிட்டுக் கூறியுள்ளனர். காசிவாசி செந்திநாதையர் இதை நன்கு ஒப்பிட்டுக்காட்டி விளக்கியுள்ளார். இத்தமிழ் வேதமாகிய திருமுறைப் பாடல்கள் பக்தி உணர்ச்சி மேலிட்டுப் பாடியவை. இவற்றைப் பாராயணஞ் செய்பவர்களுக்கு அப்பண்மை உண்டாக்குவன. நாயன்மார்கள் இப்பாடல்களை இறைவன் திருவருள் துணை தூண்டவே பாடினார். இப்பாடல்கள் பல அற்புதங்களை நிகழச் செய்தமை நாயன்மார் வரலாறுகளால் அறியலாகிறது. சுருங்கச் சொன்னால், வேதமந்திரங்களைக் கொண்டு பல சாதனைகளை மாந்திரிகர்கள் செய்வது போல, இத் தமிழ்வேதப் பாடல்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டென ஆன்றோர் ஒப்பிட்டனர். சாத்திரங்களைப் படித்து மெய்யுணர்வு பெறுவதிலும் பார்க்க, திருமுறைப் பக்திப் பாடல்களை ஓதி இறைவனருளைப் பெறுவது எளிதென்பர்.

இத் திருமுறைகளின் ஆசிரியர்களில் பலரும் சுந்தரமூர்த்தி சுவாமிகளது ஏழாந் திருமுறையாகிய தேவாரத்தில் திருத்தொண்டத் தொகையிலே போற்றப்பட்ட மெய்யடியார்களேயாவர். இம்மெய்யடியார்கள் பெருமையை நம்பியாண்டர் நம்பிகள் பதினொராந் திருமுறையில்

திருத்தொண்டர் திருவந்தாதியில் வகைப்படுத்திப் போற்றியுள்ளார். அவ்விரண்டையும் ஆதாரமாக வைத்து நாயன்மார் வரலாற்றைத் திருத்தொண்டர் புராணத்திலே விரித்துக் கூறியருளியவர் சேக்கிழார் சுவாமிகள். இந்த மூன்று தொகை வகை விரி நூல்களில், திருமுறைகளின் பெருமையும், அருளியவர் பெருமையும், ஓதுதலின் பயனும் கூறப்பட்டிருக்கின்றன. பாராயணஞ் செய்து பல சாதனைகள் புரிகிறார்கள். திருமுறைப் பாடல்கள் ஆக்கவும், காக்கவும், அழிக்கவும் வல்லன. தெய்வீக சக்தி உடையன: அவற்றை மெய்யன்போடு பொருளுணர்ந்து பண்ணமைய வழுவின்றி ஓதவேண்டும். அங்ஙனமின்றி ஓதுவோர் பூரணமான பயனை அடையார்.

3.9 திருமுறைகள் கூறும் பொருள்

பதி, பசு, பாசங்களின் இயல்பும், தொடர்பும், பிறப்பறுக்கும் உபாயமும், சரியை, கிரியை, யோகம், ஞான வழிகள், பேரின்ப நிலையமாகச் சைவசித்தாந்தம் கூறும் விடயாங்களேயாம். இவ்விலக்கியங்களில் கண்ட கருத்தையே சைவ சித்தாந்தம் நெறிப்படுத்தி இலக்கணமாகக் கூறியது. பன்னிரு திருமுறை வகுப்பிற்கும், சிவஞானபோதத்துப் பன்னிரு சூத்திரங் சைவ நூல்கள் வேத ஆகம புராணங்கள் என்றமைவது போலவே. முதலிலுள்ள ஒன்பது

திருமுறைகளும், வேத மந்திரங்களும், தோத்திரங்களு மாயமைய, பத்தாந் திருமுறையாகிய திருமந்திரம் ஆகம நூற்கருத்துக்களைக் கூறுவதாக அமைய, பன்னிரண்டாந் திருமுறை புராணமாக அமைந்து நிற்கிறது. பதினொராந் திருமுறையில் தோத்தில வகையோடு, பிரபந்த வகைகளும் இடம் பெற்றுள்ளன.

3.10 திருமுறை ஓதுவதன் பயன்:

திருஞானசமபந்தப் பிள்ளையார் இவ்வருட்பாடல்களை, “திருநெறிய தமிழ்” எனக் குறிப்பிட்டுள்ளார் - திரு என்பது சைவத் திரு. சைவத்திருவாவது பேரின்ப மத்தி. அதைப் பெற ஏற்ற வழியே திருநெறியாம். அத்திருநெறியில் நம்மை இட்டுச் செல்ல வல்லதே திருநெறிய தமிழ். எனவே திருநெறிய தமிழ் எனப்படும் இத்திருமுறைகள் பாராயணஞ் செய்பவருக்கு முடிந்தபேறான மோட்சானந்தத்தைப் பெற வழி செய்வனவாகும்.

3.11 திருமுறை ஓதும் முறை

பன்னிரு திருமுறைகளையும் முன் பின் முறை மாற்றாது ஓதவேண்டும். தினந்தோறும் குறித்த காலத்தில் ஆசார சீலமுடையவராய், புத்தகத்தை தூப தீபம் மலர் முதலியவற்றில் பூசித்து எடுத்து பாராயணம் செய்ய வேண்டும். திருமுறைப் புத்தகம், பட்டாலே மூடிப் புனிதமான

இடத்தில் வைத்துப் போற்றப்படல் வேண்டும். திருமுறைகளை ஓது முன்னும் முடிவிலும் "திருச்சிற்றம்பலம்" என்பதைச் சொல்ல வேண்டும் என்ற நியதிகளை மீறலாகாது. திருமுறைப் பாடலோடு பிறபாடல்களைக் கலந்தோதுதல் குற்றமாகும்.

3.12 திருமுறைகளின் சிறப்பு

வேதாகமங்களின் வழி நின்று சைவநெறியினை உலகம் உய்ய இசைத்தமிழாலும், இயற்றமிழாலும் எடுத்தோதுவன இத்திருமுறைகள். வானவெளியில் பன்னிரு இராசிகள் போலப் பன்னிரு திருமுறைகளும் விளங்குகின்றன. இவற்றை அருளிச் செய்த அநுபூதிமான்கள் இருபத்தேழு நட்சத்திரங்களுக்கு நிகரான இருபத்தேழுவராவர். இவர்களால் சைவ சமயம் அவ்வப்போது சிறப்புப் பெற்று வளர்ந்துள்ளது. வேதாகமங்கள் பிரணவத்தின் விரிவாகும். அங்ஙனமே பன்னிரு திருமுறைகளும் அமைந்துள்ளன எனலாம். இவை ஒகார உயிரொலியில் தொடங்கி, மகர ஒற்றில் முடிகின்றன. பன்னிரு திருமுறைகளும் உள்ளங்கசிந்துருகி ஓதுதற்குரியன. திருமந்திரம் சாத்திர நூலாகவும், திருத்தொண்டர் புராணம் காப்பிய நூலாகவும் அமைந்திருந்தாலும், அவற்றுள்ளும் தோத்திரப் பாடல்கள் உண்டு. ஓதுவார் உள்ளத்தையும், கேட்பார் உள்ளத்தையும் உயர்த்த பக்குவ வெள்ளம் பெருகச்செய்யும் பான்மை பன்னிரு திருமுறைகளுக்கு உண்டு.

3.13 தேவாரம் - ஏழாம் திருமுறை

ஏழாம் திருமுறை ஏறத்தாழ ஆயிரம் பாடல்களைக் கொண்டது. அப்பரது பிரசாரவன்மையால் தொண்டநாடு சைவ நாடாக மாறியது. ஆதலால் சமணமும், பௌத்தமும் வலிமை குன்றிவிட்டன. அதனால் அப்பர் சம்பந்தர்க்கு ஏறத்தாழ நூறு ஆண்டுகள் கழித்து வந்த சுந்தரர்க்குப் புறச்சமய எதிர்ப்புத் தோன்றவில்லை. ஆதலின், அவர் பாக்களில் புறச்சமயக் கண்டனம் மிகுதியாக இல்லை, என்பது கவனிக்கத்தக்கது. அப்பர், சம்மந்தர் சென்ற நெறியைப் பினடபற்றியே சென்றவராதலால் அந்தரர் பாக்களிலும் பல இடங்களைப்பற்றிய வரலாற்றுக் குறிப்புக்கள் முதலியன காணப்படுகின்றன. ஆயின் தம் கால வரலாற்றுக் குறிப்புகளை மிகுதியாகதரும் சிறப்பு இவர்பால் காணப்படுகிறது.

“சூழ்ந்த உலகெல்லாம் காக்கின்ற பெருமான் காடவர்கோன், கழற்சிங்கன் அடியார்க்கும் அடியேன்”

போன்றவை வரலாற்று சிறப்பு ஆகும்.

மருகல்நாட்டு மருகல், கொண்டல் நாட்டு கொண்டல், மிழலை நாட்டு மிழலை வெண்ணி நாட்டு மிழலை என்றாற் போன்ற தொடர்கள் இவர் காலத்திருந்த நாட்டுப் பிரிவினையை நன்குணர்த்துதலோடு அவரது நாட்டு அறிவையும் நன்கு விளக்குவனவாகும். இவர் தம் காலத்துச்

சேர, சோழ, பாண்டிய, பல்லவ வேந்தர் நால்வருக்கும் நண்பராக இருந்தார். தமிழகம் முழுமையும் சுற்றிப் பார்கும் வாய்ப்பினைப் பெற்றார். பல தலங்கள் இருந்த நிலையையும், கோவில்கள் சிறப்புற்றிருந்த நிலையையும், இவர் பாடல்கள் நன்கு தெரிவிக்கின்றன. இவரால் குறிக்கப்பட்டுள்ள வைப்புத் தலங்கள் பல அப்பர், சம்பந்தரால் குறிக்கப்படாதவை.

3.14 சுந்தரர் தேவாரம்

சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய பாடல்களைச் சுந்தரர் தேவாரம் என்று அழைக்கின்றனர். இப்பாடல்களைத் திருப்பாட்டு என்றும் அழைப்பது வழக்கம். இப்பாடல்களை பன்னிரு திருமுறைகளிலும், தேவாரத்திலும் இணைத்துள்ளார்கள். இவர் சிவபெருமான் மீது பாடிய பாடல்கள் 3800 என்று கூறுகின்றனர். இவை பண்களோடு அமைந்துள்ளன அதனால் பண் சுமந்த பாடல்கள் என்றும் கூறுகின்றனர். இவற்றில் 100 பதிகங்கள் உள்ளன. அவற்றில் 17 பண்கள் இடம் பெற்றுள்ளன. தேவாரங்களில் செந்துருத்திப் பண் கொண்டுபாடல் பாடியவர் இவரே. தேவாரங்களைப் பாடிய மற்ற ஞானசம்பந்தரும், திருநாவுக்கரசரும் இந்தப் பண்ணில் பாடல்களைப் பாடவில்லை. சுந்தரர் அருளிய திருப்பதிகங்களை “திருப்பாட்டு” என்று அழைப்பது மரபு.

இவர் அருளியவை முப்பத்து எண்ணாயிரம் அவற்றில் கிடைத்த பதிகங்கள் 101 ஆகும்.

3.15 தேவார காலத்து இசைக் கருவிகள்

யாழ், வீணை,குழல், கின்னரி, கொக்கரி, சச்சரி, தக்கை, முழவம், மொந்தை, மிருதங்கம், மத்தளம், தமருகம், துந்துபி, குடமுழா, தத்தலகம், முரசம், உடுக்கை, தாளம், துடி, கொகுகொட்டி முதலியன. இவற்றுள், பல பண்டைக்கால முதலே தமிழகத்தில் இருந்தவை. தேவாரத்தில் காணப்படும் பெரும்பாலான பண்கள் தமிழ் நாட்டிற்கே உரியவை. அவை பண்டை இசை நூல்களில் கூறப்பட்ட இசை நுணுக்கம் பொருந்தியவை. அப்பண்களில் சில சிலப்பதிகாரத்தில் காணலாம். பல்லவப் பேரரசர் காலத்தில் தமிழ்நாட்டில் தமிழ்ப்பண்களும் தமிழ் இசையும் களிநடம் புரிந்தன என்பதற்கு திருமுறைகளே ஏற்றச் சான்றாகும்.

3.16 பக்தி நெறி

தமிழ் பக்தி இலக்கியங்கள் என்பது சைவம், வைணவம் என இரு சமயங்களை மையமாகக் கொண்டது. தமிழகத்தில் ஆழ்வார்கள் வைணவ சமயத்தினையும் நாயன்மார்களில் சிலர் சைவ சமயத்தினையும் வளர்க்க பல்வேறு இலக்கியங்களை படைத்தனர். இந்த இலக்கியங்ளின் துணை கொண்டே சமண, பௌத்த சமயங்கள் தோற்கடிக்கப்பட்டதாக

கூறுகின்றனர். காரைக்காலம்மையார் சேரமான் பெருமாள், முதலாழ்வார் ஆகிய மூவரால் இந்த தமிழ் பக்தி இலக்கியம் தொடங்கப்பட்டது. கி.பி. 7 முதல் கி.பி 9ம் நூற்றாண்டு வரை இந்த இலக்கியங்கள் இயற்றப்பட்டன.

"ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்

கடைக்கரந்தார்க்கு அன்பராகில்

அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே"

எனும் அப்பர் வாக்கை நோக்குக. இடையிடையே அடியாரிடம் சாதி என்பதும் நாயன்மார் வரலாறுகளால் இனிதுணரப்படும். சாதியற்ற சமுதாயம் தான் ஒன்று பட்டு வாழ இயலும். சமண சமயத்திலும் பௌத்த சமயத்திலும் சாதிகள் பேசப்படுவதில்லை.

மனித மனதில் உணர்வு உள்ளவரையில் பக்தி அழிக்க முடியாது. மனித வாழ்க்கையும் நம்பிக்கையின் அடிப்படையில் தான் தொடங்குகின்றது. பக்தியின் பாதையில் ஆன்மிகப் பயணத்திலும் இந்த நம்பிக்கை தான் வழிநடத்துகின்றது. இறைவன் உண்டு என்பவர்களுக்கும் அவரவர் நம்பிக்கை தான் காரணம். இதை மிக எளிமையாக கவியரசர் கண்ணதாசன்...

"தெய்வம் என்றால் அது தெய்வம்

சிலை என்றால் வெறும் சிலைதான்

உண்டு என்றால் அது உண்டு

இல்லை என்றால் அது இல்லை.''

என்று ஒரு திரைப்படப்பாடலில் பதிவு செய்திருப்பார்.

இந்த கருத்தினை கவிச்சக்கரவர்த்தி கம்பனும் ராமாயண யுத்த காண்டத்தில்

''ஒன்றே எண்ணின் ஒன்றேயாம்

பலவென் றுரைக்கில் பலவே யாம்

அன்றே என்னில் அன்றேயாம்

ஆம் என்றுரைக்கில் ஆமே யாம்''

என்று பாடியிருக்கின்றார்.

இனிய கவிதைகளால் காலத்தை வென்று இருவரும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். படைத்த இலக்கியமும் இன்றும் இறவாது வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

இந்த இனிய இறைத்தேடலில் பக்தி இலக்கியத்தின் பக்கம் என்பார்வையைக் கொஞ்சம் திரும்பிப் பார்க்கிறேன்.

பக்தி இலக்கியம் ஒரு தனி உலகம் இதில் தான் எண்ணில் அடங்கா ஞானிகளும், யோகிகளும், சித்தர்களும், அருளாளர்களும் தோன்றி மண் நிறைந்த இந்த பூமியை புண்ணிய பூமியாய், புனித பூமியாய் மாற்றியிருக்கின்றார்கள்.

வாழ்க்கையில் வறுமை வாட்டுகின்றது நோய் துயரம் செய்கின்றது. வயதின் மூப்பு முதுமையைத் தருகின்றது. மரணம் அச்சுறுத்துகின்றது.

இன்பமும் துன்பமும் இறையருளே,தீமை நன்மை முழுவதும் அவன் செயலே. வறுமையும், செல்வமும் அவன் இன்னருளே. நோயைத்தருவதும், அந்நோயை நீக்கி நம்மை ஆட்கொள்வது அவன் கடமையே ஆகும்.

3.17 ஏழாம் திருமுறையில் சுந்தரரின் பக்தி நெறி

3.17.1 பக்தி பைத்தியமாதல்

சுந்தரர் இறைவனிடம் பேரன்பு கொண்டவர். பேரன்பு பைத்தியமாக வெளிப்படுவதை நாம் சுநடதரர் திருமுறைகளில் காணமுடிகின்றது. பேரருள் உடையவன், பிறையை கண்ணியமாகச் சூடியவனே, உலக மக்களின் மனங்களில் நிலைத்து இருக்கும் பெருமை உடையவனே.

“பித்தாபிறை சூடீபெரு

மானேயரு ளாளா

பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரில் உள்ள கண்ணதாகிய அருட்டுறை என்னும் திருக்கோயிலின் உள்ளே எழுந்தருளியிருக்கும் தலைனே, என்னுடைய நெஞ்சத்துள் உன்னை அகலாது வைத்தாய்.

எத்தான்மற வாதேநினைக்

கின்றேன்மனத் துன்னை

அதனால் அனைத்திலும் உம்மைபற்றியே மறவாமலே நினைத்து, முன்பே உம்மை மட்டமே மனதில் நினைத்த அடியவனாகி இருந்தேன்.

வைத்தாய்பெண்ணைத் தென்பாலவெண்ணெய்

நல்லூரருட்டுறையுள்

அத்தா உனக் காளாய் இனி

அல்லேனென லாமே"[1]

இப்பொழுது "உனக்கு அடியவன் அல்லேன்" என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமே என இறைவனிடம் வாதிடம் பக்தி பைத்தியகாரராக தம் உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்.

3.7.2 பேயான பக்தி:

பரம்பொருளாய் விளங்கும் இறைவன் மூங்கில்கள் அடர்ந்து வளர்ந்து எங்கும் நிறைந்து வரும் வெண்ணையாற்றின் தென்பகுதியில் உள்ள திருவெண்ணெய் நலலூரின் அருகில் உள்ள அருட்டுறைத் திருக்கோயிலின்கண் எழுந்தருளியிருக்கும் தலைவனே.

"நாயேன்பல நாளும்நினைப்

பின்றிமனத் துன்னைப்

பேயாய்த்திரிந் தெய்த்தேன்பெற

லாகாவருள் பெற்றேன்

நாயை விடவும் கீழ்மையுடையேனாகிய யான் உன்னை எனது இளைய நாள்கள் பலவற்றிலும் மனத்தால் நினைத்தல் இன்றிப் பேய் போன்று அலைந்து திரிந்து இளைத்தேன். ஆயினும் இதுபோன்று பெறுதற்கு அரிய உனது திருவருளை நான் பெற்றேன்.

வேயார்பெண்ணைத் தன்பால்வெண்ணெய்

நல்லூரருட் டுறையுள்

ஆயா உனக் காளாய்இனி

அல்லேன் என லாமே."[2]

இது போன்ற பேற்றை எனக்கு அளிக்க வந்த உனக்கு, முன்பே நான் அடியவனாகி இப்பொழுது அடியவன் அல்லேன் என எதிர் வழக்குப் பேசியது பொருந்துமோ. சுந்தரர் இறைவன் மீது கொண்ட பக்தியால் பேயாக மாறியதை நாம் அறிய முடிகின்றது.

3.7.3 இறைவன் எழுந்தருளல்

ஏழு உலகினையும் காக்கும் இறைவனே கரையை மோதி, பொன்னும் மணியும், வயிரமும் ஆகிய இவற்றை தள்ளிக்கொண்டு, ஒளி மிகுந்து வருகின்ற பெண்ணையாற்றின் தென்பகுதியில் உள்ள திருவெண்ணெய் நலலூரின் அருகில் அஜட்டுறைத் திருக்கோயிலின் முன்னாத எழுந்தருளியுள்ள

இறைவனே ஒரு தாய் உள்ளம் கொண்டு உலக மக்களை அரவணைக்கும் தலைவனே.

“மன்னே மற வாதே நினைக்
கின்றேன் மனத் துன்னைப்
பொன்னே மணி தானே வயி
ரம்மே பொரு நுந்தி

உமக்கு நான் முன்பே அடியவனாகி இருக்கிறேன். இப்போது நான் எனக்கு அடியவன் இல்லை என்று எதிர் வழக்குப் பேசியது பொருந்துமோ

மின்னார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
அன்னே உனக் காளாய் இனி
அல்லேன் என லாமே.”[3]

இனிமேல் என்னுடைய உடலில் இருந்து உயிர் பிரியும் வரை உன்னை என் மனதில் ஒருபோதும் மறவாமலே நினைப்பேன் என்று சுந்தரர் மனங்கனிந்து உருக சிவபெருமான் திருவெண்ணெய் நல்லூரில் எழுந்தருளினர்.

இடபக்கா வகனத்தில் ஊர்பவனே. உலகம் முழுவதையும் சுற்றி மக்களின் கவலைகளை போக்கும் தூயவனே.

முடியேன்இனிப் பிறவேன்பெறின்
மூவேன்பெற்றம் ஊர்தீ

ஒளி நிறைந்த பெண்ணை யாற்றின் அருகில் உள்ள திருவெண்ணெய் நலலூரின் கண்ணதாகிய அருட்றைத் திருக்கோயிலின் கண் எழுந்தருளியிருக்கும் இறைவனே

"கொடியேன்பல பொய்யே உரைப்

பேனைக்குறிக் கொள் நீ

உமக்கு நான் அடியவனாகி, இப்போது அடியவன் இல்லை என எதிர் வழக்குப் பேசியது பொருந்துமோ இறைவனே.

செடியார் பெண்ணைத் தென்பால வெண்ணெய்

நல்லூரருட் டுறையுள்

அடிகேன் உனக் காளாய்இனி

அல்லேன்என லாமே."[4]

அப்பொருந்தாமையை அகற்றி என்னை நீ தெளிவித் தருளினமையால், என் உடலில் இருந்து உயிர் பிரிந்து இறக்கவும், மீண்டும் மறுபிறவி எடுத்து பிறக்கவும், இந்த உலகில் வாழ்ந்து முதுமை பருவம் அடைந்து வருத்தம் ஆற்றேனாகின்றேன். நெறிகோடினேனாகிப் பொய்மைகள் பலவற்றையே பேசுவேனாகிய என்னை நீர் வெறுத்து ஒதுக்காதீர்.

3.7.4 சுந்தரர் தன்னை "ஆதன்" என்றல்

உலக மக்கள் அனைவருக்கும் அருள் பாவிக்கும் இறைவனே. பூக்களின் மகரந்தம் நிறைந்த பெண்ணையாற்றின் தென்பகுதியில் உள்ள திருவெண்ணெய் நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத் திருக்கோயிலின் அருகில் எழுந்தருளியுள்ள தலையில் பிறைச்சூடிய தலைவனே.

"பாதம்பணி வார்கள் பெறு
பண்டம் மது பணியா
யாதனபொரு ளானேன் அறி

உனக்கு முன்பே நான் அடியவனாக உள்ளேன். இப்பொழுது அடியவன் இல்லை என எதிர்வடிக்குப் பேசியது பொருந்துமோ இறைவனே. எந்த வகையிலும் பொருந்தாச் செயல்களை செய்தமையால் அறிவில்லாத நிலையினை அடைந்தேன்.

வில்லேன் அரு ளாளா
தாதார் பெண்ணைத் தென்பால வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
*......................................"*6

அதனால் "ஆதன்" என்னும் சொற்குப் பொருளாயினேன் இருப்பினும் என்னை இகழாது உன் திருவடியை என்றும் வணங்கி வாழ்கின்ற அறிவர் பெறும் பேற்றை அளித்தருள்,

இறைவா என்று சுந்தரர் சிவபெருமானிடம் வேண்டுதல் செய்கின்றார்.

3.7.5 சிவபெருமானை புகழ்தல்

குளிர்ச்சி நிறைந்த சத்திரனை தலையில் பூவாக சூடியவனே. நெருப்புப் போலும் திருமேனியை உடையவனே.

“தண்ணார்மதி சூடீதழல்

போலுந்திரு மேனீ

எண்ணார் புர மூன்றும் எரி

யுண்ண நகை செய்தாய்

……………………………….” **7**

உன்னை மதியாதவரது அரண்கள் மூன்றையும் தீ உண்ணும்படி சிரித்தவனே, மூழ்குவோரது பாவத்தைக் கழுவுதல் பொருந்திய பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரின் அருகில் உள்ள அருட்டுறைத் திருக்கோயிலின் கண் எழுந்தருளியிருக்கும் தலைவனே, உனக்கு நான் முன்பே அடியவனாகி, இப்பொழுது அடியவன் அல்லேன் என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ இறைவா, என்று கூறி சிவபெருமான் உலக மக்களுக்கு செய்த அற்புதங்களை நினைத்து சுந்தரர் இறைவனை புகழ்கின்றான்.

3.7.6 ஐம்பூதங்களுக்கு இறைவனை ஒப்புமைப்படுத்தல்

பூஞ்சோலைகள் அடர்ந்து வளர்ந்து நல்ல காற்றினை வீச்சகொண்டு இருக்க பூக்களின் தேன் நிறைந்த பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரின் அருகில் அருட்டுறைத் திருக்கோயிலின் கண் நீங்காது எழுந்தருளியிருப்பவனே.

"ஊனாய் உயி ரானாய் உட
லானாய்உல கானாய்
வானாய்நில னானாய்கட
லானாய் மலை யானாய்

இறைவா நீ உடலில் உறைந்து நின்று பொருள்களை உணர்த்தும் வழியில் இருக்கின்ற உயிர்கள் ஆகியும், அவைகள் நிற்கின்ற அவ்வுடல்களாகியும், வானாகியும், நிலமாகியும், கடலாகியும், மலையாகியும், ஏழுஉலகினையும் காக்கும் வகையில் நிற்கின்றாய்.

தேனார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்
ஆனாய் உனக் காளாய்இனி
அல்லேன்என லாமே." **8**

இப்பெற்றியன் ஆகிய உனக்கு நான்முன்பே அடியவனாகி, இப்பொழுது அடியவன் இல்லை என எதிர் வழக்குப்பேசியது பொருந்துமோ, இறைவா.

3.7.7 சிவனின் பெருமை

பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரின் அருகில் உள்ள அருட்டுறைத் திருக்கோயிலின் கண் எழுந்தருளியிருக்கும் நன்னெறி யானவனே.

"ஏற்றார் மூன்றும்மெரி

யுண்ணச்சிலை தொட்டாய்

தேற்றாதன சொல்லித்திரி

வேனோ செக்கர் வான்நீர்

நீ உனக்குப் பகையாய் எதிர்ந்தவர்களது அரண்கள் மூன்றையும் தீ உண்ணும் படி, போர் செய்து அழித்தாய்.

ஏற்றாய் பெண்ணைத் தென்பால்வெண்ணெய்

நல்லூரருட் டுறையுள்

சிவந்த சடையிடத்து ஆகாய கங்கையைத் தாங்கினாய் அப்பெருமைகளை அறியாமை காரணமாகத் தோன்றும் சொற்களைச் சொல்லி நான் வீணே உழல்வேனோ.

ஆற்றாய் உனகக் காளாய் இனி

அல்லேன்என லாமே." [9]

அங்ஙனம் உழலும் நெறியானே, முன்பு உனக்கு அடியவனாயதற்கு மாறாக இப்பொழுது அடியவன் இல்லை என எதிர்வழக்குப் பேசியது பொருந்துமோ.

மழுப்படையை வலப்பக்கத்தில் ஏந்தியவனே, வேதத்தை ஓதுபவனே, மீன் போன்ற அழகிய கண்களை உடைய உமையை ஒரு பாகத்தில் உடையவனே.

"மழுவாள்வலன் ஏந்தீமறை
போதீ மங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின
தீர்த்தல்லுன தொழிலே"[11]

செழுமை வாய்ந்து இடையறாது ஒழுகுகின்ற பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரில் அருட்டுறைத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அழகனே.

செழுவார்பெண்ணைத் தென்பால்வெண்ணெய்
நல்லூரருட் டுறையுள்

உன்னை வணங்குவாரது துன்பங்களைநீக்குதல் உனது தொழில் என்பதனால், என்னை வலிந்து ஆட்பொள்ள வந்தாய். அதனை அறியாது, முன்பே உனக்கு அடியவனாகியதனை மறுத்து, இப்பொழுது அடியவன்

இல்லை என எதிர் வழக்கு; பேசியது பொருந்துமோ இறைவா.

மேகத்திினின்றும் ஒழுகும் தன்மையை உடைய நீர் திரண்டு பொருந்தி, அலைகளாகிய கைகளால் கரையைக் குத்தி, நிலம் முழுதும் பரவிய புகழைப்பெற்று, ஒளிவிளங்குகின்ற பல சிறந்த மணிகளைத் தள்ளிவந்து, அழகு மிகுகின்ற பெண்ணையாற்றின் அருகில் திருவெண்ணெய் நல்லூரில் அருட்டுறைத் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான்.

காரூர்புன லெய்திக்கரை

கல்வித்திரைக் கையால்

ஆருரன் அடியவனல்லேன் என எதிர் வழக்குப் பேசியது பொருந்துமோ இறைவா.

3.7.8 திருநீற்றினை பூசிய இறைவன் அடி சேர்தல்

கிளொடு கூடிய கோவணத்துடன் நெற்றியில் திருநீற்றினைப் பூசிக்கொண்டு இந்த உலகில்வாழும் அனைத்து மக்களுக்கும் தலைவனாக விளங்கும் இறைவனே.

“கிளார் கோவணமும் திருநீறுமெய் பூசி உன்தன்

தாளே வந்தடைந்தேன் தலைவா எனை ஏற்குக்கொள்நீ”[12]

வாள்போன்ற கண்களை உடைய உமை அம்மையின் காவலனாக விளங்கும் பங்கனே. திருமழ பாடியில் எழுந்தருளி

அங்குள்ள மக்களின் வாழ்வில் ஏற்படும் குறைகளை நீக்கும். அடியவனான உன் நினைவில் சுற்றி அலையும் யாம் உம்முடைய திருவடிகளைப் பற்றுக்கோடாகக் கொண்டு வந்தடைந்தேன். எனக்கு உறவாய் உன்னையல்லாது இல்ன வேறு யாரை நினைப்பேன், என்னை உம்பதம் ஏற்றுக்கொள்.

3.7.9 திரமழபாடியுள் எழுந்தருளிய இறைவனை புகழ்தல்

பொன் போன்ற திருமேனியை உடைய இறைவனே உம்புகழை உரைக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை. புலித்தோலை திருவரையிற் கட்டி கொண்டு பார்பவரின் கண்கள் பரிபோகும் வண்ணம் மின்னுதலையுடைய சிவந்த சடையின்கண் விளங்குகின்ற கொன்றை மலர்களால் கோர்த்த மலர்மாலையை கழுத்தில் சூடியவனே.

"பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து

செஞ்சடை மேல் மளிர் கொன்றை அணிந்தவனே".

திருமழபாடி என்னும் ஊரில் எழுந்தருளியிருக்கின்ற மாணிக்கமே. இறைவனே உன் மீது நான் பற்று கொண்டு அலையும் போது உன்னையல்லாமல் இனி வேறு யாரையும் நினையேன்.

மன்னே மாணியேமழபாடியுள் மாணிக்கமே

அன்னே உன்னையல்லாமல் இனியாரை நினைக்கேனே.

3.7.10 அடியார்க்கு அடிமை பணி செய்தல்

இயற்கை எழில் கொஞ்சும் வண்டுகள் நிறைந்த பூஞ்சோலைகள் சூழ்ந்த திருமழபாடி ஊரில் குடி கொண்டு மக்களுக்கு அருள் வழங்கும் மாணிக்கமே விண்ணுலகில் வாழும் தேவர்களுக்கு எல்லாம் முழுமுதற் கடவுளே! பண்டே உன் அடியவனான இவ்வடியான் உம்மை நாடி வரும் அடியவர்கள் அனைவருக்கும் அடிமைப்பணியே செய்து வந்தேன்.

> *“பண்டே நின்னடியேன் அடியாரடி யார்கட்கு எல்லாம்*
> *தொண்டே பூண்மொழிந்தேன் தொடராமைத்*
> *துரிசறுத்தேன்”*$_{14}$.

அவ்வாறு அடியார்க்கு செய்யும் பணியில் எந்த குற்றமும் வராமல் காத்துக்கொண்டேன் ஆகையால் உன்னை என் மனதில் போற்றி துதிக்காமல் இனியாரை நினைப்பேன்.

3.7.11 பிறவாமை வரம் இறைவனிடம் வேண்டல்

மேகங்கள் தவழ்கின்ற பெரிய பூஞ்சோலைகள் சூழ்ந்துள்ள தீருமழ பாடியுள்ள மாணிக்கமே. எம் தலைவனே.

> *“எம்மான் எம் அனையென்று எனக்கு எள்தனைச்*
> *சார்வாகார்*
> *இம்மா யப்பிறவி பிறந்தே இறந்தே எய்த்தொழிந்தேன்”.*

என் வாழ்வில் என் தந்தையும், தாயும் எள்ளளவும் ஆதரவாக மாட்டார். இந்த உலகம் ஓர் மாயை என்பதை நான் உணர்ந்தேன். இந்த மாயப் பிறப்பில் பிறந்தும், இந்த உலக வாழ்க்கையில் முழுவதுமாக அனுபவித்து இன்ப, துன்பங்களை அனுபவித்தும் உடலில் இருந்து உயிர்பிரிந்து அறந்தும் சலித்து போனேன். இனி இந்த உலகில் மறு பிறப்பு தேவையில்லை பிறவாமை வரம் வேண்டும் அதற்கு உன்னையன்றி வேறு ஒருவரையும் நினைக்க மாட்டேன்.

3.7.12அடியவனை ஏற்று முடிவுற்ற வாழ்நாளை அருளும்

இந்த உலக வாழ்க்கை நிறைவடைந்து கூற்றுவன் என் இறுதிநாளில் வந்து உயிரை எடுத்துச் செல்லும் முன்னேயே உனக்கே என்வாழ்நாள் முழுமையும் அடியவனாகி உன்னிடம் வந்து அடைந்தேன்.

“நாளார் வந்தணுகி நலியாமுனம் நின்தனக்கே

ஆளப வந்தடைந்மேன் அடியேனையும் ஏற்றுக்கொள் நீ”

என் வாழ்நாள் முழுமையும் உமக்கே அடியவனான என்னை நீர் ஏற்றருள வேண்டும். என் வாழ்நாள் முழுமையும் உம்முடைய புகழை பாடி துதிக்க முடிவுற்ற வாழ்நாளை அருளிச்சய்யும் திருமழபாடி மாணிக்கமே உன்னை மறந்து என்மனதில் இனி யாரை நினைப்பேன்.

3.7.13 ஏழுலகத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் கண்ணாய் விளங்கும் இறைவனே

ஏழுலகத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் அவர்களின் வாழ்க்கை சிறப்பு அடையவும், மகிழ்ச்சி வாழ்வில் நிலைக்கொண்டு இருக்கவும் நீர் கண்ணாய், கருத்தாய், பொருளாய், பண்களோடு இருந்த இனிய தமிழ்ப்பாடல்களாய் அதலினும் மேலாக விளங்கும் பரஞ்சுடரே.

"கண்ணாய் ஏழுலகும் கருத்தாய அருத்ததமுமாய்ப்

பண்ணார் இன்தமிழாய்ப் பரமாய் பரஞ்சுடரே". **15**

மண்ணின்கண் நிறைந்த பூஞ்சோலைகள் சூழப் பெற்ற திருமழபாடி மாணிக்கமே! மூத்தவனே உன்னையல்லால் இனி வேறு யாரை நினைப்பேன்.

"மண்ணார் பூம்பொழில்சூழ் மழபாடியுள் மாணிக்கமே

அண்ணா நின்னையல்லால் இனியாரை நினைக்கேன்."

ஏழுலகத்தில் வாழும் மக்களுக்கும் சிவபெருமான் கண்ணாய் விளக்குகிறார் என்பதை சுந்தரர் உணர்த்துகின்றார்.

3.7.14 சடைமீது பிறை சூடிய இறைவன்

பொன் போன்று ஒளிர்கின்ற தோற்றப் பொலிவினையும், தலையில் கங்கையை சூட்டிக் கொண்டு அழகு நிறைந்த

குண்டலத்தை அணிந்த தரைவனே! சடைமீது வளர் பிறையை சூட்டியவனே. நன்கு வெந்த வெண்மையான திருநீற்றினை உடல் முழுவதும் பூசியவனே.

“சந்தா ருங்குழையாய் சடைமேய்பிறை தாங்கி நல்ல

வெந்தார் வெண்பொடியாய் விடையேறிய வித்தகனே.

விடை எறும் வித்தகனே” வலிமை பொருந்திய மரங்களால் சூழப்பெற்ற சோலைளைக் கொண்ட திருமழபாடி மாணிக்கமே! உன்னையன்றி இனி யாரை நினைப்பேன்.

“மைந்தார் சோலைகள் சூழ் மழபாடியுள் மாணிக்கமே

எந்தாய் நின்னையல்லாமல் இனியாரை நினைக்கேனே”.

3.7.15 தேவர்கள் சிவபெருமானை மாலை சூட்டி வழிபடுதல்

வெம்மை மிகுந்த விரி கதிர்களைக் கொண்ட சூரியனும், ஏனைய தேவர் கூட்டங்களும் அழகிய மலர்களால் மலர்வழிபாடு ஆற்ற,அதனை ஏற்று செம்மை செய்தவனே.

“வெய்ய விரிசுடரோன் மிகுதேவர் கணங்களெல்லாம்

செய்ய மலர்கள் இட மிகு செம்மையுள் நின்றவனே

என் தலைவனே" கருமேகங்கள் சூழும் பூஞ்சோலை வாழ் திருமழபாடி மாணிக்கமே இனி உன்னையின்றி யாரை நினைப்பேன்.

3.7.16 திருமாலும் நான்முகனும் போற்றி வணங்கும் முதற்பொருள்

நன்நெறியாளனே மலத்தாற் பற்றப்படாதவனே "திருமாலும் நான்முகனும் போற்றி வணங்குகின்ற முதற்பொருளே" பெருமையானவனே. நெறியே நின்மலனே நெடுமால் அயன் போற்றிசெய்யும் குறியே நீர்மையனே கொடியேரிடை யாள்தலைவா கெரிபோல் இடைகொண்ட உமையின் கணவனே. அழகிய கையில் மானை ஏந்தியவனேஃ அறிவுஐவானவனே இனி உன்னையல்லாமல் யாரை நினைப்பேன்.

ஏரார் முப்புரமும் எரியச்சிலை தொட்டவனை

வாரார் கொங்கையுடன் மழபாடியுள் மேயவனைச்........

அழகான முப்புரமும் எரியுண்ண வில்வளைத்தவனும், கச்சால் கட்டப்பட்ட நகில்களைக் கொண்ட உமையுடன், திருமழபாடியில் உறைபவனை சீரார் நாவலர்கோனான நம்பியாருரன் பாடிய தமிழ்ப் பாடல்களை உலகத்தவர் போற்றிப் படித்தால் சிவலோகத்தில் வாழப்பெறுவார்.

3.19.7 தொகுப்புரை

செந்தமிழ் மொழியிலுள்ள சைவ நூல்களெல்லாம் மூவகையில் அடங்குவன. அவை சாத்திரம், கோத்திரம், காப்பியம் என்பன அடங்கும். பதி, பசு, பாசம், உண்மைகளை, நியாய சாத்திர முறையில் நிலை நாட்டிக் கூறும் நூல்கள் மெண்கண்ட சாத்திரங்கள் எனப்படும். வேதாகமங்களின் வழி நின்று சைவ நெறியினை உலக உய்ய இசைத்தமிழாலும், இயற்றமிழாலும் எடுத்தோதுவன இத்திருமுறை. வானவெளியில் பன்னிரு இராசிகள் போலப் பன்னிரு திருமுறைகளும் விளங்குகின்றன. கி.பி. 7-ஆம் நூற்றாண்டு முதல் 9-ஆம் நூற்றாண்டு வரை பக்திநெறி தமிழகத்தில் பெருவெள்ளமாகப் பரவியது. கோவில்கள் மிகப்பலமாகத் தோன்றின. ஆடலும், பாடலும் மக்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன. சைவரை பின் பற்றியே வைணவ ஆழ்வார்களும் பக்தி நெறியை பின்பற்றினார். இவ்வாறு சுந்தரரின் ஏழாம் திருமுறையில் இறைவனிடம் அளவற்ற காதலை சுந்தரர் வெளிப்படுத்தினார். அளவற்ற பக்தி அவரை பைத்தியக்காரனாகவும், பேயாகவும் மாற்றியதை நாம் இவ்வியல் மூலம் அறிய முடிகின்றது.

அடிக்குறிப்பு

அந்தரர் தேவாரம் - ஏழாம் திருமுறை

பாடல் எண்: 1

பாடல் எண்: 2

பாடல் எண்: 3

பாடல் எண்: 4

பாடல் எண்: 5

பாடல் எண்: 6

பாடல் எண்: 7

பாடல் எண்: 8

பாடல் எண்: 10

பாடல் எண்: 11

பாடல் எண்: 12

பாடல் எண்: 13

பாடல் எண்: 14

பாடல் எண்: 15

இயல் நான்கு

சைவ நெறி சமய சிந்தனை

4.0 முன்னுரை

4.1 சைவ சமயம் தோற்றம்

4.2 சைவ சமய தொன்மை

4.3 சிந்துவெளி நாகரிக காலச் சிவ வழிபாடு

4.4 சங்க காலத்தில் சிவன் நெறி

4.5 சிந்துவெளி நாகரிகச் சான்றுகள்

4.6 சைவமும் தமிழ் வளர்ச்சியும்

4.7 சைவத் திருமடங்கள் வளர்த்த தமிழ்

4.8 வேதகாலச் சைவம்

4.9 தென்னகச் சைவம்:

4.10 சைவத்தின் எழுச்சி

4.11 சோழர் ஆட்சியில் சைவ நெறி

4.12 சமயத்தின் உயிர்நாடி ஆட்டம்

4.13 சமய மாற்றம்

4.14 சைவ மடங்கள்

4.15 சைவ சித்தாந்த சாத்திரங்கள்

4.16 சைவ சாதனைகள்

4.16.1 திருநீறு (விபூதி)

4.16.2 உருத்திராக்கம்

4.16.3 சமய தீட்சை

4.16.4 குருலிங்க சங்கம வழிபாடு

4.16.5 சைவ நாற்பாதங்கள்

4.16.5.1 சரியை

4.16.2 கிரியை

4.16.5 பசு

4.16.5.5 ஞானம்:

4.16.5.6 யோகம்

4.17 சைவ சித்தாந்த தத்துவம்

4.18 பாசம்

4.19 பொதுமக்கள் தொண்டு

4.20 தொகுப்புரை

அடிக்குறிப்பு

4.0 முன்னுரை

சைவ சமயம் வரலாற்றுக்கு முந்திய சமயம் உலகில் முதற்தோன்றிய சமயம் இதுவேயாம். புராதன காலத்தில் இச்சமயம் உலகில் பல பகுதிகளிலும் விளங்கியுள்ளது. இதன் தொன்மைக்குப் பழம்பெரும் நூல்கள், வழிபாட்டு முறைகள், வரலாற்றுக் குறிப்புகள், தொல்பொருள்கள் என்பன சான்றாக உள்ளன. சைவம் சிவ சம்பந்தமானது. சிவநெறி தொன்மைமிக்க தமிழ்நெறி என்பதில் ஐயம் யாதுமில்லை. அன்று முதல் இன்று வரை இந்நெறி சார்ந்து வளர்ந்து வரும் தமிழிலக்கியத்திற்குக் கணக்கு வழக்கில்லை. சமணமும் பௌத்தமும் சரிந்து சைவ சமயம் தளைத்து வளர்வதற்கு தொண்டு புரிந்தவர்கள் நாயன்மார்கள் ஆவார். சைவ சமயத்தை குறித்தும் சுந்தரரின் பாடல் வழி சைவ சமயம் குறித்தும் இவ்வியலில் காண்போம்.

4.1 சைவ சமயம் தோற்றம்

உலகத்திலேயே பல சமயங்கள் உள்ளன. அவற்றுள் பௌத்தம், இஸ்லாம், கிறிஸ்தவம் என்பன. இவற்றுள் பௌத்த சமயம் 2518 வருடம். பௌத்தம் புத்தராலும், இஸ்லாம் சமயம் 2518 வருடங்களுக்கு முன் முகமது நபியாலும் கிறிஸ்தவ சமயம் 1975 வருடங்களுக்கு முன் கிறிஸ்துவினாலும் தோற்றுவிக்கப்பட்டன. இவ்வாறு

ஒருவராலே தோற்றுவிக்கப்பட்ட சமயமே தொடக்க காலம் ஆகும். சைவ சமயத்துக்குத் தொடக்க காலம் கூறுவதனால் அது யாரோ ஒருவரால் ஏதோ ஒரு காலத்திலே தோற்றுவிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

"சிவபெருமான் என்றும் உள்ளவர். உயிர்களும் என்றும் உள்ளவை, என்றும் உள்ள சிவபெருமானே என்றும் உள்ள உயிர்கள் அடைந்து பேரின்பம் அநுபவிப்பதற்கான வழியும் என்றும் உள்ளது. அந்த வழி சமயம். அதுதான் சிவசமயம்" சிவந்தை அடைவிக்கும் சமயம்: சைவசமயம் ஆதலால், சைவ சமயம் என்றும் உள்ளது: அநாதியானது: எவராலும் தோற்றுவிக்கப்படாதது என்பது தெளிவுபடுகிறது"[1].

4.2 சைவ சமய தொன்மை

சைவ சமயம், சிவநெறி என்றெல்லாம் அழைக்கப்படும் நெறி, சிவபெருமானை முழுமுதற் கடவுளாக வணங்கும் சமயமாகும். இன்றைய இந்து சமயத்தின் கிளை நெறிகளில் ஒன்றாக அமைந்து விளங்கும் சைவம், வைணவத்தை பின்னால் தள்ளி இந்து சமயத்தின் பெரும்பான்மையான பக்தர்களைக் கொண்ட சமயமாகக் காணப்படுகின்றது. இன்றைய உலகில் சுமார் புக 2.2 மில்லியன் சைவர்கள்

காணப்படுவதாக, மேற்கொள்ளப்பட்ட குடித்தொகை மதிப்பீடு ஒன்று சொல்கின்றது.

திருக்கயிலையில் நந்தி தேவர் பணிவிடைசெய்ய, பிள்ளையாரும் முருகனும் அருகிருக்கும் பார்வதி துணையிருக்க வீற்றிருக்கும் சிவபிரானே சைவர்களின் பரம்பொருளாக விளங்குகின்றார்.

4.3 சிந்துவெளி நாகரிக காலச் சிவ வழிபாடு

சிவநெறி அல்லது சைவசமயம் என்பதை நினைக்கும் போது சிவநெறிக்கே உரிய லிங்க வழிபாடு நினைவிற்கு வருகின்றது. சிந்துவெளி என்பது ஃபலுசிஸ்தான் பஞ்சாப், இராசபுத்தான், சௌராட்டிபுரம் என்னும் பகுதிகளே அடங்கிய நிலப்பரப்பு ஆகும். ரிக் வேதத்திலும், இதிகாசங்களிலும் இப்பகுதியின் தொன்மை பற்றிக் குறிப்பிடப் பட்டிருந்தால், இதனை அறிதற்குப் பல அறிஞர்கள் ஆர்வமுற்றனர். 1921-22 ஆம் ஆண்டுகளில் சேர் யோன் மார்சல் என்பவர் தலைமையை இந்தியத் தொல்பொருள் ஆராய்வாளர் சிந்துவிலுள்ள மொஹஞ்சதாரோவிலும், பஞ்சாப்பிலுள்ள ஹரப்பாவிலும் உள்ள மண்மேடுகளை அகழ்ந்து ஆராய்ந்தனர். பின்பு மசூம்தார், மக்கே ஆகியோர் 30-க்கு மேலான இடங்களை ஆராய்ந்தனர்.

“களிமண்ணாற் செய்து சுடப்பட்ட முத்திரைகள், தாயத்துக்கள், கல்லினால் செய்த சிவலிங்கங்கள், யோக நிலையிலுள்ள சிவ உருவம், கொம்புகள் உள்ள சிவ உருவம், பெண் தெய்வ வடிவங்கள் உருவங்கள் பொறித்த செம்பு, வெண்கலத் தகடுகள் நந்தி உருவங்கள் ஆலய அமைப்புகள், பூசைக்குரிய பொருள்கள் ஆகியன இப்பிரதேசத்தில் கிடைத்தன”[2].

யோக நிலையிலுள்ள சிவ உருவம் சிந்துவெளி மக்களின் உயர்ந்த நிரலச் சிவநெறிக் கோட்பாட்டை உணர்த்துகிறது. சைவக் கோட்பாட்டின்படி யோக ஞான முறைகள் உயர்ந்தவை.

4.4 சங்க காலத்தில் சிவன் நெறி

சங்க காலத்தில் சிவன் - ஆலமர்செலவ்ன, முக்கண்ணன், பெருந்தேவன் முதலிய பல பெயர்களால் வழிபடப்பட்டான். சங்ககாலக் கடவுளர் வரிசையில் சிவனே முதலிடம் பெற்று விளங்கினான் என்பதைச் சிலப்பதிகாரம், மணிமேகலை, மதுரைக் காஞ்சி இவற்றால் அறியலாம். முருக வணக்கமும் கொற்றவை வழிபாடும் இருந்தன.

சங்க காலத்தை அடுத்த முதற் பல்லவர் காலத்தில் கோப்பெருஞ்சோழன் ஏறத்தாழ எண்பது சிவன் கோவில்களைக் கட்டினான் என்று தேவாரம் கூறுகிறது.[3]

4.5 சிந்துவெளி நாகரிகச் சான்றுகள்

பொ.மு. 25000 முதல் 2000 வரை நிலவியதாகக் கருதப்படும் சிந்துவெளி நாகரிகச் களவெளிகளில் கிடைத்த சில ஆதாரங்கள். அக்காலத்தே கூட, சிவவழிபாடு நிலவியிருக்கக்கூடும் என்ற ஊகத்தை வலுப்படுத்துவனவாக இருக்கின்றன. மொகெஞ்சதாரோ, ஹரப்பா பகுதிகளில் சிவலிங்கத்தை ஒத்த பல கற்கள் கிடைத்துள்ளன. இரு கொம்புகளுடன் விலங்குகள் சூழ அமர்ந்திருக்கும் மனித உருவ முத்திரை ஈசனின் "பசுபதித்" தோற்றத்தை குறிக்கின்றது.

4.6 சைவமும் தமிழ் வளர்ச்சியும்

சிவநெறி தொன்மைமிக்க தமிழ்நெறி என்பதில் ஐயம் யாதுமில்லை. அன்றுமுதல் இன்று வரை இந்நெறி சார்ந்து வளர்ந்து வரும் தமிழிலக்கியத்திற்குக் கணக்கு வழக்கில்லை பிறசமயங்களெல்லாம் தமிழல்லாத பிறமொழிகளைச் சார்ந்தவை: நாடியவை.

திருமுறைகள் ஒப்பற்ற செல்வங்கள். தேவாரம் இசைத் தமிழ்க் கருவூலம். தேவார முதலிகள் நாளும் இன்னிசையால் தமிழைத்தான் பரப்பினர். பெரிய புராணம் பக்திச்சுவையின் கருவூரம். பத்திமைச் சுவையைப் பாங்குறப் பகரும் இத்தகைய நூலொன்றை எம்மொழியிலும் காண்பதரிது. கந்தபுராணம், திருவிளையாடற்புராணம், தலபுராணங்கள் கணக்கற்றன.

மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கும் தமிழரின் சித்தாந்தப் பார்வையினை விளக்குவன.மெய்கண்டாரின் சிவஞானபோதம் தலைமை வாய்ந்த ஒப்பற்ற மெய்ப்பொருள் விளக்கநூல். "சைவமும் வைணவமும் 'சேயோன் மேய மைவரை உலகமும் மாயோன் மேய காடுறையுலகமும்' சார்ந்து நில வழிப்பட்டு வளர்ந்த தமிழர் சமயங்களாகும்."[4]. சைவம் சார்ந்த பல அரிய உண்மைகள் மெய்ப்பொருட் சிந்தனைகளாக வெளிப்பட்டன.

'தமிழோடு இசைபாடல் மறந்தறியாத' நாயன்மார்களால் தமிழே வளர்ந்தது. பிற சமண பௌத்த மதங்கள் பாலி, சமஸ்கிருதம் ஆகிய மொழிகளைத் தழுவி நின்றபோது, தமிழை இன்னிசையுடன் நாளும் பரப்பிய சிவ நெறிவன்மையால் ஏனைய சமயங்களும் தமிழின்பால் அடைக்கலம் புக்கன. அடைக்கலம் புகவைத்த பெருமை சைவத்திற்கே உரியது. கிறிஸ்தவப் பாதிரிமார் தமிழ் கற்றுத் தமிழை வளர்த்தது போல், சமண பௌத்தர்கள் தமிழ் கற்றுத் தமிழை வளர்க்க வேண்டியதாயிற்று.

4.7 சைவத் திருமடங்கள் வளர்த்த தமிழ்

சைவத் திருமடங்களில் திருவாடுதுறை ஆதினம் 14 ஆம் நூற்றாண்டிலும் தருமபுர ஆதினம் பதினாறாம் நூற்றாண்டிலும் தோன்றின. திருப்பனந்தாள் காசிமடம்

பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தோன்றியது. மதுரை திருஞானசம்பந்தர் திருமடம் காலத்தால் மிக முற்பட்டது. இப்போதிருக்கும் தலைவர் 296 ஆம் குரு என்பர். இவற்றின் பணி காலத்தால் ஏற்பட்ட திருப்பணியாகும்.

முகமதியர் படையெடுப்புக்குப் பின் தமிழும் சைவமும் ஆட்டங்கண்டன. இந் நிலையில் தமிழ் ஏடுகளுக்கும் தமிழ்ப் புலவர்களுக்கும் இம்மடங்களே புகலிடமாயின. பிறர் அழித்துவிடாமல் இவை தமிழ் எடுகனைத் தொகுத்துப் பாதுகாத்தன. டாக்டர் உ.வே.சா. அவர்களும் பிறரும் ஏடுகளைத் தேடிக் கண்டு பிடிக்க அம்மடங்களே உதவின. தமிழ்ப் புலவர்களை மன்னர்களும், ஆதரிக்காமல் மக்களும் மறந்து போயிருந்த காலத்தில், இம்மடங்களே அவர்களைத் தாயினும் சாலப் புரிந்து காப்பாற்றி வந்தன. தமிழ் இலக்கிய வரலாறு இடையுறவு படாமல் முதலிற் காத்தவர்கள் தேவார சமய குரவர்கள் ஆவர்.

4.8 வேதகாலச் சைவம்

பொ.மு. 1500 இதற்கும் 500 இதற்கும் இடைப்பட்ட வேதகாலத்து நூல்களில் வருகின்ற உருத்திரன், இமயன் முதலான தெய்வங்களின் கலவையாகவே பின்னாளில் ஈசன் எழுந்தான் என்பர். ரிக் வேதத்தில், எவ்வித முக்கியத்துவமும் இல்லாமல், மிகச்சில பாடல்களிலேயே போற்றப்படும்

உருத்திரன், யசுர் வேதத்தின் திருவுருத்திரப் பகுதியில் இன்றைய சிவனாக வளர்ந்து நிறபதைக் காணலாம். வேதங்களை அடுத்து உருவான உபநிடதங்களில் பல சிவ வழிபாட்டைப் போற்றுவதிலிருந்து வேதகாலத்தின் பிற்பகுதியிலேயே சிவன் இன்றைய வழிபாட்டு முக்கியத்துவத்தை இடைந்துவிட்டதை அறிய முடிகிறது.

4.9 தென்னகச் சைவம்:

சங்க இலக்கியங்களில் சிவ வழிபாடு பற்றிய குறிப்புகள்காணப்படும் போதும் அவை கிறிஸ்துவுக்குப் பிந்தியவை என்பது பொதுவான கருத்தாக காணப்படுகிறது. எனினும் தமிழக மற்றும் இலங்கையில் பொறிக்கப்பட்ட கிறிஸ்துவுக்குப் முந்திய பிராமிச் சாசனங்களிலும் நாயணங்களிலும் காணப்படும் ‘சிவ’ என்ற பெயரும் நந்தி, திரிசூலம் பிறைநிலா, முதலான சிவசின்னங்களும் தென்னகத்தில் பல்லாண்டுகளாகவே சைவம் நிலவி வந்ததற்குச் சான்றுகள் ஆகும்.

4.10 சைவத்தின் எழுச்சி

தெளிவான அடையாளங்களுடன் சைவமானது முழுமையான ஒரு மதமாகத் தன்னை முன்னிறுத்திக் கொண்டது. பொ.மு. 3 முதல் பொ.பி 2 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் என்று சொல்லப்படுகின்றது.

பொ.மு. 6-4 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையில் என்று சொல்லப்படுகின்றது. பொ.மு. 6-4 ஆம் நூற்றாண்டுகளுக்கு இடையே தொகுக்கப்பட்ட சுவேதாசுவதரமே. மிகப் பழமையான சைவ நூலாகக் கொள்ளப்படுகின்றது. 'உலக' இன்பங்களைத் துறந்து கடும் நோன்புகள் புரிந்து 'தாந்திரீக' நெறியில் ஈசனை வழிபடும் வழக்கம் கிறிஸ்து காலத்திலேயே ஆரம்பித்துவிட்டது. இவர்கள் 'பாசுபதர்' என்று அறியப்பட்டனர்''[5]. பாணினியின் அஷ்டாத்யயி என்னும் சங்கத் தமிழ் இலக்கண நூலுக்கு பதஞ்சலி முனிவர் எழுதிய மாபாடிய உரையில் பாசுபதர் பற்றிய குறிப்புகளை காணமுடிகின்றது.

4.11 சோழர் ஆட்சியில் சைவ நெறி

சோழர் காலத்தில் கோவில்கள் பெருகின, வழிபாட்டு முறைகள் பெருகின. வழிவழிச் சைவரான சோழ மன்னர் எல்லாக் கோவில்களிலும் திருமுறை ஓதுவார்களை நியமிக்க ஏற்பாடு செய்தனர். இராசராசன் கட்டிய தஞ்சைப் பெரிய கோவிலில் மட்டும் பண்பட்ட ஓதுவார் 48 பேர் அமர்த்தப்பட்டனர். ஆடல் பாடல்களுக்காக நானூறு பதியிலார் அமர்த்தப்பட்டனர். ஒவ்வொரு கோவிலிலும் விழாக்கள் நடைபெற்றன. சைவ சமய நூல்கள் படித்துப்

பொது மக்களுக்கு விளக்கப்பட்டன. சைவ சித்தாந்த சாத்திரங்களான சிவஞான போதம் முதலிய நூல்கள் தோன்றின.

4.12 சமயத்தின் உயிர்நாடி ஆட்டம்

இவ்வாறு சைவ சமயம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்தது. ஆனால் சைவத்துள் சாதி வேறுபாடுகள் தோன்றி வளர்ந்து வயிரம் பாய்ந்துவிட்டன. சமுதாயத்தில் பல சாதிகளுக்குப் பல உரிமைகள் மறுக்கப்பட்டன. செருப்பு அணிந்துகொண்டு தெருவில் நடக்கச் சில சதிகளுக்கு உரிமையில்லை. சில சாதியர் இவ்வளவு தூரத்தில் நின்று பேசவேண்டும். சிலர் இவ்வளவு தூரத்தில் ஒதுங்கி நிற்க வேண்டும் என்ற வரையறை ஏற்பட்டன. இக்கொடுமைகள் எல்லாம் பல கோவில் கல்வெட்டுக்களில் காணலாம். இக்கொடுமைகளால் சைவ சமுதாயம் வலிமை குன்றியது. மன ஒற்றுமை அகன்றது.

“சைவரும் வைணவரும் படையெடுத்தவர்க்குப் பணிவு காட்டினர். ‘போர்’ என்றவுடன் துள்ளிக்குதித்த சங்ககாலத் தமிழன் சாதி அறியாத தமிழன்.”[6] மாலிக்காபூர் படையெடுத்த போது வாழ்ந்த தமிழன் சபாதிக் கட்டுப்பாட்டால் நசுக்கப்பட்ட தமிழன். மூடக் கொள்கைகளாலும் சாதி

வெறியினாலும் சமய வெறியினாலும் சைவ சமயம் தன் ஆற்றலை இழந்து எதிரிக்குப் பணிந்தது.

சைவ சமயம் வரலாற்றில் இது இரங்கத்தக்கப் பகுதியாகும். பல்லவர் காலச் சைவர்கள் சமணரைக் கழுவேற்றினர். பிற சமயத்தாரைக் கொடுமைப்படுத்தினர். சோழர்காலச் சைவர் வைணவரோடு ஒன்றுபட்டு வாழ மறுத்தனர். இராமாநுசரைச் சோழ நாட்டிலிருந்தே விரட்டினர். இக்கொடுமைகளின் விளைவைத்தான் அயலார் படையெடுப்பால் சைவர்கள் அனுபவித்தனர். "முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்" என்பது சைவ வரலாற்றில் உண்மையாகிவிட்டது.

4.13 சமய மாற்றம்

சைவ சமயத்தில் சாதி என்னும் பெயரால் இழிவு படுத்தப்பட்ட மக்கள், முஸ்லிம் ஆட்சி நிலையானதும் இந்து சமயத்தில் தங்களுக்கு ஏற்பட்ட இழிவினால், சாதி அறியாத இஸ்லாத்தைத் தழுவினர். வேறு சிலர் தங்களுக்குக் கல்வியும் மருத்துவ உதவியும் மனித உரிமைகளையும் உதவிய கிறிஸ்தவ சமயத்தைச் சார்ந்தனர். கிறிஸ்தவ சமயமும் சாதியறியாச் சமயம் 'சைவர்கள்' என்ற பெயருடன் பாமரராயும் விலங்குகளாயும் வாழ்க்கை நடத்திய தமிழர்கள், கிறிஸ்தவ

சமயத்தைத் தழுவிக் கல்வி கற்று வாழ்க்கையில் முன்னேறலாயினர்.

தாம் செய்துவந்த கொடுமைகளால் தமது சமுதாயம் வலுவிழந்தது. மக்கள் மதம் மாறினர் என்பன அறிந்தும், சமுதாயம் சீரழிவிற்கும் சமயச் சீரழிவுக்கும் தாம் காட்டிய சாதிவேறுபாடுகளே காரணம் என்பதை அறிந்தும் அக்காலத்து உயர் மக்கள் சுயநல வெறியினால் சாதிகளை ஒழிக்க முன் வரவில்லை. சமயத்தில் நாங்கள் தலையிடமாட்டோம் என்ற ஆங்கிலேயர் வாக்குறுதி இவ்வுயர்ந்தவர் கொடுமைகளுக்கு அரண் செய்வது போல் அமைந்தது. மேன் மேலும் சாதிவெறி தலை தூக்கியது. கோவிலின் கருவறைக்கு வெளியே இன்ன வகுப்பார் நின்று வழிபடலாம், கோவிலுக்குள்ளே இன்ன வகுப்பார் நுழையக் கூடாது என்ற கட்டுப்பாடுகள் வளர்ந்தன.

4.14 சைவ மடங்கள்

சைவ மடங்கள் சைவ சமயத்தை வளர்ப்பதற்கென்றே ஏற்பட்டவை. நாடாண்ட மன்னரும் பிறரும் நல்ல நோக்கில் செல்வத்தையும் பல வேலி நிலங்களையும் இம்மடங்களுக்கு உதவினர். பல கோவில்களை இம்மடங்களின் ஆட்சியில் விட்டு வைத்தனர். அறிவிலும், ஒழுக்கத்திலும் சமய சாத்திரக் கல்வியிலும் முதிர்ந்த பெரும் மக்களை மடத்துத்

தலைவர்களாக வைத்தனர். பிற்காலத்தில் இந்நிலை மாறியது. மடாதிபதி ஜமீனை ஆட்சி புரியும் ஜமீன்தாரைப் போல மடத்துக்குரிய வரவு செலவுகளிலும் வழக்குகளிலும் பெரும்பொழுதைப் போக்கத் தொடங்கினர்.

ஒரு சிலர் ஒழுக்கம் தவறியும் நடக்கத்தலைப்பட்டனர். எனவே, கால வேறுபாட்டிலும் மடங்களின் நிலை வேறுபாட்டாலும் பொது மக்களுக்கும் சைவ மடங்களுக்கும் தொடர்பு ஏற்படவில்லை. பொது மக்களுக்குப் பொருள் விளங்காத நிலையில் சில நூல்கள் அச்சிட்டு வெளிப்படுத்தலும், படித்த ஒரு சிலருக்குப் பொன்னாடை போர்த்தலும், "ஆண்டு விழாக்களில் சமயச் சொற்பொழிவு" செய்வோருக்குச் சிறிது பொருள் கொடுப்பதுமே மடங்கள் செய்யும் சைவப் பணிகளாக இருந்துவந்தன.

4.15 சைவ சித்தாந்த சாத்திரங்கள்

சித்தாந்த சாத்திரங்கள் மெய்கண்ட சாத்திரங்கள் எனவும் சொல்லப்படும். அவை பதினான்கு. அவற்றை அருளிச் செய்தவர் அறுவராவர். "பரமேசுவரன் வேதாகம் உண்மைகளையெல்லாம் திருந்நதி தேவருக்கு கற்பித்தார். அந்தத் திருந்நதி தேவரை அபரசிவன் எனவும் கூறுவர்."[7] திருநந்தி தேவரே சனற்குமாரர், திருமூலர் முதலிய ஞானிகளுக்கெல்லாங் குருவாக இருந்து வேதாகங்களைப்

போதித்தருளினர். அங்ஙனம் போதித்து ஞானச்செல்வமானது குருசீட பரம்பரை உரிமையாக வழி வருவதாயிற்று. அதனால் சித்தாந்த சாத்திரம் அருளிய பெயர்களைத் திருக்கிலாய பரம்பரைச் சந்தனாசாரியர்கள் என அழைப்பதாக கூறப்படுகின்றன.

4.16 சைவ சாதனைகள்

விபூதியும் உருத்திராச்சமும் முக்கியமான சைவ சமய சின்னங்களாகும். இவை எமது அஞ்ஞானத்தைப் போக்கி, தீமைகளினின்றும் எம்மைப் பாதுகாத்து இறைவனையும் அவனது பெருங்கருணையையும் நினைவூட்டும் சாதனங்கள். பிரதானமாக நீராடியவுடனும் பூசை வழிபாடுகள் செய்யும் நேரங்களிலும் இவற்றை நாடோறும் பக்தி சிந்தையுடன் தரித்தல் வேண்டும்.

- திருநீறு (விபூதி)
- உருத்திராக்கம்
- சமய தீட்சை
- குருலிங்க சங்கம வழிபாடு
- சைவ நாற்பாதங்கள்
- விரதங்கள்

4.16.1 திருநீறு (விபூதி)

சிவபெருமானே முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழிபடுஞ் சமயம் சைவம் எனப்படும். சைவ சமய ஒழுக்கங்களில் இன்றியமையாதது சிவசின்னங்களில் ஒன்றாகிய திருநீறு அணிதலாகும். திருநீற்றுக்கு விபூதி, பசிதம், பசுமம், இரட்சை, ஷாரம் என்ற பெயர்களும் உண்டு.

"தன்னைத் தரித்தவர்களுக்கு மேலான செல்வத்தைக் கொடுத்தலினால் விபூதி எனவும், ஒளியைக் கொடுப்பதினால் பசிதம் எனவும், பாவங்களை எரித்து நீக்குவதனால் பசுமம் எனவும், தன்னைத் தரித்த ஆன்மாக்கள் எல்லாவற்றையும் இரட்சிப்பதனால் காப்பதனால் இரட்சை எனவும், உயிர்களது மலத்தை நீக்குதலால் ஷாரம் எனவும் பெயர் பெறுகின்றது." **8**

4.16.2 உருத்திராக்கம்

உருத்திராக்கம் என்பது உருத்திரனது கண் எனப் பொருள்படும். திரிபுரத்தசுரர்களால் தமக்கு ஏற்பட்ட துன்பங்களை பற்றித் தேவர்கள் சிவபிரானிடம் முறையிட்ட போது, சிவபிரானது மூன்று கண்களினின்றும் சிந்திய மணியே உருத்திராக்கம் எனப்படும்.

4.16.3 சமய தீட்சை

'தீட்சை' என்பது இறைவன் குருவினிடமாக நின்று ஞானத்தைக் கொடுத்துப் பாசத்தைக் கொடுக்கும் கிரியை என்ற கருத்துள்ள 'தீஷா' என்ற வடசொல்லிலிருந்து வந்ததே என்பர். சைவ சமயத்திற் பிரவேசிப்பதற்கும், அதன் வெவ்வேறு படிகளிற் புகுவதற்கும் அருகதையளிப்பது தீட்சையே. ஒருவர் சைவசாரத்தை மேற்கொள்ள அதிகார மளிக்கும் தீட்சை 'சமய தீட்சை' எனப்படும்.

4.16.4 குருலிங்க சங்கம வழிபாடு

குரு என்றால் பாசத்தை நீக்குபவர் அல்லது அஞ்ஞானம் என்னும் இருளை அகற்றுபவர் என்பது பொருள். தீட்சை அளித்தவரும், கல்வி போதிப்பவரும் குரு ஆவார். மன 'மொழி' மெய்களால் வணங்குவதற்குரிய சிவ சொரூபமாக இருப்பதோடு குருவானவர் வாழ்வில் பின்பற்றுவதற்குரிய சிறந்த இலட்சியமாகவும், ஆன்மிகத் துறையில் சந்தேகங்களைப் போக்கி நல்வழிப்படுத்தும் வழிகாட்டியாகவும் விளக்குகின்றர்.

4.16.5 சைவ நாற்பாதங்கள்

சிவபெருமான் திருவடியை அடைவதற்குரிய நான்கு மார்க்கங்களைச் சைவ நாற்பாதங்கள் என்பர். சைவ

நன்னெறிகள், சைவ நாற்படிகள், சிவ புண்ணியங்கள் என்பன சைவ நாற்பாதங்களின் மறு பெயர்கள். சைவ நாற்பாதங்களாவென சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. இவை முறையே தாச மார்க்கம், சற்புத்திர மார்க்கம், ரக மார்க்கம், சன்மார்க்கம் எனவும் பெயர் பெறும்.

"விரும்புஞ் சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும்

அரும்புமலர் காய்கனிபோல் பராபரமே".

- தாயுமானவர்.

4.16.5.1 சரியை

ஆன்மாக்கள் இறைவனது உருவத் திருமேனிகளைத் தமக்குப் புறத்தே வணங்கிச் சிவாலயத்துக்கும், சிவனடியார்களுக்கும் திருத்தொண்டு செய்தல் சரியை வழிபாடு எனப்படும்.

"சரியையில் யோகம் என்னும் நிலையிலே நிகழும் தியான பாவனேயின் உறைப்பானதோர் அனுபவ உணர்வை அடைதல் சரியையில் ஞானமாகும்."[9]

4.16.2 கிரியை

இறைவனது அருவுருத் திருமேனியை அகத்தும், புறத்தும் பூசித்தல் கிரியை வழிபாடு ஆகும். இக்கிரியை வழிபாடு கிரியையிற் சரியை, கிரியையிற் கிரியை, கிரியையில்யோகம்,

கிரியையில் ஞானம் என நான்கு வகைத்து. மலர், திருமஞ்சனம், தூபம், தீபம், சந்தனம், திருவமுது முதலிய பூசைக்கு வேண்டிய பொருள்களை அமைத்துக் கொள்ளுதல் கிரியையிற் கிரியையாகும்.

“வேதம் பசு, அதன் பால் ஆகமம், அதிற் கடைந்தெடுத்த நெய் சித்தாந்தம் எனவும், வேதம் ஒரு கற்பகதரு, அதில் உயர்ந்தோங்கிய உச்சிக்கிளை வேதாந்தம், அதிற் பழுத்த நறுங்கனியே சைவ சித்தாந்தம் எனவும் கூறுவர் அறிந்தோர்.”[10]

4.16.5 பசு

ஆன்மா, பாசத்தாற் கட்டுண்டிருத்தலால் பசு எனப்படும். ஆன்மா எண்ணில்லாதவை: என்றுமுள்ளன. அநாதியே ஆணவமாகிய இருளால் மறைக்கப்பட்டிருப்பவை. ஆணவமுனைப்பால் இருவினை புரிவன ஆகும்.

4.16.5.5 ஞானம்:

பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மையை அறிவிக்கும் ஞான நூல்களைக் கேட்டுச் சிந்தித்துத் தெளிந்து நிட்டை கூடுதல் ஞானத்தில் ஞான வழிபாடு எனப்படும்.

4.16.5.6 யோகம்

சிவபெருமானே அகத்தே புசித்தல் யோக வழிபாடாம். அது மனத்தை விடயங்களின் வழியிலே போகாவண்ணம் நிறுத்திச் சிவத்தைத் தியானித்து, பின்பு தியானிப்போனாகிய தானும், தியானமும் தோன்றாமல், தியானப் பொருளாகிய சிவன் ஒன்று மாத்திரமே விளங்கப்பெற்றுச் சமாதி நிலையடைதலாகும்.

4.17 சைவ சித்தாந்த தத்துவம்

எமது சைவ சமயத்தின் பொதுப்பிரமாண நூல் வேதம்: சிறப்புப் பிரமாண நூல் சிவாகமம் என்பர். அந்தச் சிவாகம நூல்கள் கூறுஞ்சாரமான உண்மையைப் பிழிந்தெடுத்துக் கூறும் நூல்களே சித்தாந்த சாத்திரங்கள் ஆகும்.

4.18 பாசம்

இது ஆன்மாக்களைக் கட்டிய கயிறுபோலப் பற்றியிருப்பதால் பாசம் எனப்படும். இதனை மலம், பந்தம், தளை எனவும் அழைப்பர். பாசம் மூன்று வகை. அவை ஆணவம், கர்மம், மாயை எனப்படும்.

4.19 பொதுமக்கள் தொண்டு

சைவ மக்கள் தங்கள் இல்லங்களில் பிறக்கும் குழந்தைகளுக்குச் சைவப் பெயர்கள் வைப்பது நல்லது.

சிவநெறிச் செல்வன், தேவாரச் செலவன், நெடுமாறன், கோட்புலி, கண்ணப்பன், கழற்சிங்கன் என்றாற்போல நாயன்மார் பெயர்களையும் திருமுறைகளில் வரும் அரும் பெயர்களையும் வைத்து வழங்குதல் பழமையைப் புதுப்பித்து நிலைக்கச் செய்வதாகும். இவ்வாறே பெண் பிள்ளைகளுக்கு மங்கையர்க்கரசி சிவ அரசி, வெண்காட்டு நங்கை, சந்தன நங்கை முதலிய சைவப் பெயர்களை வைக்கலாம்.

“சைவர் தம் ஊர்களில் ஏற்படும் புதிய தெருக்களுக்குச் சேக்கிழார் தெரு, சம்பந்தர் தெரு, ஆலால சுந்தரர் தெரு, எனச் சைவபெயர்களை வைக்க ஏற்பாடு செய்யலாம்.”[11] இவ்வாறே தம் வளமனைகளுக்குச் ‘சேக்கிழார் அகம்’ ‘சுந்தரர் அகம்’ எனப் பெயர்களைச் சூட்டலாம்.

சிவநெறிச் செல்வரும் சைவ சங்கங்களும் சைவ சமய வரலாறு,சைவப் பெயர்கள், பாராயணத்திற்குரிய பதிகங்கள் போன்றவற்றைச் சிறுநூல்களாக எழுதச் செய்து இலவசமாகவோ, குறைந்த விலையிலோ பரப்புதல் வேண்டும். அடிக்கடி தக்காரைக் கொண்டு, இக்காலத்திற்கு ஏற்ற முறையில், சொற்பொழிவுகளின் வாயிலாகச் சைவ சமயப் பற்றை ஓட்டுதல் வேண்டும், வாழ்க்கைக்கும் சமயத்திற்கும் உள்ள தொடர்பு மிக்க பயனுடையாது ஆகும்.

4.20 தொகுப்புரை

கடவுள் என்றதோர் எண்ணமும், அக்கடவுள் நமக்கு எவ்வகையாலும் நன்மையே செய்யும், சிவம் ஆவர் என்ற தெரிவும் உண்டான காலமே. இப்பூமியிற் சைவ சமயத்தின் தொடக்க காலம் எனலாம். அதன்பின் மக்கள் கடவுளின் செயல்கள் இயல்புகள் பற்றி ஆராய்ந்து, சைவ சமய உண்மைகளை அறிந்து, நல்லொழுக்கங்களைக் கடைபிடித்துச் சைவ வாழ்வு வாழத் தலைப்பட்டனர். வேதாகங்களும், புராணங்களும் சைவத்தின் தொன்மைக்குச் சான்றாவன. சைவ சமயத்தை பற்றி இவ்வியலில் ஆராயப்பட்டுள்ளது.

அடிக்குறிப்பு

சைவ சமய வரலாறு

பக்கம்: 8

சைவ சமயம்

பக்கம்:14

முருகவேள் பன்னிரு திருமுறை

பக்கம்: 52

இயல் ஐந்து

ஆய்வு நிறைவுரை

'சுந்தரரும் பக்திமையமும்' என்ற தலைப்பில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் மூலம் கண்டறியப்பட்ட உண்மைகள் இங்கு தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

- மனிதமனதில் உணர்வு உள்ளவரையில் பக்தி அழிக்க முடியாது. இன்னொருவர் படும் துன்பத்தைக் கண்டால் இரக்கம் கொள்ளும் மனம் இருக்கும் வரையில் மனித மனங்களில் பக்தி இருந்தே தீரும்.
- சைவ சமயக் குரவர்கள் நால்வர். இவர்களுள் ஒருவர் ஆன சுந்தரமூர்த்தி நாயனாரின் பக்திமையம் அதன் ாரணமாக சிவபெருமான் அவரை ஆட்கொண்ட விதம் பற்றியும் திருமணம் செய்து வைத்தவை பற்றி கூறப்பட்டுள்ளது.
- சுந்தரர் இறைவனுடன் தோழமை உறவு பூண்டிருந்ததால் தம்பிரான் தோழர் எனப்படுகிறார்.
- புத்தூர்ச் சடங்கவி சிவாச்சாரியார் மகளை மணக்கும் போது இறைவனே முதியவர் வடிவில் நேரில் வலிய வந்து ஆட்கொண்டதால் வன்தொண்டர் எனப்படுகிறார்.
- சுந்தரர் அருளிய திருப்பதிகங்களை திருப்பாட்டு என்றும் அழைப்பது மரபு. இவர் அருளியவைமுப்பத்து எண்ணாயிரம் இவற்றில் கிடைத்த பதிகம் 101 ஆகும்.

- தன்னை அடிமை என்று கூறிய இறைவனைப் "பித்தா" எனக் கோபித்துப் பேசினார். இறைவன் சுந்தரரை ஆட்கொண்டபின் "பித்தா" எனத் தொடங்கிப் பாடுமாறு பணித்தார்.
- சுந்தரர் இருகண் பார்வையும் இழந்தவர். காஞ்சியில் ஒரு கண்ணையும் திருவாரூரில் மற்றொரு கண்ணையும் பெற்றார்.
- சிவபெருமானது திருவருள் கைவரப் பெற்ற முனிசிரேட்டர்கள் ஓதியருளிய மந்திரங்களும் தோத்திரங்களும் வடமொழியில் வேதம் என அழைக்கப்பட்டது.
- பக்தி இலக்கியம் ஒரு தனி உலகம் இதில் தான் எண்ணில் அடங்கா ஞானிகளும், யோகிகளும், சித்தர்களும், அருளாளர்களும் தோன்றி மண் நிறைந்த இந்த பூமியை புண்ணிய பூமியாய், புனித பூமியாய் மாற்றியிருக்கின்றார்கள்.
- சுந்தரர் இறைவனிடம் பேரன்பு கொண்டவர். அப்பேரன்பு பைத்தியமாக வெளிப்படுவதை நாம் அந்தரர் திருமுறைகளில் காணமுடிகின்றது.

- *சைவ சமயம் சிவநெறி அடிப்படையாக கொண்டு அமைந்துள்ளது. சிவநெறி தொன்மை மிக்க தமிழ் நெறி என்பதில் ஐயம் இல்லை.*
- *சுந்தர தேவாரம் பாடல்கள் சிவபெருமான் மீது கொண்ட பைத்தியகரமான பக்தியை வெளிப்படுத்துவதாக உள்ளது.*

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பது போன்று சுந்தரரின் 20 பாடல்களில் பக்திசுவை வெளிப்படுத்தப்பட்டுள்ளது. 1000 பாடல்களில் உலகம் கொள்ளதாஅளவு பக்தி சுவையை சுந்தரர் வெளிப்படுத்தி இருக்கிறார்.

துணை நூற்பட்டியல்

முதன்மை ஆதாரங்கள்

1. திருநாவுக்கரசரின் பக்தி சிறப்பு

துணைமை ஆதாரங்கள்

1.	இளம் பூரணார்	:	இலக்கணம் முதற்பதிப்பு 2005 கிளாசிக் பிரிண்டர்ஸ், சென்னை- 2
2.	இராதா கிருஷ்ணன். எஸ்	:	திருஞானசம்பந்தர் ஓர் ஆய்வு சென்னைப் பல்கலைக் கழகம், அவ்வை அச்சுக்கூடம், சென்னை - 600013
3.	இரத்தின சபாபதி. வை	:	திருமுறை தெளிவு சென்னைப் பல்கலை கழகம், 1981
4.	ஞானசம்பந்தன்	:	அ.சா. இலக்கிய கலை முதல் பதிப்பு, நவம்பர் - 1953 திருநெல்வேலி, தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிட்டெட் சென்னை -1
5	தமிழண்ணல்	:	தமிழ் இலக்கிய வரலாறு மீனாட்சி புத்தக நிலையம் மயூரா வளாகம் 48 நானப்ப முதலி தெரு, மதுரை – 620001

6	பாக்யமேரி	:	தமிழ் இலக்கிய வரலாறு முதல் பதிப்பு, ஜுலை 2008 பாவை பிரிண்டர்ஸ் (பி) லிமிட்டெட், சென்னை - 14
7	பால சுந்தரம் பிள்ளை. தி.சு	:	இன்கவித் திரட்டு முதற்பாகம் சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம் லிமிட்டெட் திருநெல்வேலி-6
8	முத்துராமன்	:	சைவ சித்தாந்த உரைக் கொத்து, சைவ சித்தாந்த நூற் பதிப்புக்கழக வெளியீடு-1953
9	பன்னிரு திருமுறைகள்	:	எம். நாராயண வேலுப்பிள்ளை பாண்டிபஜார், தியாகராய நகர், சென்னை - 600 017.

பின்னிணைப்பு

நாயன்மாரின் பெயர்கள், குலம், பூசை நாள் பட்டியல் மூலம் காணலாம்.

எண்	**பெயர்**	**குலம்**	**பூசைநாள்**
1.	அதிபத்தர்	பரதவர்	ஆவணிஆயில்யம்
2.	அப்பூதியடிகள்	அந்தணர்	தைசமயம்
3.	அமர்நீதி நாயனார்	வணிகர்	ஆனிபூரம்
4.	அரிவட்டாயர்	வேளாளர்	தைதிருவாதிரை
5.	ஆனாய நாயனார்	இடையர்	கார்த்திகை ஹஸ்தம்
6.	இசைஞானியார்	ஆதிசைவர்	சித்திரை சித்திரை
7.	இடங்கழி நாயனார்	வேளிர்	ஐப்பசிகார்த்திகை
8.	இயற்கை நாயனார்	வணிகர்	மார்கழி உத்திரம்
9.	இளையான்குடி மாறனார்	வேளாளர்	ஆவணி மாதம்
10.	உருத்திர பசுபதி நாயனார்	அந்தணர்	புரட்டாசி அசுவினி
11.	எறிபத்த நாயனார்	மரபறியார்	மாசிஹஸ்தம்
12.	ஏயர்கோன் கலிகாமர்	வேளாளர்	ஆனி ரேவதி
13.	ஏனாதி நாதர்	சான்றார்	புரட்டாசி உத்திராடம்
14.	ஐயடிகள் காடவர்கோன்	காடவர், பல்லவர்	ஐப்பசி மூலம்
15.	கணநாதர்	அந்தணர்	பங்குனி திருவாதிரை
16.	கணம்புல்வர்	செங்குந்தர்	கார்த்திகை
17.	கண்ணப்பர்	வேட்டுவர்	தைமிருக சீருஷம்
18.	கலிய நாயனார்	செக்கார்	ஆடி கேட்டை
19.	கழறிற்றிவார்	சேரர் அரசன்	ஆடி சுவாதி

20.	கழற்சிங்கர்ஷ	பல்லவர் அரசன்	வைகாசி பரணி
21.	காரி நாயனார்	அந்தணர்	மாசி பூராடம்
22.	காரைக்கால் அம்மையார்	வணிகர்	பங்குனி சுவாதி
23.	குங்கிலியகலையனார்	அந்தணர்	ஆவணி மூலம்
24.	குலச்சிறையார்	மரபறியார்	ஆவணி அனுஷம்
25.	கூற்றுவர்	களப்பாளர்	ஆடி திருவாதிரை
26.	கலிக்கம்ப நாயனார்	வணிகர்	தை ரேவதி
27.	கோச்செங்கட் சோழன்	சோழர் அரசன்	மாசி சதயம்
28.	கோட்புலி நாயனார்	வேளாளர்	ஆடி கேட்டை
29.	சடைய நாயனார்	ஆதி சைவர்	மார்க இசைழி திருவாதிரை
30.	சண்டேசுவர நாயனார்	அந்தணர்	தை உத்திரம்
31.	சக்தி நாயனார்	வேளாளர்	ஐப்பசி பூரம்
32.	சாக்கியர்	வேளாளர்	மார்கழி பூராடம்
33.	சிறப்புலி நாயனார்	அந்தணர்	கார்த்திகை பூராடம்
34.	சிறுதொண்டர்	மாமாத்திரர்	சித்திரை பரணி
35.	சுந்தரமூர்த்தி நாயனார்	ஆதி சைவர்	ஆடிச் சுவாதி
36.	செருத்துணை நாயனார்	வேளாளர்	ஆவணி பூசம்
37.	சோமசிமாறர்	அந்தணர்	வைகாசி ஆயிலியம்
38.	தண்டியடிகள்	செங்குந்தர்	பங்குனி சதயம்
39.	திருக்குறிப்புத் தொண்டர்	வண்ணார்	சித்திரை சுவாதி
40.	திருஞானசம்பந்தமூர்த்தி	அந்தணர்	வைகாசி மூலம்

41.	திருநாவுக்கரசர்	வேளாளர்	சித்திரை சதயம்
42.	திருநாளை போவார்	புலையர்	பரட்டாசி ரோகிணி
43.	திருநீலகண்டர்	குயவர்	தைவிசாகம்
44.	திருநீலகண்ட யாழ்ப்பாணர்	பாணர்	வைகாசி மூலம்
45.	திருநீலநக்க நாயனார்	அந்தணர்	வைகாசி மூலம்
46.	திருமூலர்	இடையர்	ஐப்பசி அசுவினி
47.	நமிநந்தியடிகள்	அந்தணர்	வைகாசி பூசம்
48.	நரசிங்க முனையர்	முத்தரையர்	புரட்டாசி சதயம்
49.	நின்றசீர் நெடுமாறன்	பாண்டியர் அரசர்	ஐப்பசி பரணி
50.	நேச நாயனார்	சாலியர்	பங்குனி ரோகிணி
51.	புகழ்சோழன்	முத்தரையர்	ஆடி கார்த்திகை
52.	புகழ்த்துணை நாயனார்	ஆதி சைவர்	ஆனி ஆயிலியம்
53.	பூசலார்	அந்தணர்	ஐப்பசி அனுஷம்
54.	பெருமிழலைக் குறும்பர்	குறும்பர்	ஆடி சித்திரை
55.	மங்கையர்க்கரசியார்	பாண்ல்யர் அரசர்	சித்திரை ரோகிணி
56.	மானக்கஞ்சாற நாயனார்	வேளாளர்	மார்கழி சுவாதி
57.	முருக. நாயனார்	அந்தணர்	வைகாசி மூலம்
58.	முனையடுவார் நாயனார்	வேளாளர்	பங்குனி புசம்
59.	மூர்க்க நாயனார்	வேளாளர்	கார்த்திகை மூலம்
60.	மூர்த்தி நாயனார்	வணிகர்	ஆடி கார்த்திகை
61.	மெய்ப்பொருள்	வேளாளர்	கார்த்திகை

	நாயனார்		உத்திரம்
62.	வாயிலார் நாயனார்	வேளாளர்	மார்கழி ரேவதி
63.	விறன்மிண்ட நாயனார்	வேளாளர்	சித்திரை திருவாதிரை

First Paper: *என்ன ஆச்சரியம்?* **"Enna Aacharyam !" [1949]**



ஓர் அறிமுகம்

பேராசிரியர்

ந சுப்பு ரெட்டியார்



Books Published : **135 + 1**
Papers Published : **200** [Tamil 173 + English 27]
Endowments established: **10**
Endowment Lectures : **12**
Awards received: **8**
Prizes won : **14**
Titles conferred : **8**

Masterpieces:

1) **Tamil Payitrum Murai [1957]**
2) **Religion & Philosophy of Naalayira Divyap-pirabhandham with special reference to Nammalwar [English][His PhD thesis] [1977]**
3) **Kalvi Ulaviyal Kotpaadukal [1989]**
4) **Vainava Selvam [1995]**

Financial Aid for publishing the Books:

a) Tirumala Tirupathi Devasthanams - 21
b) Directorate of Tamil Development
Government of Tamil Nadu - 6

Research on Professor's Books

a) University of Madras - 1993 (leading to PhD)
b) Madurai Kamaraj University - 2017 (leading to PhD)
c) Bharathiyar University - 2020 (leading to PhD)

ISBN 978-81-948697-0-2
9 788194 869702 >

பேராசிரியரின் நூல்கள்
https://archive.org/details/@centenary1916nsr2016
எனும் இணையதளத்தில் உள்ளன. [freely downloadable]